பாரி பகவத்கீதை

1934

DIGITIZED
DIGITIZED
R65, 6
N34
67640

ஸ்ரீ பகவத்கீதை

(ஹம்ஸயோகியின் விசேஷ வுரையுடன்)

யோகானந்த ஸ்வாமி

அவர்களால்

வெளியிடப்பட்டது.

13 FEB 1934
MADRAS

ஸ்ரீமுக வருடம் விருச்சிகரவி

விலை] All Rights Reserved [ரூ. ஒன்று

67640

770

294.592

RINTED AT THE ANANDA PRESS, MADRAS.

FIRST EDITION: 1,000 COPIES.

அப்துல் ஹமீது
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
டிசம்பர் மாதம் வருடம் 84
செப்பனிட்டு முடித்த
ஜனவரி மாதம் வருடம் 85
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

முகவுரை.

இந்நூலாசிரியர் ஹம்சயோகி திரிமத பாஷியகர்த்தாக்களுக்கும் முற்காலத்திலுள்ளவர். இவர் இமயமலையின் கண்ணுள்ள கதலிவனத்தைத் தனது வாசஸ்தானமாய்க்கொண்டிருந்தார். கீதை, அத்வைதம் விசிஷ்டாத்வைதம்; துவைதம், சாங்கியம், யோகம் அன்று, யோகப்பிரம்மநிஷ்டையைக் கூறுகிற நூலென்பது, இவருடைய அபிப்பிராயம். ஈதா தமிழ் சுலோகங்கள், மூல சம்ஸ்கிருத சுலோகங்களின், நேர்மொழிபெயர்ப்பு இவை மூல சம்ஸ்கிருத சுலோகங்களைப் படிக்கிறதற்குச் சிறந்த சாதனம். அரும்பதங்கள் ஒவ்வொரு அத்தியாயத்திலுள்ள முக்கிய விஷயங்களைக் குறிப்பாய்க் காட்டும்.

யோகாநந்தன்.

ஹம்ஸயோகி விசேஷவுரையின்படி
பகவத்கீதையின் தத்துவங்கள்.

கீதையில் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், தியானயோகம் ஆகிய நான்கும் மோக்ஷ சாதனங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

கர்மயோகம்:—அன்னமய பிராணமய கோசங்களின் தர்மம் அல்லது கர்மம்.

பக்தியோகம்:—மனோமய கோசத்தின் தர்மம் அல்லது கர்மம்.

ஞானயோகம்:—விக்ஞானமய கோச பூர்வபாகத்தின் தர்மம் அல்லது கர்மம்.

தியானயோகம்:—விக்ஞானமய கோச உத்தர பாகத்தினதும், ஆநந்தமய கோச தக்ஷிண பாகத்தினதும் தர்மம் அல்லது கர்மம்.

கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகமாகிய இம் மூன்றும் பிரவிர்த்தி மார்க்கம். தியானயோகம் நிவிர்த்தி மார்க்கம். பிரவிர்த்தி மார்க்கத்திலுள்ளவர்கள் தூமாதி மார்க்கத்தால் சென்று சுவர்க்கலோகத்தை அடைகிறார்கள். நிவிர்த்தி மார்க்கத்திலுள்ளவர்கள் அக்ஷராதி மார்க்கத்தால் சென்று பிரமலோகத்தை யடைகிறார்கள். தியான யோகத்தைப் பூர்த்தி செய்தவன் இவ்வுலகிலேயே பிரம

மாகிறான். கர்மயோகத்தினால் தமோகுணம் சாந்தமடைகிறது. பக்தியோகத்தினால் ரஜோகுணம் சாந்தமடைகிறது. ஞானயோகத்தால் மிசுரசத்துவம் அடையப்படுகிறது. யோகத்தினால் சுத்த சத்துவகுணம் அடையப்படுகிறது. சுத்த சத்துவகுணம் பிரம பிராப்திக்குச் சாதனம்.

அன்னமய கோசம் / பிராணமயகோசம்	=	இந்திரியக்கூடம்
மனோமயகோசம்	=	மனக்கூடம்
விக்ஞானமயகோசம்	=	மகத்கூடம்
ஆநந்தமயகோசம்	=	அவ்யக்தக்கூடம்

கர்மயோகம்:—இந்திரியக் கூடத்தால் அநுஷ்டிக்கப்படுகிறது.

பக்தியோகம்:—மனக்கூடத்தால் அநுஷ்டிக்கப்படுகிறது.

ஞானயோகம்:—மகத் கூடத்தின் தக்ஷிண பாகத்தால் அநுஷ்டிக்கப்படுகிறது.

தியானயோகம்:—மகத் கூடத்தின் உத்தரபாகத்தாலும், அவ்யக்த கூடத்தின் தக்ஷிண பாகத்தாலும் அநுஷ்டிக்கப்படுகிறது.

கர்மயோகம்:—பஞ்சப்பிராணனாலும், கர்மேந்திரியங்கள் ஐந்தினாலும் அநுஷ்டிக்கப்படுகிறது.

பக்தியோகம்:—மனத்தாலும், ஞானேந்திரியங்கள் ஐந்தாலும் அநுஷ்டிக்கப்படுகிறது.

ஞானயோகம்:—புத்தியாலும், ஞானேந்திரியங்கள் ஐந்தாலும் அநுஷ்டிக்கப்படுகிறது.

தியானயோகம்:—அகங்காரம், மகதத்துவம் முதலிய மேல் தத்துவங்களால் அநுஷ்டிக்கப்படுகிறது.

பதங்கள்.

பூர்வபாகம்	=	தக்ஷிணபாகம், கீழ்ப்பாகம்
உத்தரபாகம்	=	மேற்பாகம்
மிசுரசத்துவம்	=	ரஜோகுணம் தமோகுணம் கலந்த சத்துவம்
சுத்தசத்துவம்	=	ரஜோகுணம் தமோகுணம் கலப்பின்றிய சத்துவம்

முதலாவது அத்தியாயம்

அர்ஜுன விஷாதயோகம்

திருதராஷ்டிரன் சொன்னான்:—

௧. தர்ம க்ஷேத்திரத்திலே, குருக்ஷேத்திரத்திலே யுத்தம் செய்ய விருப்பமுடையவர்களாய் ஒருங்குசேர்ந்த எம்மவர்களும் பாண்டவர்களும் என்ன செய்தார்கள்? சஞ்சயனே!

[விசேடவுரை]

தர்மக்ஷேத்திரம் = கர்மயோகம், பக்தியோகம், ஞான யோகம் அனுஷ்டிக்கப்படும் இடம். இதற்கு அதிகாரிகள் துரியோதனாதிகள்.

குருக்ஷேத்திரம் = யோகபூமி. இதற்கு அதிகாரிகள் பாண்டவர்கள்.

யுத்தம் = தேவ அசுர யுத்தம். தேவர்கள் சத்துவகுணமுடையவர்கள். அசுரர்கள் ரஜோ தமோகுண முடையவர்கள்.

கர்மயோகத்தால் தமோகுணம் சாந்தமடைகிறது, பக்தியோகத்நால் ரஜோகுணம் சாந்தம் அடைகிறது.

ஞானயோகத்தால் மிசுரசத்துவகுணம் அடையப்படுகிறது. தியானயோகத்தால் சுத்த சத்துவகுணம் அடையப்படுகிறது. சுத்த சத்துவகுணத்தால் பிரம பிராப்தியாகிறது. இந்நான்கு யோகங்களும் சுத்த சத்துவகுணம் கிரமப்படியாக அடைகிறதற்குச் சாதனம். சுத்த சத்துவகுணம் பிரம பிராப்திக்குச் சாதனம். இந்த முதலாவது சுலோகம் கீதையிலுள்ள விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறது.

சஞ்சயன் சொன்னான்:—

௨. பாண்டவர்களின் சேனை வகுக்கப்பட்டிருக்கிறதைத் துரியோதன ராஜன் பார்த்து அப்பொழுது ஆசாரியனைச் சமீபித்து (இந்த) வசனத்தைக் கூறினான்.

௩. ஆசாரிய! பாண்டு புத்திரர்களின் இம்மகத்தான சேனையைப் பாரும். மகத்புத்தியுடைய தங்களது சிஷ்யனை துருபதனின் புத்திரனால் வகுக்கப்பட்டிருக்கிறது.

[வி] மகத் புத்தி = மகத்தத்துவவிவேகம். புத்தியின் உத்தர பாகம்.

௪. இங்கு சூரர்கள் மகாவில்லாளிகள் யுத்தத்தில் பீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் சமானமான யுயுதானனும், விராடனும், மகாரதனான துருபதனும்.

[வி] மகாரதன் = தன்னையும் தன் சேனையையும் காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றல் உடையவன்.

முதலாவது அத்தியாயம்

ஆத்மாவையும் தத்துவங்களையும் காப்பாற்றும் ஆற்றல் உடையவன்.

௫. திருஷ்டகேதுவும், கேசிதானனும், வீரனான காசிராஜனும், புருஜித்தும், குந்தி போஜனும், மனிதர்களில் பராக்கிரமசாலியான சைப்பியனும்,

௬. பலசாலியான யுதாமன்யுவும், வீரனான உத்தமோசாவும், சௌபத்திரனும், துரௌபதி புத்திரர்களான யாவருமே மகாரதர்கள்.

௭. பிராமணோத்தமரே! எம்மவர்களிற் சிறந்தவர்களான எனது சேனைத்தலைவர்கள் எவர்களோ அவர்களையும் அறிவீர்களாக. இவர்களைத் தெரிந்துகொள்ளும் நிமித்தம் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௮. தாங்களும், பீஷ்மரும், கர்ணனும் யுத்தத்தில் ஜயம்பெறும் கிருபனும், அசுவத்தாமாவும், விகர்ணனும் அப்படியே சோமதத்தியும்,

௯. இன்னும் வேறு அநேக சூரர்கள் எனக்காகப் பிராணனைத் தியாகம் செய்தவர்கள். நானாசஸ்திர அஸ்திரங்களையுடையவர்கள். யாவரும் யுத்தத்தில் தேர்ந்தவர்கள்.

௧0. பீஷ்மரால் காக்கப்பட்ட எங்களுடைய இந்த சேனை போதியதன்று. ஆனால் பீமனால் காக்கப்பட்ட அவர்களுடைய அந்தசேனை போதியது.

கக. ஆதலால் எல்லாப்படை வரிசைகளின் பிரிவுகளிலும் அவரவர்கள் பாகத்தில் நின்று நீங்களெல்லோருமே பீஷ்மரையே காக்கவேண்டும்.

கஉ. அவனுக்குச் சந்தோஷமுண்டாகும்படிக் கௌரவர்களில் விருத்தரும் பிதாமகரும் புகழ்பெற்றவரும் (ஆகிய பீஷ்மர்) சங்கு சிங்கநாதம் தொனிக்க உரக்க ஊதினர்.

கங. பிறகு சங்குகளும் பேரிகளும், தம்பட்டங்களும், பறைகளும், ஊதுகொம்புகளும் உடனே முழங்கப்பட்டன. அச்சப்தம் பெரும் இரைச்சலாயிருந்தது.

கச. பிறகு வெண்குதிரைகள் பூட்டிய மகத்தான தேரில் மாதவனும் பாண்டவனும் அமர்ந்தவர்களாய் தெய்வீக சங்குகளை ஊதினார்கள்.

[வி] வெண்குதிரைகள் = சத்துவகுண இந்திரியங்கள். கிருஷ்ணனுடையவும் அர்ச்சுனனுடையவும் இந்திரியங்கள் சத்துவகுணமுடையவை.

மகத்தானதேரில் = மகதத்துவம் விளங்குகின்றதேகம். கிருஷ்ணனும் அர்ச்சுனனும் இத்தேகத்தின் மகதத்துவத்தில் சர்வகாலமும் சஞ்சரிக்கிறவர்கள். மகதத்துவ பூமியிலிருந்து இவ்வுலகத்தில் அவதாரஞ்செய்தார்கள்.

கடவல்லி உபநிஷத்து

ரதம் = தேகம்; இந்திரியங்கள் = குதிரைகள்; ஆசனம் = மகதத்துவம்; சாரதி = புத்தி; கடிவாளம் = மனம்; பகவான் கடவல்லி சுருதியிலிருந்து முதலாவது அத்தியாயத்திலும் இரண்டாவது அத்தியாயத்திலும் உள்ள பல விஷயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்.

கரு. பாஞ்சசன்யத்தை ஹ்ருஷிகேசனும், தேவதத்தத்தைத் தனஞ்சயனும், பௌண்டரமென்னும் பெரிய சங்கை பயங்கரத் தொழிலையுடைய வீமனும் ஊதினார்கள்.

கசு. அநந்த விஜயத்தை குந்தி புத்திரனாகிய யுதிஷ்டிரராஜாவும், நகுலனும், சகாதேவனும் சுகோஷத்தையும் மணி புஷ்பகத்தையும்,

கஎ. மகாவில்லாளியாகிய காசிராஜனும், மகாரதனான சிகண்டியும், திருஷ்டத்துய்மனனும், விராடனும், ஜயிக்கப்படாத சாத்யகியையும்,

கஅ. துருபதனும், திரௌபதி புத்திரர்களும் பூபதியே! பெரிய புஜங்களையுடைய சௌபத்திரனும், நாலு பக்கங்களிலும் தனித்தனியே சங்குகளை ஊதினார்கள்.

[வி] பூபதியே = திருதராஷ்டிரனே.

ககூ. அவ்விரைச்சல் திருதராஷ்டிர புத்திரர்களின் ஹ்ருதயங்களைப் பிளந்தது. அதே இரைச்சல் மண்ணும் விண்ணும் நிறைந்து ஒலித்தது.

உ௦. அப்பொழுது நிலையில் நிற்கின்ற திருதராஷ்டிர புத்திரர்களையும், சஸ்திர வீழ்ச்சியி னாரம்பத்தையும் அனுமக்கொடியோனாகிய பாண்டவன் பார்த்து வில்லையெடுத்து,

உக. ஹ்ருஷிகேசனுக்கு அப்பொழுது இவ்வார்த்தையைச் சொன்னான். பூபதியே!

[வி] பூபதியே = திருதராஷ்டிரனே.

அர்ச்சுனன் சொன்னான்:—

இருசேனை மத்தியிலும் எனது தேரை நிறுத்துக, அச்சுத!

உஉ. யுத்தம் செய்ய விருப்பமுள்ளவர்களாய் நிலையில் நிற்கின்ற இவர்களை நான் காணக்கூடிய வரையில், எவர்களுடன் நான் யுத்தம் செய்யவேண்டியது இப்போது ஆரம்பிக்கும் யுத்தத்தில்.

உங. யுத்தம் செய்ய இங்கு ஒருங்கு கூடியவர்கள் எவர்களோ அவர்கள் துர்ப்புத்தியுள்ள திருதராஷ்டிர புத்திரனுக்கு யுத்தத்தில் பிரியத்தைச் செய்ய விருப்பமுடையவர்களாக நான் காண்கிறேன்.

சஞ்சயன் சொன்னான்:—

உச. இப்படி குடாகேசனால் சொல்லப்பட்டு ஹ்ருஷிகேசன் ஓ பாரத! இருசேனைகளின் மத்தியில் உத்தம ரதத்தை நிறுத்தி,

[வி] பாரத = திருதராஷ்டிரனே.

உரு. பீஷ்மர் துரோணர் எல்லாப் பூபதிகள் முன்னிலையிலும், ஓ பார்த்த! ஒருங்கு கூடிய இக்கௌரவர்களைப் பார் என்று சொன்னார்.

உசா. அங்கு பிதாக்களும், பிதாமகர்களும், ஆசாரியர்களும், மாதுலர்களும், சகோதரர்களும், புத்திரர்களும், பௌத்திரர்களும் அப்படியே சிநேகிதர்களும் யுத்த நிலையில் நிற்கப் பார்த்தன் கண்டான்.

உஎ. மாமன்மார்களும் அப்படியே நண்பர்களும் இருசேனையிலும் எல்லாப் பந்துக்களுமாகிய அவர்கள் யுத்த நிலையில் நிற்பதை அக்கௌந்தேயன் பார்த்து,

உஅ. மிகுந்த இரக்கத்தினால் ஊடுருவப்பெற்றுத் துயரங்கொண்டவனாய் இதனைச் சொன்னான்.

அர்ச்சுனன் சொன்னான்:—

யுத்தஞ்செய்ய விரும்பி ஒருங்குகூடி நிற்கும் இந்தச் சொந்த ஜனங்களைப்பார்த்து, கிருஷ்ணா!

உகூ. எனது அவயவங்கள் தளர்கின்றன. வாயும் உலர்கின்றது. எனது சரீரத்தில் நடுக்கமும், மயிர்சிலிர்ப்பும் உண்டாகின்றன.

ங௦. காண்டீபம் கையினின்று நழுவுகிறது. அப்படியே மேலெங்கும் எரிகின்றது. நிற்கவும் கூடவில்லை: என் மனதும் பிரமிப்பது போலும்.

௩௧. அபசகுனங்களையும் காண்கிறேன்: கேசவனே! சொந்த ஜனங்களை யுத்தத்திற் கொன்று நன்மையும் காண்கிறேனில்லை.

௩௨. வெற்றியையும் விரும்புகிறேனில்லை, கிருஷ்ணா! ராஜ்யத்தையும் சுகங்களையும் விரும்புகிறேனில்லை. எங்களுக்கு ராஜ்யத்தினாலென்ன? கோவிந்தா! போகங்களினால் அல்லது ஜீவிப்பதனாலென்ன?

௩௩. எவர்கள் நிமித்தம் எங்களுக்கு ராஜ்யமும், போகங்களும், சுகங்களும் வேண்டப்படுமோ அவர்களாகிய இவர்கள் யுத்தத்தில் பிராணன்களையும் தனங்களையும் விடுத்து நிற்கிறார்கள்.

௩௪. ஆசாரியர்களும், பிதாக்களும், புத்திரர்களும் அப்படியே பிதாமகர்களும், மாதுலர்களும், மாமன்மார்களும், பேரன்மார்களும், மைத்துனர்களும், அப்படியே சம்பந்திகளும்,

௩௫. கொல்பவராயினும், திரிலோக ராஜ்யத்துக்காகவும் இவர்களைக் கொல்ல இச்சிக்கிறேனில்லை, மதுசூதனா! அப்பொழுது உலகத்திற்காக என்ன?

௩௬. திருதராஷ்டிர புத்திரர்களைக் கொன்று எங்களுக்கு இருக்கக்கூடிய சந்தோஷமென்ன? ஜனார்த்தனா! இவ் ஆததாயிகளைக் கொன்றால் பாபமே எங்களை வந்தடையும்.

[வி] ஆததாயிகள் = பிறர் மனைவியரின் கற்பழித்தவர்கள், பிறர் பொருளைக் கவர்ந்தவர்கள், வீட்டிற்குத் தீயிட்டவர்கள், உண்டியில் விஷங் கலந்தவர்கள், கொலை செய்தவர்கள்.

௩௭. ஆதலால், எங்கள் பந்துக்களாகிய திருதராஷ்டிர புத்திரர்களை நாங்கள் கொல்லப்படாது. ஏனெனில், எங்கள் பந்துக்களைக் கொன்று எப்படிச் சுகிகளாய் இருக்கக்கூடும்? மாதவா!

௩௮. ஆனால் இவர்கள் லோபத்தினால் அறிவு அபகரிக்கப்பட்டுக் குலநாசத்தாலான தோஷத்தையும் மித்திரதுரோக பாதகத்தையும் காண்கிலராயினும்,

௩௯. குலநாசத்தாலாகிய தோஷத்தைக் காண்கிற எங்களால் அப்படிப்பட்ட பாபத்தினின்று நிவிர்த்தி செய்துகொள்ள ஏன் தெரிந்து கொள்ளக்கூடாது? ஜனார்த்தனா!

௪௰. குலநாசத்தால் சநாதன குலதர்மங்கள் நசித்துப் போகின்றன. தர்மநாசத்தால் குலமுழுவதையும் அதர்மம் மேற்கொள்ளுகிறது.

௪௧. அதர்மம் மேற்கொள்ள, கிருஷ்ணா! குலஸ்திரீகள் கெடுகிறார்கள். ஸ்திரீகளின் கெடுதியில் ஜாதிக்கலப்புண்டாகிறது, வார்ஷ்ணேயா!

௪௨. ஜாதிக்கலப்பு குலத்தை நாசஞ் செய்தவர்களுக்கும், அவர்கள் குலத்திற்கும் நரகத்திற்கேது. ஏனெ

னில், இவர்களுடைய பிதுர்க்கள் உதக பிண்டக்கிரியைகளை இழந்து வீழ்கிறார்கள்.

௪௩. குலநாசஞ் செய்து ஜாதிக்கலப்பைச் செய்தவர்களின் இத்தோஷங்களால் சாஸ்வத ஜாதி தர்மங்களும் குலதர்மங்களும் நாசமடைகின்றன.

[வி] சாஸ்வத = நித்திய.

௪௪. குலதர்மங்கள் அழிந்துபோன மனிதர்களுக்கு, ஜனார்த்தன! நரகத்தில், வாசம் விதிக்கப்பட்டிருக்கிறதென்று கேட்டிருக்கிறோம்.

௪௫. அந்தோ! என்ன மகத்தான பாபத்தைச் செய்ய நாங்கள் முயன்றோம். ராஜ்யசுகத்தின் லோபத்தால் சொந்த ஜனங்களைக் கொல்ல எத்தனஞ் செய்தவர்கள் (நாங்கள்).

௪௬. எதிர்க்காமலும் சஸ்திரமில்லாமலும் (இருக்கும்) என்னைக் கைகளில் சஸ்திரங்களையுடைய திருதராஷ்டிர புத்திரர்கள் யுத்தத்தில் கொல்வார்களாயின் அது எனக்கு மிக நன்மையாகும்.

சஞ்சயன் சொன்னான்:—

௪௭. இப்படிச்சொல்லி அர்ச்சுனன் சஸ்திரத்தோடு வில்லை எறிந்து யுத்தகளத்தில் சோகத்தினால் மனங்கலங்கியவனாய்த் தேர்த்தட்டில் சாய்ந்தான்.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன

சம்வாதத்திலே, அர்ச்சுன விஷாதயோகமென்னும் முதலாவது அத்தியாயம்.

முதலாவது அத்தியாயத்தின் கருத்து.

அவதார புருஷர்கள் தர்மயுத்தத்தைச் செய்து அசுரர்களைக் கொல்லுவார்கள். அவர்கள் செய்யும் யுத்தம் வேதத்தில் சொல்லப்பட்ட தர்மங்களுக்கு விருத்தமாய்த் தோன்றினும் பரமார்த்த திருஷ்டியின்படி அவசியமாயிருத்தலின் தோஷமில்லை. கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய இம்மூன்றையும் அநுஷ்டித்து கர்ம பந்தம், பக்தி பந்தம், ஞானபந்தம் ஆகிய இம்மூன்று பந்தங்களின்று நிவிர்த்தி யடைந்தவனுக்கு யோகத்தினால் அசுரவிருத்திகளைக் கொல்லுவதே முக்கியசாதனம். யோகத்தில் அசுர விருத்திகள் கொல்லப்படுகின்றன. அவதார புருஷர்களின் தர்ம யுத்தத்தில் அசுரர்கள் கொல்லப்படுகிறார்கள். இக்காரணம்பற்றி யோகமும் தர்மயுத்தமும் ஒன்றாகக் கீதையில் பகவான் அருளிச் செய்திருக்கிறார்.

கீதையில் முதலாவது அத்தியாயத்தில் அர்ச்சுனனுக்கு கர்மகாண்ட வேதத்திலுள்ள சந்தேகங்களை நிவிர்த்திசெய்தருளினார்.

அரும்பதங்கள் :—

உதகக்கிரியை = ஜலத்தினால் செய்யப்படும் கிரியை.
பிண்டக்கிரியை = ஸ்ராத்ததினங்களில் மா உண்டைகளால் செய்யப்படும் கிரியை.

முதலாவது அத்தியாயம்
முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்

சாங்கிய யோகம்

சஞ்சயன் சொன்னான்:—

க. அப்படி இரக்கத்தினால் ஊடுருவப்பெற்று, கண்ணீர் நிறைந்து வியாகுலக் கண்களையுடையவனாய்ச் சோர்வடைந்த அவனுக்கு இவ்வார்த்தையை மதுசூதனன் சொன்னான்.

[வி] ஊடுருவப்பெற்று = வியாபிக்கப்பெற்று
மதுசூதனன் = மதுவென்ற இராக்ஷதனைப் பகவான் கொன்றார்.—அதனால் அவருக்கு மதுசூதனன் என்ற நாமம்.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

உ. எங்கிருந்து உனக்கு இம்மனச் சோர்வு, அகாலத்தில் உண்டாயது? அநாரியர்களால் கையாளப் பெற்றதும், சுவர்க்கத்தைத் தடுப்பதும் அபகீர்த்தியை உண்டு பண்ணுவதும், அர்ச்சுன!

ஹம்சயோகியின்படி மொழி பெயர்ப்பு

எங்கிருந்து உனக்கு இம்மனச்சோர்வு நேர்ந்தது? பிரவிர்த்தி மார்க்கத்தில் தலைப்படுகிறாய். அநாரியர்களால்

கையாளப்பெற்றதும், மோக்ஷத்தைக் கொடாததும், அபகீர்த்தியை உண்டுபண்ணுவதும், அர்ச்சுன!

[வி] பிரவிர்த்தி மார்க்கம் = கர்மம், பக்தி, ஞானம்.
அநாரியன் = கர்மம், பக்தி, ஞானத்திற்கு அதிகாரி.
ஆரியன் = யோகி
கீர்த்தி = பிரம்மவிபூதி
அகீர்த்தி = பிரம்ம விபூதியின்மை

ங. அலித்தன்மையை அடையாதே பார்த்த! இது உனக்குத் தகுந்ததன்று; இழிவான மனத்தளர்ச்சியை உதறி எழுந்திரு, பரந்தப!

[வி] அலித்தன்மை = தர்ம யுத்தத்தைச் செய்யாது பின் வாங்கியவன் அலித்தன்மையனென்று பகவானால் நிந்திக்கப்படுகின்றான். அப்படியே யோகாப்பியாசம் செய்யாதவனும் அலித்தன்மையனென்று பகவானால் நிந்திக்கப்படுகின்றான்.
பரந்தப = மேலான தவத்தை யுடையவனே (யோகி)
எழுந்திரு = (1) யோகத்தைக்கூடு அல்லது (2) யுத்தத்திற்குச் செல்.

அர்ச்சுனன் சொன்னான் :—

ச. மதுசூதனா! பூஜிக்கத் தகுந்தவர்களான பீஷ்மரையும் துரோணரையும் நான் யுத்தத்தில் அம்புகளைக் கொண்டு எப்படி எதிர்ப்பேன், சத்ருக்களை நாசம் செய்வோனே!

ரு. பெருந்தகைமையுடைய ஆசிரியர்களைக் கொல்வதிலும் இவ்வுலகில் பிச்சையேற்றுண்ணல் சிறந்தது; நன்மையை விரும்புகிற ஆசிரியர்களைக் கொன்றால் இங்கே உதிரம் சிந்தப்பெற்ற போகங்களை அனுபவிக்கவேண்டும்.

[வி] பீஷ்மரும் துரோணரும் தர்மத்திலும் மோக்ஷத்திலும் புத்தியில்லாதவர்கள். ஆதலால், அவர்களைக் கொல்லலா மென்பது பகவான் கருத்து.

உதிரம் சிந்தப்பெற்ற = மாசடைந்த

சா. எது எங்களுக்குச் சிறந்ததோ, நாங்கள் (அவர்களை) ஜயிப்போமோ, (அல்லது) அவர்கள் எங்களை ஜயிப்பார்களோ, அதை அறியோம். எவர்களைக் கொன்று ஜீவித்திருக்க விரும்புவதில்லையோ அந்தத் திருதராஷ்டிர புத்திரர்கள் எதிரில் நிற்கிறார்கள்,

எ. கார்ப்பண்ணிய தோஷத்தால், சுபாவம் தாக்கப்பெற்றுத் தர்மத்தில் மனம் மயங்கிய எனக்கு எது நலமுடையதா யிருக்குமோ அதை நிச்சயித்துச் சொல்லவேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்

களுக்கு நான் சிஷ்யன். தங்களைச் சரணமடைந்த எனக்கு உபதேசிப்பீர்களாக.

[வி] **கார்ப்பண்ணியதோஷம்** = அற்ப விஷயங்களில் இச்சை. பிரம்மவஸ்து ஒன்றே கார்ப்பண்ணிய தோஷமற்றது.

சுபாவம் = சொந்தத்தன்மை

சரணம் = அடைக்கலம்

அ. புவியில் எதிரிடையில்லாத செழிப்புள்ள ராஜ்யத்தை அல்லது தேவேந்திர பதவியை அடையப்பெற்றாலும், எனது இந்திரியங்களை வாட்டுகின்ற சோகத்தை எது நீக்கும் (என்பதைக்) காண்கிறேனில்லை.

சஞ்சயன் சொன்னான் :—

கூ. பரந்தபன் (ஆகிய) குடாகேசன் இப்படி ஹ்ருஷிகேசனுக்குக் கூறி யுத்தஞ் செய்யேனென்று கோவிந்தனுக்கு உரைத்து மௌனமாயிருந்தான்.

[வி] **பரந்தபன்** = பகைவரைத் தவிக்கச்செய்கிறவன்.

குடாகேசன் = நித்திரையை ஜயித்தவன்.

பரந்தபன் = மேலான தவத்தையுடையவன்.

குடாகேசன் = இரகசிய அர்த்தங்களை வினவுகிறவன்.

க0. ஹ்ருஷிகேசன் புன்னகை செய்பவர்போல் இரு சேனையின் மத்தியில் சோர்வடைந்த அவனுக்கு, ஹே! பாரத! (என்று) இவ்வார்த்தையைக் கூறினார்.

ஸ்ரீபகவான் சொன்னார் :—

கக. விசனப்பட வேண்டாதவர்களைப் பற்றி நீ விசனப்படுகிறாய். ஞான வார்த்தைகளையும் பேசுகிறாய். இறந்தவர்களையும் இறவாதவர்களையும் (பற்றி) பண்டிதர்கள் விசனப்படார்கள்.

[வி] ஆத்மா பிறப்பற்றது இறப்பற்றது.

ஹம்சயோகியின் மொழி பெயர்ப்பு.

விசனப்பட வேண்டாதவர்களைப்பற்றி நீ விசனப்படுகிறாய். ஞான வார்த்தைகளையும் பேசுகிறாய். சென்ற கர்மங்களைப் (பற்றியும்) இனிவரும் கர்மங்களைப் (பற்றியும்) பண்டிதர்கள் விசனப்படார்கள்.

[வி] ஆத்மா கர்மம் அற்றது கிரியை அற்றது என்பதனை இச்சுலோகம் வலியுறுத்துகின்றது.

கஉ. நானும் ஒரு காலத்திலும் இல்லாதிருந்ததில்லை. நீயும் இல்லாதிருந்ததில்லை. இந்த அரசர்களும் இல்லாதிருந்ததில்லை. நாமெல்லோருமே இனிமேலும் இல்லாதிருக்கப்போவது மில்லை.

[வி] ஆத்மா முக்காலத்திலும் உள்ள பொருள் (நித்தியம்)

கங. தேகிக்கு இத்தேகத்தில் கௌமாரம், யௌவனம், மூப்பு எப்படியோ அப்படியே அந்நிய தேகப் பிராப்தியும். தீரன் அதில் துக்கியான்.

[வி] கௌமாரம் = பால்யம் முதல் பதினாறு வயது வரையில்

யௌவனம் = பதினாறு முதல் முப்பது வயது வரையில்

மூப்பு = முப்பது வயதிற்கு மேல்

தீரன் = யோகி, ஞானி

அந்நியதேகம் = வேறு தேகம்

பிரம்மதேகம் = பிரம்ம அநுபவத்தை அடையப் படுவதும் இந்தத் தேகத்தில் தான்.

கச. கௌந்தேய! தன்மாத்திரைகளின் ஸ்பரிசங்கள் சீதோஷ்ண சுகதுக்கங்களைக் கொடுப்பவை. போக்குவரவுடையவை. அநித்தியம். அவற்றைச் சகித்துக்கொள், பாரத!

[வி] தன்மாத்திரைகள் = சூக்ஷ்ம பூதங்கள், இங்கு இந்திரியங்கள்.

சீதோஷ்ணம் = சீதம் + உஷ்ணம்—இந்திரிய தர்மங்கள்

சுகதுக்கம் = மனோதர்மங்கள்.

போக்குவரவுடையவை = ஆத்ம சம்பந்தமில்லாதவை.

அநித்தியம் = முன்னும் பின்னும் இல்லாமல் இடைநடுவில் தோற்ற மாத்திரமாக உள்ளவை.

கரு. சுகதுக்கத்தைச் சமமாய்க் கொண்ட எந்த தீர புருஷனை இவை வருத்துகிறதில்லையோ, புருஷரிற் சிறந்தோனே! அவன் அம்ருத தத்துவத்திற்குத் தக்கோனாகிறான்.

[வி] சமம் = பிரமம்.
தீரன் = யோகி.

எவன் சுகத்தையும் துக்கத்தையும் பிரமம் எனக் கண்டானோ அவனே பிரம விக்ஞானத்தை அடைந்தவன்.

அம்ருததத்துவம் = பிரம விக்ஞானம்

கசு. அசத்துக்கு இருப்பில்லை, சத்துக்கு இன்மை இல்லை. இவ்விரண்டிற்கும் முடிவு தத்துவ தரிசிகளால் காணப்பட்டிருக்கிறது.

[வி] சத்து = முக்காலத்திலும் உள்ளபொருள், ஆத்மா.
அசத்து = முக்காலத்திலும் இல்லாத பொருள், தேகம், ஜகத்.

முன்னும் பின்னும் இல்லாது இடைநடுவில் தோற்ற மாத்திரமாயுள்ளது அசத்து. கானற்சலம்; ரஜ்ஜுவில் சர்ப்பம். முன்னும் பின்னும் இல்லாது இடை நடுவில் தோன்றுபவை. அப்படியே தேகமும், ஜகத்தும் முன்னும் பின்னும் இல்லாது இடை நடுவில் தோற்றுபவை. ஆதலால் அசத்து என்று சொல்லப்படுகிறது.

தத்துவதரிசிகள் = பிரமதரிசிகள்

கஎ. எதனால் இதெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ அதனை அவிநாசி யென்று அறி. நாசமற்ற இதற்கு எவனும் நாசஞ் செய்ய முடியாது.

[வி] அவிநாசி = நாசமற்றது
(அ—இன்மைப்பொருளைக் காட்டுகிறது)

கஅ. நித்திய நாசரகித அப்பிரமேய சரீரியின் இச் சரீரங்கள் முடிவுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதலால், யுத்தத்தைச்செய் பாரத!

[வி] நாசரகித = நாசமற்ற
அப்பிரமேய = இந்திரியங்களுக்கு விஷயமாகாத
யுத்தம் = யுத்தத்தைச்செய் என்ற அர்த்தத்திலும் யோகத்தைக் கூடு என்ற அர்த்தத்திலும் கீதையில் பாவிக்கப் பட்டிருக்கிறது. யுத்தத்தில் அசுரர்கள் கொல்லப்படுகிறார்கள். யோகத்தில் அசுர விருத்திகள் கொல்லப்படுகின்றன. கிருஷ்ணன் யோக ஆசிரியன். அருச்சுனன் யோகி. இருவரும் மகதத்துவத்தி லுள்ளவர்கள். அவர்கள் வசிக்கும் பூமி மகதத்துவம். அவர்கள் அசுரர்களைக் கொல்ல இங்கு அவதாரஞ் செய்தார்கள்.
= சரீரத்தையுடையவன்.

௧௯. எவன் இவனைக் கொல்பவனாக அறிகிறானோ, எவன் இவனைக் கொல்லப்படுபவனாகவும் அறிகிறானோ, அவ்விருவரும் அறிபவரல்லர். இவன் கொல்பவனும் அல்ல, கொல்லப்படுபவனும் அல்ல.

[வி] கொலைத்தொழிலை மறுக்கிறதினால் ஆத்மா கர்மமற்றது, கிரியையற்றது, என்பது இதன் கருத்து. வேதாந்த சாஸ்திரத்தில் ஆத்மா சத்திய ஞான அனந்த ஆனந்த ரூபமென்றும், கர்மமற்றது என்றும், கிரியை அற்றது என்றும் வசனிக்கப்படுகிறது.

௨0. இவன் பிறப்பதில்லை இறப்பதில்லை அல்லது ஒரு காலத்திலிருந்து மீண்டுமில்லாமற் போவதில்லை. பிறப்பற்றவன் நித்தியன், சாஸ்வதன், புராணன், இவன் சரீரம் கொல்லப்படும்போது கொல்லப்படுவதில்லை.

[வி] ஆத்மாவுக்கு பிறப்பு, இறப்பு, இருத்தல், வளர்தல், தேய்தல், திரிதல், ஆகிய ஆறு விகாரங்களும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

சாஸ்வதம் = இப்பதத்தால் தேய்தல் என்னும் விகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.

புராணம் — இப்பதத்தால் வளர்தல் என்னும் விகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.

நித்தியம் = இப்பதத்தால் திரிதல் என்னும் விகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.

கொல்லப்படுகிறதில்லை = இப்பதத்தால் இறத்தல் என்னும் விகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.

இவன் = ஆத்மா.

௨௧. எவன் இவனை, அவிநாசி, நித்தியன், பிறப்பிலி, குறைவுபாடில்லாதவன் (என்று) அறிகிறானோ எப்படி அப்புருஷன், பார்த்த! எவனைக் கொல்லும்படிச்செய்வான், எவனைக் கொல்லுவான்.

[வி] அவிநாசி = நாசமற்றவன்

பிறப்பிலி = பிறப்பில்லாதவன்

இவனை = ஆத்மாவை

கொல்லும்படிச் செய்வான் = கொலைத்தொழில் செய்வதற்கு ஏவுதற் கர்த்தாவாகிறான்.

கொல்லுவான் = கொலைத்தொழிலுக்கு இயற்றுதற் கர்த்தாவாகிறான்.

ஏவுதலும்,இயற்றுதலும் ஆகிய இருவகைத்தொழில்களும் ஆத்மாவுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றன. ஆத்மா கர்மமற்றது, கிரியை யற்றது என்று வேதாந்த சாஸ்திரத்தில் சாதகனுக்கு உபகாரமாகப் பலதடவை சொல்லப்பட்டிருக்கிறது.

௨௨. ஜீரணித்த ஆடைகளை எப்படி எறிந்து வேறு புதியவற்றை மனிதன் தரித்துக்கொள்ளுகிறானோ அப்படி ஜீரணித்த தேகங்களை எறிந்து வேறு புதியவற்றைத் தேகி அடைகிறான்.

[வி] புதியவற்றை = பிரமதேகத்தை
தேகி = தேகாபிமானி

௨௩. இவனைச் சஸ்திரங்கள் வெட்டுகிறதில்லை. இவனை அக்னி எரிக்கிறதில்லை. இவனை ஜலம் நனைக்கிறதில்லை. காற்றும் உலர்த்துகிறதில்லை.

சஸ்திரங்கள்வெட்டுகிறதில்லை = சாஸ்திர ஞானத்தினால் அறியக் கூடியவன் அன்று.
அக்னி எரிக்கிறதில்லை = தபசினால் அறியக் கூடியவன் அன்று.
ஜலம் நனைக்கிறதில்லை = பிரம விக்ஞானத்தினால் அறியக் கூடியவன் அன்று.
காற்று உலர்த்துகிறதில்லை = யோகத்தினால் அறியக் கூடியவன் அன்று.
இவனை = ஆத்மாவை

௨௪. இவன் வெட்டமுடியாதவன், இவன் எரிக்க முடியாதவன், அப்படியே நனைக்கவும் உலர்த்தவும் முடியாதவன், இவன் நித்தியன், எங்கும் உள்ளவன், நிலையானவன், அசைவற்றவன், சனாதனன்.

[வி] இவன் = ஆத்மா
சனாதனன் = முன்னோன்
நேதி நேதி — இதன்று, இதன்று என்ற பதங்கள் பிரமத்தைக் காட்டும் ஆதேசம் (குறிப்புச்சொல்)

இரண்டாவது அத்தியாயம்

௨௫. இவன் வெளிப்படையில்லாதவன். இவன் சிந்திக்கமுடியாதவன். இவன் விகாரமில்லாதவன் (என்று) சொல்லப்படுகிறான், ஆதலால், இப்படி இவனையறிந்து (நீ) துக்கிக்கவேண்டியதில்லை.

[வி] வெளிப்படையில்லாதவன் = சாஸ்திர ஞானத்திற் கெட்டாதவன்.
சிந்திக்க முடியாதவன் = மனத்திற்கெட்டாதவன்; ஆனால் ஞானத்திற்கு எட்டக்கூடியவன்.
விகார மில்லாதவன் = கர்மத்திற் கெட்டாதவன். ஆனால் மனத்திற்கு எட்டக்கூடியவன்.

இவை சாதனபுருஷனுக்குச் சொல்லப்பட்ட குறிப்புகள்.

௨௬. அல்லது இவன் என்றும் பிறப்பவனும், அல்லது என்றும் இறப்பவனும் (என்று) எண்ணுவாயாகின் அப்பொழுதும் நீ! மகாபாகோ! இவனைப் (பற்றி) துக்கிக்க வேண்டியதில்லை.

[வி] மகா பாகோ = கெட்டதை நீக்கி நல்லதைச் சொல்லுகிறவன்.

௨௭. ஏனெனில், பிறந்ததற்கு இறப்பு நிச்சயம். இறந்ததற்கும் பிறப்பு நிச்சயம். ஆதலால், தவிர்க்க முடியாத விஷயத்தில் நீ விசனப்படவேண்டியதில்லை.

[வி] (ஏனெனில்) ஞானம் உதயமாவது நிச்சயம். அஞ்ஞானம் நசித்தால் ஞானம் உதயமாகும். ஆதலால்

தவிர்க்கமுடியாத விஷயத்தில் நீ விசனப்பட வேண்டிய தில்லை.

௨௮. பூதங்கள் ஆதியில் அவ்யக்தம். மத்தியில் வியக்தம். அப்படியே முடிவில் அவ்யக்தம்; அதில் வருத்தமென்ன பாரத!

[வி] வியக்தம் = வெளிப்படையானது.
அவ்யக்தம் = வெளிப்படையில்லாதது.
பூதங்கள் = பிராணிகள்.

௨௯. ஆச்சரியம் போல் ஒருவன் இவனைப் பார்க்கிறான். ஆச்சரியம் போலவும் அப்படியே அந்நியன் பேசுகிறான். ஆச்சரியம் போலவும் அந்நியன் இவனைக் கேட்கிறான். கேட்டும் ஒருவனும் இவனை அறிகிறதே இல்லை.

[வி] ஆச்சரியம் = முன் பாராததைப் பார்த்தல் கேளாததைக் கேட்டல். (திருவாசகம்) 'கேட்டாருமறியாதான் கேடொன்றுமிலான், கேடொன்றிலான், கேளாதனவெல்லாங்கேட்க'.........
இவனை = ஆத்மாவை

௩௦. ஒவ்வொருவரின் தேகத்திலுள்ள இத்தேகி, என்றும் பங்கமற்றவன். பாரத! ஆதலால் சர்வபூதங்களைப் (பற்றி) நீ வருந்தவேண்டியதில்லை.

[வி] பங்கமற்றவன் = கெடுதலில்லாதவன்
பூதங்கள் = பிராணிகள்

௩௧. மேலும் சுதர்மத்தை நோக்கியும் நடுங்கவேண்டியதில்லை. (நீ) ஏனெனில், தர்மயுத்தத்திலும் சிறந்தது வேறொன்று க்ஷத்திரியனுக்கில்லை.

[வி] தர்மயுத்தம் = க்ஷத்திரியன் நல்லோரைக் காக்கவும், தீயோரை நாசஞ்செய்யவும் வேண்டியது தர்மம்.
சுதர்மம் = ஆத்மதர்மம்.
தர்மயுத்தம் = கர்மம் பக்தி ஞானத்தோடு கூடிய யோகம்.
க்ஷத்திரியன் = இரக்ஷிக்கிறவன். ஆத்மாவைக் காப்பாற்றுகிறவன். ரஜோ தமோ குணமாகிய அசுர சம்பத்தைச் சங்காரஞ்செய்து அதனால் ஆத்மஞானத்தை அடைகிறவன். அஞ்ஞானிகளுக்கு ஆத்மா வெளிப்படையாயில்லை. அதனால் அவர்கள் ஆத்மாவைக் கொல்லுகிறவர்கள். ஆத்மா அவர்களுக்கிருந்தும் இல்லாமலே இருக்கிறது.

௩௨. தெய்வாதீனமாய்ச் சம்பவித்திருப்பதும், சுவர்க்கவாசல் திறந்திருப்பதுமாகிய இதுபோன்ற யுத்தத்தை யோகவான்களாகிய க்ஷத்திரியர்கள் பார்த்த! அடைகிறார்கள்.

[வி] சுவர்க்கவாசல் மோக்ஷமார்க்கம்
இதுபோன்ற = தர்மத்தோடு கூடிய (கர்மம், பக்தி ஞானத்தோடு கூடிய)
யுத்தம் = யோகம்

௩௩. ஆனால் நீ இத்தர்ம யுத்தத்தைச் செய்யாவிடில், அப்பொழுது சுதர்மத்தையும் கீர்த்தியையு மிழந்து பாபத்தை அடைவாய்.

[வி] சுதர்மம் = ஆத்மதர்மம்
கீர்த்தி = பிரம்மவிபூதி
பாபம் = அஞ்ஞானம்

௩௪. அன்றியும் உனது குன்றாத அகீர்த்தியையும் பூதங்கள் பேசுவார்கள். பெருமை அடைந்தவனுக்கு அகீர்த்தி மரணத்திலும் மேலாகிறது.

[வி] கீர்த்தி = பிரம்மவிபூதி
அகீர்த்தி = பிரம்மவிபூதி இன்மை
பூதங்கள் = யோகிகள்
பெருமை அடைந்தவனுக்கு = பிரம்மவிபூதியைப் பெற்றவனுக்கு
அகீர்த்தி = மோக்ஷமின்மை
மரணத்திலும் = அஞ்ஞானத்திலும்
மேலாகிறது = என்றும் யோகிக்கு மோக்ஷத்திலேயே தான் கருத்து. அஞ்ஞானம் அவனுக்குச் சத்துரு.

இரண்டாவது அத்தியாயம்

௩௫. பயத்தினால் யுத்தத்தை விட்டு நீங்கினாய் (என்று) உன்னை மகாரதர்கள் எண்ணுவார்கள். மேலும் எவர்களால் நீ அதிகமாய் மதிக்கப்பட்டாயோ (அவர்களால்) அற்பமாய் எண்ணப்படுவாய்.

[வி] பயத்தினால் = அஞ்ஞானத்தினால்
யுத்தம் = யோகம்
மகாரதர்கள் = யோகிகள் (ஜனகாதிகள்)

௩௬. பேசத்தகாத அநேக வார்த்தைகளையும் உனது விரோதிகள் பேசுவார்கள். உனது சாமர்த்தியத்தை நிந்திப்பார்கள். அதனினும் மிகுந்த துக்கம் யாது?

[வி] சாமர்த்தியம் = யோகப்பிரம நிஷ்டையைச் சாதிக்கும் திறமை.

௩௭. கொல்லப்பட்டால் சுவர்க்கத்தை அடைவாய். ஜயித்தால் பூமியை அநுபவிப்பாய். ஆதலால் கௌந்தேய! யுத்தத்திற்கு நிச்சயித்தவனாய் எழுந்திரு!

[வி] பூமி = தேகம்
யுத்தம் = யோகம்
எழுந்திரு = யோகத்தைக்கூடு
சுவர்க்கம் = மோக்ஷம்

௩௮. சுகத்தையும், துக்கத்தையும், லாபத்தையும், அலாபத்தையும், ஜயத்தையும் அபஜயத்தையும் சமமாய்க் கொண்டு, பின் யுத்தத்தைக்கூடு. இப்படிப் பாபத்தை அடையாய்.

[வி] சம்மமாய்க் கோண்டு } = பிரம்மமாய்ப் பாவித்து

சுகம் = ஞானம்

துக்கம் = அஞ்ஞானம்

பாபம் = அஞ்ஞானம்

யுத்தத்தைக்கூடு = யோகத்தைக்கூடு. யோகமும் யுத்தமும் மேற்கண்ட சுலோகங்களில் ஒரே வாக்கியத்தால் பகவான் சொல்லுகிறார். ஏனெனில், யோகத்தினால் அசுரவிருத்திகள் கொல்லப்படுகின்றன. தர்மயுத்தத்தில் அசுரர்கள் கொல்லப்படுகிறார்கள்.

௩௯. இப்புத்தி உனக்குச் சாங்கியத்தில் சொல்லப்பட்டது. இனிப் புத்தியோகத்தில் இதனைக்கேள். எப்புத்தியினால் யோகத்தைக் கூடிப் பார்த்த! கர்ம பந்தத்தை விலக்கிக்கொள்வாய்.

[வி] சாங்கியம் = கர்மம், பக்தி, ஞானம்.

புத்தியோகம் = யோகப்பிரம நிஷ்டை.

கர்மபந்தம் = கர்மபந்தம், பக்திபந்தம், ஞானபந்தம் ஆகிய மூன்றும் கருதப்படுகின்றது. கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று சம்பந்தமானவை. இம்மூன்றும் பிரவிர்த்தி மார்க்கம், யோகம், நிவிர்த்தி மார்க்கம்.

இரண்டாவது அத்தியாயம்

௪0. இங்கு முயற்சி வீணாவதில்லை. விதியின் மீறுதலில்லை. இத்தர்மத்தின் சுவல்பம் மகத்தின் பயத்தினின்று காப்பாற்றுகிறது.

[வி] முயற்சிவீணாவதில்லை } = யோகத்தில் முயற்சி பயனின்றிக் கெடுவதில்லை.

விதியின்மீறுதலில்லை } = பிராயச்சித்தம் வேண்டுவதில்லை (யோகத்தில்)

மகத்தின் பயம் = மகத்கூடத்திலுள்ள அஞ்ஞானம்.

௪௧. உறுதியான புத்தி, இங்கு ஒன்றேதான். குருநந்தனா! உறுதியற்றவர்களுக்கு எண்ணங்கள் அநேக கிளைகளையுடையவும் அநந்தமும்.

[வி] உறுதியானபுத்தி = யோகிகளின் புத்தி ஏகம். ஆதலால் உறுதியானது.

உறுதியற்றவர்கள் = கர்மம், பக்தி ஞானத்திலுள்ளவர்கள். அவர்களின் எண்ணங்கள் அநேக கிளைகளையுடையன. அவ்வெண்ணங்களுக்கு அந்தமுமில்லை.

௪௨. இந்த மலர்ந்த வார்த்தைகளை அவிவேகிகள் சொல்லுகிறார்கள். வேத வாக்கியங்களில் ரமிக்கிறவர்கள் பார்த்த! வேறொன்றுமில்லை என்று வாதிப்பார்கள்.

[வி] மலர்ந்தவார்த்தைகள் } = கர்மகாண்ட வேதத்தில் கர்மங்களுக்குப் பலன் பக்கத்தில் அலங்காரமாய்ச் சொல்லப் பட்டிருக்கிறது.

அவிவேகிகள் = கர்மம், பக்தி ஞானத்தில் பற்றுடையவர்கள். யோகாப்பியாசத்தில் திறமை இல்லாதவர்கள்.

வேதவாக்கியங்களில் ரமிக்கிறவர்கள் = கர்மகாண்ட வேதவாக்கியங்களில் சந்தோஷித்திருப்பவர்கள்.

வேறொன்றுமில்லையென்று வாதிப்பவர்கள் = யோகத்தில் புத்தியில்லாதவர்கள்.

சங. காமிகள் சுவர்க்கத்தைச் சிரேஷ்டமாய்க் கொண்டவர்கள், கர்மத்தின் பலனாக ஜன்மத்தைக் கொடுப்பது பலவித அநேக கிரியைகளையுடையது. போகத்தையும் ஐசுவரியத்தையும் அடைவதற்குரியது.

சச. போகத்திலும், அரசாட்சியிலும் பற்றுடையவர்கள். அதனால் அறிவு அபகரிக்கப்பட்டவர்கள் (ஆகிய அவர்களுக்கு) உறுதியான புத்தி சமாதியில் நிலை பெறுவதில்லை

[வி] கர்மம், பக்தி ஞானத்தின் கண்டனமும், யோகத்தின் புகழ்ச்சியும் சஉ, சங, சச ஆகிய இம்மூன்று சுலோகங்களின் கருத்து.

சரு. வேதங்கள் முக்குணங்களை விஷயமாயுடையவை. முக்குணங்கள் அற்றவனாயிரு; அர்ச்சுனா! துவந்துவாதீதனாய் எப்பொழுதும் சத்துவத்திலிருப்பவனாய், யோக க்ஷேமமற்றவனாய், விழிப்புள்ளவனாய் (இரு).

[வி] வேதங்கள் = கர்மகாண்டவேதங்கள்.
முக்குணங்கள் = சத்துவம், ரஜஸ், தமஸ்.
துவந்துவாதீதன் = அத்துவித திருஷ்டியுள்ளவன்.
சுத்தசத்துவம் = ரஜோதமோகுண கலப்பின்றிய சத்துவம். இது பிரமப் பிராப்தி ஒன்றுக்கே சாதனம்.
யோகக்ஷேமமற்றவனாய் = யோகத்தைக் கூட்டவேண்டுமென்ற எண்ணத்தையும் யோக விக்னங்களை நீக்கவேண்டுமென்ற எண்ணத்தையும் நீக்கிப் பிரமமாயிரு.
க்ஷேமம் = யோகவிக்னங்களின் நீக்கம்.
விழிப்புள்ளவனாயிரு = சதா பிரமமாயிரு. அஞ்ஞானிகள் பிரமத்தில் எப்பொழுதும் நித்திரை கொள்பவராயிருக்கிறார்கள்.

சசு. எங்கும் நிரம்பிய நீர்ப்பெருக்கில் எவ்வளவு பிரயோஜனமுண்டோ (அவ்வளவும்) தடாகஜலத்திலுண்டு. எல்லா வேதங்களிலும் (எவ்வளவு பிரயோஜனமுண்டோ) அவ்வளவு பிரமவிக்ஞானமுடைய பிராம்மணனுக்கு ஒரு வேதத்திலுண்டு.

[வி] பிரம்ம விக்ஞானம் = பிரம அநுபவக்ஞானம்.
விக்ஞானம் = விசேஷ ஞானம். எந்த ஞானத்தால் பிரமம் அநுபவமாய் அறியப்படுகிறதோ அந்த ஞானம்.

௪௭. கர்மத்திலே உனக்கதிகாரம். பலன்களில் ஒரு காலத்தும் வேண்டாம். கர்மபலத்தில் கருத்து வேண்டாம். உனக்கு அகர்மத்தில் பிரியம் வேண்டாம்.

[வி] பலன்களில் உனக்கு ஒரு காலத்தும் வேண்டாம். = ஜீவனுக்கும் பலனுக்குஞ் சம்பந்தமில்லை. ஆனால் கர்மத்துக்கும் பலனுக்கும் சம்பந்தம். ஆதலின் ஜீவனுக்கும் கர்மத்துக்கும் சம்பந்தம். ஜீவன் பலனைக் கருதாமற் கருமத்தைச் செய்யவேண்டியது.

உனக்கு அகர்மத்தில் பிரியம் வேண்டாம். இந்தச் சீவன் முக்குணவயத்தன். முக்குணங்களால் ஏவப்பட்டுச் சுதந்திர மற்றுக் கர்மத்தைச் செய்வான். ஆதலால், வேதத்தில் விதிக்கப்பெற்ற கர்மத்தைப் பலனைக் கருதாமல் இவன் கர்மத்தைச் செய்தால் சித்த சுத்தி அடைவான்.

௪௮. யோகத்தில் அமர்ந்தவனுய்ப் பற்றைவிட்டுச் சித்தியிலும் அசித்தியிலும் சமமாயிருந்து கர்மங்களைச்செய், தனஞ்சய! சமத்துவம் (யோகம்) என்று சொல்லப்படுகிறது.

[வி] சமமாயிருந்து = பிரமம் குண தோஷமற்றது. நீயும் அப்படியே பிரமத்தைப்போல் சமமாயிரு. ஏனெனில், சமத்துவம் யோகம்என்று சொல்லப்படுகிறது.

சமத்துவம் = பிரம கருமம்.

இரண்டாவது அத்தியாயம்

௪௯. ஏனெனில், புத்தியோகத்திலும் கர்மம் மிகத் தாழ்ந்தது. தனஞ்சய! புத்தி (யோகத்தில்) சரணம் அடை. பலனைக் கருதுகிறவர்கள் அற்பர்கள்.

[வி] கர்மம் = கர்மம், பக்தி, ஞானம்.

புத்தியோகம் = உத்தர மகத்திலும் அவ்யக்த கூடத்தின் தக்ஷிண பாகத்திலும் அனுஷ்டிக்கப்படுகிற யோகம். இதற்கு யோகப்பிரம நிஷ்டை என்று பெயர். பலனைக்கருதுகிறவர்கள், அற்பர்கள். யோக சித்தியை நாடுகிறவர்கள் அற்பர்கள். ஏனெனில், பிரமம் கார்ப்பண்ணிய தோஷ மற்றது. கார்ப்பண்ணிய தோஷம் அற்ப விஷயங்களிலிச்சை.

௫௦. புத்தியோகத்தைக் கூடினவன் இங்கு நல்லதும் தீயதும் (ஆ ?ய) இருவித கர்மங்களை விடுகிறான். ஆதலால், யோகத்தைக் கூடு. யோகம் கர்மங்களிலும் மேலானது.

[வி] புத்தியோகம் = யோகப்பிரம நிஷ்டை உத்தர மகத்திலும், அவ்யக்த கூடத்தின் தக்ஷிண பாகத்திலும் அனுஷ்டிக்கப்படுகிற யோகம்.

யோகம் = யோகப்பிரம நிஷ்டை

கர்மங்களிலும் = கர்மம், பக்தி, ஞானத்திலும்.

௫௧. ஏனெனில், புத்தியோகத்தைக் கூடிக் கர்மத்தினால் உண்டான பலனைவிட்டு மேதாவிகள் ஜன்மபந்தத்திலிருந்து விடுபட்டு நோயற்ற பதவியை அடைகிறார்கள்.

[வி] புத்தியோகத்தைக்கூடி = யோகப்பிரமநிஷ்டையைக்கூடி

கர்மத்தினாலுண்டான பலனைவிட்டு = கர்மம், பக்தி, ஞானத்தினாலுண்டான பலனை விட்டு

மேதாவிகள் = மகதத்துவ விவேகிகள்

மகதத்துவம் = புத்தியின் உத்தரபாகம்

நோயற்ற பதவி = மோக்ஷம்

௫௨. எப்பொழுது உனது புத்தி மோகத்தின் கலசத்தைத் தாண்டுமோ, அப்பொழுது கேட்கவேண்டியதிலும் கேட்டதிலும் விருப்பமின்மையை அடைவாய்.

[வி] கேட்கவேண்டியதிலும் கேட்டதிலும் = ஆகிய வேதவாக்கியங்கள்.

௫௩. சுருதிகளால் கலங்கிய உனது புத்தி எப்பொழுது சலனமின்றி அசைவற்றுச் சமாதியில் நிலைபெறுமோ அப்பொழுது யோகத்தை அடைவாய்.

[வி] யோகபிரம்ம நிஷ்டையின்றி அநேக சுருதிவாக்கியங்களைப் படித்தலால் புத்தியின் சலனத்தன்மை ஏற்படுகிறது.

இரண்டாவது அத்தியாயம்

அர்ச்சுனன் சொன்னான்:—

௫௪. சமாதியை அடைந்த திடப்பிரக்ஞனின் இலக்ஷணமென்ன? கேசவ! (பிரம்மத்தில்) புத்தி நிலைக்கப் பெற்றவன் எப்படிப் பேசுவான்? எப்படி இருப்பான்? எப்படி நடப்பான்?

[வி] ஆரம்பத்தில் யோகி தனது புத்தியைப் பிரம்மத்தில் நிறுத்தி அப்பியாசஞ் செய்கிறான். அதனால் சமாதியை அடைகிறான். சமாதி அடைந்தபின் பிரம்ம பிரக்ஞையை அடைகிறான்.

ஸ்ரீபகவான் சொன்னார்:—

௫௫. மனத்திலுள்ள சர்வகாமங்களையும், பார்த்த! எப்பொழுது உதறுகிறானோ, ஆத்மாவிலே, தானே திருப்தி அடைகிறானோ, அப்பொழுது திடப்பிரக்ஞன் (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] தானே = ஜீவாத்மா—சிதாபாசனோடு கூடிய அந்தக்கரணம்.

௫௬. துக்கங்களிற் கலங்காத மனத்தை யுடையவன், சுகங்களில் பிரியமற்றவன், ஆசை, பயம் கோபம் நீங்கப் பெற்றவன், புத்தி நிலைக்கப்பெற்ற முனிவன் (என்று) சொல்லப்படுகிறான்.

௫௭. எவன் சர்வத்திலும் பற்றில்லாதவனாய் அந்தந்த சுபத்தையும் அசுபத்தையும் அடைந்து விரும்புகிற

தில்லையோ, வெறுக்கிறதில்லையோ, அவனுடைய பிரக்ஞை நிலைபெற்றது.

[வி] பிரக்ஞை = ஞானம்
சுகம் = மங்களமானது
அசுபம் = மங்களமற்றது

௫௮. எப்படி ஒரு ஆமை (தனது) உறுப்புக்களை எப்புறத்தினின்றும் ஒடுக்கிக் கொள்கிறதோ, (அதுபோல்) இந்திரியங்களை இந்திரிய விஷயங்களினின்றும் (ஒடுக்கிக் கொள்ளுகிறானோ அப்பொழுது) அவனுடைய பிரக்ஞை நிலைபெற்றது.

[வி] பிரக்ஞை = ஞானம்

எப்படி ஆமை யத்தனமின்றித் தனது அவயவங்களை ஒடுக்கிக்கொள்ளுகிறதோ அவ்வண்ணம் எந்தப் புருஷன் யத்தனமின்றித் தனது இந்திரியங்களை ஒடுக்கிக்கொள்ளுகிறானோ அவனுடைய பிரக்ஞை நிலைபெற்றது.

௫௯. ஆகாரமில்லாத தேகிக்கு ரசம் நீங்கலாக விஷயங்கள் நிவிர்த்தி யாகின்றன. பரத்தைக் கண்டதும் அவனுடைய ரசமும் நிவிர்த்தியாகின்றது.

[வி] பரத்தைக் கண்டதும் ரசமும் நிவிர்த்தி யாகின்றது = பிரம்மத்தைத் தரிசித்ததும் விஷய வாசனை நீங்குகிறது.
ரசம் = ஆசை.

இரண்டாவது அத்தியாயம்

௬௦. ஏனெனில், விவேகபுருஷன் முயல்கின்றவனாயினும், கௌந்தேய! மீறிச்செல்லும் இந்திரியங்கள் மனத்தை வலிந்து இழுத்துக்கொண்டு போகின்றன.

௬௧. அவையாவையும் அடக்கிச் சமத்துவம் அடைந்தவனாய், என்னை மேலாகக் கொண்டவனாய், அமர்ந்திருக்க வேண்டும். எவனுடைய இந்திரியங்கள் வசப்பட்டிருக்கின்றனவோ, அவனுடைய பிரக்ஞை நிலைபெற்றிருக்கிறது.

[வி] சமத்துவம் = பிரம்ம ஸ்திதி
என்னை = பரமாத்மாவை
மேலாகக் கொண்டவன் = பரகதியாகக் கொண்டவன்

௬௨. விஷயங்களைத் தியானிக்கும் புருஷனுக்குப் பற்று அவற்றில் ஜனிக்கிறது; பற்றினின்றும் காமம் ஜனிக்கிறது; காமத்தினின்றும் கோபம் ஜனிக்கிறது.

௬௩. கோபத்தினின்று மோகம் எழுகின்றது; மோகத்தினின்று ஞாபகக் கலக்கம்; ஞாபகக் கலக்கத்தினின்று புத்தி நாசம்; புத்தி நாசத்தால் அழிகிறான்.

௬௪. ஆனால், ராகத் துவேஷங்களினின்றும் விடுபட்டு மனம் அடங்கியவன், தனக்குச் சுவாதீனமாகிய இந்திரியங்களால் விஷயங்களிற் சஞ்சரிக்கிறவன், சாந்தியை அடைகிறான்.

[வி] ராகம் = விருப்பு
துவேஷம் = வெறுப்பு

௬௫. சாந்தம் அடைந்த இடத்துச் சர்வ துக்கங்களின் நிவிர்த்தியுண்டாகிறது; மனம் சாந்தமடைந்தவனுக்கு விரைவில் புத்தி சமத்துவம் அடைகிறது.

[வி] சமத்துவம் = பிரம்ம தர்மம்

௬௬. சமத்துவமில்லாதவனுக்குப் புத்தியில்லை. சமத்துவமில்லாதவனுக்குத் தியானமில்லை. தியானமுமில்லாதவனுக்குச் சாந்தியில்லை. சாந்தியில்லாதவனுக்கு எப்படிச் சுகம்?

[வி] தியானம் = பிரம்மதியானம்
சுகம் = ஆனந்தம்

௬௭. ஏனெனில், அலைகின்ற இந்திரியங்களை எந்த மனம் பின்பற்றுகிறதோ அது இவனுடைய பிரக்ஞையை இழுத்துக்கொண்டு போகிறது. வாயு நீரில் ஓடத்தை (இழுத்துச் செல்வது) போல்.

௬௮. ஆதலால், மகாபாகு! எவனுடைய இந்திரியங்கள், இந்திரிய விஷயங்களினின்றும் எப்பக்கங்களிலும் தடுக்கப்பட்டனவோ அவனுடைய பிரக்ஞை நிலையானது.

௬௯. சர்வ பூதங்களுக்கும் எது இரவோ அதில் அடக்கமுள்ளவன் விழித்திருக்கிறான்; எதில் பூதங்கள் விழித்திருக்கின்றனவோ அது (பிரமத்தைக்) காண்கிற முனிவனுக்கு இரவு.

[வி] பூதங்கள் = பிராணிகள்
இரவு = அஞ்ஞானம், நித்திரை

பிரமத்தில் ஞானி விழித்திருக்கிறான். அஞ்ஞானி நித்திரை செய்கிறான். ஜகத்தில் ஞானி நித்திரை செய்கிறான். பிரமத்தில் விழித்திருக்கிறான்.

[வி] நித்திரை = அஞ்ஞானம்

உதாரணம்; காகமும் கோட்டானும். காகத்திற்குக் கண் பகலில் தெரியும்; இரவிற்றெரியாது. கோட்டானுக்குக் கண் இரவிற் றெரியும்; பகலில் தெரியாது.

௭௰. எங்கும் நிரம்பி அசைவற்று நிலைத்து நிற்கும் சமுத்திரத்தில் நதிகள் எப்படிப் பிரவேசிக்கின்றனவோ, அப்படிச் சர்வகாமங்களும் எவனைப் பிரவேசிக்கின்றனவோ, அவன் சாந்தியை அடைகிறான். காமங்களை விரும்புகிறவனன்று.

[வி] விஷயங்களின் சன்னிதானத்தில் ஞானி சலனமின்றி இருக்கிறான்.

உதாரணம்:—நதிகள் சமுத்திரத்தில் பிரவேசிக்கும் இடத்தில் சமுத்திரம் ஒரே படித்தரமாய் இருப்பதுபோல்.

௭௧. எப்புருஷன் சர்வகாமங்களையும் உதறி ஆசையற்றவனாய் மமகாரம் அகங்காரமில்லாதவனாய் சஞ்சரிக்கிறானோ அவன் சாந்தியை அடைகிறான்.

[வி] மமகாரம் = எனது
அகங்காரம் = நான்

௭௨. இது பிரம்மத்தின் நிலை; பார்த்தா! இதனை அடைந்து மயங்குகிறானில்லை. மரணகாலத்திலும் இதில் நிலைத்து பிரம்ம நிர்வாணத்தை அடைகிறான்.

[வி] நிலை = ஸ்திதி
நிர்வாணம் = ஆனந்தம்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன ஸம்வாதத்திலே ஸாங்க்யயோகம் என்னும் இரண்டாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—அர்ச்சுனன் தனக்கு வெற்றியும் வேண்டாம், சுகங்களும் வேண்டாம், போகங்களும் வேண்டாம், தேவேந்திரபதவியும் வேண்டாம் என்று பகவானுக்குச் சொன்னான். துரியோதனாதிகள் தன்னைக் கொல்பவராயினும் தான் அவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்ய விருப்பமில்லை என்றான். அதன்றியும் அஸ்திரத்தோடு வில்லையும் எறிந்தான். அவன் தன்னுடைய இந்திரியங்களை வாட்டுகிற சோகத்தை எது நீக்குமென்று தனக்குத் தெரியவில்லை என்று பகவானுக்கு முறையிட்டான்; பகவானைத் தனக்கு அறிவுறுத்தும்படிச் சரணமடைந்தான். மேற் சொல்லியவற்றால் அர்ச்சுனன் யோகத்திற்கதிகாரி என்றது வெளிப்படையாயிருக்கிறது. ஏனெனில், எவனுடைய இந்திரியங்களை விஷயங்கள் திருப்தி செய்யாவோ அவனுடைய இந்திரியங்கள் யோகாப்பியாசத்தால்

பிரமாகார விருத்தியடைவதனால் திருப்தி அடையக்கூடும். சர்வத்தையும் அறிந்த சர்வக்ஞனான பகவான் அர்ச்சுனன் தர்மயுத்தத்திற்கும் யோகத்திற்கும் அதிகாரி என்ற நியாயத்தால் ஒரே வாசகத்தால் 'நீ தர்மயுத்தத்தைச் செய்' என்றும் 'யோகத்தைக் கூடு' என்றும் இவ்விரு பொருள்களை அடக்கிக் கூறினார். தர்ம யுத்தத்தையும் யோகத்தையும் விட்டு நீங்குவது பேடித்தன்மை என்றும் சொன்னார். 'ஆரியர்களால் கொண்டாடப்பெற்றது தர்மயுத்தமும் யோகமும்' என்றார், யோகத்திற்குச் சாதகமாக ஆத்மா அனாத்மா விவேகத்தை (௰௧) வது சுலோகம் முதலாக (௩௰)வது சுலோகம் இறுதியாக அருளிச்செய்தார். தர்மயுத்தத்தில் அசுரர்கள் சங்காரஞ் செய்யப்படுகிறார்கள். யோகத்தில் அசுரவிருத்திகள் சங்காரஞ் செய்யப்படுகின்றன. இவ்விரண்டிற்கும் அர்ச்சுனன் அதிகாரி. இதுபற்றிப் பகவான் ஒரே வாக்கியத்தால் 'நீ தர்மயுத்தத்தைவிட்டு நீங்கினால் க்ஷத்திரியர்கள் உன்னை நிந்திப்பார்கள். யோகத்தை விட்டு நீங்கினால் யோகிகள் உன்னை நிந்திப்பார்கள்' என்றும் (௩௧)வது சுலோகம் முதலாக (௩௮) வது சுலோகம் இறுதியாக பகவான் சொன்னார். கர்மம், பக்தி, ஞானம் யோகத்திலும் மிகத் தாழ்ந்ததென்று (௩௯)வது சுலோகம் முதலாக (௫௩)வது சுலோகம் இறுதியாக அருளிச்செய்தார். இதனைக்கேட்ட அர்ச்சுனன் சமாதி அடைந்த

திடப்பிரக்ஞனின் இலக்ஷணமென்ன, பிரமத்தில் புத்தி நிலைத்தவன் எப்படி யிருப்பான், எப்படி நடப்பான், எப்படிப் பேசுவான்' என்றான். அதற்குப் பகவான் சமாதியடைந்த திடப்பிரக்ஞனின் இலக்ஷணமும் புத்தி பிரமத்தில் நிலைத்தவனுடைய இலக்ஷணமும் (௫௫) வது சுலோகம் முதலாக (௭௨) வது சுலோகம் இறுதியாகக் கூறினார். மேலும் அஞ்ஞானி ஜகத்தில் விழித்திருக்கிறானென்றும் பிரமத்தில் நித்திரைசெய்கிறானென்றும் ஞானி பிரமத்தில் விழித்திருக்கிறானென்றும் அருளிச்செய்தார்.

ஆரியன் = யோகி
அனாரியன் = கர்மம், பக்தி ஞானம் அநுஷ்டிக்கிறவன்.
சட்பாவ விகாரங்கள் } = ஆத்மாவுக்குப் பிறத்தல், இருத்தல், இறத்தல், வளர்தல், தேய்தல், திரிதல் என்னும் ஆறு விகாரங்களும் மறுக்கப்பட்டிருக்கின்றன.
சாஸ்வதம் = தேய்தல் என்னும் விகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.
புராணம் = வளர்தல் என்னும் விகாரம் மறுக்கப்பட்டிருக்கிறது.
கீர்த்தி = பிரபவிபூதி
புத்திநிலைத்தவன் = பிரமத்தில் புத்திநிலைத்தவன்.
சமாதியடைந்தவன் } = பிரம்மாகார விருத்தி அடைந்தவன்.
திடப்பிரக்ஞன் = பிரம்மபிரக்ஞையுடையவன்.

இரண்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்
கர்மயோகம்.

அர்ச்சுனன் சொன்னான்:—

௧. கர்மத்திலும் புத்தி (யோகம்) சிறந்ததென்பது உமது மதமாயின், ஜனார்த்தனா! அப்பயங்கரமான கர்மத்தில் என்னை ஏன் ஏவுகிறீர், கேசவா!

[வி] கர்மம் = கர்மம், பக்தி, ஞானம், (சாங்கியம்)
புத்தி } = புத்தியோகம் யோகப்பிரம நிஷ்டை
பயங்கரம் = அஞ்ஞானம் (கர்மம் பக்தி ஞானம்)
கர்மத்தில் = கர்மம், பக்தி, ஞானத்தில்

யோகப் பிரம நிஷ்டையினால் பிரமத்தை ஆசரித்திருந்த மூல அஞ்ஞானம் நிவிர்த்தியாகிறது.

௨. திகைப்பை வருவிப்பது போன்ற வாக்கியத்தால் எனது புத்தியை மயக்குகிறீர் போலும். ஆதலால் நான் நன்மையடையக் கூடியதொன்றையே நிச்சயித்துக் கூறும்.

[வி] திகைப்பை வருவிக்கின்ற } = மயக்கஞ்செய்கின்ற, கலப்புற்ற.

பகவான் கர்மம், பக்தி, ஞானத்தையும் அப்படியே யோகத்தையும் புகழ்ந்து பேசுவதால் அர்ச்சுனனுக்கு இம்மயக்கம் ஏற்பட்டது.

[வி] நிச்சயித்து = பிரமதிருஷ்டியின்படி நிச்சயித்து.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௩. இவ்வுலகில் இருவித நிஷ்டைகள் முன்பு என்னால் கூறப்பட்டன. பாபமற்றோனே! ஞானயோகத்தால் சாங்கியர்களுக்கும் கர்ம யோகத்தால் யோகிகளுக்கும் கூறப்பட்டது.

[வி] ஞானயோகம் = கர்மம், பக்தி, ஞானம்
கர்மயோகம் = யோகம் புத்தியின் கர்மமாயிருக்கிறபடியால் யோகத்தைப் பகவான் இங்கு கர்மயோகமென்றார்.

௪. கர்மங்களை ஆரம்பிக்காததனால் (நைஷ்கர்ம்யம்) கர்மத்தினின்றும் விடுதலையைப் புருஷன் அடைகிறானில்லை. அல்லது சந்நியாசத்தினாலேயும் சித்தியை அடைகிறானில்லை.

[வி] சந்நியாசம் = மந்திரங்களை விடுதல்.
சித்தி = ஞான சித்தி.

௫. ஏனெனில், ஒருவன் ஒரு க்ஷணமேனும் உண்மையில் கர்மத்தைச் செய்யாமலிருக்கமுடியாது; ஏனெனில், எல்லோரும் பிரகிருதியினின்றும் ஜனித்த குணங்களால் பரவசமாய் யாவராலும் கர்மம் செய்யப்படுகிறது.

[வி] குணங்கள் = சத்துவம், ரஜஸ், தமஸ்.
பரவசமாய் = சுதந்திரமின்றி

௬. கர்மேந்திரியங்களை அடக்கி எவன் மனத்தில் இந்திரிய விஷயங்களை நினைத்துக்கொண்டிருக்கிறானோ அம்மயங்கிய புத்தியை யுடையவன் பொய்யொழுக்க முடையவன் (என்று) சொல்லப்படுகிறான்.

௭. ஆனால் எவன் இந்திரியங்களை மனத்தால் அடக்கிப் பற்றின்றிக் கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தை ஆரம்பிக்கிறானோ, அர்ச்சுன! அவன் உயர்ந்தவனாகிறான்.

௮. விதிக்கப்பட்ட கர்மத்தை நீ செய். ஏனெனில், கர்மம் அகர்மத்திலும் சிறந்தது. அகர்மத்தால் உனக்குச் சரீரத்தைக் காப்பாற்றவும் முடியாது.

[வி] அகர்மம் = கர்மம் இன்மை

கீதையின் கருத்து.

இந்திரியக்கூட்டத்தால் நிஷ்காம கர்மத்தைச் செய்ய வேண்டியது. மனக்கூட்டத்தால் பக்தி செய்யவேண்டியது. தக்ஷிண மார்க்கத்தால் ஞான சாஸ்திராப்பியாசம் செய்யவேண்டியது. உத்தரமார்க்கத்தாலும், அவ்யக்த கூடத்தில் தக்ஷிண பாகத்தாலும் யோகப்பிரம்ம நிஷ்டையை அப்பியசிக்க வேண்டியது.

வீண்காலம் போக்குகிறவன் 'ஆசாரக்கள்வன்'.

௯. யக்ஞத்தின் பொருட்டல்லாத அந்நிய கர்மத்தால் இவ்வுலகம் கர்மபந்த முடையது. அதன்பொருட்டு, கௌந்தேய! கர்மத்தைப் பற்றில்லாதவனாய்ச் செய்.

[வி] யக்ஞத்தின் போருட்டு } = பிரம்மார்ப்பணத்தின் பொருட்டு.

௧௦. யக்ஞத்தோடுகூட பிரஜைகளைப் பிரஜாபதி முன்பு சிருஷ்டித்துச் சொன்னார். இதனால் நீங்கள் விருத்தி செய்வீர்களாக, இது உங்களுக்கு இஷ்டப்பட்ட காமங்களைக் கொடுப்பதாக இருக்கட்டும்.

[வி] பிரஜாபதி = பிரம்மா.

௧௧. இதனால் தேவதைகளை விருத்தி செய்யுங்கள். அந்த தேவதைகள் உங்களை விருத்தி செய்யட்டும். ஒருவருக்கொருவர் விருத்தி செய்பவர்களாய் மேலான நலத்தை யடைவீர்கள்.

௧௨. ஏனெனில், தேவதைகள் யக்ஞத்தால் விருத்தி செய்யப்பட்டவர்களாய் உங்களுக்கு இஷ்டபோகங்களைக் கொடுப்பார்கள். அவர்களால் கொடுக்கப்பட்டவற்றை அவர்களுக்குக் கொடாமல் எவன் புசிக்கிறானோ, அவன் கள்வனே.

௧௩. யக்ஞ சேஷத்தைப்புசிக்கிற நல்லோர்கள் சர்வ பாபங்களினின்றும் விடுபடுகிறார்கள். ஆனால் எவர்கள் தங்களுக்காகப் பாகஞ்செய்து கொள்ளுகிறார்களோ அப்பாபிகள் பாபத்தைப் புசிக்கிறார்கள்.

[வி] பாபம் = அஞ்ஞானம்
பாபிகள் = அஞ்ஞானிகள்.
பாபத்தைப் புசிக்கிறார்கள் } = அஞ்ஞானத்தை அடைகிறார்கள்.

தங்களுக்காக = ப்ரகிருதி சம்பந்தமான யாவையும்.

௧௪. அன்னத்தினின்றும் பூதங்களுண்டாகின்றன. மழையினின்று அன்னத்தினுற்பத்தி. யக்ஞத்தினின்று மழையுண்டாகிறது. யக்ஞம் கர்மத்திலிருந்து உற்பத்தியுடையது.

௧௫. கர்மம் வேதத்தினின்றுற்பத்தியுடையது (என்று) அறி. வேதம் அக்ஷரத்தினின்று உற்பத்தியுடையது. ஆகையால், வியாபகப்பிரம்மம் எப்பொழுதும் யக்ஞத்தில் நிலைபெற்றிருக்கிறது.

[வி] அக்ஷரம் = அழியாப்பொருள், பிரம்மம்.

௧௬. இப்படிச் சுழல்கின்ற சக்கரத்தை எவன் இங்கு அனுசரிக்கிறதில்லையோ அவன் பாப ஆயுளை, இந்திரியங்களிற் களிப்புடையவனாய், பார்த்த! விருதாவாய்ச் சீவிக்கிறான்.

கர்ம சக்கரம்



யக்ஞத்தினால் பசி தாகம் நீங்கப்பெற்ற தேவர்கள் திருப்தி யடைந்தவர்களாய் இவ்வுலகிற்கு மழையை வர்ஷிப்பார்கள். மழை அன்னத்திற்குக் காரணம். அன்னம் சரீரத்திற்குக் காரணம். சரீரம் கர்மத்திற்குக் காரணம். கர்மம் யக்ஞத்திற்குக் காரணம். ஒன்றன்பின் ஒன்று தொடர்ச்சியாய் வருவதாய்ச் சக்கரம் போன்றிருத்தலின் கர்மசக்கரம் என்று சொல்லப்படுகிறது. இது கர்மகாண்ட வேதத்தில் காணப்படுகிறது. வேதம் பிரம்மத்தினின்று மூச்சுக்காற்றைப்போல் பிரயத்தனமின்றி உண்டானது.

௧௭. ஆனால் எந்த மனிதன் ஆத்மாவில் பிரீதியுடையவனையும், ஆத்மாவில் சந்துஷ்டி யுடையவனையும், ஆத்மாவிலேயே திருப்தியுடையவனையும் இருப்பானோ அவனுக்குச் செய்யவேண்டிய காரிய மில்லை.

[வி] ஆத்ம ஞானி = கர்மாதீதன். (கர்மத்தைக் கடந்தவன்) அவன் கர்மமற்ற கிரியையற்ற பிரம்மம். ஆதலின் அவன் கர்மஞ் செய்யவேண்டியதில்லை.

௧௮. அவனுக்கு இங்கு செய்வதினாலும் செய்யாததினாலும் யாதொரு கார்யமுமில்லை. அவனுக்குச் சர்வ பூதங்களிடத்தும் யாதொரு காரியத்திற்காகவும் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

[வி] பூதங்கள் = பிராணிகள்

௧௯. ஆதலால், பற்றின்றி எப்பொழுதும் செய்ய வேண்டிய கர்மத்தைச் செய். ஏனெனில், பற்றின்றிக் கர்மத்தைச் செய்கிற புருஷன் பரத்தை அடைகிறான்.

௨௦. ஏனெனில், கர்மத்தினாலேயே ஜனகாதிகள் சித்தியை யடைந்தார்கள். உலக நன்மையை நோக்கியேனும் (நீ) கர்மத்தைச் செய்யவேண்டும்.

௨௧. எதெதைப் பெரியோன் செய்கிறானோ, அதையே இதர ஜனங்கள் (பின்பற்றுகிறார்கள்). அவன் எதைப் பிரமாணமாய் நிரூபிக்கிறானோ அதை உலகம் பின்பற்றுகிறது.

௨௨. எனக்கு, பார்த்த! திரிலோகத்திலும் செய்ய வேண்டியது யாதொன்றுமில்லை; அடையாதது அடைய வேண்டியதாயுமில்லை; ஆனாலும் கர்மத்திலே இருக்கிறேன்.

௨௩. ஏனெனில், நான் கர்மத்தில் சந்ததமும் சோர்வின்றி இராவிடில் எனது வழியை, பார்த்த! மனிதர்கள் எவ்விதத்திலும் பின்பற்றுவார்கள்.

௨௪. நான் கர்மத்தைச் செய்யாவிடில் இவ்வுலகங்கள் அழிவை யடையும். ஜாதிக்கலப்பைச் செய்தவனும் ஆவேன். இப்பிரஜைகளைக் கொன்றவனும் ஆவேன்.

௨௫. கர்மத்தில் பற்றடைந்தவர்களாய் (கர்மங்களை) அஞ்ஞானிகள் எப்படிச் செய்கிறார்களோ, பாரத! அப்படி ஞானி பற்றற்றவனாய் உலக நன்மையை விரும்பிச் செய்யவேண்டும்.

உசு. கர்மத்தில் விருப்புடைய அஞ்ஞானிகளின் புத்தி பேதத்தை உண்டாக்கப்படாது. ஞானி சமத்துவமடைந்தவனாய்ச் சர்வ கர்மங்களையும் அனுஷ்டிக்கிறவனாய் (ஏனையோர்களை) நாடும்படிச் செய்யவேண்டும்.

உஎ. பிரகிருதியின் குணங்களால் கர்மங்கள் எவ்விதத்திலுஞ் செய்யப்படுகின்றன. அகங்காரத்தினால் புத்தி மயங்கினவன் நான் கர்த்தா என்று எண்ணுகிறான்.

[வி] கர்மங்களுக்குக் காரணம் } = குணங்கள்; ஆத்மா அன்று.

உஅ. ஆனால், மகாபாகு! குணகர்மங்களின் பாகுபாடுகளின் தத்துவத்தை அறிந்தவன் குணங்கள் குணங்களிற் செல்லுகின்றன என்றெண்ணிப் பற்றுகிறானில்லை.

[வி] குணங்கள் = குணங்களின் காரியமாகிய இந்திரியங்கள்.

குணங்களில் = குணங்களின் காரியமாகிய விஷயங்களில்.

குணங்கள் குணங்களிற் செல்லுகின்றன } = இந்திரியங்கள் விஷயங்களில் செல்லுகின்றன.

உகூ. பிரகிருதியின் குணங்களால் மயங்கியவர்கள் குணகர்மங்களில் பற்றடைகிறார்கள். பூரணப்பிரக்ஞையில்லாத அம்மந்தர்களைப் பூரணப்பிரக்ஞை யுடையவன் கலக்கம் அடைவிக்கலாகாது.

[வி] பூரணப்ரக்ஞையுடையவன் } = பிரமவித்.

மந்தர்களை = கர்மம் பக்தி ஞானத்தில் இருப்பவர்களை.

௩0. என்னிடத்தில் சர்வ கர்மங்களையும் அர்ப்பணஞ் செய்து ஆத்மாவில் மனம் பற்றியவனாய் ஆசை, மமகாரம் அற்றுப் பதைப்பின்றி யுத்தத்தைச் செய்.

[வி] கர்மங்கள் = கர்மம், பக்தி, ஞானம்.

ஆசை = அற்ப விஷயங்களில் இச்சை, பிரம்மம் நீங்கலாக சர்வமும் காரப் பண்ணிய தோஷம் உடையது.

யுத்தத்தைச்செய் = யோகத்தைக் கூடு.

௩க. எந்த மனிதர்கள் சிரத்தை யுடையவர்களாய் நிந்திக்காதவர்களாய் எனது இம்மதத்தை எப்பொழுதும் அனுசரிக்கிறார்களோ அவர்களும் கர்மங்களிலிருந்து விடுபடுகிறார்கள்.

[வி] கர்மங்கள் = கர்மம், பக்தி, ஞானம்

௩உ. ஆனால், எவர்கள் இதனை நிந்திக்கிறவர்களாய் எனது மதத்தை அனுசரிக்கிறார்களில்லையோ அவர்கள் சர்வஞான மூடர்கள் (என்றும்) கெட்டுப்போனவர்கள் (என்றும்) அறிவிலிகள் (என்றும்) அறி.

[வி] சர்வஞான மூடர் = ஏகத்துவஞான மில்லாதவர்.

கெட்டுப்போனவர்கள் } = அர்த்தத்தை இழந்தவர்கள்

அறிவிலிகள் = மூடபக்தியுடையவர்கள்

௩௩. ஞானியும் தன் பிரகிருதிக்குடன்பாடாக நடக்கிறான். பூதங்கள் பிரகிருதியைப் பின்பற்றுகிறார்கள். நடுப்பதென் செய்யும்?

[வி] ஞானி = மகத்சொரூபவித்
பிரகிருதி = சுவபாவம், இயற்கையான குணம்.
பூதங்கள் = பிராணிகள்.

௩௪. இந்திரிய விஷயங்களில் விருப்பு வெறுப்பு தங்கியவை. இவ்விரண்டின் வசத்தை அடையலாகாது; ஏனெனில் இவை இரண்டும் இவனுக்கு இடையூறுகள்.

[வி] விருப்பு வெறுப்பு = துவந்துவங்க ளெல்லாவற்றையுங் கொள்க; இவை யோகிக்குச் சத்துரு; அத்துவித திருஷ்டி யோகிக்குச் சாதனம்.

௩௫. செவ்வனே அனுஷ்டிக்கப்பட்ட அன்னிய தர்மத்திலும் குணமில்லாததாயினும் தன் தர்மம் சிறந்தது; சுவதர்மத்தில் இறத்தல் மேலானது; அன்னிய தர்மம் பயத்தைக் கொடுப்பது.

[வி] அன்னியதர்மம் = பிரகிருதிதர்மம்
சுவதர்மம் = ஆத்மதர்மம்
குணமில்லாத தாயினும் = தர்மமில்லாத தாயினும்
பயம் = அஞ்ஞானம்

சுவதர்மம் = வர்ணாச்சிரம தர்மம் (சங்கரர்.(

அர்ச்சுனன் சொன்னான்:—

௩௬. ஆனால், எதனால் ஏவப்பட்டு இச்சை அற்றவனாயினும் வார்ஷ்ணேய! பலாத்காரமாய்க் கட்டுண்டவன் போன்று இப்புருஷன் பாபத்தைச் செய்கிறான்.

ஸ்ரீபகவான் சொன்னார்:—

௩௭. இது காமம், இது கோபம், ரஜோகுணத்திலிருந்து உற்பத்தியுடையது. மகத்தை உண்பது. பெருந்தீங்குடையது. இதனை இங்கு சத்துரு (என்று) அறி.

[வி] மகத்தை உண்பது = மகத்கூடத்தின் குணமாகிய புத்தியை உண்பது அல்லது புத்தியின் கர்மமாகிய ஞானத்தை உண்பது.

௩௮. எப்படி அக்நி புகையினாலும், கண்ணாடி மலினத்தாலும் மூடப்பட்டிருக்கிறதோ, எப்படி கர்ப்பம் கர்ப்பப் பையினால் மூடப்பட்டிருக்கிறதோ அப்படி அதனால் இது மூடப்பட்டிருக்கிறது.

[வி] இதுமூடப்பட் டிருக்கிறது = ஞானம் மூடப்பட்டிருக்கிறது
அதனால் = காமத்தினால்

௩௯. ஞானியின் ஞானம் இக்காம ரூப நித்திய சத்துருவினால் மூடப்பட்டிருக்கிறது; கௌந்தேய! திருப்தி செய்யமுடியாத அக்நி போன்றது.

[வி] நித்திய சத்துரு = கூடவே இருக்கும் சத்துரு.

௪௰. இந்திரியங்கள் மனம் புத்தி இதற்கு இருப்பிடம் (என்று) சொல்லப்பட்டிருக்கிறது. இது இவைகளால் ஞானத்தை மூடித் தேகியை மயக்குகிறது.

[வி] இது = காமம்
இவைகளால் = இந்திரியம், மனம், புத்தி
தேகி = தேகத்தை யுடையவன்

௪௧. ஆதலால் நீ ஆதியில் இந்திரியங்களை யடக்கி, பாதரிற் சிறந்தோனே! ஞானத்தையும் விக்ஞானத்தையும் நாசஞ்செய்கிற இப்பாபத்தை நாசஞ்செய்.

[வி] ஞானம் = தக்ஷிண மகத்தின் குணம்
விக்ஞானம் = உத்தர மகத்தின் குணம் = அனுபவ ஞானம்

௪௨. இந்திரியங்களை மேலானதாகக் கூறுகிறார்கள். இந்திரியங்களினும் மேலானது மனம். மனத்தினும் மேலானது புத்தி, புத்தியினும் மேலானது யாதோ அது (ஆத்மா).

௪௩. இப்படிப் புத்தியினும் மேலானதை அறிந்து தன்னைத் தன்னாலடக்கி ஜயித்தற்கரிய காமரூப சத்துருவை நாசஞ்செய், மகாபாகு!

[வி] தன்னை = பிரகிருதியை
தன்னால் = ஆத்மாவினால்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன ஸம்வாதத்திலே கர்மயோகம் என்னும் மூன்றாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—பிரவிர்த்தி மார்க்கம், நிவிர்த்திமார்க்கம் என வழிகள் இருவகைப்படும்.

பிரவிருத்தி மார்க்கம் = கர்மம், பக்தி, ஞானம்

நிவிர்த்தி மார்க்கம் = யோகம். கர்மத்திற்குக் காரணம்,
கர்மசக்கரத்தால் நன்கு விளக்கப்
பட்டிருக்கிறது. இச்சக்கரம் பிர
ஜாபதியால் சிருட்டியி லேற்படுத்
தப்பட்டது. இதனால் மண்ணும்
விண்ணும் நிலைபெறுகின்றன. மனி
தர்களும் தேவர்களும் ஒருவருக்
கொருவர் விருத்தி செய்வதற்குச்
சம்பந்த மேற்பட் டிருக்கிறது.
ஆத்மாகர்மத்திற்குக்காரணமன்று.
கர்மத்திற்குக் காரணம் முக்குணங்
கள். பற்றையும் பயனையும்விட்டுப்
பிரமார்ப்பணமாய்க் கர்மத்தைச்
செய்கிறவன் பந்தப்படான். ஜந
கன் முதலிய புத்திமான்கள் உல

கத்தை நல்வழியில் நடத்தக் கர்மங்களைச் செய்தார்கள். அப்படியே பகவானுகிய நானும் கர்மத்தைச் செய்கிறேன். அர்ச்சுனு! உலகத்தை நல்வழியில் நடத்த நீயும் கர்மத்தைச் செய். எதைப் பெரியோர்கள் செய்கிருர்களோ அதையே இதர ஜனங்கள் பின்பற்றுகிருர்கள்.

கர்மத்துக்குக் காரணம் காமம். காமத்துக்கு இருப்பிடம் இந்திரியம், மனம், புத்தி. இந்திரியங்களிலும் மேலானது மனம். மனத்திலும் மேலானது புத்தி. புத்தியிலும் மேலானது ஆத்மா. ஆத்மஞானத்தால் காமமாகிய சத்ருவை நாசஞ்செய்.

மூன்ருவது அத்தியாயம்

முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

ஞானயோகம்.

ஸ்ரீபகவான் சொன்னுர்:—

க. இந்நாசாகித யோகத்தை நான் விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் மனுவுக்குச் சொன்னுன். மனு இக்ஷ்வாகுவுக்குச் சொன்னுன்.

[வி] விவஸ்வான் = ஓர் அரசன்
இக்ஷ்வாகு = ஒரு ரிஷி

உ. இப்படிப் பாரம்பரையாய் வரப்பெற்ற இதனை ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். நீடித்த காலமானமையின் அந்த யோகம் இங்கு அழிவுற்றது பாரந்தப!

[வி] ராஜரிஷிகள் = ராஜ யோகிகள்
பரந்தப = மேலான தவத்தையுடையோனே

ங. அதே இப்புராதன யோகம், என்னுடைய பக்தனும் தோழனுமாயிருக்கிருயென்று என்னுல் இன்று உனக்குச் சொல்லப்பட்டது. ஏனெனில், இது உத்தம ரகசியம்.

[வி] புராதனம் = பழைமை

இரகசியம் = ராஜரிஷிகள் நீங்கலாக ஏனையோர்களால் அறியப்படாமலிருப்பது.

அர்ச்சுனன் சொன்னான்:—

ச. தேவரீருடைய ஜன்மம் பிற்பட்டது. விவஸ்வானுடைய ஜன்மம் முற்பட்டது. ஆதியில் நீங்கள் இதனைச் சொன்னீர்களென்று (நான்) எப்படி அறியலாம் ?

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

ரு. அநேக ஜன்மங்கள் எனக்கும் உனக்கும் கழிந்து போயின. அர்ச்சுனா! நான் அவையாவையும் அறிவேன், நீ அறியாய் பரந்தப!

சு. பிறவாதவனாயினும், அழிவில்லாதவனாயினும், பூதங்களுக்கு ஈஶ்வரனாயினும், எனது பிரகிருதியைச் சார்ந்துகொண்டு எனது யோக வலிமையால் அவதாரஞ் செய்கிறேன்.

[வி] எனது பிரகிருதி = ஏஷா மாயை மகத்கூடத்தில் உள்ள மாயை.

அவ்யக்த கூடத்தின் உத்தர பாகத்திலுள்ளது யோக மாயை. அவ்யக்த கூடத்தின் தக்ஷிண பாகத்திலுள்ளது தேவிமாயை. மகத் கூடத்திலுள்ளது ஏஷாமாயை. மனக் கூடத்திலுள்ளது குணமயி மாயை.

அன்னமயகோசமும் பிராணமயகோசமும் இந்திரியக்கூடம் எனப்படும்.

மனோமய கோசம் = மனக்கூடம் எனப்படும்.
விக்ஞானமய கோசம் = மகத்கூடம் எனப்படும்.
ஆனந்தமய கோசம் = அவ்யக்தகூடம் எனப்படும்.
பூதங்கள் = தத்துவங்கள்.

எ. ஏனெனில், எந்தெந்தக் காலத்தில் தர்மத்துக்குக் குறைவும், பாரத! அதர்மத்துக்கு ஏற்றமும் உண்டாகிறதோ அப்பொழுது ஆத்மாவை நான் சிருஷ்டிக்கிறேன்.

[வி] ஆத்மாவை நான் சிருஷ்டிக்கிறேன் = உத்தமமாத்தாகிய எனது உலகத்திலுள்ள எனது சிஷ்யர்களான சாதுக்களை இவ்வுலகில் ஜனனஞ் செய்யும்படிச் செய்கிறேன். இது சாதாரண அவதாரம். சாதுக்கள் = பிரமானந்தத்தை அடையவேண்டும் என்று சாதிக்கிறவர்கள்.

அ. நல்லோரைக் காக்கவும், தீயோரை நாசஞ்செய்யவும், தர்மத்தை நிலைநிறுத்தவும் யுகங்கள். தோறும் அவதாரஞ் செய்கிறேன்.

[வி] அவதாரஞ் செய்கிறேன் = இது சாக்ஷாத் அவதாரத்தைப் பற்றியது. மகத்கூடத்தில் ஈசுவர தத்துவம் அடைந்த பெரியோர்களின் அவதாரம்.

கூ. எனது தெய்வீக ஜன்மத்தையும், கர்மத்தையும் இப்படி எவன் யதார்த்தமாய் அறிகிறானோ அவன் தேக

த்தை விட்டபின் மறுஜன்மத்தை அடைகிறானில்லை என்னை அடைகிறான். அர்ச்சுனா!

[வி] என்னை அடைகிறான் } = மேலான ஜன்மத்தை அடைகிறான்.

௧௦. இச்சை, பயம், கோபம் நீங்கி என் தன்மையை அடைந்து என்னை அடைக்கலம் புகுந்து ஞானமாகிய தபசினால் தூய்மை அடைந்த அநேகர் எனது பாவத்தை அடைந்தார்கள்.

[வி] கோபம் = மத கண்டனம்
பயம் = அஞ்ஞானம்
என் தன்மை = எனது தர்மம்
எனது பாவம் = எனது சொரூபம்

௧௧. எவர்கள் என்னை எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு அப்படியே நான் அருள் புரிகிறேன். எனது மார்க்கத்தை மனிதர்கள் எவ்வகையாலும் பின்பற்றுகிறார்கள், பார்த்த!

௧௨. கர்மத்தின் சித்தியை இச்சிக்கிறவர்கள் இங்குத் தேவதைகளை வழிபடுகிறார்கள். ஏனெனில், மனுஷ்ய லோகத்தில் கர்மத்தாலுண்டாகும் சித்தி சீக்கிரம் ஏற்படுகிறது.

௧௩. குண கர்மங்களின் விபாகத்தால் நான்கு வர்ணங்களும், என்னால் வகுக்கப்பட்டன. அதற்குக் கர்த்தாவாயினும் என்னை அகர்த்தாவாகவும் குறைவுபாடில்லாதவனாகவும் அறி.

[வி] நான்கு வர்ணங்களுக்கும். கர்மங்களின் பிரிவிற்கும் குணம் கர்த்தா, பகவான் அன்று.

௧௪. கர்மங்கள் என்னைப் பந்திக்கிறதில்லை. எனக்குக் கர்மத்தின் பலத்தில் இச்சை இல்லை யென்று எவன் என்னை அறிகிறானோ அவன் கர்மங்களினால் பந்தப்படுகிறானில்லை.

௧௫. இவ்விதமறிந்து பூர்வீக முமுக்ஷுக்களாலும் கர்மம் செய்யப்பட்டது. ஆதலால், முன்னோர்களால் பூர்வத்தில் செய்யப்பட்ட கர்மத்தையே நீ செய்.

[வி] பூர்வீக முமுக்ஷுக்கள் } = ஜனகன் முதலியோர்

௧௬. கர்மம் யாது? அகர்மம் யாது? என்ற இதில் கவிகளும் மயங்கினார்கள். எதை யறிந்து அசுபத்தினின்றும் விடுபடுவாயோ அக்கர்மத்தை உனக்கு உரைப்பேன்.

[வி] அகர்மம் = கர்மமின்மை
அசுபம் = அஞ்ஞானம்

௧௭. ஏனெனில், கர்மத்தைப்பற்றியு மறியவேண்டும். விகர்மத்தைப்பற்றியு மறியவேண்டும். அகர்மத்தைப்பற்றியு மறியவேண்டும். கர்மத்தின் கதி ஆழ்ந்தது.

[வி] விகர்மம் = விலக்கப்பட்ட கர்மம்
கதி = வழி
ஆழ்ந்தது = அறிதற்கரியது

கஅ. கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் எவன் காண்பானோ அவன் மனிதர்களில் புத்திமான், அவன் யோகி, கர்மங்கள் யாவையுஞ் செய்தவன்.

[வி] கர்மத்தில்அகர்மத்தையும் = கர்மம், பக்தி, ஞானம், யோகத்திற்குச் சாதனம்.

அகர்மத்தில் கர்மத்தை = யோகத்தில் கர்மம், பக்தி, ஞானம் அடங்கியிருப்பதை. யோகம் சமஷ்டி. கர்மம், பக்தி, ஞானம் வியஷ்டி. ஆதலின் யோகத்தில், கர்மம் பக்தி ஞானம் அடங்கும்.

சங்கரபாஷ்யம்.

ஆத்மா கர்மமற்றது, கிரியையற்றது. இது தத்துவவித்துக்களின் நிச்சயம். ஆனால், அஞ்ஞானிகள் நான் கர்த்தாவென்றெண்ணி இந்திரியங்களின் கர்மத்தை ஆத்மாவிலேற்றுகிறார்கள். இந்திரியங்கள் கர்மத்தினின்று ஓய்ந்திருக்கிற ஸ்திதியை ஆத்மாவிலேற்றி நான் கர்மமின்றி இருக்கிறேனென்று வசனிக்கிறார்கள். நான் கர்மமின்றியிருக்கிறேன் என்று எண்ணுதல் அகங்காரத்தின் முனைப்பு. எப்படிக் கர்மம் ஆத்மாவினிடத்திலில்லையோ, அப்படியே அகர்மமும் ஆத்மாவினிடத்திலில்லை. ஆத்மாவில் கர்மமிருந்தாலன்றோ கர்மத்தை நீக்கக்கூடும்?

ககூ. எவனுடைய பிரயத்தனங்கள் யாவும் காமசங்கல்பத்திலிருந்து விடுபட்டனவோ, ஞானாக்கினியால்

கர்மங்கள் தகிக்கப்பட்டனவோ அவனைப் பண்டிதனென்று புத்திமான்கள் சொல்லுவார்கள்.

[வி] புத்திமான் = அவதார புருஷன்

பண்டிதன் = மகத் கைவல்யம் பெற்றவன்.

உ0. கர்மபலத்தில் இச்சையை விட்டுப் பிரம்மத்தில் திருப்தியுடையவனாய் ஆசிரயமின்றி இருப்பவன் கர்மத்தைச் செய்பவனாயினும் அவன் ஒன்றையும் செய்வதேயில்லை.

[வி] கர்மபலத்தில் இச்சையை விட்டு = கர்மபலத்தில் இச்சையை விட்டவன், இந்திரன் முதலிய தேவதைகளின் சங்கத்தை விடுகிறான்.

[வி] ஆசிரய மின்றி இருப்பவன் = அபூரண வஸ்துவில் திருப்தியின்றியிருப்பவன்.

அபூரணம் = பூரணமில்லாதது.

உக. ஆசையின்றி மனதையும் புத்தியையும் அடக்கி ஏற்பவை யாவையும் விட்டுக் கேவலம் சரீர கர்மத்தைச் செய்கிறவன் பாபத்தையடையான்.

[வி] ஆசையின்றி = அபூரண வஸ்துவில் மனஞ் செலுதலின்றி.

ஏற்பவையாவையும்விட்டு = அபூரண கர்மம், அபூரண பக்தி, அபூரண ஞானம் ஆகிய இம்மூன்றையும் விட்டு,

கேவலம் = தனி, சம்பந்தமற்றது

பாபம் = அஞ்ஞானம்

உஉ. தெய்வாதீனமாய்க் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்தவன், துவந்துவங்களைக் கடந்தவன், பொருமையில்லாதவன், சித்தியிலும் அசித்தியிலும் சமமானவன் செய்தாலும் பந்தப்படுகிறானில்லை.

[வி] துவந்துவங்களைக் கடந்தவன் = அத்துவித திருஷ்டியுள்ளவன்

பொருமையில்லாதவன் = கர்மம் பக்தி ஞானத்தை விட வேண்டும் என்ற எண்ணமில்லாதவன்

சமமானவன் = பிரம்மபுத்தியுள்ளவன்

உங. பற்றற்றுப் பந்தமற்று ஞானத்தில் மனம் நிலைத்தவன் யக்ஞத்திற்காகச் செய்யும் கர்மம் முழுவதும் கரைந்து போகிறது.

உச. அர்ப்பணம் பிரம்மம், ஹவிஸ் பிரம்மம், பிரம்மாக்கியில் பிரம்மத்தால் ஹோமஞ் செய்யப்படுகிறது. பிரம்ம கர்ம சமாதியுடையவனால் அடையப்படுவதும் பிரம்மமே.

[வி] பிரம்ம கர்ம சமாதி = கர்மஞ் செய்கையில் சர்வமும் பிரம்மம் என்ற புத்தியுடன் செய்பவன் பிரம்மத்தை யடைகிறான். (எந்த மனிதன் எதனைத் தியானிக்கிறானோ அதையே அடைகிறான்) கீதை பிரம்ம திருஷ்டியை முக்கியமாய்ப் போதிக்கின்றது.

உரு. வேறு சில யோகிகள் தேவதைகளுக்கு யக்ஞத்தை அர்ப்பணஞ் செய்கிறார்கள். வேறு சிலர் பிரம்மாக்கியில் யக்ஞத்தை யக்ஞத்தினால் ஹோமஞ் செய்கிறார்கள்.

[வி] வேறு சில யோகிகள் = முன் சொல்லப்பட்டவர்களிலும் இவர்கள் தாழ்ந்தவர்கள்

யக்ஞத்தை = அக்கியில் போடப்பட்ட ஹவிசை

யக்ஞத்தினால் = ஓமம் செய்கிறதினால்

ஹோமஞ் செய்கிறார்கள் = அர்ப்பணஞ் செய்கிறார்கள்.

பிரம்மாக்கி = அக்கியைப் பிரம்மமாய்ப் பாவித்தல்.

உ௬. வேறு சிலர் சுரோத்திராதி இந்திரியங்களை அடக்கம் என்னும் அக்கியில் ஹோமஞ் செய்கிறார்கள். சப்தாதி விஷயங்களை வேறு சிலர் இந்திரிய அக்கியில் ஹோமஞ் செய்கிறார்கள்.

[வி] சுரோத்திராதி இந்திரியங்களை அடக்கமென்னும் அக்கியில் ஹோமஞ்செய்கிறார்கள் = சுரோத்திராதி இந்திரியங்களின் அடக்கம் பாபத்தைத் தகனம் பண்ணி ஞானத்தை விருத்தி செய்கிறது. ஆதலின் அக்கி சப்தம் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது.

சப்தாதி விஷயங்களை இந்திரிய அக்கியில் ஹோமஞ் செய்கிறார்கள் = சப்தாதி விஷயங்களை இந்திரியங்களிலடக்குவதினால் பாப தகனமும் ஞான விருத்தியும் உண்டாகின்றன. மேலும் தேகத்தில் அக்கியும் காந்தியும் உஷ்ணமும் காணப்படுகின்றன. ஆதலின் அக்கி சப்தம் வழங்கப்படுகிறது.

உஎ. சர்வேந்திரிய கர்மங்களையும், பிராண கர்மங்களையும் வேறு சிலர் ஞானத்தினால் பிரகாசிக்கப்பெற்ற ஆத்ம அடக்கமென்னும் யோகாக்நியில் ஹோமஞ் செய்கிறார்கள்.

[வி] ஆத்ம அடக்கம் = தன்னடக்கம் = இந்திரிய மனோ புத்தியின் அடக்கம்.
யோகாக்நி = அக்நி சப்தம் ஞானத்தைக் குறிப்பாலுணர்த்துகிறது.

இவ்வப்பியாசத்திலும் தேகத்தில் அக்நியும் பிரகாசமும் காணப்படுகின்றன.

உஅ. அப்படியே வேறு சிலர் திரவிய யக்ஞமுடையவர்கள், தபயக்ஞமுடையவர்கள், யோக யக்ஞமுடையவர்கள். வேறு சிலர் அத்தியயனமும் ஞானயக்ஞமு முடையவர்கள். கடின விரதங்களையுடைய யதிகள்.

[வி] அத்தியயனம் = தனக்குரிய வேதத்தை யோதல்
ஞானயக்ஞம் = ஞான சாஸ்திர விசாரம்
யதிகள் = மோக்ஷத்திற்காக யத்தனஞ் செய்கிறவர்கள்.

உகூ. அப்படியே வேறுசிலர் அபானனில் பிராணனை ஹோமஞ் செய்கிறார்கள். பிராணனில் அபானனை (ஹோமஞ் செய்கிறார்கள்). பிராண அபானன்களின் கதிகளைத் தடுத்துப் பிராணாயாமத்தை மேலாகக் கொண்டவர்கள்.

[வி] பிராணன் = வெளியிற் செல்லும் சுவாசம்
அபானன் = உள்ளே செல்லும் சுவாசம்

அபானனில் பிராணனை ஹோமஞ்செய்தல் = பூரகம்
பிராணனில் அபானனை ஹோமஞ்செய்தல் = இரேசகம்
பிராண அபானங்களின் கதிகளைத்தடுத்துப்பிராணாயாமத்தை மேலாகக்கொண்டுநடத்தல் = கும்பகம்

௩0. வேறு சிலர் மிதாகாரமுடையவர்களாய்ப் பிராணன்களைப் பிராணன்களில் ஹோமஞ் செய்கிறார்கள். இவர்கள் யாவரும் யக்ஞத்தை அறிந்தவர்கள். யக்ஞத்தினால் பாபம் நீங்கப்பெற்றவர்கள்.

[வி] மிதாகாரம் = அரைவயிறு அன்னம், கால்வயிறு ஜலம், கால்வயிறு காற்று. யோக சக்தி அதிகரித்தவிடத்து இன்னமும் ஆகாரம் குறையும்.

பிராணனில் பிராணன்களை ஹோமஞ் செய்கிறார்கள் = மிதாகார முடையவர்களுக்குப் பிராணன் வெளியிற் செல்லுதல் குறைவடைகிறது. இதனால் இந்திரிய அடக்கம், மன அடக்கம், புத்தி அடக்கம் ஏற்படுகின்றன.

யக்ஞத்தினால் பாபம் நீங்கப் பெற்றவர்கள் = மேற் சொல்லப்பட்ட யக்ஞங்களால் பிரகிருதி சுத்தம் அடைகிறது. ஞானத்தின் விருத்தியும் ஏற்படுகிறது.

பாபம் = அஞ்ஞானம்

௩௧. யக்ஞ சேஷ அமிர்தத்தைப் புசிக்கிறவர்கள் சனாதன பிரம்மத்தை யடைகிறார்கள். இவ்வுலகம் யக்ஞமில்லாதவருக்கு இல்லை. அன்னியம் எங்கே? கௌரவரில் உத்தமனே!

[வி] சனாதன = நித்திய

அமிர்தம் = பிரம்ம விக்ஞானம்

யக்ஞசேஷ அமிர்தம் = யக்ஞம் செய்யப் படுவதினால் அடையப்படும் பிரம்ம விக்ஞானம்

உலகம் = தேகம்

அன்னியம் = அன்னிய உலகம்

௩௨. இப்படி அநேக வித யக்ஞங்கள் வேதத்தின் முகத்தில் விஸ்தாரமாய் இருக்கின்றன. அவையாவும் கர்மத்தினின்றுண்டானவை (என்று) அறி. இப்படி யறிந்து விடுபடுவாய்.

[வி] கர்மத்திலிருந்து = கர்மம் பக்தி ஞான சம்பந்தமானவை.

௩௩. திரவிய யக்ஞத்திலும் ஞான யக்ஞம் சிறந்தது பரந்தப! சர்வ கர்மமும் ஏகோபித்து ஞானத்தில் முடிவடைகிறது பார்த்த!

[வி] ஞானம் = இங்கு சொல்லப்பட்ட ஞானம் அநுபவஞானம். இது சற்குருவினிடமிருந்து அறியவேண்டியது.

௩௪. அதை நமஸ்காரத்தாலும் வினாவினாலும் சேவையாலும் அறி. தத்துவ தரிசினிகளான ஞானிகள் ஞானத்தை உனக்கு உபதேசிப்பார்கள்.

[வி] நமஸ்காரம் = ந:, ம: = எனக்கொன்றுமில்லை. குருவிற்கு உடல் பொருள் ஆவி மூன்றும் தத்தஞ் செய்தல்.

வினா = குருவினிடம் சாஸ்திரத்தின் இரகசிய அநுபவ அர்த்தங்களை விசாரஞ் செய்தல்.

சேவை = குருவின் உத்தரவின்படி ஞான சாஸ்திரத்தை உலகிற்குப் போதித்தல்.

தத்துவதரிசினிகள் = ஆத்ம சொரூபத்தை யறிந்தவர்கள்.

௩௫. எதை அறிந்து மீண்டும் மோகத்தை இப்படி அடையாயோ பாண்டவ! எதனால் பூதங்களைச் சேஷமின்றி உன்னிடத்திலும் அப்படியே என்னிடத்திலும் காண்பாயோ.

[வி] என்னிடத்தில் = பரமாத்மாவினிடத்தில்

மோகம் = வழி தெரியாத கஷ்டம்

எதையறிந்து = பிரம்மத்தை அறிந்து

௩௬. சர்வ பாபிகளிலும் அதிகபாபத்தைச் செய்தவனாயினும் சர்வ பாபத்தையும் ஞான மென்னும் ஓடத்தாலேயே கடப்பாய்.

[வி] பாபம் = அஞ்ஞானம்

௩௭. எப்படி விறகுகளை எரிகின்ற அக்நி பஸ்மம் செய்கிறதோ, அர்ச்சுன! ஞானாக்நி சர்வ கர்மங்களையும் அப்படியே பஸ்மம் செய்கிறது.

[வி] ஞானாக்நி = இங்கே சொல்லப்பட்ட ஞானம் பிரம்ம சொரூப அநுபவஞானம்.

௩௮. ஞானத்திற் கொப்பாகப் பரிசுத்தம் செய்வது இங்கொன்றுமில்லை. அதை யோகத்தில் சித்தி அடைந்தவனாய்க் காலாந்தரத்தில் தன்னிடத்தில்தானே அடைகிறான்.

[வி] ஞானம் = இங்கு சொல்லப்பட்ட ஞானம் பிரம்ம சொரூப அநுபவஞானம்.

யோகந்தில் சித்தி அடைந்தவனாய் = யோகப் பிரம்ம நிஷ்டை பிரம்ம விக்ஞானத்திற்குச் சாதனம்.

௩௯. சிரத்தையுடையவனும் அதிற் கருத்துடையவனும் இந்திரியங்களை யடக்கியவனும் (ஆகிய அவன்) ஞானத்தை அடைகிறான். ஞானத்தை யடைந்து பரம சாந்தியை விரைவாய் அடைகிறான்.

௪0. ஞானமில்லாதவனும், சிரத்தை யில்லாதவனும், சம்சய மனத்தினனும் கெடுகிறார்கள். சம்சய மனத்தினனுக்கு இவ்வுலகமில்லை, பரலோக மில்லை, சுகமுமில்லை.

௪௧. யோகத்தினால் கர்மங்களைத் துறந்து ஞானத்தால் சம்சயத்தைப் பிளந்து ஆத்மாவில் விழிப்புள்ளவனைக் கர்மங்கள் பந்தப்படுத்துவதில்லை தனஞ்சய!

[வி] யோகத்தினால் கர்மங்களைத் துறந்து = யோகத்தினால் கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்றையும் விட்டு நீங்கி.

ஞானத்தால் சம்சயத்தைப் பிளந்து = பிரம்ம சொரூப அநுபவ விக்ஞானத்தால் சர்வ சந்தேகங்களையும் நிவிர்த்தி செய்து.

ஆத்மாவில் விழிப்புள்ளவன் = ஆத்ம சாட்சாத்காரமுள்ளவன்.

தனஞ்சய = கர்மம், பக்தி ஞானத்தை ஜயித்தவன்.

௪௨. ஆதலால், அஞ்ஞானத்திலிருந்து உண்டாகி இருதயத்தில் இருப்பதான உனது இச்சம்சயத்தை ஞானவாளினால் வெட்டி யோகத்தை அப்பியசி. எழுந்திரு பாரத!

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே பிரம்ம வித்தையிலே யோகசாஸ்திரத்திலே ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன ஸம்வாதத்திலே ஞானயோகம் என்னும் நான்காவது அத்தியாயம்.

சங்கிரகம்:—பிரவிர்த்தி மார்க்கம், நிவிர்த்தி மார்க்கம் ஆகிய இருவித தர்மங்களையும் ஆதியில் நான் விவஸ்வானுக்கு உரைத்தேன். யுகங்கள் தோறும் தர்மத்திற்குக் குறைவும் அதர்மத்திற்கு ஏற்றமும் நிகழுங் காலத்து அவ

தாரஞ்செய்து துஷ்ட நிக்கிரகமும், சிஷ்டபரிபாலனமும் செய்துவருகிறேன். பிரவிர்த்தி மார்க்கத்தையும் நிவிர்த்தி மார்க்கத்தையும் எடுத்து உரைக்கிறேன். எவன் என்னுடைய அவதாரத்தையும், குணத்தையும், கர்மத்தையும், அதிகாரத்தையும், சிக்ஷையையும், சொரூபத்தையும், கைவல்யத்தையும் அறிகிறானோ, அவன் மேலான பதவியையடைகிறான். எவன் என்னுடைய தன்மையை அடைகிறானோ, அவன் எனது சாரூபத்தை அடைகிறான். நான் கர்மங்களால் பந்தப்படுகிறேனில்லை. ஏனெனில், எனக்கு அக்கர்மங்களில் பற்றுமில்லை, பயனில் கருத்துமில்லை. உலகத்தை நல்வழியில் நடத்தும்படி நான் அக்கர்மங்களைச் செய்கிறேன். பூர்வீகத்திலுள்ள ஜனகன் முதலிய பெரியோர்களாலும் பற்றின்றிக் கர்மங்கள் செய்யப்பட்டன. அர்ச்சுனா! நீயும் அப்படியே செய். ஏனெனில், பெரியோர்கள் செய்வதை இதர ஜனங்கள் பின்பற்றுகிறார்கள். பிரம்மார்ப்பணமாய்க் கர்மத்தைச் செய்கிறவன் அப்பிரம்ம புத்தியினால் பிரம்ம சமாதியை அடைகிறான். வேதத்தில் அனேக கர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் கேள். தேவயக்ஞும், இந்திரிய அடக்கமாகிய யக்ஞும், சப்தாதி விஷயங்களின் அடக்கமாகிய யக்ஞும், பிராணேந்திரியங்களின் அடக்கமாகிய யக்ஞும், திரவிய யக்ஞும், சுவாதியாய யக்ஞும், சாஸ்திர விசார யக்

ஞும், இவ்விதம் அனேக யக்ஞங்கள் கர்மகாண்ட வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை சித்த சுத்தியை வருவித்து அஞ்ஞானத்தை ஏகதேசம் நிவிர்த்திக்கின்றன. ஆனால் யோகப்பிரம்ம நிஷ்டையினால் அடையப்படுகிற பிரம்ம சொரூப அநுபவவிக்ஞானம் சர்வபாபங்களையும் நாசஞ் செய்கிறது. இந்த ஒப்பற்ற பிரம்ம சொரூப விக்ஞானத்தைத் தத்துவ தரிசினிகளாகிய ஞானிகளிடமிருந்து நமஸ்காரத்தாலும், கேள்வியாலும், உலக சேவையாலும், அறிந்து கொள். அஞ்ஞானியும், சிரத்தையில்லாதவனும், சம்சயமுடையவனும் கெடுகிறார்கள். சம்சயமுடையவனுக்கு இவ்வுலகமுமில்லை, அவ்வுலகமுமில்லை. ஆதலால் அர்ச்சுனா! யோகத்தைக்கூடி இப்பிரம்ம சொரூப அநுபவ விக்ஞானத்தை அடைவாயாக.

அரும் பதங்கள்.

ராஜரிஷிகள்	= ராஜயோகிகள்.
சாமான்ய அவதாரம்	= மகத் கூடத்திலுள்ள யோகிகளின் அவதாரம்.
ஸாக்ஷாத் அவதாரம்	= மகத்கூடத்தில் ஈஸ்வர தத்வம் பெற்ற யோகிகளின் அவதாரம்.
சமமானவன்	= பிரம்ம புத்தியுள்ளவன்.
அமிர்தம்	= பிரம்ம விக்ஞானம்.
தத்துவதரிசினிகள்	= பிரம்ம வித்துக்கள்.

நான்காவது அத்தியாயம்

முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்

சந்நியாச யோகம்

அர்ச்சுனன் சொன்னான்:—

க. கர்மங்களின் சந்நியாசத்தையும் அப்படியே யோகத்தையும் துதிக்கிறீர்கள். கிருஷ்ணா! இவ்விரண்டனுள் எது சிறந்ததோ அஃதொன்றையே நிச்சயித்துக் கூறுக.

[வி] சந்நியாசம் = கர்மம், பக்தி, ஞானமாகிய இம் மூன்றின் பூர்த்தியினால் அவற்றின் பந்தத்திலிருந்து விடுபடுதல். மனமும், புத்தியும் மகத்கூடத்தின் உத்தாபாகத்தில் இருக்கும் காலத்துச் சந்நியாசம் ஏற்படுகிறது.

யோகம் = யோகத்தை அநுஷ்டிக்கும் காலத்து மனமும் புத்தியும் மகத் கூடத்திலிருந்து அவ்யக்தக் கூடத்திற்குச் செல்லுகின்றன.

நன்கு நிச்சயித்து = பிரம்ம திருஷ்டியின்படி நிச்சயித்து.

ஸ்ரீபகவான் சொன்னார்:—

உ. சந்நியாசமும் கர்மயோகமும் (ஆகிய) இரண்டும் மேலான நன்மையைச் செய்பவை. ஆனால் அவ்விரண்டனுள் கர்ம சந்நியாசத்திலும் கர்மயோகம் சிறந்தது.

[வி] கர்மம் = கர்மம், பக்தி, ஞானம்.

கர்ம சந்நியாசம் = கர்மம் பக்தி ஞானத்திலிருந்து விடுபடுதல்.

கர்ம யோகம் = யோகப் பிரம்ம நிஷ்டை புத்தியின் கர்மம்; ஆதலால் கர்ம யோகம் என்று பகவான் இங்கு உரைத்தார்.

ங. எவன் வெறுக்கிறதில்லையோ, விரும்புகிறதில்லையோ அவன் நித்திய சந்நியாசி (என்று) அறியப்பட வேண்டும். ஏனெனில், துவந்துவாதீதன், மகாபாகு! பந்தத்தினின்றும் சுகமாய் விடுபடுகிறான்.

[வி] நித்திய சந்நியாசி = பிரம்ம சந்நியாசி = துரியசந்நியாசி யோகாரூடன் = யோக பக்தன். கீதையில் சந்நியாசம் இருவகைத்து. கர்மம், பக்தி ஞானத்திலிருந்து விடுபடுதல், சந்நியாசமாகச் சொல்லப்படுகிறது. அதுவும் ஒரு மோக்ஷமாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் பிரம்ம ப்ராப்தி இறுதியான மோக்ஷம். இதுவே துரிய சந்நியாசம்.

துவந்துவாதீதன் = அத்துவித திருஷ்டி யுள்ளவன்.
சுகமாக = எளிதாக

௪. சாங்கியத்தையும் யோகத்தையும் வெவ்வேறாகப் பாலர்கள் சொல்லுகிறார்கள். பண்டிதர்கள் (அப்படிச் சொல்லுகிறார்கள்) இல்லை. ஒன்றிலே செவ்வையாய் நிலை பெற்றவன் இரண்டின் பயனை அடைகிறான்.

[வி] பாலர்கள் = தத்துவ வித்துக்கள் அல்லாதவர்கள். ஆனால் சாஸ்திர அறிவு உடையவர்கள்.

பண்டிதர்கள் = தத்துவ வித்துக்கள்.

ஒன்றிலே செவ்வையாய் நிலை பெற்றவன் இரண்டின் பயனை அடைகிறான் = யோகியால், சாங்கியனால் அடையப் படும் சித்தி, அடையப்படுகிறது. யோகிகள் ஏக புத்தி உடையவர்கள். ஆதலின் யோகிகளை ஒன்றிலே புத்தி நிலைபெற்றவர்கள் எனப் பகவான் சொன்னார். ஆனால் கர்மம் பக்தி ஞானத்திலுள்ள அவர்களுக்குப் புத்தி பலவித அநேக கிளைகளாய்ப் பிரிந்துள்ளன. யோகம் = சமஷ்டி. கர்மம், பக்தி ஞானம் = வியஷ்டி. ஆதலின் கர்மம், பக்தி ஞானயோகத்தில் அடங்கியதாய் இருக்கின்றன.

௫. எந்த ஸ்தானம் சாங்கியர்களுக்குப் பிராப்தியாகிறதோ அது யோகிகளாலும் அடையப்படுகிறது. சாங்கியத்தையும் யோகத்தையும் ஒன்றென எவன் காண்கிறானோ, அவன் காண்கிறான்.

[வி] சாங்கியம் = கர்மம், பக்தி, ஞானம்.
சாங்கியம் = வியஷ்டி.
யோகம் = சமஷ்டி.

யோகமும் சாங்கியமும் ஒன்று = யோகம் சமஷ்டியாயிருக்கிறபடியால் யோகத்தில் சாங்கியம் அடங்கும்.

எவன்காண்கிறானோ அவன் காண்கிறான் = உண்மையைக் காண்கிறான் என்றது கருத்து. கயிற்றில் சர்ப்பத்தைக் காண்கிறவன் காண்கிறானில்லை. கயிற்றைக் காண்கிறவனே காண்கிறான். அப்படி யோகம் சமஷ்டி என்று காண்கிறவன் காண்கிறான்.

௬. ஆனால் யோகமின்றிச் சந்நியாசம் அடைதல் பிரயாசம், மகாபாகு! யோகத்தைக் கூடிய முனிவன் பிரம்மத்தை விரைவில் அடைகிறான்.

[வி] சந்நியாசம் = இந்த சுலோகத்தில் சொல்லப்பட்ட சந்நியாசம் துரிய சந்நியாசம். இதற்கு யோகம் சாதனம். மற்றதற்குக் கர்மம், பக்தி, ஞானம் சாதனம்.

௭. யோகத்தைக்கூடிப் புத்தி தெளிந்து மனத்தை ஜயித்தவனாய் இந்திரியங்களை ஜயித்தவனாய்ச் சர்வ பூதங்களின் ஆத்மாவாகத் தனது ஆத்மாவை அடையப் பெற்றவன் செய்பவனாயினும் பந்தப்படுகிறானில்லை.

௮, ௯. யோகத்தைக் கூடித் தத்துவத்தை அறிந்தவன் காண்டல், கேட்டல், ஸ்பரிசித்தல், முகர்தல், உண்ணல், போதல், உறங்குதல், சுவாசித்தல், பேசுதல், விடுதல், பிடித்தல், கண்களைத் திறத்தல், கண்களை மூடல், (ஆகிய இவற்றைச் செய்தாலும்) இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களில் செல்லுகின்றனவென்று உணர்பவனாய் நானொன்றும் செய்யவில்லை என்று எண்ணுகிறான்.

[வி] **தத்துவவித்** = தத்துவத்தை அறிந்தவன் = பிரம்மத்தை அறிந்தவன்.

உணர்பவன் = ஊர்த்துவ புத்தியைக் கொண்டு காண்கிறவன்.

இவ்வெட்டு ஒன்பதாம் சுலோகங்களின் கருத்து:—

தத்துவவித்தின் அசங்க அநுபூதி.

அசங்கம் = சங்கமில்லாதது.

சங்கம் = சம்பந்தம். தத்துவ வித்துக்களுக்கும் விஷயங்களுக்கும் சம்பந்தம் இல்லை. தத்துவ வித்துக்கள் தாங்கள் யாதொன்றும் செய்யவில்லை என்றும் அந்தந்த இந்திரியங்கள் தத்தம் தொழில்களைச் செய்கின்றன என்றும் எண்ணுகிறார்கள்.

௧௦. பிரம்மத்தில் கர்மங்களை அர்ப்பணஞ் செய்து பற்றைவிட்டு எவன் செய்கிறானோ அவன் பாபத்தினால் பந்தப்படுகிறானில்லை. தாமரை இலையில் உள்ள ஜலம் போன்று.

[வி] **கர்மங்கள்** = கர்மம், பக்தி, ஞானம்.

பற்றைவிட்டு = பிரகிருதி புத்தியை விட்டு.

பாபத்தினால் = அஞ்ஞானத்தினால்.

௧௧. காயத்தாலும், மனத்தாலும், புத்தியினாலும், கேவலம் இந்திரியங்களாலும் யோகிகள் பற்றைவிட்டு ஆத்ம சுத்திக்காகக் கர்மத்தைச் செய்கிறார்கள்.

[வி] **கேவலம்** = தனிப்பொருள். கேவலமென்ற பதத்தைக் காயத்தாலும் புத்தியாலும் மனத்தாலும் என்ற பதங்களோடு கூட்டிப் பொருள்கொள்க. இது பிரம்மவித்தின் அசங்க அநுபூதி.

ஆத்மசுத்திக்காக = பிரகிருதி சுத்திக்காக. பிரகிருதி சுத்தமின்றி மோக்ஷமில்லை.

௧௨. சமத்துவமடைந்தவன் கர்மத்தின் பலனை உதறி நித்திய சாந்தியை அடைகிறான். சமத்துவமடையாதவன் காமத்தால் தூண்டப்பட்டுப் பலனில் பற்றடைந்தவனாய்ப் பந்தப்படுகிறான்.

[வி] சாந்தி = அந்தரங்க பகிரங்க விஷயங்களின் ஒழிவு. (நீக்கம்)

சமத்துவ மடைந்தவன் } = யோகத்தைக் கூடினவன்.

கங. சர்வகர்மங்களையும் மனத்தால் துறந்து செய்யாமலும், செய்விக்காமலும், ஆள்பவன் (ஆகிய) தேகி, ஒன்பது வாசலுள்ள பட்டணத்தில் சுகமாய் வீற்றிருக்கிறான்.

[வி] செய்தல் = இயற்றுதற் கர்த்தாவின் தொழில்
செய்வித்தல் = ஏவுதற் கர்த்தாவின் தொழில்
வீற்றிருக்கிறான் = பிராரத்வத்துக்கிடாகத் தேகத்தில் தங்கியிருக்கிறான். இது வித்வத் சந்நியாசியின் அசங்க அநுபூதி.

கச. கர்த்துருத்வத்தை, அல்லது கர்மங்களைப் பிரபு உலகிற்குப் படைப்பதில்லை. கர்மத்திற்கும் பலத்திற்கும் சம்பந்தத்தை (உண்டாக்குவது) இல்லை. ஆனால் பிரகிருதி பிரவிர்த்திக்கிறது.

[வி] கர்த்துருத்வம் = ஜீவனுக்குக் கர்த்தாவாகுந் தன்மையைச் செய்வதில்லை.
கர்மங்களை = பிரகிருதிக்குக் கர்ம சம்பந்தங்களை உண்டாக்குவதில்லை.
பிரகிருதி = முக்குண ரூபப்பிரகிருதி, குணத்திற்கிடாகப் பிரவிர்த்திக்கிறது.
பிரபு = ஈசுவரன்.

கரு. சர்வேஸ்வரன் ஒருவனுடைய பாபத்தை அல்லது புண்ணியத்தையேனும் ஏற்கிறதில்லை. ஞானம் அஞ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கிறது. அதனால் ஜீவர்கள் மயங்குகிறார்கள்.

கசு. ஆனால் ஞானத்தினால் எவர்களுடைய புத்தியிலுள்ள அந்த அஞ்ஞானம் நாசம் அடைந்ததோ அவர்களுக்கு ஆதித்தன் போன்று ஞானம், அப்பரம்பொருளைப் பிரகாசஞ் செய்கிறது.

[வி] ஞானத்தினால் = எந்த ஞானம் புத்தியிலுள்ள அஞ்ஞானத்தை அழித்ததோ அந்த ஞானமும் அழிவு அடைந்து, ஞானரூபத்தை அடைந்த அந்த அஞ்ஞானமும் ஒருங்கு சேர்ந்து, ஆத்மாவை ஆச்ரயித்திருந்த மூல அஞ்ஞானத்தை நிவிர்த்தி செய்கிறது.

கஎ. அதில் புத்தியுடையவர்கள், அதில் மனம் லயப்பட்டவர்கள், அதில் நிஷ்டையுடையவர்கள், அதையே மேலாகக்கொண்டவர்கள் ஞானத்தினால் பாபம் நீங்கப்பெற்றவர்களாய் மீண்டும் திரும்பி வாராமையை அடைகிறார்கள்.

[வி] அதில் = பிரம்மத்தில்
பாபம் = அஞ்ஞானம்

கஅ. வித்தையும், விநயமும் உள்ள பிராமணனிடத்திலும், பசுவினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும் அப்படியே. சண்டாளனிடத்திலும், சமதரிசிகள் பண்டிதர்கள்.

[வி] விநயம் = அநுபவ விக்ஞானம்
வித்தை = பிரம்ம வித்தை
சமதரிசி = பிரம்ம தரிசனம் உள்ளவன்
பண்டிதன் = ஞானி. இங்கு கருதப்பட்டது அநுபவஞான முடையவன்.

கசூ. எவர்களின் மனம் சமத்துவத்தில் நிலைபெற்றதோ அவர்களால் பிறப்பு இங்கேயே ஜயிக்கப்பட்டதாகும். ஏனெனில், பிரம்மம் தோஷமில்லாதது, சமமானது. ஆதலால் பிரம்மத்தில் அவர்கள் நிலைபெற்றிருக்கிறார்கள்.

[வி] சமத்துவத்தில் = பிரம்மத்தில்
பிறப்பு = விருத்தி
தோஷமில்லாதது = குணாதீதம்
அவர்கள் = பிரம்ம நிஷ்டர்கள்

உ0. ஸ்திர புத்தியுள்ளவன், மயக்கமில்லாதவன், பிரம்மத்தை யறிந்தவன், பிரம்மத்தில் நிலைத்திருப்பவன், பிரியமானதை யடைந்து சந்தோஷப்படுவதுமில்லை, அப்பிரியமானதை யடைந்து கலங்குவதுமில்லை.

[வி] ஸ்திர புத்தி யுடையவன் = பிரம்மத்தில் புத்தியுடையவன்
மயங்காதவன் = பிரம்ம வித்தையை அறிந்தவன்
பிரம்மத்தை அறிந்தவன் = பிரம்ம விக்ஞானம் உடையவன்

உக. வெளி விஷயங்களில் மனம் பற்றாதவன், ஆத்மாவினுள்ள அச்சுகத்தை அடைகிறான். பிரம்ம யோகத்தைக் கூடிய அவன் அழிவில்லாத சுகத்தை அநுபவிக்கிறான்.

[வி] வெளி விஷயங்கள் = இந்திரிய விஷயங்கள்

உஉ. ஏனெனில், சம்பந்தத்தாலுண்டாகும் போகங்கள் எவையோ அவை துக்கத்திற்குப் பிறப்பிடமானவையே. ஆதி அந்தம் உடையவை கௌந்தேய! புத்திமான் அவற்றில் சந்தோஷப்படுகிறானில்லை.

[வி] ஆதி அந்தம் உடையவை = போக்கு வரத்து உடையவை.
கௌந்தேய = பிரகிருதி பக்தன்.
புத்திமான் = மகதத்துவ விவேகி அல்லது மகத் கைவல்யம் பெற்றவன்.

உங. சரீரம் விழுமுன் காமக்குரோதத்திலிருந்துண்டாகும் வேகத்தை இங்கேயே எவன் சகிக்கக்கூடுமோ அவன் யோகி. அம்மனிதன் சுகி.

[வி] காமக்குரோதத்திலிருந்துண்டாகும் வேகம் = இது பிரமாகார விருத்தி வந்தால் தான் விட்டு நீங்கும்

உச. எவன் உள்ளே சுகத்தையும், உள்ளே கிரீடையையும், அப்படியே எவன் உள்ளே ஜோதியையும் (காண்

கிறானோ) அந்த யோகி பிரம்மமாகிப் பிரம்ம நிர்வாணத்தை அடைகிறான்.

[வி] பிரம்மமாகி = பிரம்ம ஸ்திதியை அடைந்து
உள்ளே = ஆத்மாவில்
ஜோதி = ஞானப்பிரகாசம்
கிரீடை = ஆனந்தம் = விளையாடல்
நிர்வாணம் = சுகம்

உரு. பாபம் நசிக்கப்பெற்றவர்களாய், துவந்துவம் அறப்பெற்றவர்களாய் மனமடங்கப்பெற்றவர்களாய் எல்லாச்சீவர்களின் சுகத்திலும் இன்புறுகின்ற ரிஷிகள் பிரம்ம நிர்வாணத்தை யடைகிறார்கள்.

[வி] பாபம் நசிக்கப் பெற்றவர்கள் = பிரகிருதி சுத்தம் அடையப்பெற்றவர்கள்
துவந்துவம் அறப்பெற்றவர்கள் = அத்துவித திருஷ்டி அடையப் பெற்றவர்கள்

உசா. காமக்குரோதத்திலிருந்து விடுபட்டவர்களும் மனம் அடங்கியவர்களும் ஆத்மாவை யறிந்தவர்களும் (ஆகிய) யதிகளுக்குப் பிரம்ம நிர்வாணம் சமீபத்திலிருக்கிறது.

[வி] யதிகள் = மோக்ஷமடைய யத்தனஞ் செய்கிறவர்கள்.

உஎ. புறவிஷயங்களைப் புறம்பே அகற்றி, இருபுருவ மத்தியில் திருஷ்டியை வைத்து, நாசியினுள் சஞ்சரிக்கும் பிராணன் அபானன் (ஆகிய) இரண்டையும் சமப்படுத்தி.

[வி] பிராணன் = நாசியின் வழியாய் வெளியிற் செல்லும் சுவாசம்.
அபானன் = நாசியின் வழியாய் உள்ளே பிரவேசிக்கும் சுவாசம்.
சமப்படுத்தி = போக்கு வரத்தைச் சமமாக்கி.

உஅ. இந்திரியம், மனம், புத்தி (ஆகிய இவற்றை) அடக்கி மோக்ஷத்தை மேலாகக்கொண்டு இச்சை, பயம், கோபம் விட்ட முனிவனெவனோ, அவன் சதா முக்தனே.

[வி] அடக்கி = சுவாதீனப்படுத்தி.

உகூ. யக்ஞ தபசை அனுபவிப்பவனும் சர்வலோக மகேசுவரனும் சர்வபூதங்களுக்கு நண்பனும் (ஆகிய) என்னை யறிந்து சாந்தியை அடைகிறான்.

[வி] என்னை = பரமாத்மாவை.
மகேசுவரன் = மகத்திலுள்ள ஈசுவரன்.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே பிரம்ம வித்தையிலே யோகசாஸ்திரத்திலே ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே சந்நியாசயோகம் என்னும் ஐந்தாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—சந்நியாசம் இருவகைப்படும். கர்ம பந்தம், பக்தி பந்தம், ஞானபந்தம் ஆகிய இவற்றினின்று விடு

படுதல் சாமான்ய சந்நியாசம் எனப்படும். இது கீதையில் ஒரு மோக்ஷமாகக் கருதப்படுகிறது. இரண்டாவது பிரம்ம பிராப்தி துரிய சந்நியாசம் எனப்படும். சாமான்ய சந்நியாசம் யோகத்திற்குச் சாதனம். யோகம் துரிய சந்நியாசத்திற்குச் சாதனம். கர்மம், பக்தி, ஞானம் வியஷ்டி. யோகம் சமஷ்டி. யோகத்தில் கர்மம், பக்தி, ஞானம் அடங்கியிருக்கிறது. வித்வத் சந்நியாசம், துரியசந்நியாசம், நித்திய சந்நியாசம், பிரம்ம சந்நியாசம் ஆகிய பதங்கள் ஒரே அர்த்தம் உடையவை. வித்வத் சந்நியாசியின் அசங்க அநுபூதி 8-9-வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. வித்வத் சந்நியாசத்தின் சாதனமும் இலக்ஷணமும் அநுபவமும் 16-வது சுலோகம் தொடங்கி 26-வது சுலோகம் ஈறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிராண சம்பந்தமான யோகம் 27-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யோகப்பிரம்ம நிஷ்டை 28-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யோகப்பிரம்ம நிஷ்டையின் பயன் 29-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அரும்பதங்கள்.

சந்நியாசம் = கர்மம், பக்தி, ஞானத்திலிருந்து விடுபடுதல்.

நித்தியசந்நியாசி = பிரம்மசந்நியாசி = துரிய சந்நியாசி = தத்துவவித்.

பாலர்கள் = தத்துவ வித்துக்கள் அல்லாதவர்கள். ஆனால் சாஸ்திர பிரக்ஞையுள்ளவர்கள்.

ஆத்மசுத்திக்காக = பிரகிருதி சுத்தத்திற்காக.

ஐந்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஆருவது அத்தியாயம்

தியானயோகம்

ஸ்ரீ பகவான் சொன்னர்:—

க. கர்மத்தின் பலனை ஆசரிக்காமல் செய்யவேண்டிய கர்மத்தை எவன் செய்கிருனே, அவன் சந்நியாசியும் யோகியும் (ஆவான்.) அக்நியும் கிரியையும் இல்லாதவன் அன்று.

[வி] கர்மத்தின்பலன் = கர்மம், பக்தி, ஞானத்தின் பலன்.
ஆசரிக்காமல் = சார்ந்திடாமல்
செய்யவேண்டியகர்மம் = அவசியம் செய்ய வேண்டியதும் செய்யத் தகுந்ததும் ஆகிய கர்மம்.
சந்நியாசி = கர்மம், பக்தி, ஞானத்திலிருந்து விடுபட்டு யோகத்தை அநுஷ்டிக்கத்தகுந்த திறமை உடையவன்.
யோகி = யோக ஆருருக்ஷுः = யோகத்தைக் கூட விரும்பியவன். சந்நியாசி அக்நி ஹோத்ராதி கர்மங்களை விட்டவன் என்று சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் பகவான் இங்கு கர்மம், பக்தி, ஞானத்திலிருந்து விடுபட்டு யோகத்தை அனுஷ்டிக்கத் திறமை அடையப்பெற்றவனைச் சந்நியாசி என்று சொல்லுகிருர். கர்மம், பக்தி, ஞானத்தைப் பூர்த்தி செய்யாதவன் யோகத்திற்கு அருகனல்லன் என்பது ஏற்கும்.

உ. எதைச் சந்நியாசமென்று சொல்லுகிருர்களோ அதை யோகமென்றறி, பாண்டவ! ஏனெனில், சங்கல்பத்தை விடாத எவனும் யோகி ஆகிறுனில்லை.

[வி] எதைச் சந்நியாசமென்று சொல்லுகிருர்களோ அதை யோகமென்றறி = சந்நியாசம் யோகத்திற்குச் சாதனம்.
சங்கல்பம் = எண்ணம்.

ங. யோக ஆருருக்ஷுः முனிவனுக்குக் கர்மம் சாதனம் (என்று) சொல்லப்படுகிறது. யோக ஆரூடன் ஆகிய அவனுக்கே சமம் சாதனம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] யோக ஆருருக்ஷுः = யோகத்தைக்கூட விரும்பியவன்.
கர்மம் = கர்மம், பக்தி, ஞானம் அல்லது பீஜானு சந்தானம்.

யோகாருடன் = யோகத்தைக் கூடினவன் (யோக + ஆருடன்)

சமம் = பிரம்மம். பிரம்மத்தியானத்தோடு யோகி யோகப் பிரம்மநிஷ்டையை அநுஷ்டிக்க வேண்டியது. அப்படிச் செய்யாவிடின் சூன்யப் பிராப்தி அடைவான்.

௪. ஏனெனில், எப்பொழுது இந்திரிய விஷயங்களில் அல்லது கர்மங்களில் சர்வ சங்கல்ப சந்நியாசி பற்றுகிறானில்லையோ அப்பொழுது யோக ஆருடன் (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] கர்மங்கள் = யோக சித்திகள்

சர்வசங்கல்ப சந்நியாசி = பிரம்ம சங்கல்ப சந்நியாசி = யோகாருடன்

ஆருடன் = யோகத்தைக் கூடினவன்

௫. ஆத்மாவினால் ஆத்மாவை உயர்த்திக்கொள்ள வேண்டும். ஆத்மாவைத் தாழ்த்தவேண்டாம். ஏனெனில், ஆத்மாவே ஆத்மாவிற்குப் பந்து. ஆத்மாவே ஆத்மாவிற்குச் சத்துரு.

[வி] ஆத்மாவினால் = பிரகிருதியினால் பிரகிருதி சுத்தமின்றி மோக்ஷமில்லை.

ஆத்மாவை = ஜீவாத்மாவை

ஆத்மாவை = திருதியை = இந்திரிய சக்தி, மனோ சக்தி, புத்தி சக்தியைப் பரமாத்மாவினிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறசக்திக்குத் திருதி என்ற நாமம். இது சாத்வீக அஹங்காரத்தின் ஓர் சக்தி.

ஆத்மாவே = புத்தியே

ஆத்மாவிற்கு = ஜீவாத்மாவிற்கு

பந்து = புத்தியே தனக்கு நெருங்கிய பந்து.

ஆத்மாவே ஆத்மாவிற்குச் சத்துரு = புத்தியே தனக்கு நெருங்கிய சத்துரு.

௬. எவனால் பிரகிருதி புத்தியினால் ஜயிக்கப்பட்டதோ பிரகிருதி அவனுடைய ஆத்மாவுக்குப் பந்து. ஆனால் பிரகிருதியை ஜயிக்காதவனுக்குப் பிரகிருதியே சத்துருவைப் போன்று சத்துருவாக வரும்.

[வி] பிரகிருதி ஜயிக்கப்பட்டதோ = பிரகிருதியிலுள்ள ரஜோகுண தமோகுணங்கள் ஜயிக்கப் பட்டனவோ எவன் கர்மம், பக்தி, ஞானம், யோகம் அநுஷ்டிப்பதால் அவனுடைய சரீரத்தின்கண் உள்ள ரஜோகுண தமோகுண பரமாணுக்கள் நாசமடைந்து சத்துவகுண பரமாணுக்கள் அவனது சரீரத்தில் வந்து பொருந்தப்பெற்றிருக்கின்றனவோ அவன் பிரகிரு

தியை ஜயித்தவன். அவனுக்குக் கண்ணாடியில் தன் உருவம் தோற்றுவதுபோல் ஆத்ம சொரூபம் வியக்தமாகும். இவ்வாறு அவனுடைய பிரகிருதி அவனுக்குப் பந்துவாயிருக்கிறது; பிரகிருதி சுத்தமானால்தான் மோக்ஷம் கூடும்.

௭. பிரகிருதியை ஜயித்துச் சாந்தமடைந்தவனின் பரமாத்மா சீதோஷ்ண சுகதுக்கங்களிலும் அப்படியே மான அவமானங்களிலும் சமத்துவமடைந்திருக்கிறது.

[வி] சீதோஷ்ணம் = (சீதம் + உஷ்ணம்) இந்திரியங்களின் தர்மம்.
சுகதுக்கம் = மனத்தின் தர்மம்.
மானஅவமானம் = புத்தியின் தர்மம்
சமத்துவம் = பிரம்மத்தின் தர்மம்.

௮. ஞானத்திலும் விக்ஞானத்திலும் புத்தி திருப்தியடைந்தவனாய் (மனம்) நிலைத்தவனாய் இந்திரியங்களை ஜயித்தவனாய் மண்ணாங்கட்டி, கல், தங்கத்தைச் சமமாய்க் கண்ட யோகி சமத்துவம் அடைந்தவனென்று சொல்லப்படுகிறான்.

[வி] ஞானம் = சாஸ்திர ஞானம், தக்ஷணமகத்தின் தர்மம்.

விக்ஞானம் = அநுபவ ஞானம், உத்தரமகத்தின் தர்மம்.
சமம் = பிரம்மம்.

௯. நல்லெண்ணமுடையவர்களிடத்தும், சிநேகிதர்களிடத்தும், பகைவர்களிடத்தும், உதாசீனர்களிடத்தும், மத்தியஸ்தர்களிடத்தும், வெறுப்புடையவர்களிடத்தும், பந்துக்களிடத்தும், அப்படியே சாதுக்களிடத்தும், பாபிகளிடத்தும் சமபுத்தியுடையவன் மேன்மையை யடைகிறான்.

[வி] உதாசீனர்களிடத்தும் = விருப்பு, வெறுப்பு இன்றியவர்களிடத்தும்.
சாதுக்களிடத்தும் = மோக்ஷத்துக்காக யத்தனஞ் செய்பவர்களிடத்தும்.
சமபுத்தியுடையவன் = பிரம்ம புத்தியுடையவன்.

௧௦. யோகி மனத்தையும், புத்தியையும் அடக்கியவனாய், ஆசையில்லாதவனாய், ஏற்காதவனாய், இரகசிய ஸ்தானத்தில் தனித்திருந்து எப்பொழுதும் புத்தியை யோகத்தைக்கூடச் செய்யட்டும்.

[வி] ஆசையில்லாதவனாய் = யோகத்தைத் தவிர வேறு இச்சை இல்லாதவனாய்.
ஏற்காதவனாய் = யோகி தானம் வேண்டாதவனாய்.
தனித்திருந்து = ஏகாக்ர சித்தமுடையவனாய்.
இரகசிய ஸ்தானத்திலிருப்பவனாய் = பிரம்மத்தில் வாழ்பவனாய்.

கக. வஸ்திரம், தோல் தர்ப்பையின்மேல் சுத்த தேசத்தில் மேல் கீழின்றித் தனது ஸ்திர ஆசனத்தை அமைத்து.

[வி] வஸ்திரம் = இந்திரியக்கூடம்.
தோல் = மனக்கூடம்.
தர்ப்பை = தக்ஷண மகத்கூடம்.
மேல் = உத்தர மகத்கூடத்தில்.
சுத்ததேசத்தில் = உத்தரமகத்தில்
மேல் கீழின்றி = உத்தர மகத்கூடத்தின் மத்திய பாகத்தில்.

கஉ. அங்கு மனதை ஏகாக்கிரப்படுத்திச் சித்த இந்திரியங்களின் கிரியைகளை அடக்கிப் பிரகிருதி சுத்தத்திற்காக ஆசனத்திலிருந்து யோகத்தைக் கூட்டும்.

[வி] மனதை ஏகாக்கிரப் படுத்தி } = மனதைப் பிரம்மாகாரம் அடையும்படிச் செய்து.
சித்தஇந்திரியங்களின் கிரியைகளை அடக்கி } = சித்த இந்திரியங்களின் கிரியைகளைச் சுவாதீனப்படுத்தி.
பிரகிருதி சுத்தத்திற்காக } = பிரகிருதி சுத்தம் அடைந்தாற்றான் மோக்ஷங்கூடும்.
ஆசனத்திலிருந்து = மூலத்தில் 'உப' என்ற விசர்க்கம் ஆசனம் என்ற பதத்திற்கு முன் வந்திருக்கிறது. 'உப' என்றதன்

அர்த்தம் 'சமீபம்' அல்லது 'இரண்டு.' அதன்படி இதற்கு அர்த்தம், அர்த்த பாகம் பரமேசுவரனுக்கும் அர்த்த பாகம் தனக்கும். அர்த்த பாகம், பாதிபாகம். "அகம் பிரம்மாஸ்மி" "பிரம்மைவாஹம்" என்னும் அப்பியாசமகா வாக்கியத்தோடு யோகி உத்தர மகத்தின் மத்திய பாகத்தில் இருந்துகொண்டு தியானஞ்செய்ய வேண்டியது.

கா. காயத்தையும் சிரசையும் கழுத்தையும் சமமாய் அசையாது ஸ்திரமாய் நிறுத்தித் தனது நாசியின் நுனியை நோக்கித் திக்குகளை நோக்காமல்.

[வி] காயம் = இந்திரியக்கூடம்.
சிரசு = மகத்கூடம்.
கழுத்து = மனக்கூடம்.
சமமாக = இம்மூன்று கூடங்களையும் ஒன்றுக்கி.
நாசியின் நுனியை நோக்கி } = பிரம்மத்தில் திருஷ்டியை வைத்து.
திக்குகளை நோக்காமல் } = விஷயங்களில் மனதைச் செலுத்தாமல்.

கச. புத்தி சாந்தம் அடைந்தவனைப் பயம் நீங்கியவனைப் பிரம்மசரிய விரதத்தில் நிலைத்தவனைப் மனதை

அடக்கி என்னிடத்தில் சித்தமுடையவனாய் என்னை மேலாகக் கொண்டவனாய்ச் சமத்துவமடைந்தவனாய் இருக்கட்டும்.

[வி] பயம் நீங்கியவனாய் = உலகினின்றும், அச்சம் நீங்கியவனாய் = உலகத்தைப் பொய்யாகக் கண்டவனாய்.

பிரம்மசரியம் = பிரம்மத்தின் பக்கத்தில் சஞ்சரித்தல்.

என்னிடத்தில் சித்தமுடையவனாய் = பரமாத்மாவினிடத்தில் சித்தமுடையவனாய் = அவ்யக்தக் கூடத்தில் சித்த முடையவனாய்.

என்னைமேலாகக்கொண்டவனாய் = தான் என்ற பாவம் நீங்கி 'பிரமம்' என்ற பாவம் அடையப் பெற்றவனாய்.

கரு. மனம் அடங்கியவனாய் இப்படி எப்பொழுதும் புத்தியை யோகத்தைக் கூடும்படிச் செய்கிற யோகி என்னிடத்தில் உள்ள சாந்தியையும் பரம சுகத்தையும் அடைகிறான்.

[வி] மனம் அடங்கியவனாய் இப்படி எப்பொழுதும் புத்தியை யோகத்தைக் கூடும்படிச் செய்கிற யோகி = மனதைப் புத்திக்குச் சுவாதீனமாயும், புத்தியை அவ்யக்தக்கூடத்திற்குச் சுவாதீனமாயும் செய்கிற யோகி.

கசு. அதிகமாயுண்பவனுக்கும் அற்பமாய் உண்பவனுக்கும் யோகமில்லை. அதிகமாய் நித்திரை செய்பவனுக்கும் அப்படியே (அதிகமாய்) விழித்திருப்பவனுக்கும் (யோகம்) இல்லை அர்ச்சுனா!

[வி] யோகி அரை வயிறு அன்னமும் கால் வயிறு ஜலமும் மீதி கால் வயிறு காற்றும் கொள்ளவேண்டும். யோகி ஆகாரம், நித்திரை, விழிப்பு ஆகிய இவற்றில் மிதமாயிருக்கவேண்டும்.

கஎ. ஆகாரத்திலும் விநோதத்திலும் சமத்துவமுடையவனுக்கும், கர்மங்களில் சமத்துவமுடையவனுக்கும், நித்திரை விழிப்பில் சமத்துவ முடையவனுக்கும் யோகம் துக்கத்தை நிவிர்த்தி செய்கிறது.

கஅ. எப்பொழுது அடக்கப்பட்ட சித்தம் சர்வ கர்மங்களிலிருந்து ஆசை நீங்கி ஆத்மாவிலேயே நிலை கொள்கிறதோ அப்பொழுது யோகத்தைக் கூடினவன் என்று சொல்லப்படுகிறான்.

ககூ. காற்றில்லாத இடத்திலுள்ள தீபம் அசையாதது போல் சித்தம் அடங்கி யோகத்தைக் கூடுகிற யோகியின் சித்தம் (அதற்கு) ஒப்பாக நினைக்கப்படுகிறது.

[வி] அதற்கு = காற்றில்லாத இடத்திலுள்ள தீபத்திற்கு.

உ0. யோகாப்பியாசத்தால் அடக்கப்பட்ட சித்தம் எப்பொழுது ஒழிவை அடைகிறதோ எப்பொழுது ஆத்

மாவினால் ஆத்மாவைக்கண்டு ஆத்மாவில் திருப்தியடைகிறான்.

[வி] யோகாப்பியாசத்தால் = யோக + அப்பியாசத்தால்.
ஆத்மாவினால் = சுத்த புத்தியினால்.
ஆத்மாவை = ஆத்ம சொரூபத்தை.
ஆத்மாவில் = உத்தர மகத்கூடத்தில்.
ஒழிவை அடைகிறது = உபாதியை அடைகிறது.

உக. புத்தியினால் கிரகிக்கக்கூடியதும் இந்திரியங்களுக்கு எட்டாததும் எதுவோ அந்த முடிவில்லாத சுகத்தை எங்கு அறிகிறானோ அங்கே இவன் நிலைத்து தத்துவத்தினின்றும் அசைகிறதில்லை.

[வி] புத்தியினால் கிரகிக்கக் கூடியது = உத்தரமகத்தி லுள்ள புத்தியினால் அறியக்கூடியது.
இந்திரியங்களுக்கு எட்டாதது = இந்திரியம், மனம், தக்ஷணமகத்திலுள்ள புத்திக்கு எட்டாதது.

உஉ. எதனை அடைந்து அதனினும் அதிக வேறு லாபத்தை எண்ணுகிறதில்லையோ, எதில் நிலைத்துத் தாங்க முடியாத துக்கத்தினாலும் அசைவதில்லையோ.

உங. துக்க சம்பந்தத்திலிருந்து பிரிதலாகிய அதனை யோகமெனப் பேர்பெற்றதாக அறியவேண்டும். அந்த

யோகத்தை நிச்சயத்தோடும் சோர்வின்றிய மனத்தோடும் கூடவேண்டும்.

[வி] அதனை = அந்தஸ்திதியை
நிச்சயத்தோடும் = திறுதியோடும்
சோர்வின்றிய மனத்தோடும் = குன்றாத மனத்தோடும்.

உச. சங்கல்பத்திலிருந்துண்டான சர்வகாமங்களையும் சேஷமின்றி நீக்கி மனத்தாலேயே இந்திரியக் கூட்டத்தை எப்பக்கங்களிலும் அடக்கி.

[வி] சங்கல்பம் = எண்ணம், எண்ணம் காமத்துக்குக் காரணம், காமம் கர்மத்துக்குக் காரணம்.

உரு. திறுதியினாற் கிரகிக்கப்பட்ட புத்தியினால் படிப்படியாய் ஒழியவேண்டும். ஆத்மாவில் மனதை நிறுத்தி வேறொன்றையும் நினைக்கவேண்டாம்.

[வி] திறுதி = இந்திரிய சக்தி, மனோசக்தி, புத்தி சக்தி ஆகிய இவற்றை அவ்யக்தக் கூடத்துக்கு இழுத்துக் கொண்டு போகும் சக்தி. இதற்கு உத்தர மகத் இருப்பிடம்.

உசு. எங்கெங்கே சஞ்சலமும் ஸ்திரமில்லாத மனம் செல்லுகிறதோ அதினின்றும் இதனைத் தடுத்து ஆத்மாவின் வசம் நடத்தவேண்டும்.

௨௭. மனம் சாந்தம் அடைந்தவனாய் ரஜோகுணம் சாந்தம் அடையப்பெற்றவனாய், பிரகிருதி சுத்தப்பட்டுப் பிரம்மமாகிய இந்த யோகியை உத்தமசுகம் அடைகிறது.

[வி] பிரகிருதி சுத்தமின்றி மோக்ஷமில்லை.

பிரம்மமாகிய = பிரம்ம ஸ்திதியை அடைந்த.

௨௮. இப்படி எப்பொழுதும் யோகத்தில் புத்தியைச் சேர்க்கிற யோகி பிரகிருதி சுத்தம் அடையப்பெற்றவனாய்ச் சுகமாய்ப் பிரம்மத்தை ஸ்பரிசித்தலாகிய இறுதியான சுகத்தை அனுபவிக்கிறான்.

[வி] புத்தி பிரம்மத்தை அடைந்தாற்றான் புத்தியை மனம் பின்பற்றிப் பிரம்மத்தை அடையக்கூடும், ஆனந்தத்தை அனுபவிக்கக்கூடும்.

௨௯. யோகத்தைக் கூடினவனாய் எங்கும் சமதரிசனமுடையவன் ஆத்மாவைச் சர்வபூதங்களிலும் சர்வ பூதங்களை ஆத்மாவிலும் பார்க்கிறான்.

[வி] இது உத்தாமகத்திலுள்ள யோகியின் ஆத்மதரிசனம். ஆத்ம தரிசனம் பிரம்ம தரிசனத்துக்குச் சாதனம். அடுத்த சுலோகத்தில் பிரம்ம தரிசனத்தைப் பற்றிச் சொல்லப்படுகிறது.

௩௦. எவன் என்னைச் சர்வத்திலும் காண்கிறானோ, சர்வத்தையும் என்னில் காண்கிறானோ, அவனுக்கு நான் இல்லாமற் போவதில்லை. அவனும் எனக்கு இல்லாமற் போவதில்லை.

55

[வி] இச்சுலோகம் பிரம்ம தரிசனத்தைப் பற்றியது.

என்னை = பிரம்மத்தை

நான் = பிரம்மம்

௩௧. சர்வ பூதங்களிலும் இருக்கும் என்னை எவன் ஏக சொரூபி (என்ற) நிச்சயமுடையவனாய்ப் பஜிக்கிறானோ, எப்படியிருந்தாலும் அந்த யோகி என்னிடத்திலிருக்கிறான்.

[வி] யோகபக்தியைப் பற்றியது.

௩௨. சுகத்திலும் அல்லது துக்கத்திலும் ஆத்மாவை உபமானமாய்க் கொண்டு எங்கும் சமத்தை எவன் காண்கிறானோ அர்ச்சுனா! அவன் பரமயோகி (என்று) எண்ணப்படுகிறான்.

[வி] சுகத்திலும் அல்லது துக்கத்திலும் = ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் அதீதமாகி

உபமானமாய்க் கொண்டு = பிரம்மத்திற்குச் சாதுருச்யமான பொருள் ஆத்மா ஒன்றேயாம். ஆத்மதரிசனம் பிரம்ம தரிசனத்துக்குச் சாதகம் என்று பகவானே சொல்லியிருக்கிறார்.

சமத்தை = பிரம்மத்தை

பரமயோகி = பிரம்மயோகி

67640

அர்ச்சுனன் சொன்னான்:—

௩௩. சமத்துவ பாவனையினால் தங்களால் சொல்லப்பட்ட இந்த யோகம் எதுவோ மதுசூதனா! இதனுடைய ஸ்திரமான ஸ்திதியை நான் காண்கிறேனில்லை. (மனம்) சஞ்சலமுடையதாதலின்.

[வி]சமத்துவ பாவனை = பிரம்மபாவனை
சஞ்சலம் = அஸ்திரம், நிலையற்றது. மனத்தின் தர்மம்.

௩௪. ஏனெனில், மனம் சஞ்சலமுடையது கிருஷ்ணா! கலங்கச் செய்வது, வலியது, கடினமானது, அதனடக்கம் வாயுவைப்போன்று கடினம் (என்று) நான் எண்ணுகிறேன்.

[வி] வாயுவைப் போன்றுகடினம் = வாயுவை அடக்கிறது எப்படிக் கடினமோ அப்படியே மனத்தினடக்கமும் கடினம் என்பது யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௩௫. சந்தேகமின்று மகாபாகு! மனம் அடக்குதற்குக் கடினம், சஞ்சலமானது. ஆனால், கௌந்தேய! அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் அடக்கப்படுகிறது.

[வி] அப்பியாசம் = பிரம்மத்தை ஸ்பரிசித்தலும் பிரகிருதியை விடுதலும்.

வைராக்கியம் = பிரகிருதி சம்பந்தமான விஷயத்தில் விருப்பமின்மை

௩௬. மன அடக்கமில்லாதவனால் யோகம் அடைதல் கடினம் என்பது எனதபிப்பிராயம். ஆனால் மன அடக்கமுடையவனாய் வழியோடு பிரயத்தனஞ் செய்வதால் அடையக்கூடும்.

[வி] மனஅடக்கமில்லாதவன் = ரஜோகுணம்,தமோகுணம் சாந்தப்படாதவன். கர்மம் பக்தி, ஞானம் அநுஷ்டிப்பதால் ரஜோகுணமும் தமோகுணமும் சாந்தப்படுகின்றன. கர்மம், பக்தி, ஞானம் யோகத்திற்குச் சாதனம்.

வழியோடு = யோக நூலிற் சொல்லப்பட்ட சாதனங்களோடு.

அர்ச்சுனன் சொன்னான்:—

௩௭. மனம் அடங்காதவன், சிரத்தையோடு கூடியவன், யோகத்தினின்று மனஞ்சலித்தவன், யோகசித்தியை அடையாமல், என்ன கதியை, கிருஷ்ணா! அடைகிறான்.

[வி] இந்தச் சுலோகம் யோகப் பிரஷ்டனைப்பற்றியது.

௩௮. இரண்டினின்றும் தவறி, நிலை குலைந்து, பிரம்ம மார்க்கத்தில் மதிமயங்கியவன், மகாபாகு! சிதறின மேகம் போன்று நாசமடையானோ!

[வி] இரண்டினின்றும் தவறி = பிரவிர்த்திமார்க்கம், நிவிர்த்திமார்க்கம் ஆகிய இரண்டினின்றும் தவறி
பிரவிர்த்தி மார்க்கம் = கர்மம், பக்தி ஞானம்.
நிவிர்த்தி மார்க்கம் = யோகம்.

௩௯. எனது இச்சந்தேகத்தைக் கிருஷ்ணா! சேஷமின்றி நீக்கவேண்டும். உங்களிலும் அன்னியன் இச்சந்தேகத்தைத் தீர்க்கக்கூடியவனைக் கண்டுபிடிக்கமுடியாது.

[வி] கிருஷ்ணன் யோக ஆசிரியர். அதனால் யோகப்பிரஷ்டனைப் பற்றிய சந்தேகத்தை நிவிர்த்தி செய்யத் தகுந்தவர் அவரே.

ஸ்ரீபகவான் சொன்னார்:—

௪0. பார்த்த! அவனுக்கு இகத்திலும் பரத்திலும் நாசமில்லை. சுபகாரியத்தைச் செய்பவனொவனும், குழந்தாய்! துர்க்கதியை அடையான்.

[வி] சுபகாரியம் = யோகம்.
துர்க்கதியை = துர்ப்பலத்தை

௪௧. புண்ணியஞ் செய்தவர்களின் உலகங்களையடைந்து அளவிடுதற்கரிய வருஷங்கள் வசித்து யோகப்பிரஷ்டன் சுசீல தனவந்தர்களின் வீட்டில் பிறக்கிறான்.

[வி] யோகப்பிரஷ்டன் = யோகத்தினின்றும் தவறியவன்.
சுசீல = கர்மம், பக்தி, ஞானம் அநுஷ்டிக்கிற.

௪௨. அல்லது மகத்புத்திமான்களாகிய யோகிகளின் குருகுலத்தை அடைகிறான். உலகில் இத்தகைய ஜன்மம் எதுவோ (அது) கிடைப்பதரிது.

[வி] மகத்புத்திமான் = மகதத்துவ விவேகி = மகதத்துவத்தை யறிந்தவன்.

உலகத்தில் யோககுருவை அடைந்து குருகுலவாசம் செய்து யோகத்தை அப்பியசித்தலே கிடைத்தற்கரிய ஜன்மம்.

௪௩. அங்கு பூர்வ தேகத்திலுள்ள அப்புத்தியின் சம்பந்தத்தை அடைகிறான். அதிலும் அதிகமாக சித்திக்காக யத்தனிக்கிறான், குருநந்தன!

[வி] அங்கு = அத்தேகத்தில்.
சித்திக்காக = யோக சித்திக்காக.

௪௪. அதே பூர்வாப்பியாசத்தினாலே பரவசமாகவே அவன் இழுக்கப்படுகிறான். யோகத்தைக்கூட விரும்பினவனும் சப்தப்பிரம்மத்தைக் கடக்கிறான்.

[வி] பூர்வாப்பியாசம் = பூர்வ + அப்பியாசம்.
யோகத்தைக் கூடவிரும்பினவனும் = யோக ஆருருக்ஷு.
சப்தப் பிரம்மம் = பீஜாநு சந்தானம். ஓங்காரம் முதலிய பீஜங்கள்.

௪௫. விடாமுயற்சியுடன்பிரயத்தனஞ்செய்யும்யோகி பிரகிருதி சுத்தி அடையப்பெற்றவனாய் அனேக ஜன்மங்களால் சித்தி யடையப்பெற்றவனாய் அதனால் பரகதியை யடைகிறான்.

[வி] பிரகிருதி சுத்தி யடையப்பெற்றவனாய் = யோகத்தின் பயன் பிரகிருதி சுத்தம்.
சித்தி = யோகத்தின் பயன் ஞான சித்தி.
பரகதி = யோகத்தின் பயன் மோக்ஷம்.

௪௬. தவசிகளிலும் யோகி அதிகம் (என்றெண்ணப் படுகிறான்) ஞானிகளிலும் (யோகி) அதிகம் (என்று) எண்ணப்படுகிறான். கர்மிகளிலும் அதிகம் யோகி. ஆதலால் யோகி ஆகுக, அர்ச்சுன!

[வி] தவசி = பக்தி செய்பவன்.
ஞானி = சாஸ்திர அப்பியாசஞ் செய்பவன்.
கர்மி = கர்மஞ் செய்பவன்.

௪௭. சர்வயோகிகளிலும் எவன் உள்ளம் என்னிடஞ் சென்றவனாய், சிரத்தை மிகுந்தவனாய், என்னைப் பஜிக்கிறானோ அவன் யோகத்தை அதிகமாகக் கூடினவன்(என்று) என்னாற் கருதப்படுகிறான்.

[வி] இது யோகபக்தனைப்பற்றியது. யோகபக்தியே பக்தி என்பது பரமாத்மாவின் கருத்து. யோகபக்தியைப் பற்றி ஏழாவது அத்தியாயம் முதல் பன்னிரண்டாவது

அத்தியாயம் இறுதியாகப் பகவான் விரிவாக எடுத்துச் சொல்லுகிறார். அங்கு கண்டித உபாசனை கண்டிக்கப்பட்டிருக்கிறது.

[வி] என்னிடம் = பரமாத்மாவினிடம்.
என்னை = பரமாத்மாவை.
யோகத்தை அதிகமாகக் கூடினவன் = பரமாத்மாவினிடத்தில் மனத்தைச் செலுத்திய யோகியே மேலான யோகி.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே தியானயோகம் என்னும் ஆறாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—கர்மம், பக்தி, ஞானம் சந்நியாசத்திற்குச் சாதனம். சந்நியாசம் யோகத்திற்குச் சாதனம். யோக ஆருருக்ஷுவுக்குப் பீஜாநுசந்தானம் சாதனம். யோகாரூடனுக்கு, பிரம்மம் சாதனம். சுத்தபுத்தியும் சுத்தப் பிரகிருதியும் யோகத்திற்கு வேண்டிய சாதனங்கள். யோகி உத்தரமகத்தைத் தனது தேசமாகவும், அதில் சுத்த புத்தியைத் தனது ஆசனமாகவும் கொண்டு, அவ்யக்தக்கூடத்தில் தக்ஷிணபாகத்திலுள்ள பரமாத்மாவைத் தியானஞ் செய்வதால் பரமாத்மாவை அடைகிறான். இந்த யோகி இந்திரியக்கூடத்தை மனக்கூடத்திற்குச் சுவாதீனப்படுத்தி, மனக்கூடத்தை மகத்கூடத்திற்குச் சுவாதீ

னப்படுத்தி, மகத்கூடத்தை அவ்யக்தக் கூடத்திற்குச் சுவாதீனப்படுத்துவதினால் பரமாத்மாவை அடைகிறான். அதிகமாய் உண்பவனுக்கும், அதிகமாய் நித்திரை செய்பவனுக்கும், அதிகமாய் விழிப்புள்ளவனுக்கும் யோகமில்லை. சங்கல்பம் அல்லது எண்ணங்களை விடாதவன் யோகியாகான். ஆதலின் யோகி மனத்தையும், புத்தியையும் உத்தரமகத்தில் நிறுத்தவேண்டும். அதனால் அங்கு ஆத்மசொரூபத்தை அல்லது மகதத்துவத்தைத் தரிசிக்கவேண்டும். ஆத்மசொரூபத்தைக் கண்டவன் ஆத்மாவை உபமானமாய்க்கொண்டு பிரம்மத்தைத் தரிசிக்கத் தகுந்தவனாகிறான். பிரம்மத்தைத் தரிசனம் பண்ணினவனுக்கு அவனுடைய துக்கங்கள் எல்லாம் நாசமாகின்றன. முடிவில்லாத ஆனந்தத்தையும் அடைகிறான். யோகம், கர்மம், பக்தி, ஞானத்திலும் மேலானது. யோகத்தினின்று தவறினவன் கெடான். அவன் புண்ணியஞ் செய்தவர்களுடைய உலகங்களையடைந்து நீடித்தகாலம் அங்கு வசித்து அதன்பின் புண்ணியஞ் செய்தவர்களின் குலத்திற் பிறக்கிறான். அல்லது எக்குலத்திற் பிறந்தாலும் யோககுருவை யடைந்து யோகியாகிறான். இவ்விதமான ஜன்மம் கிடைப்பதரிது. கர்மம், பக்தி, ஞானத்திலும் யோகம் சிறந்தது. ஆதலால், அர்ச்சுனா! யோகியாகுக.

அரும்பதங்கள்

யோகஆருருக்ஷு	= யோகத்தைக் கூட விரும்பினவன்
யோகாரூடன்	= யோகத்தைக் கூடினவன்
சர்வசங்கல்ப சந்நியாசி	= பிரம்ம சங்கல்ப சந்நியாசி
யோகாரூடன்	= யோகத்தைக்கூடினவன் 5-வது 6-வது சுலோகங்களில் ஆத்மசப்தம் பிரகிருதி, ஆத்மா திருதி, புத்தி என்ற அர்த்தத்தில் பாவிக்கப்பட்டிருக்கிறது.
சமம்	= பிரம்மம்.

ஆறாவது அத்தியாயம்
முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்

விக்ஞான யோகம்

க. என்னிடம் மனம் லயப்பட்டவனாய் யோகத்தை அப்பியசிக்கிறவனாய், பார்த்த! என்னை ஆச்ரயிக்கிறவனாய்ச் சம்சயமின்றிப் பூரணமாய் என்னை எப்படி அறிவாயோ அதனைக் கேள்.

[வி] என்னிடம் மனம் லயப்பட்டவனாய் = இந்திரிய சத்துவகுண சக்தி, மனோ சத்துவகுண சக்தியில் அடங்கி, மனோசத்துவ குணசக்தி மகத்கூடத்திலுள்ள புத்தியுடன் சம்பந்தப்பட்டு மேல்நோக்கிச் சென்று உத்தரமகத்தில் திருதியுடன் சம்பந்தப்பட்டு மீண்டும் மேல்நோக்கிச் சென்று உத்தாமகத்திலுள்ளபிரக்ஞையுடன் சம்பந்தப்பட்டுப் பரமாத்மாவை விஷயஞ் செய்வதெதுவோ அது.

ஆச்ரயிக்கிறவனாய் = சத்துவமனம் உத்தரமகத்கூடத்தில் சுத்த புத்தியுடனும் திருதியுடனும் கூடி நின்று பரமாத்மாவை விஷயஞ் செய்வதெதுவோ அதுவேயாம்.

என்னை = பரமாத்மாவை.

யோகத்தை அப்யசிக்கிறவனாய் = இந்தப்பதங்களால் பகவான்சொல்லக்கருதியபக்தி இங்கு யோகபக்தி என்றது வெளிப்படையாய்த் தெரிகின்றது. இதனால் முன் அத்தியாயத்திற்கும் இந்த அத்தியாயத்திற்கும் உள்ள சம்பந்தத்தைக் கண்டுகொள்க.

உ. எதை அறிந்து இங்கு மீண்டும் அறியவேண்டியது யாதும் எஞ்சியிராதோ, விக்ஞானத்தோடு கூடிய இந்த ஞானத்தை நான் உனக்குச் சேஷமின்றி உரைப்பேன்.

[வி] ஞானம் = மகத் தக்ஷிணபாகத்திலுள்ள புத்தியின் கர்மம்.

விக்ஞானம் = மகத் கூடத்தின் உத்தரபாகத்தின் குணம்.

சேஷமின்றி = இந்திரிய சத்வகுண சக்தி மனோ சத்துவகுணசக்தியிலடங்கி அச்சத்துவமனம் தக்ஷிண மகத்கூடத்தில் புத்தியுடன் சம்பந்தப்பட்டு அங்கு ஞான கர்மத்தைச்செய்து பின் விக்ஞானகர்மத்தில் நோக்கங்கொண்டு உத்தர மகத்தில் சென்று அங்கு அகங்காரத்தை அதிஷ்டானமாக

வும் திருதியைத் துணையாகவுங் கொண்டு மீண்டும் மேல்நோக்கிச் சென்று பிரக்ஞையுடன் சம்பந்தப்பட்டுப் பரமாத்மாவைத் தியானம் செய்வதெதுவோ அது யோகப் பிரம்ம நிஷ்டை. இங்கு யோகப் பிரம்ம நிஷ்டைக்குரிய சாமக்கிரியைகள் சேஷமின்றிச் சொல்லப்பட்டன.

௩. அநேக ஆயிர மனிதர்களில் ஒருவன் சித்திக்காக யத்தனஞ் செய்கிறான். யத்தனஞ்செய்யும் சித்தர்களுள்ளும் ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான்.

[வி] மனிதன் = பூரண பிரகிருதியை யுடையவன். மகத்புத்தி முதலிய தத்துவங்களெல்லாம் மனிதனிடத்தில் பூரணமாய் வியக்தமாய் இருக்கின்றன; பசு பட்சி யாதிகளில் அப்படி அன்று.

ஒருவன் = மூலத்தில் 'கச்சித்' என்ற பதம் பாவிக்கப்பட்டிருக்கிறது. அதன் அர்த்தம் ஆத்மசொரூபவித்; அல்லது மகத் சொரூபவித்; சொரூபவித் = சொரூபத்தை அறிந்தவன்.

ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான் = மகத் சொரூபவித் பரமாத்மாவை அறிகிறான்.

௪. மண், நீர், அக்நி, வாயு, ஆகாசம், மனம், அப்படியே புத்தியும் அகங்காரமும் என்ற இந்த என்னுடைய பிரகிருதி எண் [illegible]யாய்ப் பிரிந்துள்ளது.

[வி] இங்கு [illegible]ல்லப்பட்ட பூதங்கள் சூக்ஷ்மபூதங்கள். இங்கே தத்துவங்கள் சாங்கிய நூலின்படிச் சொல்லப்பட்டிருக்கின்றன. சாங்கியன், தத்துவங்களையும் குணங்களையும் சொல்லுவதில் சாமர்த்திய முடையவன்.

அகங்காரம் = அவ்யக்தம்
புத்தி = மகதத்துவம்
மனம் = அகங்காரம்

௫. இது தாழ்ந்தது; இதனினும் அன்னியப்பிரகிருதி எனது மேலானது (என்று) அறி. ஜீவனையுள்ளது, மகாபாகு! அதனால் இந்த ஜகத் தாங்கப்படுகிறது.

௬. இது ஸர்வபூதங்களுக்கும் யோனி என்றறி; நான் முழுஜகத்தின் உற்பத்தி[illegible]ம், அப்படியே பிரளயமும்.

[வி] இது பின்னப்பிரகிருதி.
ஸர்வபூதங்கள் = எல்லாப் பிராணிகள்.
யோனி = உற்பத்தி ஸ்தானம்

௭. என்னினும் மேலான அன்னியம் யாதொன்றுமில்லை, தனஞ்சய! சரட்டில் ரத்தினக் கோர்வைகள்போல் என்னில் இதெல்லாம் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

அ. நான் ஜலத்தில் ரசமாகவும், கௌந்தேய! சந்திர சூரியர்களுள் ஒளியாகவும், சர்வ வேதங்களில் பிரணவமாகவும், ஆகாசத்தில் சப்தமாகவும், மனிதர்களில் புருஷத்தன்மையாகவு மிருக்கிறேன்.

[வி] ரசத்தினின்று ஜலமும், ஒளியினின்று சந்திர சூரியர்களும், பிரணவத்திலிருந்து சர்வ வேதங்களும், சப்தத்தினின்று ஆகாசமும், புருஷத் தன்மையிலிருந்து மனிதர்களும் முறையே தோற்றியவை. காரண காரியமாயுள்ளவை.

கூ. பிருதிவியில் நன்மணமாகவும், அக்நியில் பிரகாசமாகவு மிருக்கிறேன். சர்வபூதங்களின் ஜீவத்தன்மையாகவும் தவசிகளின் தவமாயு மிருக்கிறேன்.

[வி] பரமாத்மா சர்வத்திற்கும் காரணம்.

க0. என்னைச் சர்வ பூதங்களின் சநாதனபீஜம் (என்று) அறி, பார்த்த! புத்திமான்களின் புத்தியாயிருக்கிறேன். தேஜஸுடையவர்களின் தேஜஸ் நான்.

[வி] பீஜாங்குர திருஷ்டாந்தத்தில் பிரம்மம் பீஜம்.

சநாதநம்	= நித்தியம்.
தேஜஸ்	= பிரம்ம விருத்தி.
புத்திமான்	= மகத் ஸ்வரூபவித். மகத் கைவல்யம் பெற்றவன் = ஆத்மவித்.
புத்தி	= சுத்த புத்தி, மகதத்துவம்.

கக. பலவான்களின் காமராகம் நீங்கப்பெற்ற பலமாயிருக்கிறேன். பூதங்களில் தர்மத்திற்கு மாறில்லாத காமமாயிருக்கிறேன். பரதரிற் சிறந்தோனே!

க௨. அப்படியே சாத்துவிகப் பொருள்கள் எவையோ, ராஜஸமும் தாமஸமுமானவைகள் எவையோ, அவை என்னிடமிருந்தே (தோன்றியவை) என்று அறி. நான் அவைகளிடத்தில் இல்லை. ஆனால் அவைகள் என்னிடத்தில் (இருப்பதாக) அறி.

[வி] பொருள்கள் எல்லாம் முக்குணத்திற் கேடாகச் சாத்விகம், ராஜஸம், தாமஸம் என மூவகைப்படும்.

நான் அவைகளிடத்தில் இல்லை	= நான் அவைகள் ஆதீனத்தில் இல்லை.
அவை என்னிடத்தில் இருப்பதாக	= அவை எனது ஆதீனத்தில் இருப்பதாக.

கங. இம்முக்குணங்களால் ஆகிய பொருள்களால் இச்சர்வ ஜகத்தும் மோகிக்கப்பட்டு என்னை இவற்றினின்றும் மேலானவன் (என்றும்) அழிவில்லாதவன் (என்றும்) அறிகிறதில்லை.

கச. ஏனெனில் தேவீ, ஏஷா, குணமயீ (என்ற) எனது மாயை கடத்தற்கரியன. என்னையே எவர்கள் அடைகிறார்களோ, அவர்கள் இம்மாயையைக் கடக்கிறார்கள்.

[வி] இம்மூன்று மாயைகளும் பிரம்மாகார விருத்தி வந்தால்தான் நீங்கும். அவ்யக்தக்கூடத்தின் தக்ஷிணபாகத்தில் உள்ளமாயை தேவிமாயை. மகத்கூடத்தில் உள்ள மாயை ஏஷாமாயை. மனக்கூடத்தில் உள்ளமாயை குணமயிமாயை. அவ்யக்தக்கூடத்தின் உத்தரபாகத்தில் உள்ள மாயை யோகமாயை.

என்னை = யோகமாயையை.

கரு. தீத்தொழில் உடைய மூடர்கள் மனிதரில் கடைப்பட்டவர்கள். மாயையால் ஞானம் அபகரிக்கப்பட்டவர்கள். அசுரபாவத்தை ஆசரித்தவர்கள் என்னை அடைகிறார்களில்லை.

[வி] தீத்தொழில் உடையவர்கள் = சத்கர்மந் தெரியாதவர்கள் தீத்தொழில்களைச் செய்வார்கள்.

மூடர்கள் = மேல் நோக்கத்திற்குரிய வழியை அறியாதவர்கள்.

மனிதர்களில் கடைப்பட்டவர்கள் = இந்திரியக்கூடத்தில் வாழ்பவர்கள். பசுபக்ஷியாதிகள்போல் அருந்தல், பொருந்தல் ஆகிய இவ்விரண்டில் சந்தோஷித்திருப்பவர்கள்.

மாயையால் ஞானம் அபகரிக்கப்பட்டவர்கள் = முக்குண மாயையால் மனத்திலிருந்து ஆத்தும விவேகம் அபகரிக்கப்பட்டவர்கள்.

அசுரபாவம் = அசுரர்களுடைய தன்மை.

என்னை = பரமாத்மாவை.

கசு. நான்குவித புனித ஜனங்கள் என்னை வழிபடுகிறார்கள். அர்ஜுனா! துயரடைந்தவனும், ஞான இச்சையுள்ளவனும், அர்த்தத்தை விரும்புவோனும், ஞானியும், பாதரிற் சிறந்தோனே!

[வி] துயரடைந்தவன் = இந்திரிய விஷயங்களிற் சென்று அவைகளில் வெறுப்படைந்து இந்திரிய விஷயங்களை நீக்கியவன்.

ஞான இச்சையுள்ளவன் = ஞானசாஸ்திர பாண்டித்யத்தை விரும்பியவன், தக்ஷிணமகத் கைவல்யம் பெற விரும்பியவன்.

அர்த்தத்தை விரும்புவோன் = பிரம்ம வித்தியை விரும்புவோன்.

ஞானி = உத்தரமகத் கைவல்யம் பெற்றவன் = ஆத்ம சொரூபவித் = மகத் சொரூபவித்.

கஎ. அவர்களில் என்றுஞ் சமத்துவ ஏகபக்தியுடைய ஞானி மேலாகிறான். ஏனெனில், ஞானிக்கு நான் மிகப்பிரியன், அவனும் எனக்குப்பிரியன்.

[வி] சமத்துவம் = பிரம்ம தர்மம்.

ஏக பக்தி = யோக பக்தி = பரமாத்ம பக்தி.

ஞானி = ஆத்ம சொரூப வித் = ஆத்ம சொரூபத்தை அறிந்தவன்.

ஞானிக்கு நான் மிகப் பிரியன், அவனும் எனக்குப் பிரியன் = ஆத்மாவும் பரமாத்மாவும் ஒரே ஜாதி. பரமாத்மாவின் அம்சம் ஜீவாத்மா. ஜீவாத்மாவை பகவானே அநந்யப் பிரகிருதி என்று சொல்லியிருக்கிறார். தனது ஆத்ம சொரூபத்தை அறிந்தவன் பரமாத்மாவை அறியக்கூடிய உயர்ந்த ஸ்திதியை அடைந்திருக்கிறான். ஆத்ம சொரூபம் பரமாத்ம சொரூபம் போன்றது. ஆத்ம சொரூபத்தை அறிந்தவனுக்குப் பரமாத்மாவினிடத்திலே தான் அவனுடைய இச்சை செல்லும். ஆத்ம சொரூபத்தை அறிந்தவன் பரமாத்மாவுக்குப் புத்திர ஸ்தானத்தில் இருக்கிறான்.

க௮. இவர்களெல்லோருமே பெரியோர்கள். ஆனால், ஞானி நானே என்பது என் கருத்து. ஏனெனில், அச்சமத்துவம் உடையவன் என்னையே சர்வோத்தம கதியாக நிச்சயித்துக்கொண்டவன்.

[வி] ஞானி = ஆத்மசொரூபவித்

நிச்சயித்துக் கொண்டவன் = திடநிச்சயமுள்ளவன். ஏனெனில், பரமாத்மாவை அறியக்கூடிய உயர்ந்த ஸ்திதியை அடைந்தவன்.

சமத்துவமுடையவன் = பிரம்ம தர்மத்தை ஆச்ரயித்தவன்.

க௯. அநேக ஜன்மங்களின் இறுதியில் ஞானி என்னை அடைகிறான். சர்வமும் வாசுதேவனே என்கிறான். அம் மகாத்மா கிடைப்பது மிகவும் துர்லபம்.

[வி] அனேக ஜன்மங்களின் இறுதியில் = அநேக விருத்திகளின் நாசத்தில்

ஞானி = ஆத்மவித். ஆத்ம சொரூபத்தை அறிந்தவன்

வாசுதேவன் = பிரம்மம்

மகாத்மா = பரமாத்மாவை நாடினவன்

என்னை = பரமாத்மாவை

௨௦. அந்தந்த காமங்களால் ஞானம் கவரப்பெற்றவர்கள், தங்கள் பிரகிருதியினால் ஏவப்பெற்று அந்தந்த நியமத்தை மேற்கொண்டு அன்னிய தேவதைகளை அடைகிறார்கள்.

[வி] அன்னிய தேவதைகள் = இந்திரன் அக்நி முதலிய தேவதைகள்.

பிரகிருதி = சுவபாவம், சொந்தத்தன்மை

அந்தந்த நியமத்தைக் கொண்டு = அந்தந்த தேவதைக்குரிய ஆராதனையைக் கைக்கொண்டு

தேவதைகளின் வழிபாடு கண்டிக்கப்பட்டிருக்கிறது = பரமாத்ம பக்தியே கீதையின் கருத்து.

உக. எந்தெந்த பக்தன் உருவத்தைச் சிரத்தையோடு அர்ச்சிக்க இச்சிக்கிறானோ, அவனவனுக்கு அதே சிரத்தையை அசையாது நான் திடப்படுத்துகிறேன்.

[வி] எந்தெந்தஉருவம் = எந்தெந்த தேவதா சொரூபம்.
நான் = பரமாத்மா

உஉ. அவன் அந்தச் சிரத்தையோடு கூடினவனாய் அதன் ஆராதனத்தை நாடுகிறான். அதனிடமிருந்தே காமங்களை யடைகிறான். அந்நலங்கள் என்னாலேயே விதிக்கப்பட்டவை.

[வி] அதன் = அத்தேவதையின்
அதனிடமிருந்து = அத்தேவதையினிடமிருந்து.
நலங்கள் = இச்சிக்கப்பட்ட பொருள்கள்.
என்னாலேயே = பரமாத்மாவினாலேயே.

உங. ஆனால் அற்பபுத்தியுடைய அவர்களுக்கு அப்பலன் அந்தமுடையதாகிறது. தேவதைகளை வழிபடுகிறவர்கள் தேவதைகளை அடைகிறார்கள். என் பக்தர்கள் என்னையே அடைகிறார்கள்.

[வி] என் பக்தர்கள் = பரமாத்ம பக்தர்கள்.

உச. எனது உயர்ந்த, அழிவில்லாத, சர்வோத்தம ப்ரபாவத்தை யறியாத மூடர்கள் உருவமில்லாத என்னை உருவமுள்ளவனாக எண்ணுகிறார்கள்.

[வி] உத்தரமகத்திலுள்ள யோகிகளும் மகாத்மாக்களும் கிருஷ்ணனை யறிவார்கள், ஏனையோர்களறியார்கள்.

ப்ரபாவம் = மேலான நிலைமை.

உரு. நான் யோகமாயையால் மூடப்பட்டவனாய் யாவர்க்கும் அறியப்படுகிறேனில்லை. இம்மயங்கிய உலகம் என்னைப் பிறப்பிலியாகவும், நாசமில்லாதவனாகவும் அறிகிறதில்லை.

[வி] யோகமாயை = யோக சக்தி.
பிறப்பிலி = பிறப்பில்லாதவன்.

உசா. சென்றவையும், இருப்பவையும், வருபவையுமாகிய பூதங்களை நான் அறிவேன், அர்ச்சுனா! ஆனால் என்னை ஒருவரும் அறிகிறதில்லை.

[வி] என்னை = அவதார புருஷனை.

உஎ. விருப்பு, வெறுப்பாலாகிய, துவந்துவ மோகத்தால், பாரத! சர்வபூதங்களும் சிருஷ்டியில் மோகத்தை யடைகிறார்கள், பரந்தப!

[வி] துவந்துவம் = விருப்பு வெறுப்பு = இன்பம், துன்பம், குளிர், உஷ்ணம்; இப்பிரபஞ்சம் துவந்துவ வடிவம். அந்தவித திருஷ்டி வந்தால் இத்துவந்துவ ரூபப் பிரபஞ்சம் பாதிக்கப்படும்.

உஅ. ஆனால் புண்ணிய கர்மங்களையுடைய எந்த ஜனங்களின் பாவம் அந்தத்தை யடைந்ததோ அவர்கள் துவந்துவ மோகத்திலிருந்து விடுபட்டவர்களாய்த் திடவிரதமுடையவர்களாய் என்னைப் பஜிக்கிறார்கள்.

[வி] புண்ணிய கர்மம் = சுத்த சத்துவகுண கர்மம்.

துவந்துவ மோகம் = விருப்பு வெறுப்பு, இன்பம் துன்பம் முதலியவற்றால் ஏற்பட்ட மோகம்.

திடவிரதம் = ஆரம்பித்ததை முடிக்கவேண்டுமென்ற நிச்சயம்.

என்னை = பரமாத்மாவை.

பஜிக்கிறார்கள் = தொழுகிறார்கள்.

௨௯. மூப்பு, இறப்புகளிலிருந்து விடுதலை யடைதற்கு எவர்கள் என்னை ஆச்ரயிக்கிறவர்களாய் யத்தனஞ் செய்கிறார்களோ அவர்கள் அந்தப் பிரம்மத்தையும், அத்யாத்ம முழுவதையும், கர்மமனைத்தையும் அறிகிறார்கள்.

[வி] ஆச்ரயிக்கிறவர்கள் = அடைக்கலம் புகுந்தவர்கள்

என்னை = பரமாத்மாவை

௩௦. அதிபூதத்தோடும் அதிதெய்வத்தோடும் அதியக்ஞத்தோடும் எவர்கள் என்னை அறிகிறார்களோ அவர்கள் பிரயாண காலத்திலும் சமத்துவ மனம் உடையவர்களாய் என்னை அறிகிறார்கள்.

[வி] என்னை = பரமாத்மாவை

பிரயாண காலத்தில் = வாழ்நாளில் = அந்தியகாலத்தில் சங்கரபாஷ்யம்.

சமத்துவம் = பிரம்மதர்மம்

சமத்துவமனம் = பிரம்மதர்மத்தோடு கூடியமனம் = பிரம்மாகாரவிருத்தியை அடைந்த மனம்.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்மவித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே விஞ்ஞானயோகம் என்னும் ஏழாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—ஏழாவது அத்தியாயம் முதல் பன்னிரண்டாம் அத்தியாயம் இறுதியாக யோகபக்தியைப் பற்றிச் சொல்லப்படுகிறது. யோகபக்தியே பரமாத்மபக்தி. கீதையின் கருத்து பரமாத்மபக்தியின் ஸ்துதியும், கண்டித பக்தியின் கண்டனமும். தேவதா உபாசனை கண்டித பக்தியாகும். பரமாத்மாவின் பிரகிருதிகள் பின்னாப்பிரகிருதி, அபின்னாப்பிரகிருதி என இருவிதம். பின்னாப்பிரகிருதி இருபத்துநான்கு பிரிவுகளையுடையன. அவை அவ்யக்தம், மகதத்துவம், அகங்காரம், சூக்ஷ்மபூதங்கள் ஐந்தும், அவற்றின் காரியமாகிய மனம் ஒன்று, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, ஸ்தூலபூதங்கள் ஐந்து. ஜீவர்கள் அபின்னாப்பிரகிருதி. இவ்விரு பிரகிருதியினால் பரமாத்மா ஜகத்கர்த்தா வென்று எண்ணப்படுகின்றான். சரட்டில் இரத்தின வரிசைகள் போல் சர்வபூதங்களும் பரமாத்மாவில் கோர்க்கப்பட்டிருக்கிறார்கள். தேவி, ஏஷா, குணமயி என்ற மூவித மாயை

களால் ஜீவர்கள் மயக்கமடைந்தவர்களாய்ப் பரமாத்மாவை அறிகிறார்களில்லை. பரமாத்மாவைச் சரணம் அடையாதவர்கள் சற்கர்மத்தை அறியாத மூடர்கள். மனிதர்களிற் கடைப்பட்டவர்கள் (இந்திரியக்கூடத்தில் வாழ்பவர்கள்) மாயையால் ஞானம் மனத்திலிருந்து அபகரிக்கப்பட்டவர்கள், அசுரபாவத்தை ஆச்ரயித்தவர்கள், பரமாத்மாவை வழிபடுகிற நால்வகை புனிதஜனங்கள், இந்திரியவிஷயங்களிற் சென்று அலுத்தவர்கள், ஞானசாஸ்திர பாண்டித்ய இச்சையுடையவர்கள் (தக்ஷிண மகத்கைவல்யம் பெறவிரும்புகிறவர்கள்) அர்த்தத்தை (பிரம்மவிபூதியை) அடைய விரும்புகிறவர்கள், ஞானிகள் (ஆத்மசொரூப வித்துக்கள்) உத்தரமகத் கைவல்யம் பெற்றவர்கள். இந்நால்வர்களில் ஞானி சிறந்தவன். அவன் பிரம்மத்தையறியக்கூடிய உன்னத ஸ்திதியை அடைந்தவன். அவன் அனந்த விருத்திகளின் நாசத்தில் பரமாத்மாவை அடைகிறான். மற்றும் தேவதைகளை வழிபடுகிறவர்கள் தேவதைகளை அடைகிறார்கள். அவர்களுக்குப் பலன் அற்பம். மூடர்கள் அவதாரபுருஷனை அறியார்கள். பரமாத்மாவை பிரம்மம், அத்தியாத்மம், அதிகர்மம், அதிதெய்வம், அதியக்ஞம் இவற்றோடுகூடவே ஏகசொரூபியாய் அறிந்து பரபக்தி செய்யவேண்டும். இது யோகபக்தி யல்லது பரமாத்மபக்தி யென்று சொல்லப்படும்.

அரும்பதங்கள்.

குணமயிமாயை	= மனக்கூடத்திலுள்ள மாயை.
ஏஷாமாயை	= மகத்கூடத்திலுள்ள மாயை.
தேவிமாயை	= அவ்யக்தக்கூடத்தின் தக்ஷிணபாகத்திலுள்ள மாயை.
யோகமாயை	= அவ்யக்தக் கூடத்தின் உத்தரபாகத்திலுள்ள மாயை.
அர்த்தார்த்தி	= பிரம்மவிபூதியை நாடினவன்.
ஆர்த்தார்த்தி	= துயரடைந்தவன்.
ஞானஇச்சை உள்ளவன்	= சாஸ்திர விற்பத்தியை விரும்பியவன்.
ஞானி	= ஆத்மவித்.
கண்டித பக்தி	= தேவதா பக்தி.
பரமாத்ம பக்தி	= யோகபக்தி.

ஏழாவது அத்தியாயம்
முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்

அப்பியாசயோகம்

க. அந்தப் பிரம்மம் யாது? அத்யாத்மம் யாது? கர்மம் யாது? புருஷோத்தம! அதிபூதம் என்று எது சொல்லப்படுகிறது? அதிதெய்வம் (என்று) எது சொல்லப்படுகிறது?

உ. அதியக்ஞும் எவ்வகைத்து? இத்தேகத்தில் யாது? பிரயாணகாலத்திலும் எப்படி மன அடக்கமுடையவர்களால் அறியப்படுகிறவரா யிருக்கிறீர்? மதுசூதன!

[வி] மதுசூதன = மதுவென்ற பெயரையுடைய இராக்ஷஸனைக் கொன்றபடியால் பகவானுக்கு மதுசூதனன் என்ற நாமம்.

பிரயாணகாலத்தில் = வாழ்நாளில்

ங. பிரம்மம் பரம அக்ஷரம். அதன் சொருபம் அத்யாத்மம் (என்று) சொல்லப்படுகிறது. பூதபாவங்களை உற்பத்தி செய்யும் கர்மம், கர்மம் என்று சொல்லப்படுகிறது.

[வி] க்ஷரம் = அழிவுள்ளது

அக்ஷரம் = அழிவில்லாதது

பரம் = மேலானது

அதன்சோரூபம் = தேகத்தின்கண் உள்ள ஆத்ம சொரூபம்

அத்யாத்மம் = ஆத்மாவைப்பற்றியது

பூதபாவங்கள் = பிராணிகள்

ச. அதிபூதம் அழியுந் தன்மையுடையது. புருஷன் அதிதெய்வம். அதியக்ஞும் இத்தேகத்தில் நானே, தேகமுடையவர்களில் உத்தமனே!

[வி] அதிபூதம் = அழியுந்தன்மை யுள்ளது. ஏனெனில், பூதங்கள் அழிவுள்ளன. ஆதலின் அதிலுள்ள பிரம்மமும் அழிவுள்ளதாகச் சொல்லப் படுகிறது. (அதிபூதம் = பூதத்திலுள்ள பிரம்மம்)

அதிதெய்வம் = இந்திரன் வாயு அக்னி முதலிய தேவதைகளின் ஜீவாத்மாவிலுள்ள பரமாத்மா

அதியக்ஞும் = ஜீவாத்ம சொரூபத்திலுள்ள பரமாத்மா.

ரு. பிரயாண காலத்திலும் என்னையே நினைத்துக் கொண்டு தேகத்தைவிட்டு எவன் செல்லுகிறானோ, அவன் எனது பாவத்தை அடைகிறான். அதிற் சந்தேகமில்லை.

[வி] பிரயாணகாலத்தில் = வாழ்நாளில். (சங்கரர்)மரணகாலத்தில்.

என்னை = பரமாத்மாவை

தேகத்தை விடுகிறானோ = தேகவியாபாரத்தைவிடுகிறானோ = தேகத்தில் பிரம்மாகார விருத்தி யடைகிறானோ. இங்கு அன்னமய கோசத்தில் பிரம்மத் தியானஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அன்னமயகோசத்தில் பிரம்மாகார விருத்திவருவது அதிக துர்லபம்.

௬. அல்லது எந்தெந்த பாவத்தை நினைத்துக் கொண்டு முடிவில் தேகத்தை விடுகிறானோ, கௌந்தேய! எப்பொழுதும் அதே பாவத்தைப் பாவிப்பவனாய் அதையே அடைகிறான்.

[வி] பாவம் = வடிவம்
பாவிப்பவனாய் = தியானிப்பவனாய்

இச்சுலோகம் இந்திரியக்கூடத்தில் பிரம்மாகார விருத்தி வருகிறதைப் பற்றிச் சொல்லுகிறது. அல்லது பிராணமய கோசத்தில் பிரம்மத்தியானம் சொல்லப்படுகிறது.

௭. ஆதலால், சர்வகாலங்களிலும் என்னை நினை. யுத்தத்தையும் செய். என்னிடத்தில் மனதையும் புத்தியையும் அர்ப்பித்தவனாய் என்னையே யடைவாய். சம்சயமில்லை.

[வி] என்னை நினை = மனோமய கோசத்தில் பிரம்மத்தியானம் செய். சங்கல்பம், விகல்பம், இச்சா, சிந்தா, தியானம், பக்தி மனத்தின் தர்மங்கள்.

யுத்தத்தையும் செய் = யுத்தத்திற்கும் யோகத்திற்கும் உள்ள சாதுர்ஸ்யம் (ஒற்றுமை) இதனால் கண்டுகொள்க.

மனதையும் புத்தியையும் அர்ப்பித்தவனாய் = மனதும் புத்தியும் ஒருங்கு சேர்ந்தால்தான் தியானம் கூடும்.

மனோமய கோசத்தில் பிரம்மத்தியானம் சொல்லப்பட்டிருக்கிறது.

என்னை = பரமாத்மாவை.

௮. அப்பியாச யோகத்தைக்கூடி மற்றொன்றில் செல்லாத மனத்தோடு தியானிப்பவன் தெய்வீக பரம புருஷனை, பார்த்த! அடைகிறான்.

[வி] அப்பியாச யோகம் = ஒன்பது பத்தாவது சுலோகங்களில் அப்பியாசயோகம் சொல்லப்படுகிறது. இங்கு விஞ்ஞான மய கோசத்தில் பிரம்மத்தியானம் சொல்லப்படுகிறது.

௯. கவி, முன்னோன், ஆளுபவன், அணுவுக் கணுவானவன், சர்வத்தையும் தாங்குபவன், நினைத்தற்கரிய ரூபமுடையவன், ஆதித்ய வர்ணன், இருளுக்கப்பாற்பட்டவன், (ஆகிய தெய்வீக பரமபுருஷனை) எவன் நினைப்பானோ.

[வி] கவி = திரிகால ஞானமுடையவன்.
அணுவுக் கணுவானவன் = அதிசூட்சும ரூபமுடையவன்.

சர்வத்தையும் தாங்குபவன் } = சர்வத்திற்கும் ஆதாரம்.

ஆதித்யவர்ணன் = சூரியனைப் போன்ற நிறமுடையவன்.

இருளுக்கப் பாற்பட்டவன் } = பிரகிருதிக் கப்பாற்பட்டவன்.

௧௦. பிரயாண காலத்தில் அசையாத மனத்தோடு கூடிய பக்தியோடும், அப்படியே யோக வலிமையோடும், இருபுருவமத்தியில் பிராணனைச் செவ்வனே நிறுத்துகிறவன் அத்தெய்வீக பரம புருஷனை அடைகிறான்.

[வி] பிரயாண காலத்தில் } = வாழ்நாளில்.

இருபுருவ மத்தியில் பிராணனை நிறுத்தி இருதயத்தில் சத்துவமனத்தால் பரமாத்வாவைத் தியானம் செய்ய வேண்டியது. இங்கு விஞ்ஞானமய கோசத்தில் பிரம்மத்யானம் சொல்லப்பட்டிருக்கிறது.

௧௧. எதை அக்ஷரம் (என்று) வேதத்தை அறிந்தவர்கள் சொல்லுகிறார்களோ, ஆசை நீங்கிய யதிகள் எதைப் பிரவேசிக்கிறார்களோ, எதை இச்சிக்கிறவர்களாய்ப் பிரம்மசரியத்தை அநுஷ்டிக்கிறார்களோ அவ்வழியைச் சுருக்கமாய் உனக்குக் கூறுவேன்.

[வி] அக்ஷரம் = அழியாப்பொருள், பிரம்மம்.

பிரம்மசரியம் = பிரம்மத்தை ஆச்ரயித்தல்.

பன்னிரண்டு, பதின்மூன்றில் ஆனந்தமய கோசத்தில் பிரம்மத்தியானம் சொல்லப்படும்.

௧௨. சர்வ துவாரங்களையும் அடைத்து மனதை ஹ்ருதயத்தில் நிறுத்தியும், மூர்த்தாவில் தனது பிராணனை நிறுத்தி யோகதாரணையில் நிலைபெற்றவனாய்.

[வி] சர்வதுவாரங்களையும் அடைத்து } = இரண்டு கண்கள், இரண்டு நாசித் துவாரங்கள், இரண்டு காதுகள், வாய் ஒன்று ஆகிய ஏழு துவாரங்கள்

மூர்த்தாவில் = உச்சியில்

யோகதாரணையில் நிலைபெற்றவனாய் } = யோகத்தில் ஸ்திரமாய் நிற்பவனாய்

௧௩. ஓம் என்ற ஏகாக்ஷர பிரம்மத்தை உச்சரித்து என்னை நினைந்து எவன் தேகத்தை விட்டுச் செல்கிறானோ அவன் பரகதியை அடைகிறான்.

[வி] ஓம் = பிரம்மத்தின் நாமம்

பரகதி = மோக்ஷம்

மேல் இரண்டு சுலோகங்களிலும் ஆநந்தமயகோசத்தில் பிரம்மத்தியானம் சொல்லப்படுகிறது. ஐந்தாவது சுலோகமுதலாக பதின்மூன்றாவது சுலோக மிறுதியாக பஞ்சகோசத்தில் பிரம்மத்தியானம் சொல்லப்படுகிறது.

இங்கு தத்துவார்த்தம் மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. தத்துவார்த்தமே இவ்வத்தியாயத்திற்கு முக்கியம். ஏனெனில், இவ்வத்தியாயம் அப்பியாச யோகத்தைப் பற்றிச் சொல்லுகிறது.

கச. அநந்ய மனத்தினனாய் எப்பொழுதும் எவன் என்னை இடைவிடாது நினைக்கிறானோ, என்றும் சமத்துவம் உள்ள அந்த யோகியினால் பார்த்த! நான் சுலபமாய் அடையப்படுகிறேன்.

[வி] அநந்யமனம் = தான் வேறு, பிரம்மம்வேறு என்ற மனமில்லாதவன்.
சமத்துவம் = பிரம்மதர்மம்
நான் = பரமாத்மா

இந்த சுலோகத்தில் மகாவாக்கிய அப்பியாசஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

கரு. என்னை அடைந்து துக்கத்திற் கிருப்பிடமும் சாஸ்வதமுமில்லாத ஜன்மத்தை மீண்டும் அடைவதில்லை. மகாத்மாக்களாய்ப் பரம சித்தியை அடைந்தார்கள்.

[வி] சாஸ்வதம் = நித்தியம்
மகாத்மாக்கள் = தெய்வ பிரகிருதியை ஆச்ரயிக்கிறவர்கள்
பரமசித்தி = மோக்ஷம்
என்னை = பரமாத்மாவை

கசு. பிரம்மலோகம்வரை லோகங்கள் போக்கு வரத்துடையன. அர்ச்சுனா! ஆனால் என்னை அடைந்து கௌந்தேய! மறு ஜன்மத்தை அடைவதில்லை.

[வி] என்னை = பரமாத்மாவை.

கஎ. ஆயிர யுகங்களை முடிவால் உடையது எதுவோ (அது) பிரம்மாவுக்குப் பகலாகவும், ஆயிரயுகங்களை முடிவாய் உடையது இரவாகவும் அறிகிற அவர்கள் பகலிரவை அறிகிற ஜனங்கள்.

கஅ. அவ்யக்தத்தினின்றும் சர்வ வியக்தங்களும் பகலுதயமாகும்போது வெளிப்படுகின்றன. இரவாகும்போது அவ்யக்தம் (என்ற) நாமமுடைய அதிலேயே ஒடுங்குகின்றன.

[வி] அவ்யக்தம் = வெளிப்படையில்லாதது. காரணம் இங்கு பிரம்மாவைக் குறிக்கிறது.
வியக்தம் = வெளிப்படையானது. காரியம் இங்குத் தோற்றிய பிரபஞ்சத்தைக் குறிக்கிறது.

பிரம்மாவினுடைய பகலில் சிருஷ்டியின் தோற்றம். பிரம்மாவினுடைய இரவில் ஜகத்தின் ஒடுக்கம்.

ககூ. இந்த அதே பூதங்களின் கூட்டம் பிறந்து பிறந்து இரவாகும்போது பரவசமாக ஒடுங்குகிறது. பார்த்த! பகல் உதயமாகும்போது வெளிப்படுகிறது.

உ0. ஆனால் அந்த அவ்யக்தத்திலும் மேலான வேறொரு சநாதன அவ்யக்த பாவம் எதுவோ அது சர்வ பூதங்களின் நாசத்திலும் அழிகிறதில்லை.

[வி] அவ்யக்தம் = வெளிப்படையில்லாதது.
சநாதநம் = நித்தியம்.
பாவம் = பொருள், பிரம்மம். பிரம்மாவினும் மேலான அவ்யக்தமான பொருள் பிரம்மம், பிரம்மாவுக்கு அழிவு உண்டு. ஆனால் பிரம்மம் அழிவில்லாத பொருள்.

உக. அவ்யக்தம் அக்ஷரம் என்று சொல்லப்பட்டதைப் பரகதி (என்று) சொல்லுகிறார்கள். எதை யடைந்து திரும்பி வருவதில்லையோ அது எனது மேலான ஸ்தானம்.

[வி] அவ்யக்தம் = பிரம்மம்.
அக்ஷரம் = பிரம்மம்.
பரக்தி = மோக்ஷம்.
மேலானஸ்தானம் = துரியம்.

உஉ. எவனுள் பூதங்கள் நிலை பெறுகின்றனவோ எவனால் இதெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அப்பரம புருஷன் பார்த்த! அநந்ய பக்தியினாலேயே யடையக்கூடியவன்.

[வி] அநந்ய பக்தி = ஏகபக்தி, யோகபக்தி.

உங. ஆனால் எக்காலத்தில், சென்ற யோகிகள் திரும்பி வருதலின்மையையும், அப்படியே திரும்பி வருதலையும் அடைகிறார்களோ அக்காலத்தைச்சொல்லுவேன், பரதரிற் சிறந்தோனே!

உச. அக்நி, ஜோதி, பகல், சுக்கிலபக்ஷம், உத்தராயனம் ஆறுமாதம் அங்கு சென்ற பிரம்மத்தை அறிந்த ஜனங்கள் பிரம்மத்தை அடைகிறார்கள்.

[வி] அக்நி = அக்நி தேவதை.
சுக்கிலபக்ஷம் = சுக்கிலபக்ஷ தேவதை.
உத்தராயனம் = உத்தராயன தேவதை.

இச்சுலோகம் யோகப்பிரஷ்டன் செல்லுகிற மார்க்கத்தைச் சொல்லுகிறது.

பிரம்மத்தை அடைகிறார்கள் = பிரம்மலோகத்தை அடைகிறார்கள்.

உரு. புகை, இராத்திரி, அப்படியே கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயநம் ஆறுமாதம், அங்கு யோகி சந்திரஜோதியை யடைந்து திரும்பி வருகிறான்.

[வி] புகை = புகை அபிமானதேவதை.
இரவு = இராத்திரி அபிமானதேவதை.
கிருஷ்ணபக்ஷம் = கிருஷ்ணபக்ஷ அபிமானதேவதை.
தக்ஷிணாயநம் ஆறு மாதம் = தக்ஷிணாயந அபிமானதேவதை.

இச்சுலோகம் கர்மம் பக்தி ஞானத்திலுள்ளவர்கள் செல்லும் மார்க்கத்தைச் சொல்லுகிறது.

உசு. ஏனெனில், ஒளியும், இருளும் (ஆகிய) இவ்விரண்டு வழிகள் உலகிற்குச் சாசுவதமாய்க் கருதப்பட்டவை. ஒன்றால் திரும்பி வருதலின்மையை யடைகிறான், மற்றொன்றால் திரும்பி வருகிறான்.

[வி] ஒளி = அக்ஷராதி மார்க்கம்.
இருள் = தாமாதி மார்க்கம்.

உஎ. இந்த இரண்டு வழிகளையும் அறிகிற எந்த யோகியும் மயங்கான், பார்த்த! ஆகையால் சர்வகாலங்களிலும் யோகத்தைக் கூடினவனாக இரு, அர்ச்சுனா!

[வி] இரண்டு வழிகள் = உத்தராயனமார்க்கம், தக்ஷிணாயன மார்க்கம்.

இச்சுலோகத்தால் அருச்சுனன் யோகத்திற்கதிகாரி என்று பகவானாற் சொல்லப்படுகிறான்.

உஅ. வேதங்களிலும், யக்ஞங்களிலும், தவங்களிலும், அப்படியே தானங்களிலும், எது புண்ணிய பலன் (என்று) சொல்லப்பட்டதோ, இதனை அறிந்து யோகி அவற்றை எல்லாம் கடக்கிறான். முதன்மையான பரமஸ்தானத்தையும் அடைகிறான்.

[வி] வேதம் = ஞான கர்மம்.
யக்ஞம் = கர்ம மார்க்கம்.
தவம் = பக்தி மார்க்கம்.

மேற் சுலோகத்தால் கர்மப், பக்தி, ஞானத்திலும் யோகஞ் சிறந்ததென்று பகவான் அருச்சுனனுக்குச் சொல்லியிருக்கிறார். அருச்சுனனும் அதற்கதிகாரி என்று சொல்லப்பட்டது.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோக சாஸ்திரத்திலே, ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே அப்பியாசயோகம் என்னும் எட்டாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—(க முதல் ரு வரையில்) பரமாத்மா, பிரம்மம் அத்யாத்மம், அதிகர்மம், அதிபூதம், அதிதெய்வம் ஆகிய இவைகளோடு கூடியவராய் அறிந்து அகண்டத்தியானம், அல்லது பக்தி செய்யவேண்டியது.

(ரு முதல் கங வரையில்) அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆநந்தமயகோசம் ஆகிய பஞ்சகோசங்களில் பிரம்மத்தியானம் சொல்லப்படுகிறது.

(கசு முதல் ககூ வரையில்) பிரஜாபதியின் காலமும், சிருஷ்டியும், சங்காரமும் சொல்லப்படுகின்றன.

(உ0 முதல் உஉ வரையில்) பிரம்மத்தியானம் சொல்லப்படுகிறது.

(உங முதல் உஎ வரையில்) உத்தராயன தக்ஷிணாயன மார்க்கங்களைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

(உஅ வது சுலோகம்) கர்மம், பக்தி, ஞானத்திலும், யோகம் சிறந்ததென்று சொல்லப்படுகிறது.

அரும்பதங்கள்

உத்தராயன மார்க்கம் } = அக்ஷராதி மார்க்கம். இதற்கு அதிகாரிகள் யோகிகள்.

தக்ஷிணாயன மார்க்கம் } = தூமாதி மார்க்கம். இதற்கு அதிகாரிகள் கர்மம், பக்தி, ஞானத்தை அநுஷ்டிக்கிறவர்கள்.

எட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்

ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்.

ஸ்ரீபகவான் சொன்னார்:—

க. எதனை அறிந்து கெடுதியினின்று விடுபடுவாயோ, ஞான விக்ஞானத்தோடு கூடிய இப்பரம ரகசியத்தைப் பொறாமை அற்ற உனக்குக் கூறுவேன்.

[வி] ஞானம் = மகத்கூடத்தின் தக்ஷிண பாகத்திலுள்ள புத்தியின் தர்மம்.

விக்ஞானம் = மகத்கூடத்தின் உத்தர பாகத்திலுள்ள புத்தியின் தர்மம் அல்லது கர்மம்.

புத்தி மகத்கூடத்தின் குணம். ஞானம் புத்தியின் தர்மம் அல்லது கர்மம்.

பரமரகசியம் = யோகிகளைத் தவிர ஏனையோர்கள் அறியார்கள். ஆதலால் பரமரகசியம் என்று சொல்லப்பட்டது.

பொறாமைஅற்ற = கார்ப்பண்ணிய தோஷம் அற்ற. கார்ப்பண்ணிய தோஷம் = அற்ப விஷயங்களில் இச்சை. பிரம்மம்

ஒன்றே கார்ப்பண்ணிய தோஷம் அற்றது.

கேடுதி = அஞ்ஞானம்.

உ. இராஜவித்யா, ராஜகுஹ்யம், உத்தமமாய்ப் பரிசுத்தஞ் செய்வது, பிரத்தியக்ஷமாய் அறியக்கூடியது, தர்மத்தோடு கூடியது, சுலபமாய்ச் செய்யக்கூடியது, நாசமற்றது.

[வி] இராஜவித்யை = ராஜயோகிகளின் வித்தை

ராஜகுஹ்யம் = ராஜயோகிகளின் இரகஸ்யம். ஏனெனில் ராஜயோகம், ராஜயோகிகளால் மாத்திரம் அறியப்பட்ட விஷயம்.

பிரம்மவித்தை = 28481 (இருபத்தெட்டாயிரத்து நானூற்றெண்பத்தொன்று)

2 = பிரவிர்த்தி மார்க்கம், நிவிர்த்திமார்க்கம்

8 = அவ்யக்தம், மகத், அகங்காரம், சூக்ஷ்மபூதங்கள் ஐந்து.

4 = கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், தியான யோகம்.

8 = அகங்காரம், மனம், புத்தி, ஞானேந்திரியங்கள் ஐந்து.

1 = பிரம்மம்.

பிரம்மவித்தை ஐந்து அங்கங்களோடு கூடியதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

உத்தமமாய்ப் பரிசுத்தஞ் செய்வது = சுத்தசத்துவ குணத்தை வருவிப்பது.

தர்மத்தோடு கூடியது = கர்மம், பக்தி, ஞானத்தோடு கூடியது.

ங. இந்த தர்மத்தில் சிரத்தையில்லாத புருஷர்கள் பரந்தப! என்னை அடையாது அஞ்ஞான சம்சார மார்க்கத்தில் திருப்புகிறார்கள்.

[வி] இந்ததர்மத்தில் = பிரம்மவித்தையில்.

என்னை = பரமாத்மாவை.

ச. இச்சர்வஜகத் அவ்யக்த மூர்த்தியாகிய என்னால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. சர்வ பூதங்களும் என்னை இடமாக உடையன. ஆனால் நான் அவைகளை இடமாக உடையவன் அல்ல.

[வி] அவ்யக்தம் = வெளிப்படை இல்லாதது, உருவமில்லாதது.

சர்வ பூதங்களும்என்னை இடமாக வுடையன = எல்லாப் பூதங்களும் எனது ஆதினம்.

நான் அவைகளை இடமாகவுடையவன்அல்ல = நான்பூதங்களின் ஆதீனம் அன்று.

௫. ஆனால் பூதங்கள் என்னை இடமாகவுடையன அல்ல. எனது ஈசுவரயோகத்தைப் பார், பூதங்களைத் தாங்குவது. ஆனால் பூதசம்பந்தம் இல்லை. எனது ஆத்மா பூதங்களை உற்பத்திசெய்வது.

[வி] பூதங்கள் என்னை இடமாக உடையன அல்ல } = பூதங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

ஈசுவரயோகம் = ஈசுவர சக்தி.

௬. எப்படி ஆகாசத்தில் எங்கும் சஞ்சரிக்கும் பெரியகாற்று என்றும் நிலைத்திருக்கிறதோ, அப்படிச் சர்வ பூதங்களும் என்னிடத்தில் நிலைத்திருக்கின்றன (என்று) அறி.

பிரம்மத்திற்குத் திருஷ்டாந்தம் ஆகாயம். பிரம்மம் வியாபகம். அப்படியே ஆகாசமும். பிரம்மம் சூக்ஷமம், அப்படியே ஆகாசமும். பிரம்மம் அவ்யக்தம். அப்படியே ஆகாசமும். பிரம்மம் சர்வத்திற்கும் ஆதாரம், அப்படியே ஆகாசமும். ஆனால் பிரம்மம் சித்து, ஆகாசம் ஜடம்.

௭. சர்வபூதங்களும், கௌந்தேய! எனது பிரகிருதியைக் கல்பமுடிவில் அடைகின்றன. மீண்டும் அவற்றைக் கல்ப ஆரம்பத்தில் நான் சிருஷ்டிக்கிறேன்.

௮. எனது பிரகிருதியை அதிஷ்டித்து இச்சுவாதீனம் இன்றிய பூதக்கூட்ட முழுவதையும் பிரகிருதியின் சக்தியினால் மீண்டும் மீண்டும் சிருஷ்டிக்கிறேன்.

[வி] அதிஷ்டித்து = வசப்படுத்திக்கொண்டு.

௯. உதாசீனன்போல் பற்றின்றி அக்கர்மங்களிலிருப்பவனாகிய என்னை அக்கர்மங்கள் பந்தப்படுத்துவதேயில்லை, தனஞ்சய!

[வி] உதாசீனன் = விருப்பு, வெறுப்பில்லாதவன்.

௰. நியந்தாவாகிய என்னால் பிரகிருதி சரத்தையும் அசரத்தையும் உண்டுபண்ணுகிறது. இவ்வேதுவினால் கௌந்தேய! ஜகத் சுழன்று சுழன்று வருகிறது.

[வி] நியந்தா = நியமனஞ் செய்கிறவன்

சரம் = அசைவுள்ளது

அசரம் = அசைவற்றது

நொண்டி, குருட்டுக்குதிரைமேற் சவாரி செய்வது போல் ஞானத்மா அஞ்ஞான ஜடரூபப் பிரகிருதியை அதிஷ்டித்துச் சிருஷ்டி செய்வது.

௧௧. பூதங்களுக்கு மகேசுவரனான எனது பரமபாவத்தை அறியாத மூடர்கள் மனித தேகத்தை ஆச்ரயித்த என்னை அவமதிக்கிறார்கள்.

[வி] மகேசுவரன் = மகத்கூட்டத்திற்கு ஈசுவரன்

பரபாவம் = மேலான பாவம் = மகேசுவர பாவம்.

ஆச்ரயித்த = தரித்துக்கொண்ட

௧௨. வீண் ஆசையுடையவர்கள், வீண் கர்மமுடையவர்கள், வீண் ஞானம் உடையவர்கள், அறிவிலிகள்,

மோகிக்கப்பண்ணுகிற ராக்ஷஸமும், அப்படியே அசுரப் பிரகிருதியையும் ஆச்ரயித்தவர்கள்.

[வி] ராக்ஷஸப்பிரகிருதி = தமோகுணப் பிரகிருதி
அசுரப்பிரகிருதி = ரஜோகுணப்பிரகிருதி

கங. ஆனால், மகாத்மாக்கள் தெய்வீப்பிரகிருதியை ஆச்ரயித்தவர்கள் பார்த்த! என்னைப் பூதங்களுக்கு ஆதியும் நாசமற்றவனுமாக அறிந்து அநந்ய மனத்தோடு பஜிக்கிறார்கள்.

[வி] மகாத்மாக்கள் = தெய்வீப் பிரகிருதியை ஆச்ரயித்தவர்கள். பகவானே இந்த அர்த்தத்தை இச்சுலோகத்தில் சொல்லியிருக்கிறார்.
தெய்வீப்ரகிருதி = அவ்யக்தக் கூடத்தின் தக்ஷிண பார்கத்திலுள்ளது. சுத்த சத்துவ குணப் பிரகிருதி.
அநந்யமனத்தோடு = ஏகத்வமனத்தோடு = ஏகபக்தி = யோகபக்தி = பரமாத்மபக்தி

கச. எப்பொழுதும் என்னை ஸ்தோத்திரம் செய்தும் முயலும் திடவிரதமுடையவர்கள் என்னை நமஸ்காரஞ் செய்து பக்தியோடு என்றும் சமத்துவம் உடையவர்களாய் உபாசிக்கிறார்கள்.

[வி] சமத்துவம் = ஏகத்துவம் = (பிரம்மத்தின்தர்மம்)
என்னை = பரமாத்மாவை

கரு. மேலும் ஞானயக்ஞத்தால் வழிபடும் வேறு சிலர் எங்கும் முகம் உடைய என்னை ஏகசொரூபியாகவும், தனித்தனியான அநேக மூர்த்திகளாகவும், அநேக வடிவங்கொண்ட ஏகமூர்த்தியாகவும் உபாசிக்கிறார்கள்.

[வி] ஏகசோரூபி = ஒரே சொரூபி

கசு. நான் கிருது, நான்யக்ஞம், நான் சுவதா, நான் ஔஷதம், மந்திரம் நான், நானே நெய், நான் அக்நி, நான் ஹவிஸ்.

[வி] கிருது = வேதத்திற் சொல்லப்பட்ட கர்மம்
யக்ஞம் = ஸ்மிருதியில் சொல்லப்பட்டகர்மம்
சுவதா = பிதுர்க்களுக்கு அர்ப்பிக்கும்மந்திரம்
ஔஷதம் = செடிகள்.

கஎ. நான் இந்த ஜகத்திற்குப் பிதா, மாதா, தாங்குபவன், பிதா மகன், அறியவேண்டிய பொருள், சுத்திசெய்யும் பொருள், ஓங்காரம், ருக், சாமம், அப்படியே, யஜுஸம்.

கஅ. கதி, காப்பவன், பிரபு, சாட்சி, தங்குமிடம், புகலிடம், நண்பன், உற்பத்தி, பிரளயம், ஆதாரம், களஞ்சியம், நாசமில்லாத வித்து.

[வி] கதி = நிழல் மரம்
புகலிடம் = கடைசியிலிடம்

ககூ. நான் வெப்பத்தைக் கொடுக்கிறேன், நான்

மழையை நிறுத்துகிறேன், பெய்யும்படியும் செய்கிறேன். அப்படியே அமிர்தமும், ம்ருத்தியுவும், சத்தும், அசத்தும் நான், அர்ச்சுன!

[வி] வெப்பத்தைக் கொடுக்கிறேன் = தபாக்கியால் பாபத்தைத் தகனஞ் செய்கிறேன்.

மழை = பரமார்த்த அனுபவ சாதன விக்ஞானம்

மழையை நிறுத்துகிறேன் = உள்ளிருந்து பிரம்ம விக்ஞானத்தை ஏற்கிறேன்.

பெய்யும்படிச் செய்கிறேன் = சித்தத்தில் பிரம்ம விக்ஞானத்தை வைக்கிறேன்

அம்ருதம் = துரியப் பிரக்ஞையில் விக்ஞானமாயிருப்பது.

ம்ருத்யு = பிரகிருதியிலிருந்து அஞ்ஞானத்தைக் கொடுப்பது.

சத்து = பிரம்மம்.

அசத்து = உபாதியோடு கூடிய பிரம்மம்.

௨0. மூன்று வித்தைகளையும் அறிந்தவர்கள், சோமரசத்தை உட்கொள்பவர்கள், பாபத்தினின்றும் தூய்மை அடைந்தவர்கள், யக்ஞத்தினுல் எனக்கு ஹோமம் செய்து சுவர்க்க கதியை யாசிக்கிறுர்கள். அவர்கள் புண்ணிய தேவேந்திரலோகத்தை அடைந்து விண்ணில் தெய்வீக தேவபோகங்களை அருந்துகிறுர்கள்.

[வி] மூன்று வித்தைகள் = ஆத்மா, பிரகிருதி, பிரம்மம் ஆகிய மூன்று வித்தைகள்.

சோமரசத்தை உட்கொள்பவர்கள் = மனதை உண்பவர்கள் (இதுயோகிகளால் முடியக்கூடியது).

பாபத்தினின்றும் தூய்மை அடைந்தவர்கள் = பாபத்தைத் தகனஞ் செய்தவர்கள்.

யக்ஞத்தினுல் எனக்கு ஹோமம் செய்து = ஆத்மாவைப் பரமாத்மாவுக்கு அர்ப்பணஞ் செய்து (இதற்குச் சத்துவகுணம் வேண்டும்)

அவர்கள் = யோகிகள்.

புண்ணிய தேவேந்திர லோகம் = சுத்த சத்துவகுண பாமார்த்த லோகம்.

விண்ணில் = பரமார்த்த லோகத்தில்.

தெய்வீகம் = தெய்வீப்ரகிருதி சம்பந்தம் (சுத்த சத்துவகுண சம்பந்தம்)

தேவபோகங்களை = பரமார்த்த போகங்களை.

சுவர்க்க கதியையாசிக்கிறுர்கள் = மோக்ஷகதியை வேண்டுகிறுர்கள்.

௨௧. அவர்கள் அந்த விசால சுவர்க்க லோகத்தை அநுபவித்துப் புண்ணியம் கழிந்த இடத்து மரிப்பவர்

களின் உலகத்தை அடைகிறார்கள். இப்படி மூன்று தர்மத்திலும் ஈடுபட்டவர்களாய், போக்குவரத்துடையவர்களாய் இஷ்டசித்தியை அடைகிறார்கள்.

[வி] அவர்கள் = யோகிகள்.

விசாலசுவர்க்கலோகம் = வியாபக பரமாத்மலோகம்.

புண்ணியம் கழிந்தவிடத்து = தெய்வீப்ரகிருதி சம்பந்தபோகங்கள் கழிந்தவிடத்து.

மரிப்பவர்களின் உலகத்தை = பரமாத்மலோகம் நீங்கலாக மற்றும் உலகங்கள்.

மூன்று தர்மங்கள் = ஆத்மா, பிரகிருதி, பிரம்மமாகிய இம்மூன்று வித்யைகளும்.

ஈடுபட்டவர்கள் = தங்களுக்குத் தேகமாய்க்கொண்டவர்கள்.

போக்கு வரத்துடையவர்கள் = சர்வலோக சஞ்சாரிகள். பக்குவ ஆன்மாக்களுக்கு ஞானோபதேசஞ் செய்வதற்காக சர்வலோகங்களிலும் சஞ்சாரஞ் செய்கிறார்கள்.

இஷ்டசித்திகள் = சர்வ நியந்தத்துவம் நீங்கலாகப்பரமாத்மாவுக்குரிய சர்வ சித்திகளையும் தெய்வீப் பிரகிருதியிலிருக்கும் யோகிகள் அடைகிறார்கள்.

மேற் சொல்லப்பட்ட இரண்டு சுலோகங்களுக்கும் இவ்வியாக்யானம் பொருத்தம். ஏனெனில், இவ்வத்தியாயம் பிரம்ம வித்யையைப் பற்றியது.

உஉ. அநந்ய சிந்தையுடையவர்களாய் எந்த ஜனங்கள் என்னை ஏகபக்தியோடு உபாசிக்கிறார்களோ, அந்த என்றும் சமத்துவம் உடையவர்களின் யோக க்ஷேமத்தை நான் பாதுகாக்கிறேன்.

[வி] அநந்யசிந்தையுடையவர்கள் = ஏக பக்தியுடையவர்கள் = யோக பக்தியுடையவர்கள் = பரமாத்ம பக்தியுடையவர்கள்.

சமத்துவம் = பிரம்ம தர்மம்.

சமத்துவமுடையவர்கள் = பிரம்ம தர்மத்தைப் பொருந்தியவர்கள்.

யோகம் = பரமாத்மா ஜீவாத்மாவின் ஐக்கியம்.

க்ஷேமம் = யோக விக்நங்களை நீக்குதல்.

உ௩. அந்நிய தேவதா பக்தர்களாயும், சிரத்தையோடு கூடியவர்களாயும் எவர்கள் பூசிக்கிறார்களோ அவர்களும் என்னையே கௌந்தேய! விதியின்றி வழிபடுகிறார்கள்.

[வி] அந்நியதேவதா பக்தர்கள் = இந்திரன், அக்நி முதலிய தேவதைகளை உபாசிக்கிறவர்கள்.

விதியின்றி வழிபடுகிறார்கள் = பரமாத்மபக்தியையே கீதை விதிக்கிறது. தேவதைகளின் உபாசனையைக் கண்டனஞ் செய்கிறது.

உச. ஏனெனில், சர்வ யக்ஞங்களின் போக்தாவும், பிதாவும் நானே. ஆனால், என்னை உண்மையாய் அறிகிறார்களில்லை. அதனால் அவர்கள் வழுவுகிறார்கள்.

[வி] பிரபு = கர்த்தா

பரமாத்ம பக்தியின் ஸ்துதி கீதையின் கருத்து.

உரு. தேவதா விரதமுடையவர்கள் தேவதைகளை அடைகிறார்கள். பிதுர்க்களின் விரதமுடையவர்கள் பிதுர்க்களை அடைகிறார்கள். பூதங்களை வழிபடுகிறவர்கள் பூதங்களை அடைகிறார்கள். என்னைப் பூசிப்பவர்கள் என்னையே அடைகிறார்கள்.

உசு. பத்திரம், புஷ்பம், பழம், ஜலம் (ஆகிய இவற்றை) எவன் எனக்குப் பக்தியோடு அர்ப்பணஞ் செய்கிறானோ (அந்த) பரிசுத்த ஆத்மா பக்தியினால் கொடுத்ததை நான் புசிக்கிறேன்.

[வி] பத்திரம் = யோக கர்மம்
புஷ்பம் = யோக பக்தி
பழம் = யோக ஞானம்
ஜலம் = யோக யோகம்
பரிசுத்தாத்மா = சுத்த சத்துவ குணமுடையவன்.
நான் புசிக்கிறேன் = நான் அவனுடன் ஒன்றுகிறேன்.

உஎ. எதைச் செய்கிறாயோ, எதை உண்கிறாயோ, எதை ஹோமஞ் செய்கிறாயோ, எதைத் தானஞ் செய்கி

றாயோ, எத்தவத்தைச் செய்கிறாயோ, கவுந்தேய! அதை எனக்கு அர்ப்பணமாகச் செய்.

[வி] எதைச்செய்கிறாயோ = யோக கர்மம்
எதை உண்கிறாயோ = யோக பக்தி
எதை ஹோமஞ்செய்கிறாயோ = யோக ஞானம்
எதைத்தானஞ்செய்கிறாயோ = யோக யோகம்
எனக்கு அர்ப்பணமாகச் செய் = பிரம்மார்ப்பணமாகச் செய்

எதைச் செய்தாலும், பிரம்ம திருஷ்டியின்படிச் செய்யவேண்டுமென்பது கீதையின் கருத்து.

உஅ. இப்படிச் சுப, அசுப பலன்களின் கர்மபந்தத்தால் விடுபடுவாய். சந்நியாச யோகத்தைக் கூடியவனாய் விடுபட்டு என்னை அடைவாய்.

[வி] சுபம் = நல்ல, மங்கலம், புண்ணியம்
அசுபம் = கெட்ட, அமங்கலம், பாவம்
சந்நியாசயோகம் = சந்நியாசம் யோகத்திற்குச் சாதனம், யோகம் பரமாத்மாவை அடையச் சாதனம்.

என்னை = பரமாத்மாவை

௨௯. சர்வ பூதங்களிடத்தும் நான் சமமாய் இருக்கிறேன். எனக்கு வெறுப்புள்ளவனும் இல்லை, விருப்புள்ளவனும் இல்லை. ஆனால், எவர்கள் என்னைப் பக்தியினால் வழிபடுகிறார்களோ, என்னிடத்தில் அவர்களும் அவர்களிடத்தில் நானும் (இருக்கிறோம்).

[வி] சர்வபூதங்களிடத்தும் = கர்மம், பக்தி, ஞானம், யோகம் ஆகிய இந்நான்கையும் அநுஷ்டிக்கிறவர்கள் இடத்தும்.

சமமாய் = பேதமின்றி.

பக்தியினால் = யோகபக்தியினால்.

என்னிடத்தில் அவர்களும் அவர்களிடத்தில் நானும்இருக்கிறோம் = யோகிகளிடத்தில் நான் இருக்கிறேன். என்னிடத்தில் யோகிகள் இருக்கிறார்கள். (யோகி எனக்குப் பிரியன், நான் அவனுக்குப் பிரியன்)

௩௦. மிகவும் தீயொழுக்க முடையவனாயினும் என்னை அநந்யமாய் (எவன்) பஜிக்கிறானோ அவனைச் சாதுவென்றே எண்ணவேண்டும். ஏனெனில், அவன் நன்கு நிச்சயித்தவன்.

[வி] தீயொழுக்கம் = கெட்ட நெறி.

என்னை = பரமாத்மாவை.

அநந்யமாய் பஜிக்கிறானோ = ஏக பக்தியினால் வழிபடுகிறானோ = யோகபக்தியினால் வழிபடுகிறானோ.

அவன் நன்கு நிச்சயித்தவன் = அவன் வேதப்பொருளை அறிந்தவன் = கீதையின் அர்த்தத்தை அறிந்தவன்

பரமாத்மபக்தி கீதையின் கருத்து.

௩௧. விரைவில் தர்மாத்மா ஆகிறான். சாசுவத சாந்தியை அடைகிறான், கௌந்தேய, எனது பக்தன் நாசமடையான் (என்று) உறுதியாய் அறி.

[வி] தர்மாத்மா = பரமாத்மா.

சாசுவத = நித்திய.

எனது பக்தன் = பரமாத்மபக்தன், யோகபக்தன்.

கீதையின் கருத்து கண்டனபக்தியின் கண்டமும் யோகபக்தியின் ஸ்துதியும்.

௩௨. ஏனெனில், பார்த்த! பாபயோனியாகிய எவர்களாயினும், ஸ்திரீகளும், வைசியர்களும், அப்படியே சூத்திரர்களும் என்னைச் சரண்புகுந்து அவர்களும் பரகதியை அடைகிறார்கள்.

[வி] என்னை = பரமாத்மாவை.

சரண்புகுந்து = யோக பக்தி செய்து

௩௩. சத்துவகுணப் பிராம்மணர்களும், அப்படியே, ராஜரிஷிகளாகிய பக்தர்களும் எவ்வளவு அதிகம், அழியுந்

தன்மையுடைய துன்பவடிவாகிய இவ்வுலகை அடைந்த (நீ) என்னைப் பஜி.

௩௪. என்னில் மனம் உடையவனுய் இரு. எனது பக்தனுய் இரு. எனக்கு ஹோமஞ் செய். என்னை நமஸ்காரஞ்செய். அங்ஙனம் சமத்துவம் அடைந்தவனுய், என்னைப் பராதியாகக் கொண்டவனுய் என்னையே அடைவாய்.

[வி] என்னில் மனம்உடையவனுய் இரு = யோககர்மத்தை அநுஷ்டி

எனது பக்தனுய் இரு = யோக பக்தனுய் இரு

எனக்குஹோமஞ்செய் = யோக ஞானத்தை அடை

என்னை நமஸ்காரஞ்செய் = யோக யோகத்தைக் கூடு

என்னை = பரமாத்மாவை

[நமஸ்காரம் = (நः = இல்லை. மः = எனக்கு) எனக்கொன்று மில்லை.] சர்வத்தையும் பரமாத்மாவுக்கு ஒப்புவித்தஇடம்.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம் என்னும் ஒன்பதாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—பிரம்ம வித்யை, ராஜயோகிகளின் அநுபவ வாக்கியம். பரமாத்மா, ஜகத்தின் உற்பத்தி, ஸ்திதி லயத்திற்குக் காரணம், எப்படி ஆகாசத்தில் எங்குஞ் சஞ்சரிக்கும் வாயு நிலைபெறுகிறதோ அப்படி அசங்க பரமாத்மாவில் சர்வ ஜகத்தும் நிலைபெறுகிறது. ரஜோகுணமுடைய அசுரர்களும், தமோகுணமுடைய ராக்ஷஸர்களும், பரமாத்மாவையும், அவதார புருஷர்களையும், பிரம்ம வித்தையும், அறியார்கள். தெய்வீப் பிரகிருதியை ஆச்ரயித்த மகாத்மாக்களும், அவ்யக்தக் கூடத்திலுள்ள சர்வலோக சஞ்சாரிகளாகிய யோகிகளும், உத்தர மகத்திலுள்ள யோகிகளும், அவதார புருஷர்களும், பிரம்மவித்தையை அறிவார்கள். சர்வலோக சஞ்சாரிகளாகிய யோகிகள் பிரம்ம வித்தையே தங்கள் வடிவமாக உடையவர்கள். அவர்கள் சர்வலோகங்களிலுஞ் சஞ்சாரஞ் செய்து பிரம்ம வித்தையைப் பக்குவ ஆன்மாக்களுக்கு உபதேசஞ் செய்கிறார்கள். பிரம்மயோகத்திற்குச் சாதனம், சந்நியாசம். சந்நியாசத்திற்குச் சாதனம் கர்மம், பக்தி, ஞானம். யோகம், யோககர்மம், யோகபக்தி, யோக ஞானம், யோகயோகம், என நான்குவகைப்படும். பிரம்மவித்தைக்கு அதிகாரிகள் சர்வஜீவர்களும்.

அரும்பதங்கள்

ராஜ வித்தை = ராஜயோகிகளின் வித்தை

மகாத்மாக்கள்	= தெய்விப் பிரகிருதியை ஆச்ரயித்தவர்கள்.
மூன்று வித்தைகள்	= பிரம்மம் ஆத்மா பிரகிருதி ஆகிய மூன்று வித்தைகள்.
பத்ரம்	= யோககர்மம்
புஷ்பம்	= யோகபக்தி
பழம்	= யோகஞானம்
ஜலம்	= யோகயோகம்

ஒன்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.

பத்தாவது அத்தியாயம்

விபூதி யோகம்

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

க. மஹாபாஹோ! மீண்டும் எனது மேலான வார்த்தையைக் கேள். அன்பனான உனக்கு நன்மையின் விருப்பத்தால் நான் அதைச் சொல்லுவேன்.

உ. தேவக்கூட்டங்கள் எனது உற்பத்தியை அறியவில்லை. மஹரிஷிகள் அறியவில்லை. ஏனெனில், தேவர்கட்கும் மஹரிஷிகட்கும் எவ்வகையிலும் நான் ஆதி.

[வி]	தேவர்கள்	= மனக்கூடத்திலுள்ளவர்கள்
	மகரிஷிகள்	= மகத்கூடத்திலுள்ளவர்கள்

ங. எவன் என்னைப் பிறப்பிலி, அனாதி, உலகிற்கு மஹேஸ்வரன் என்று மயங்காதவனாய் அறிகிறானோ அவன் மரிப்பவர்களில் சர்வ பாபங்களினின்றும் விடுபடுகிறான்.

[வி]	அனாதி	= அவ்யக்தக்கூடத்தின் தக்ஷிணபாகம்
	ஆதி	= மஹத்தின் உத்தரபாகம்
	மஹேஸ்வரன்	= மஹத்திலுள்ள ஈஸ்வரன்
	மரிப்பவர்களில்	= மனிதர்களில்

ச. புத்தி, ஞானம், மோஹமின்மை, சகித்தல், சத்தியம், தமம், சமம், சுகம், துக்கம், பாவம், அபாவம், பயம், அப்படியே பயமின்மை.

[வி]	புத்தி	= மஹத்கூடத்தின் குணம்
	ஞானம்	= புத்தியின் கர்மம்
	மோஹமின்மை	= ஆத்மஞான முடைமை
	சகித்தல்	= பொறுத்தல்
	சத்தியம்	= பிரம்மமே சத்தியம் என்ற புத்தி
	தமம்	= இந்திரிய அடக்கம்
	சமம்	= மன அடக்கம்
	சுகம் துக்கம்	= உலகத்தாரின் சுகம், துக்கம் யோகிகட்குத் தெரியும்
	பாவம்	= அண்டங்களின் உற்பத்தி (யோகிகட்குத் தெரியும்)
	அபாவம்	= அண்டங்களின் அழிவு (யோகிகட்குத் தெரியும்)
	பயம்	= அஞ்ஞானம். (ஜனங்களின் அஞ்ஞானம் யோகிகட்குத் தெரியும்)
	பயமின்மை	= அஞ்ஞான மின்மை. (ஜனங்களின் அஞ்ஞான மின்மை யோகிகட்குத் தெரியும்)

மேற் சொல்லப்பட்ட சுலோகம் யோகியைப் பற்றியது.

ரு. அஹிம்சை, சமத்வம், திருப்தி, தவம், தானம், கீர்த்தி, அகீர்த்தி (ஆகிய) பலவித பாவங்கள் பூதங்களுக்கு என்னிடமிருந்தே உண்டாகின்றன.

[வி]	அஹிம்சை	= தான் தன் தேகத்தைக் காப்பாற்றல்
	சமத்துவம்	= பிரம்ம பாவனை, பிரம்மத்தியானம்
	திருப்தி	= பூரணத்வம்
	தவம்	= பாபதகனம்
	தானம்	= ஞானதானம்
	கீர்த்தி	= பிரம்ம விபூதி = (பிரம்ம சம்பந்த போகம்)
	அகீர்த்தி	= பிரகிருதி சம்பந்தபோகம்
	பாவங்கள்	= தன்மைகள்
	பூதங்களுக்கு	= யோகிகளுக்கு
	என்னிடமிருந்து	= பரமாத்மாவிடமிருந்து

சா. ஏழு மஹரிஷிகளும், அப்படியே பூர்வீக நான்கு மனுக்களும், மஹத்திலிருந்தும், மனத்திலிருந்தும் பிறந்தார்கள். அவர்கள் பரம்பரையே உலகிலுள்ள இவர்கள் (ஜனங்கள்).

எ. இந்த எனது விபூதியையும், யோகத்தையும் எவன் யதார்த்தமாய் அறிகிறானோ, அவன் அசைவில்லாத யோகத்தைக் கூடுகிறான். அதில் சந்தேகமில்லை.

[வி] விபூதி = சக்தி
யோகம் = அமைப்பு

அ. நான் சர்வத்திற்கும் உற்பத்தி. என்னிலிருந்து சர்வமும் தோன்றுகிறது. இப்படி நினைத்து (மஹத்) புத்திமான்கள் அன்போடு கூடியவர்களாய் என்னைப் பஜிக்கிறார்கள்.

[வி] சர்வம் = சர்வ சாஸ்திரங்கள்
என்னிலிருந்து = பரமாத்மாவிலிருந்து
மஹத்புத்திமான்கள் = மஹத்கூடத்தினுள்ளவர்கள்

கூ. என்னில் சித்தமுடையவர்கள், என்னில் பிராணனை அர்ப்பணம் செய்தவர்கள், என்னை ஒருவருக்கொருவர் ஆராய்ச்சி செய்பவர்கள், என்னைப் போதிப்பவர்கள், என்றும் திருப்தியுடையவர்களும், ஆனந்தப்படுபவர்களும்.

[வி] என்னில்சித்தமுடையவர்கள் = அவ்யக்தக் கூடத்திலுள்ள ஆகாயத்தில் அக்ஷரரூபமாயுள்ள சாஸ்திரங்களில் புத்தியைச் செலுத்தியவர்கள்
பிராணனை அர்ப்பணம் செய்தவர்கள் = தங்கள் ஜீவனை அவ்யக்தக்கூடத்திலுள்ள ஆகாசத்தில் எழுதப்பட்டிருக்கிற சாஸ்திரங்களில் புத்தியைச் செலுத்தியவர்கள்.
ஆராய்ச்சிசெய்பவர்கள் = சாஸ்திர விசாரம் செய்பவர்கள்

போதிப்பவர்கள் = சாஸ்திரத்தைப் போதிப்பவர்கள்
என்னை = பரமாத்மாவை

கo. என்றும் சமத்வமுடையவர்களாய் அன்பினால் வழிபடுகிற அவர்களுக்கு எதனால் அவர்கள் என்னை அடைவார்களோ அந்த புத்தியோகத்தைக் கொடுக்கிறேன்.

[வி] சமத்வமுடையவர்களாய் = பிரம்மத்தின் தர்மமாகிய சமத்வ புத்தியுடையவர்களாய்
புத்தியோகம் = மஹத்கூடத்தின் உத்தரபாகத்தில் அநுஷ்டிக்கப்படுகிற யோகம்

கக. அவர்களுக்கு இரக்கத்தினாலேயே நான் அஞ்ஞானத்திலிருந்து உண்டாகிப் புத்தியிலிருக்கிற இருளைப் பிரகாசிக்கிற ஞானதீபத்தால் நாசம் செய்கிறேன்.

[வி] அவர்களுக்கு = உத்தர மகத்திலிருந்து சாஸ்திர அப்யாசம் செய்கிற மஹத்புத்திமான்களுக்கு
இருளை = சாஸ்திர ஞானத்தை மறைக்கும் அஞ்ஞானத்தை

அர்ச்சுனன் சொன்னான்:—

கஉ. தாங்கள் பரப்பிரமம், பரமபத பரமசுத்தி, தெய்வீக சாசுவத புருஷன், ஆதிதேவன், பிறப்பிலி, சர்வ வியாபி.

[வி] சாசுவத = நித்திய
பிறப்பிலி = பிறப்பில்லாதவன்

கங. (என்று) சர்வரிஷிகளும் தங்களைச் சொல்லுகிறார்கள். அப்படியே தேவரிஷியான நாரதரும், அசிதரும், தேவலரும், வ்யாசரும் எனக்கப்படியே தாங்களும் சொல்லுகிறீர்கள்.

கச. எனக்கெதைச் சொல்லுகிறீர்களோ, இதெல்லாம் சத்தியம் (என்று) எண்ணுகிறேன், கேசவ! ஏனெனில், தங்கள் ஸ்வரூபத்தைத் தேவர்கள் அறியவில்லை. தானவர்கள் அறியவில்லை, பகவானே!

கரு. நீங்கள் தங்களைத் தம்மாலேயே தானே அறிகிறீர்கள். புருஷோத்தமரே! பூதங்களைப் பாவிக்கும்படிச் செய்பவரே! பூதங்களுக்கு ஈசுவரனே! தேவதேவே! ஜகத்பதியே!

மேற்சொல்லப்பட்ட சுலோகம் அவதாரபுருஷனைப் பற்றியது.

[வி] பாவிக்கும்படி = த்யானிக்கும்படி

கசு. எவ்விபூதிகளால் இவ்வுலகங்களை நீங்கள் வியாபித்து நிற்கிறீர்களோ (அந்த) தங்கள் தெய்வீக விபூதிகளைச் சேஷமின்றிச் சொல்லவேண்டும்.

கஎ. யோகியே! நான் உங்களைச் சதா தியானிப்பவனாய் எப்படி அறியலாம். பகவானே! எந்தெந்த பாவங்களில் என்னால் சிந்திக்கக் கூடியவரா யிருக்கிறீர்கள்.

[வி] பாவங்களில் = பொருள்களில்
எந்தெந்த பாவங்களில் = ஜன்மம், கர்மம், அதிகாரம், சிக்ஷை, ஆத்மஸ்வரூபம், கைவல்யம்

கஅ. ஜனார்த்தந! விஸ்தாரமாய்த் தங்களுடைய யோகத்தையும், விபூதியையும் மீண்டும் சொல்லுக. ஏனெனில், அமிர்தத்தைக் கேட்கிற எனக்குத் திருப்தியில்லை.

[வி] யோகம் = அமைப்பு
விபூதி = சக்தி
அமிர்தம் = பிரம்ம விஞ்ஞானம்

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

ககூ. சுகமாயிரு. எனது தெய்வீக விபூதிகளில் சிறந்தவற்றை உனக்குக் கூறுவேன், கௌரவர்களிற் சிறந்தோனே! எனது விஸ்தாரத்திற்கு அந்தமில்லை.

[வி] விஸ்தாரம் = விபூதியின் பெருக்கம்

உ0. குடாகேச! நான் சர்வபூதங்களின் ஹ்ருதயத்தில் வசிக்கும் ஆத்மா, பூதங்களின் ஆதியும், மத்தியும், அந்தமும் நானே.

[வி] குடாகேச = இரகசிய அர்த்தங்களை வினவுகிறவன்
ஆதி = மகத்கூட்டம்
மத்தி = மனக்கூட்டம்
அந்தம் = இந்திரியக்கூட்டம்

௨௧. ஆதித்யர்களுள் நான் விஷ்ணு, ஜோதிகளுள் பிரகாசமான சூரியன், மருத்துக்களுள் மரீசியாயிருக்கிறேன், நட்சத்திரங்களுள் நான் சந்திரன்.

௨௨. வேதங்களுள் சாம வேதமா யிருக்கிறேன். தேவர்களுள் இந்திரனா யிருக்கிறேன். இந்திரியங்களுள் மனதாயிருக்கிறேன். பூதங்களுள் ஞானசக்தியா யிருக்கிறேன்.

[வி] பூதங்கள் = பிராணிகள்

௨௩. ருத்திரர்களுள் சங்கரனாயு மிருக்கிறேன். யக்ஷ ராக்ஷஸர்களில் குபேரனாயிருக்கிறேன். வசுக்களில் அக்நியாயு மிருக்கிறேன். பர்வதங்களில் நான் மேரு.

௨௪. புரோகிதர்களில் முதல்வனான ப்ருஹஸ்பதியாயும் என்னை அறி! பார்த்த! சேனாதிபதிகளில் நான் ஸ்கந்தன். ஏரிகளில் நான் சமுத்திரமாயிருக்கிறேன்.

[வி] ப்ருஹஸ்பதி = தேவ குரு
ஸ்கந்தன் = தேவ சேனாதிபதி

௨௫. மஹரிஷிகளில் பிருகு நான். வாக்குக்களில் ஏகாக்ஷரமாயிருக்கிறேன். யக்ஞங்களில் ஜப யக்ஞமாயிருக்கிறேன். ஸ்தாவரங்களில் ஹிமாலயம்.

[வி] ஏகாக்ஷரம் = ஓங்காரம்

௨௬. சர்வ விருக்ஷங்களில் அஸ்வத்தம். தேவரிஷிகளில் நாரதன். கந்தருவர்களில் சித்ரரதன். சித்தர்களில் கபில முனி.

௨௭. குதிரைகளில் என்னை அமிர்தத்திலிருந்துண்டான உச்சைஸ்ரவம் என்று (அறி). கஜேந்திரங்களில் ஐராவதம். நரர்களில் நராதிபன்.

[வி] குதிரைகள் = இந்திரியங்கள்
அமிர்தத்திலிருந்துண்டான = பிரம்ம விஞ்ஞானத்திலிருந்துண்டான
உச்சைஸ்ரவம் = மேலான கேள்வியையுடைய இந்திரியம் (புத்தி, சக்தி)
கஜேந்திரம் = அகங்காரத்தால் ஓங்கிய மனம்
ஐராவதம் = மிகுந்த குரோதத்தைப் போக்கடிக்கும் பரமாத்ம மனம்
நரர்கள் = நசித்துப்போகிறவர்கள்
நராதிபன் = ராஜயோகி

௨௮. ஆயுதங்களில் நான் வஜ்ராயுதம். பசுக்களில் காமதேனுவாயிருக்கிறேன். உற்பத்தி செய்யும் கந்தர்ப்பனாயிருக்கிறேன், சர்ப்பங்களில் வாசுகியாயிருக்கிறேன்.

[வி] வஜ்ராயுதம் = தேவேந்திரனின் ஆயுதம்
காமதேனு = தேவலோகத்தின் பசு
வாசுகி = பாற்கடல் கடையும் காலத்தில் கயிறாக ஏற்பட்ட சர்ப்பம் (குண்டலி சக்தி)

௨௯. நாகங்களில் அநந்தனாயுமிருக்கிறேன். ஜல ஜந்துக்களில் நான் வருணன். பிதுர்க்களில் அரியமாவாயுமிருக்கிறேன். தண்டிப்பவர்களில் நான் யமன்.

௩௦. தைத்தியர்களில் ப்ரஹ்லாதனுயுமிருக்கிறேன். கணக்கிடுபவர்களில் நான் காலன். மிருகங்களில் நான் மிருகேந்திரன். பக்ஷிகளில் கருடன்.

௩௧. சுத்தி செய்பவைகளில் காற்றுயிருக்கிறேன். ஆயுததாரிகளில் நான் ராமன். மீன்களில் மகாமாயுமிருக்கிறேன். நதிகளில் கங்கையாயிருக்கிறேன்.

௩௨. சிருஷ்டிகளில் ஆதியும், அந்தமும், அப்படியே மத்தியும் நான், அர்ச்சுன! வித்தைகளில் அத்யாத்ம வித்தை. வாதிப்பவர்களில் வாதம் நான்.

௩௩. அக்ஷரங்களில் அகாரமாயிருக்கிறேன். சமாசங்களில் த்வந்துவம் நானே. அழிவில்லாத காலம் நானே. எங்கும் முகமுள்ள ஆதாரம் நான்.

௩௪. சர்வத்தையும் பக்ஷிக்கிற ம்ருத்யு நான். வருபவைகளின் உற்பத்தியும், ஸ்திரீகளின் கீர்த்தி, செல்வம், வாக்கு, ஞாபகம், விவேகம், திருதி, பொறுமையும்.

௩௫. அப்படி சாமங்களில் ப்ரகத் சாமம். சந்தஸ்களில் காயத்திரி நான். மாதங்களில் மார்கழிமாதம் நான். ருதுக்களில் புஷ்பகாலம்.

௩௬. வஞ்சகர்களில் சூதா யிருக்கிறேன். தேஜஸ் உடையவர்களின் தேஜஸ் நான். வெற்றியாயிருக்கிறேன். உறுதியா யிருக்கிறேன். உண்மையுள்ளவர்களின் உண்மை நான்.

௩௭. வ்ருஷ்ணிகளில் வாசுதேவனு யிருக்கிறேன். பாண்டவர்களில் தனஞ்சயன். முனிகளில் நான் வியாசன். கவிகளில் சுக்கிரன் (ஆகிய) கவி.

௩௮. தண்டிக்கிறவர்களில் செங்கோலா யிருக்கிறேன். வெற்றியை நாடியவர்களில் யுக்தியாயிருக்கிறேன். இரகசியங்களில் அப்படியே மௌனமாயும் இருக்கிறேன். ஞானிகளில் ஞானம் நான்.

௩௯. இன்னும் சர்வ பூதங்களில் பீஜமெதுவோ அது நான், அர்ச்சுன! சராசரமாகிய எப்பொருளிருக்குமோ அது என்னையன்றி யில்லை.

[வி] சரம் = அசைவுள்ளது.
அசரம் = அசைவில்லாதது.

௪௦. எனது தெய்வீக விபூதிகளுக்கு அந்த மில்லை, பரந்தப! விபூதிகளின் விஸ்தாரம் குறிப்பாக இது என்னால் சொல்லப்பட்டது.

௪௧. எதெது பெருமையுடையது, சத்வமுடையது, செல்வமுடையது, அல்லது அப்படியே வல்லபமுடையது, அததுவே என்னுடைய தேஜஸின் அம்சத்தி லிருந்துண்டானதாக நீ அறி.

௪௨. அல்லது அனேகமாய் அறிகிற இதனால் உனக்கென்ன! அர்ச்சுன! இம்முழு ஜகத்தையும் ஏகஅம்சத்தால் வியாபித்து நான் நிற்கிறேன்.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோக சாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, விபூதியோகம் என்னும் பத்தாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—மஹத் கூடத்தி லுள்ள ரிஷிகளின் விபூதிகளும், மனக்கூடத்தி லுள்ள தேவர்களின் விபூதிகளும், யோகிகளின் விபூதிகளும், அவ்யக்தக்கூடத்தின் ஆகாசத்தில் வரையப்பட்டிருக்கும் சாஸ்திரங்களும், ராமன், ஸ்கந்தன், கபிலர், காமதேனு, கங்கை, பரமாத்மாவின் விபூதிகளென்று கூறப்பட்டன. இதனால் இவ்வத்தியாயத்தின் கருத்து பரமாத்ம பக்தியின் ஸ்துதியும் கண்ட பக்தியின் கண்டனமும்.

அரும்பதங்கள்.

நான்கு மனுக்கள்	= மனத்திலிருந்து உற்பத்தியானவர்கள்
சப்தரிஷிகள்	= மஹத்கூடத்திலிருந்து உற்பத்தியானவர்கள்
சர்வம்	= ஸகல சாஸ்திரங்கள்
பாவங்களில்	= ஜன்மம், கர்மம், அதிகாரம், நிஷ்டை, ஆத்மஸ்வரூபம், கைவல்யம்.
விபூதி	= சக்தி

பத்தாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதினோராவது அத்தியாயம்

விஸ்வரூப தரிசனம்

அர்ச்சுனன் சொன்னான் :—

க. எனது அனுக்கிரகத்திற்காக அத்யாத்மம் (என்று) பெயரிட்டபெற்ற எந்தப்பரம ரகசியவாக்குத் தங்களால் சொல்லப்பட்டதோ அதனால் எனது இம்மோகம் நீங்கப் பெற்றது.

[வி] அத்யாத்மம் = ஆத்மாவைப் பற்றியது

உ. பூதங்களின் பிறப்பும் இறப்பும் தங்களிடமிருந்து என்னால் விரிவாய்க் கேட்கப்பட்டன. தாமரை மலர் போன்ற நேத்திரங்களையுடையவரே! அப்படியே அழிவிலா மகாத்மியமும்.

[வி] பூதங்கள் = பிராணிகள்
மகாத்மியம் = மகத்துவம், பெருமை

ந. நீங்கள் தங்களை எப்படிச் சொல்லிக்கொள்கிறீர்களோ. இது அப்படியே தான் பரமேஸ்வரா? தங்கள் ஈஸ்வர ரூபத்தைப் பார்க்க இச்சிக்கிறேன், புருஷோத்தம!

௪. அது என்றால் தரிசிக்கக்கூடியதென்று நினைப்பீர்களாயின், பிரபுவே! யோகீஸ்வரனே! அப்பொழுது தங்கள் நாசமிலா வடிவை நீங்கள் எனக்குக் காட்டுங்கள்.

[வி] தரிசிக்க = பார்க்க

ஸ்ரீபகவான் சொன்னார்:—

௫. நானாவிதங்களும், நானாவர்ணங்களும் நானாவடிவங்களுடைய நூற்றுக்கணக்கானதும் ஆயிரக்கணக்கானதுமான எனது தெய்வீக ரூபங்களைப் பார்த்த! பார்.

[வி] நானா விதங்கள் = பலவித தர்மங்கள்
வர்ணங்கள் = குணங்கள்
தெய்வீக = தேவப்பிரகிருதி சம்பந்த

௬. ஆதித்யர்களையும், வசுக்களையும், ருத்திரர்களையும், இரண்டு அஸ்வினிகளையும், மருத்துக்களையும், பார். அப்படியே முன் காணாத அநேக ஆச்சரியங்களையும் பார், பாரத!

[வி] ஆதித்யர்கள் = மகத்தில் பன்னிரண்டுவித கர்மங்களுண்டு. இதில் பிரவிர்த்தி ஆறு, நிவிர்த்தி ஆறு.
வசுக்கள் = எட்டு, ஞானேந்திரியங்களைந்தும், மனம், புத்தி, அஹங்காரம் மூன்றும்.

அஸ்விநிகள் = சங்கல்ப, விகல்ப ரூபமனம் அல்லது பிரவிர்த்தி, நிவிர்த்தி மார்க்கங்கள்
ருத்திரர்கள் = கர்மம், பக்தி, ஞானம்
மருத்துக்கள் = யோகம்
ஆச்சர்யம் = பராதத்தைப் பார்த்தல்

௭. இன்று சராசரத்தோடு கூடிய முழுஜகத்தையும் இங்கு ஒன்றில் நிற்பதை என் தேகத்தில் பார், குடாகேச! மேலும், வேறெதைப்பார்க்க இச்சிக்கிறாயோ.

[வி] வேறெதை = பிரபஞ்சத்தில் எதெது உண்டோ அவற்றை யெல்லாம் விஸ்வரூபத்தில் பார்க்கலாம்

௮. ஆனால், உனது இதே கண்ணால் என்னைப்பார்க்க முடியாது. தெய்வீகக்கண்களை உனக்குக் கொடுக்கிறேன், எனது ஈஸ்வர யோகத்தைப் பார்.

சஞ்ஜயன் சொன்னான்:—

௯. இப்படிக் கூறியபின், (ராஜன்) மஹாயோகேஸ்வரன் ஹரி, பார்த்தனுக்குப் பரம ஈஸ்வர ரூபத்தைக் காட்டினார்.

[வி] ராஜன் = திருதராஷ்டிரனே

௧௦. அநேக வாய்களும், கண்களும், அநேக அற்புத தரிசனங்களும், அநேக தெய்வீக ஆபரணங்களும், அநேக தெய்வீக ஆயுதங்களை ஏந்தியும்.

கக. தெய்வீக மாலைகளும், ஆடைகளும் தரித்தும், தெய்வீக கந்தங்களால் பூசப்பெற்றும் சர்வாச்சரிய மயமாய் அந்தமில்லாத் தேவனை எங்கும் முகமுடையவராய்.

கஉ. ஆகாயத்தில் ஆயிரம் சூரியர்களின் பிரகாசம் ஏககாலத்தில் ஒலிக்கின் அது அம்மஹாத்மாவின் பிரகாசத்திற்கு ஒப்பாகும்.

கங. அங்கு முழு ஜகத்தும் அநேகமாய்ப் பிரிந்து ஒன்றில் நிற்பதாக தேவ தேவனுடைய சரீரத்தில் பாண்டவன் அப்பொழுது கண்டான்.

கச. பின் அத்தனஞ்சயன் ஆச்சரியத்தால் மூடுண்டு ரோமம் சிலிர்த்தவனாய்த் தேவனைச் சிரசால் நமஸ்கரித்து இருகையும் கூப்பினவனாய்ச் சொல்லலுற்றான்.

அர்ஜுனன் சொன்னான்:—

கரு. தேவனே! தங்கள் தேகத்தில் சர்வ தேவர்களையும், அப்படியே பூதங்களின் பலவகையான கூட்டங்களையும், கமலாசனத்திலிருக்கும் பிரம்மாவாகிய ஈஸ்வரனையும், சர்வரிஷிகளையும், தெய்வீக சர்ப்பங்களையும் காண்கிறேன்.

கசா. அநேக கைகளும், வயிறுகளும், வாய்களும், நேத்திரங்களுமுடைய உங்களை எங்கும் அநந்த ரூபங்களை யுடையவராய்க் காண்கிறேன். அந்தமும் மத்தியும், மீண்டும் தங்களுடைய ஆதியையும் காண்கிறேனில்லை. விஸ்வேஸ்வர! விஸ்வரூபத்தைக் காண்கிறேன்.

கஎ. கிரீடமும், கதையும், சக்கரமும், ஒளியின் திரளும், எங்கும் பிரகாசமும், பிரகாசிக்கின்ற அக்நி, சூரியர்களின் ஒளிபோலும் அளவிறந்தும், எங்கும் பிரயாசத்தினால் காணக்கூடிய உங்களைக் காண்கிறேன்.

கஅ. நீங்கள் அறியவேண்டிய பரம அக்ஷரம், நீங்கள், இந்த விஸ்வத்திற்குப் பரம களஞ்சியம், நீங்கள் சாஸ்வத தர்மத்திற்குக் குறைவிலா ரக்ஷகர், நீங்கள் சநாதன புருஷன் (என்பது) எனது கொள்கை.

[வி] அக்ஷரம் = அழியாப்பொருள்
விஸ்வத்திற்கு = ஜகத்திற்கு
சாஸ்வத = நித்திய
சநாதன = அநாதி

ககூ. ஆதி, மத்தி, அந்தமிலாதவரும், அனந்த சக்தியுடையவரும், அனந்த கைகளையுடையவரும், சூரிய சந்திரர்கள் நேத்திரங்களாகவும், ஜ்வலிக்கின்ற அக்நிபோன்ற முகமுடையவரும், தனது பிரகாசத்தினால் இவ்வுலகத்தைத் தபிக்கச் செய்கின்ற தங்களைக் காண்கிறேன்.

உ0. மண்ணுலகிற்கும், விண்ணுலகிற்கும் இடையே உள்ள இந்த இடமும், சர்வ திக்குகளும், உங்களொருவராலேயே வியாபிக்கப்பட்டிருக்கின்றன. தங்களின் இவ்வற்புத, உக்ர ரூபத்தைப் பார்த்துத் திரிலோகங்களும் நடுங்குகின்றன, மஹாத்மாவே!

௨௧. இத்தேவர்களின் கூட்டங்கள் தங்களைப் பிரவேசிக்கிறார்கள். சிலர் பயந்தவர்களாய் இருகைகளையும் கூப்பி ஓலமிடுகிறார்கள். மஹரிஷிகள், சித்தர்களின் கூட்டங்கள் வாழியென வாழ்த்தி, மஹத்தான வாக்கியங்களால் தங்களை ஸ்தோத்திரம் செய்கிறார்கள்.

௨௨. ருத்திரர்கள், ஆதித்யர்கள், வசுக்கள், சாத்தியர்கள், விஸ்வதேவர்கள், இரண்டு அஸ்வினிகள், மருத்துக்களும், உஷ்மபாகர்களும், கந்தர்வ யக்ஷ சித்தர்கள், அசுரக் கூட்டங்களுள் எவர்களோ, அவர்கள் எல்லோரும் ஆச்சரிய மடைந்தவர்களாகவே தங்களைப் பார்க்கிறார்கள்.

௨௩. தங்களின் ரூபம் மஹத்தானது, அநேக வாய்களும், நேத்திரங்களுமுடையது, மஹாபாஹோ! அநேக கைகளும், துடைகளும், பாதங்களுமுடையது. அநேக வயிறுகளுமுடையது. அநேக பற்களால் பயங்கரமானது. ஜனங்கள் பார்த்து நடுங்குகிறார்கள். அப்படியே நானும்.

௨௪. ஆகாயத்தை ஸ்பரிசிப்பதாய், ஜ்வலிக்கின்ற அநேக வர்ணங்களை யுடையதாய், திறந்த வாய்களையுடையதாய் ஜ்வலிக்கின்ற விசால நேத்திரங்களையுடைய தங்களைப் பார்த்து உள்ளம் நடுங்குகின்றது. தைரியத்தை அடைகிறேனில்லை. சாந்தமும் அடைகிறேனில்லை, விஷ்ணுவே!

௨௫. பற்களால் பயங்கரமாயும், காலாக்கினிக்குச் சமமான தங்கள் முகங்களைப் பார்த்து திக்குகளை யறி

கிறேனில்லை. புகலிடத்தை யறிகிறேனில்லை, அருளுக, தேவர்களுக் கீஸ்வரனே! ஜகத்திற் கிருப்பிடமே!

௨௬. இத்திருதராஷ்டிர புத்திரர்கள் எல்லோரும் பூபாலர்களின் கூட்டங்களோடு கூடவே பீஷ்மர், துரோணர், அப்படியே இச்சூத புத்திரனும், யுத்த வீரர்களில் முக்யமான நம்மவர்களும் கூடவே உங்களைப் (பிரவேசிக்கிறார்கள்)

௨௭. பயங்கரமானதும், பயங்கரத்தை உண்டுபண்ணுவதுமான பற்களையுடைய தங்கள் வாய்களில் விரைந்து பிரவேசிக்கிறார்கள். சிலர் பற்களின் இடைவெளியில் சிக்கிக்கொண்டவர்களாய்ப் பொடிப்பொடியான சிரசுகளுடன் காணப்படுகிறார்கள்.

௨௮. எப்படி நதிகளின் அநேக நீரோட்டங்கள், சமுத்ரத்தை முன்னிட்டுச் செல்கின்றனவோ, அப்படி இந்த நரலோக வீரர்கள் ஜ்வலிக்கின்ற தங்கள் வாய்களில் பிரவேசிக்கிறார்கள்.

௨௯. எப்படி ஜ்வலிக்கின்ற அக்கினியில் விட்டில் பூச்சிகள் நாசமடைய விரைந்து பிரவேசிக்கின்றனவோ, அப்படியே, ஜனங்கள் விரைந்து நாசமடையத் தங்கள் வாய்களில் பிரவேசிக்கிறார்கள்.

௩௦. எப்புறமும், சர்வ உலகங்களை ஜ்வலிக்கின்ற வாய்களால் விழுங்குபவராய், ருசி பார்க்கிறீர்கள். தேஜ

சினால், ஜகத் முழுதும் மூடி, தங்களின் உக்கிர ஒளி தபிக்கச் செய்கிறது, விஷ்ணுவே!

௩௧. உக்ர ரூபமுடைய தாங்கள் யார்? எனக்குச் சொல்லும். தங்களுக்கு நமஸ்காரம் இருப்பதாக, தேவர்களில் உத்தமரே! அருளுக. முதன்மையான தங்களை அறிய இச்சிக்கிறேன். ஏனெனில், தங்களின் பிரவிர்த்தியை அறிகிறேனில்லை.

[வி] பிரவிர்த்தி = செய்கை, ஆரம்பம், துவக்கம்

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௩௨. உலகங்களை அழிவுசெய்ய ஓங்கிய காலமாயிருக்கிறேன். உலகங்களைச் சம்ஹரிக்க இங்கு பிரவிர்த்தித்திருக்கிறேன். உன்னையன்றியும் எதிரிகளின் சேனைகளில் எந்த யுத்தவீரர்கள் நிற்கிறார்களோ (அவர்க) ளெல்லோரும் உயிரோடிருக்கமாட்டார்கள்.

[வி] பிரவிர்த்தித்திருக்கின்றேன் } ஆரம்பித்திருக்கின்றேன்.

௩௩. ஆதலால், எழுந்திரு, கீர்த்தியை யடை, சத்துருக்களை ஜயித்துச் செல்வம் பொருந்திய ராஜ்யத்தை அநுபவி. என்னாலேயே இவர்கள் முன்னமே கொல்லப்பட்டார்கள். காரணமாய் மாத்திரம் விளங்குக. இருகரங்களாலும் அஸ்திரங்களை எய்யும் திறமையுடையோனே!

௩௪. துரோணரும், பீஷ்மரும், ஜயத்ரதனும், கர்ணனும், அப்படியே மற்றும் யுத்த வீரர்களும் என்னால் கொல்லப்பட்டார்கள், நீ கொல், கலங்காதே. யுத்தத்தைச் செய். யுத்தத்தில் சத்துருக்களை ஜயிப்பாய்.

சஞ்சயன் சொன்னான்:—

௩௫. கேசவனின் இவ்வார்த்தையைக் கேட்டுக் கிரீடி இருகைகளையும் கூப்பி, நடுங்கி, நமஸ்காரம்செய்து,மொழி குளறி மிகவும் பயந்தவனாய் வணங்கி மீண்டும் கிருஷ்ணனுக்கு இப்படிச் சொன்னான்.

அர்ச்சுனன் சொன்னான்:—

௩௬. தங்களை ஸ்துதிப்பதால், ஜனங்கள் ஆனந்திக்கிறார்கள், சந்தோஷமடைகிறார்கள். ராக்ஷஸர்கள் பீதியடைந்தவர்களாய் திக்குகள் தோறும் ஓடுகிறார்கள். சித்தர்களின் கூட்டங்கள் யாவும் நமஸ்காரம் செய்கிறார்கள் என்றது ஏற்கும், ரிஷீகேச!

௩௭. மஹாத்மாவே! பிரம்மாவுக்கும் பெரியவரும், ஆதிகர்த்தாவுமாகிய தங்களை எப்படி அவர்கள் வணங்காதிருப்பார்கள், முடிவில்லாதவரே! தேவர்களுக்கு ஈசனே! ஜகத்திற்கு இருப்பிடமே! நீங்கள் அக்ஷரம், சத்து, அசத்து, எது பரமோ அது.

௩௮. நீங்கள் ஆதிதேவன், புராண புருஷன். நீங்கள் இவ்வுலகிற்கு மேலான இருப்பிடம். அறிபவரும்,

அறியப்படும் பொருளும் மேலான இருப்பிடமாயும், இருக்கிறீர்கள். தங்களால் உலகம் வியாபிக்கப்பட்டிருக்கின்றது, அநந்த ரூபமுடையவரே!

௩௯. வாயுவும், யமனும், அக்நியும், வருணனும், சந்திரனும், பிரஜாபதியும், பிதாமஹரும் நீங்கள். நமஸ்காரம், நமஸ்காரம், ஆயிரம் முறை உங்களுக்கிருக்கட்டும். மீண்டும் மீண்டும் நமஸ்காரம், நமஸ்காரம் உங்களுக்கு.

௪௦. முன்னும் பின்னும் உங்களுக்கு நமஸ்காரம், நமஸ்காரம். உங்களுக்கு, நமஸ்காரம் எங்கும் இருக்கட்டும். சர்வமே அநந்த வீர்யமும், எல்லையற்ற பராக்கிரமமுடைய நீங்கள் சர்வத்தையும் அடக்கிக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் சர்வமுமாயிருக்கிறீர்கள்.

௪௧. தங்களின் இம்மஹத்வத்தை அறியாது தோழனென்றெண்ணிக் கவனயீனத்தினால், அல்லது பிரீதியினால் என்னால் வணக்கமின்றி, ஹே கிருஷ்ணா! ஹேயாதவ! ஹே தோழ! என்று யாது சொல்லப்பட்டதோ.

௪௨. மேலும் விளையாட்டிலும், படுக்கையிலும், இருக்கும்பொழுதும், உண்ணும்பொழுதும், தனியாய் அல்லது அப்படியே கூட்டத்திலும், எது பரிகாசத்திற்காக அவமதிக்கப்பட்டிருக்கிறீர்களோ, அச்சுதா! அதை மன்னிக்கும்படி அறிதற்கரிய தங்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

௪௩. சராசரமாகிய இவ்வுலகிற்குப் பிதாவாயிருக்கிறீர். நீங்கள் பூஜிக்கத்தகுந்தவரும், மஹத்துவமான குருவும்.—தங்களுக்குச் சமானமானவரில்லை. மேம்பட்ட அந்நியனெங்கு, திரிலோகங்களிலும் ஒப்பற்ற வல்லபமுடையவர்.

௪௪. ஆதலால், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, புகழ்வதற்கு உகந்த ஈஸ்வரனாகிய தங்களை, வேண்டிக்கொள்கிறேன். புத்திரனுக்குப் பிதாவைப்போலும், மித்திரனுக்கு மித்திரனைப்போலும், காதலிக்குக் காதலனைப்போலும் கடவுளே! சகித்துக்கொள்வீர்களாக.

௪௫. முன் காணாததைக் கண்டு பிரீதியடைந்தவனாயிருக்கிறேன். பயத்தினாலும், என் மனது கலக்கம் அடைந்திருக்கிறது. தேவரீர்! அதே ரூபத்தை எனக்குக் காட்டுக. தயவுசெய்வீர்களாக, தேவர்களுக்கு ஈசனே! ஜகத்திற்கு இருப்பிடமே!

௪௬. கிரீடமும், கதையும், கையில் சக்கரமும் உடையவராய்த் தங்களை முன்போல் காண நான் இச்சிக்கிறேன். சதுர்ப்புஜத்துடன் கூடிய அதே ரூபத்துடன் இருப்பீர்களாக. ஆயிரம் கைகளையுடைய விஸ்வமூர்த்தியே!

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௪௭. அர்ஜுனா! பிரீதியடைந்த என்னால் உனக்கு இப்பரமரூபம் எனது யோகத்தால் காண்பிக்கப்பட்டது;

தேஜோமயம், விஸ்வம், அநந்தம், முதன்மையானது எதுவோ அது என்னுடையது. உன்னையன்றிப் பூர்வம் அந்நியனால் பார்க்கப்படவில்லை.

௪௮. வேதங்களினால், யக்ஞங்களினால், அத்யயனங்களினால், தானங்களினால், கிரியைகளினால், உக்ரமான தவங்களினால் மனுஷ்ய உலகில் நான் இந்த உருவத்துடன் உன்னையன்றி அந்நியனால் தரிசிக்கமுடியாது, கௌரவர்களில் முதன்மையானவனே!

௪௯. இத்தகைய எனது இக்கோர ரூபத்தைக் கண்டு உனக்கு வருத்தமும், மயங்கிய தன்மையும் வேண்டாம். பயம் நீங்கியவனாய், பிரீதியடைந்தவனாய் மீண்டும் நீ இந்த அதே எனது ரூபத்தைப் பார்.

சஞ்சயன் சொன்னான்:—

௫௦. வாசுதேவன் அர்ஜுனனுக்கு அப்படிச்சொல்லித் தனது ரூபத்தை மறுபடியும் காட்டினார். மேலும், பயமடைந்த அவனைத் தேறுதலை யடைவித்து மீண்டும் சாந்த ரூபத்தை மஹாத்மா கொண்டார்.

அர்ஜுனன் சொன்னான்:—

௫௧. தங்களின் இச்சாந்த மனிதரூபத்தைப் பார்த்து ஜனார்த்தன! இப்பொழுது மனம் ஒருமைப்பட்டுச் சுவாதீனமடைந்தேன்.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௫௨. இது பார்த்தற்கரிது. நீ பார்த்த எனது ரூபம் எதுவோ, தேவர்களும் அதே ரூபத்தின் தரிசனத்தை என்றும் பாடுகிறார்கள்.

௫௩. நீ என்னை எப்படிப் பார்த்திருக்கிறாயோ, அவ்வண்ணம் வேதங்களாலும், தபசினாலும், தானங்களினாலும் அல்லது யக்ஞத்தினாலும் நான் பார்க்கக்கூடியவன் அன்று.

௫௪. ஆனால் அர்ச்சுன! அநந்நிய பக்தியினால் என்னை இவ்விதம் அறியவும், பார்க்கவும், உள்ளபடிப் பிரவேசிக்கவும் கூடும், பரந்தப!

௫௫. எனக்காகக் கர்மத்தைச் செய்கிறவனாய், என்னைப் பரம்பொருளென்ற எண்ணமுடையவனாய், என் பக்தனாய், பற்றற்றவனாய், சர்வ பூதங்களிடத்தில் வைரமின்றியவன் எவனோ, அவன் என்னை அடைகிறான், பாண்டவ!

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, விஸ்வரூபம் என்னும் பதினோராவது அத்தியாயம்.

சங்கிரகம்:—எப்படிப் பரமாத்மாவின் விபூதிகள் ஏக பக்திக்குச் சாதனமோ, அப்படி விஸ்வரூப தரிசனம் ஏக பக்திக்குச் சாதனம்.

அரும்பதங்கள்

விதங்கள்	= கர்மங்கள்
வர்ணங்கள்	= குணங்கள்
ஆச்சரியம்	= முன் பாராததைப் பார்த்தல்
ருத்திரர்கள்	= கர்மம், பக்தி, ஞானம்
மருத்துக்கள்	= யோகம்.

பதினோராவது அத்தியாயம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது அத்தியாயம்

பக்தி யோகம்

அர்ச்சுனன் சொன்னான்:—

க. இப்படி, என்றும் சமத்துவம் அடைந்தவர்களாய், எவர்கள் பக்தர்களாய்த் தங்களை உபாசிக்கிறார்களோ, மேலும், மற்றெவர்கள் வெளிப்படையில்லாத அக்ஷரத்தை (உபாசிக்கிறார்களோ) அவர்களுள் யார் யோகத்தில் தேர்ந்தவர்கள்.

[வி] சமத்துவம் = பிரம்ம தர்மம்

பக்தி இருவகைப்படும் (க) பரமாத்ம பக்தி. மற்றது அக்ஷர உபாசனை. பிரம்மத்தைப் பிரகிருதியில் வைத்து உபாசித்தல் அக்ஷர உபாசனை எனப்படும் (உ) தாரணம் பஞ்ச கோசத்தில் பிரம்மத்தைத் தியானித்தல். அக்ஷர உபாசனை தேவி பிரகிருதி சம்பந்த பிரம்மத்தை உபாசித்தல். பரமாத்ம பக்தி, பிரம்மாத்ம பக்தி, யோக பக்தியெனப்படும். பரமாத்ம பக்தியின் ஸ்துதியும் அக்ஷர உபாசனையின் கண்டனமும் கீதையின் கருத்து.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

உ. என்னில் மனம் பதிந்தவர்களாய், என்றுஞ் சமத்துவம் உடையவர்களாய், மேலான சிரத்தையோடு கூடிய

வர்களாய் எவர்கள் என்னை உபாசிக்கிறார்களோ, அவர்கள் யோகத்தில் முதிர்ந்தவர்கள் என்பதென் கருத்து.

[வி] என்னில் = பரமாத்மாவில்
சமத்துவம் = பிரம்ம தர்மம்
மேலான சிரத்தை } = பிரம்மாத்ம சிரத்தை

௩. ஆனால், எவர்கள் சுட்டிக்காட்டுதற்கு அரியதாய், வெளிப்படை இல்லாததாய், எங்கும் வியாபித்திருப்பதாய்ச் சிந்திப்பதற்கு அரியதாய், விகாரம் இன்றியதாய், அசைவு இல்லாததாய், நிலையானதும் (ஆகிய) அக்ஷரத்தை எவர்கள் உபாசிக்கிறார்களோ.

[வி] சுட்டிக்காட்டு தற்கரியதாய் } = இந்திரியங்களுக்கு விஷயமாகாததாய்
அக்ஷரம் = அழியாப்பொருள், பிரம்மம்.

இச்சுலோகத்தில் பிரம்மத்தின் இலக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது.

௪. இந்திரியக் கூட்டத்தை யடக்கி, யாவற்றிலும் சம புத்தி உடையவர்களாய்ச் சர்வ பூதங்களின் நன்மையில் சந்தோஷிப்பவர்களாகிய அவர்கள் என்னையே அடைகிறார்கள்.

[வி] சமபுத்தி = பிரம்ம புத்தி
என்னை = பரமாத்மாவை

௫. அவ்யக்தத்தில் மனம் செலுத்திய அவர்களுக்குச் சிரமம் அதிகம். ஏனெனில், அவ்யக்த மார்க்கம் தேகாபிமானிகளால் சிரமத்தின்பேரில் அடையப்படுகிறது.

[வி] வ்யக்தம் = வெளிப்படையானது
அவ்யக்தம் = வெளிப்படை யில்லாதது
அவ்யக்தமார்க்கம் } = அக்ஷர உபாசனை
தேகாபிமானி = தேக + அபிமானி = தேகத்தில் நான் என்ற அபிமானமுடையவன்

௬. ஆனால், எவர்கள் சர்வ கர்மங்களையும் என்னில் அர்ப்பித்து, என்னில் கருத்துடையவர்களாய், அநந்ய யோகத்தாலே என்னைத் தியானிப்பவர்களாய் உபாசிக்கிறார்களோ.

[வி] என்னை = பரமாத்மாவை
அநந்யயோகம் = யோகப்பிரம்ம நிஷ்டை
தியானம் = யோகத்தில் கர்மம்
உபாசனை = யோகத்தில் பக்தி

௭. என்னில் மனம் பதிந்த அவர்களை, அஞ்ஞான சம்சார சாகரத்தினின்று விரைவில் மீட்கிறவனாய், நான் இருக்கிறேன், பார்த்த!

[வி] யோகத்தில் ஞானம் இச்சுலோகத்தின் கருத்து.

௮. என்னிலேயே மனதைப் பதியச்செய். என்னில் புத்தியைப் பிரவேசிக்கச் செய். என்னிடத்திலேயே வாசஞ்செய்வாய். பின் மோக்ஷம் சந்தேகமில்லை.

[வி] இச்சுலோகம் யோகத்தில் யோகத்தைப் பற்றியது.

௯. இப்பொழுது என்னில் சித்தத்தை ஸ்திரமாய்ப் பதியச்செய்யக் கூடாதாயின், அப்பொழுது என்னை அப்பியாச யோகத்தால் அடைய இச்சி, தனஞ்சய!

[வி] என்னை = பரமாத்மாவை

அப்பியாச யோகம் எட்டாவது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

௰. அப்பியாச யோகத்திலும் சாமர்த்தியம் இல்லாதிருப்பின், எனக்கு உரிய கர்மத்தை மேற்கொண்டவனாயிரு. அப்படியே என் நிமித்தம் கர்மங்களைச் செய்கிறவனாய்ச் சித்தியை அடைவாய்.

[வி] கர்மம் = கர்மம், பக்தி, ஞானம்

௰௧. இப்பொழுது இதையும் செய்யச் சாமர்த்தியமில்லாதிருப்பின், அப்பொழுது எனது யோகத்தை ஆச்ரயித்திருக்கிறவனாய், மனம் அடங்கியவனாய்ச் சர்வ கர்மபலத்தியாகத்தைச் செய்.

[வி] எந்தெந்தக் கர்மத்தைச் செய்யச் சம்பவித்தாலும், அதைப் பிரம்ம திருஷ்டியின்படிச் செய்.

௰௨. ஏனெனில், ஞானம் அப்பியாசத்திலுஞ் சிறந்தது. ஞானத்திலும் தியானஞ் சிறந்தது. தியானத்திலும் கர்மபலத்தியாகஞ் (சிறந்தது). தியாகத்தினால் உடனே சாந்தி.

[வி] சிறந்தது = சாதனம்

ஞானம்அப்பியாசத்திலுஞ் சிறந்தது } = ஞானம் அப்பியாசத்திற்குச் சாதனம்

ஞானத்திலும் தியானஞ் சிறந்தது } = பக்தி ஞானத்திற்குச் சாதனம் (தியானம் = பக்தி)

தியானத்திலும்கர்மபலத்தியாகம் சிறந்தது } = கர்ம பலத் தியாகம் பக்திக்குச் சாதனம்

தியாகம் = பிரம்மார்ப்பணம்

தியாகத்தால் உடனே சாந்தி } = பிரம்மார்ப்பணத்தால் மோக்ஷம்

இச்சுலோகம் முதலாகப் பகவத் பக்தனின் இலக்ஷணம் கூறப்படுகிறது.

௰௩. சர்வ ஜீவராசிகளிடத்தும் வெறுப்பிலாத் தன்மை, சினேகப்பான்மை, அப்படியே கருணையும், மமகாரமின்மை, அகங்காரமின்மை, சுக துக்கங்களிற் சமபாவனை, சகிக்குந்தன்மை.

[வி] சர்வஜீவர்களிடத்தும் வெறுப்பிலாத் தன்மை } = இது சுத்த சத்துவகுணமுடையவனுக்கே அமையும்

சிநேகப்பான்மை = மைத்ரீ = சர்வ சீலத்வம்

கருணை = தக்ஷிணாமூர்த்தியின் கருணை யாவரும் மோக்ஷமடைய வேண்டுமென்ற விருப்பம்

மமகாரமின்மை = எனதென்ற தன்மை இல்லாமை. ஆனால் நான் பிரம்மம் என்ற அகங்காரமுண்டு

அகங்காரமின்மை = உபாசக, உபாசிய சூன்யஸ்திதி

சுகதுக்கங்களிற்சமபாவனை = சுகதுக்கங்களைப் பிரம்மமாய்க் காண்டல்

சகித்தல் = யோகி பிரம்மானந்தத்தை அடையும் வரையில் யோகாக்நியினால் தேகந் தகிக்கப்படாமல் காப்பாற்றவேண்டும். இதற்கு உபாயம் யோகத்தைச் சாந்தமாய் அநுஷ்டிக்கவேண்டியது

கச. எப்பொழுதும் திருப்தி உள்ளவன் யோகி. தன்னடக்கமுள்ளவன், திடநிச்சயம் உள்ளவன், என்னிடத்தில் மனதையும் புத்தியையும் அர்ப்பித்தவன் எவனோ அந்த எனது பக்தன் எனக்குப் பிரியன்.

கரு. எவனிடமிருந்து உலகம் கலங்குகிறதில்லையோ, உலகிலிருந்து எவன் கலங்குகிறதில்லையோ, சந்தோஷம், பொறாமை இன்மை, பயம் (ஆகிய இவற்றின்) கலக்கத்தினின்று விடுபட்டவன் எவனோ அவன் எனக்குப் பிரியன்.

கசு. அபேக்ஷை யில்லாதவன், சுத்த முள்ளவன், சாமர்த்திய முள்ளவன், உதாசினன், பயமில்லாதவன், சர்வயத்தனங்களையும் விட்டவன் எவனோ அந்த எனது பக்தன் எனக்குப் பிரியன்.

[வி] உதாசீனன் = வெறுப்பு விருப்பில்லாதவன்

கஎ. எவன் சந்தோஷிக்கிற தில்லையோ, வெறுக்கிற தில்லையோ, துக்கிக்கிறதில்லையோ, ஆசைப்படுகிறதில்லையோ, சுபாசுபங்களை விட்டவன் ஆகிய பக்திமான் எவனோ அவன் எனக்குப் பிரியன்.

[வி] சுபாசுபம் = சுபம் + அசுபம்
சுபம் = நல்லது
அசுபம் = கெட்டது, தீயது

இதனால் சர்வ துவந்துவங்களையும் விடவேண்டுமென்று கண்டுகொள்க.

கஅ. சத்ருவினிடத்தும், மித்ருவினிடத்தும் சமமானவன். அப்படியே மானத்திலும் அவமானத்திலும், சீதோஷ்ண சுகதுக்கங்களிலும் சமமானவன், பற்றற்றவன்.

[வி] சமமானவன் = பிரம்மபுத்தியுள்ளவன்

இச்சுலோகத்தின் கருத்து துவந்துவபுத்தி நீக்கமும் அத்துவித திருஷ்டி அடைதலுமேயாம்.

ககூ. நிந்தையிலும், ஸ்துதியிலும் சமமானவன். மௌனி. எதனாலும் திருப்தி அடைந்தவன். வீடில்லாத

வன். புத்தி நிலைக்கப்பெற்றவன். பக்திமான் ஆகியநான் எனக்குப் பிரியன்

[வி] மௌனி = பிரம்மதத்துவ உபதேசி
பக்திமான் = யோகபக்தன்

உ௦. ஆனால் சிரத்தை யுடையவர்கள், உன்னைப் பரம் பொருளாய்க் கருதியவர்கள், பக்தர்கள் ஆகிய எவர்கள் இத்தர்மத்தோடு கூடிய அமிர்தத்தைச் சொல்லப்பட்ட பிரகாரம் உபாசிக்கிறார்களோ அவர்கள் எனக்கு அதிகப் பிரீதியுடையவர்கள்.

[வி] அமிர்தம் = பிரம்மவிஞ்ஞானம்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே பக்தியோகம் என்னும் பன்னிரண்டாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—பரமாத்ம பக்தி என்றும் அக்ஷர உபாசனை என்றும் பக்தி இருவகைப்படும். அக்ஷர உபாசனை பிரகிருதியில் பிரம்மத்தை வைத்து உபாசித்தல். பரமாத்மபக்தி கீதையின் கருத்து. இது யோகபக்தி எனப்படும். (க-ரு) யோகபக்தி யோகத்தில் கர்மம், யோகத்தில் ஞானம், யோகத்தில் யோகம் என்று நான்கு வகைப்படும் (கூ-அ) யோகபக்தியில் சாமர்த்தியமில்லாதவனுக்கு அப்பியாசயோகம் சாதனம். அப்பியாசயோகத்தில் சாமர்த்திய மில்லாதவனுக்கு

கர்மம் பக்தி ஞானம் சாதனம். கர்மம் பக்தி ஞானத்திலும் சாமர்த்திய மில்லாதவனுக்குச் சர்வ கர்மங்களின் பலனைத் தியாகஞ் செய்தல் சாதனம். (கூ-கக) ஞானம் அப்பியாசத்திற்குச் சாதனம். பக்தி ஞானத்திற்குச் சாதனம், கர்மபலத்தியாகம் பக்திக்குச் சாதனம். சர்வத்தையும் தியாகம் செய்வதால் மோக்ஷப் பிராப்தி (கஉ) பகவத்பக்தனின் இலக்ஷணம். பதின்மூன்றுமுதல் இருபதாவது சுலோகம் இறுதியாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அரும்பதங்கள்

அக்ஷரஉபாசனை = பிரகிருதியில் பிரம்மத்தை வைத்து உபாசித்தல்.
பரமாத்ம பக்தி = அவ்யக்தக்கூடத்தின் தக்ஷிணபாகத்திலுள்ள பிரம்மத்தின் பக்தி.
பகவத் பக்தி = யோகபக்தி.

பன்னிரண்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

பதின்மூன்றாவது அத்தியாயம்

க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

அர்ச்சுனன் சொன்னான் :—

௧. பிரகிருதியையும், புருஷனையும், அப்படியே க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ரக்ஞனையும், ஞானத்தையும், ஞேயத்தையும் (ஆகிய இவற்றை) அறிய இச்சிக்கிறேன், கேசவ!

(இச்சுலோகம் பின்னர்ச் சேர்க்கப்பட்டதென்று பலர் கருதுகின்றனர்).

[வி] க்ஷேத்ரம் = பஞ்ச கோசங்களின் சமுதாயம், இந்திரியக்கூடம், மனக்கூடம், மகத்கூடம், அவ்யக்தக் கூடம், ஆகிய இவற்றின் சமுதாயம். அவ்யக்தம், மகத், அகங்காரம், மகாபூதங்கள் ஐந்து, மனம் ஒன்று, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, ஸ்தூல பூதங்கள் ஐந்து ஆகிய இருபத்துநான்கின் சமுதாயம். மேலும் இச்சை, த்வே

ஷம், சுகம், துக்கம், சேர்க்கை உணர்ச்சி, திருதி.

க்ஷேத்ரம் = தேகம்

க்ஷேத்ரக்ஞன் = தேகி, தேகத்தை யுடையவன், க்ஷேத்ரத்தை அறிகிறவன்.

ஞானம் = க்ஷேத்ரத்தையும், க்ஷேத்ரக்ஞனையும் பிரித்து அறிகிற அறிவு.

ஞேயம் = அறியவேண்டிய பொருள், பிரம்மம்.

பிரகிருதி = அவ்யக்தம் = ஆதி ஜடப்பொருள் = முக்குணரூபமாக உள்ளது. இதிலிருந்து தோன்றியவை மகத், அகங்காரம், மகாபூதங்கள் ஐந்து, மனம் ஒன்று, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள், ஐந்து. ஸ்தூல பூதங்கள் ஐந்து.

புருஷன் = பரமாத்மா

௧. இந்தச் சரீரம், கௌந்தேய! க்ஷேத்ரம் என்று சொல்லப்படுகிறது. இதனை எவன் அறிகிறானோ, அவனை க்ஷேத்ரக்ஞன் என்று அவற்றை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

௨. சர்வக்ஷேத்ரங்களிலும் (உள்ள) க்ஷேத்ரக்ஞனை நானாகவும் அறி. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களின் ஞானம் எதுவோ, அது ஞானம் என்பது எனது மதம்.

[வி] கௌந்தேய = குந்தி புத்திரன்

௩. அந்த க்ஷேத்ரம் எது? எத்தன்மையது? எவ்விகாரமுடையது எதினின்றும் அது (உற்பத்தியானது?) அவன் எவனும், எவ்வல்லபத்தையுடையவனுமிருக்கிறுனே அதைச் சுருக்கமாய் என்னிடம் கேள்.

௪. ரிஷிகளால் அநேக விதமாய்ப் பாடப்பெற்றது? அநேகவித சந்தஸ்களாலும், தனித்தனியாகவும், அப்படியே பிரம்ம ஸூத்திர பதங்களாலும் ஏதுவோடும், நிச்சயத்தோடும் (பாடப்பெற்றது).

[வி] தனித்தனியாகவும் = பிருதிவி, அப்பு, தேயு முதலிய பூதங்களும், ச்ரோத்ரம், நேத்ரம் முதலிய இந்திரியங்களும், மற்றும் தத்வங்களும், ஆத்மாவும்.

பிரம்ம ஸூத்திர பதங்கள் = பிரம்மத்தைக் குறிக்கும்சொற்கள்.

ஏது = அநுமானப் பிரமாணம்

நிச்சயம் = அநுபவம்

௫. மகாபூதங்கள், அகங்காரம், புத்தி, அப்படியே அவ்யக்தமும், இந்திரியங்கள் பத்தும், மனம் ஒன்றும், பஞ்சேந்திரிய விஷயங்களும்.

[வி] மகாபூதங்கள் = தன்மாத்திரைகள், ஸூக்ஷ்மபூதங்கள் ஐந்து

அகங்காரம் = அகங்காரம்

புத்தி = மகதத்துவம்

அவ்யக்தம் = அவ்யக்தம் (முக்குண ரூபப் பிரகிருதி)

இந்திரியங்கள் பத்து = ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து

ஒன்று = மனம்

பஞ்சேந்திரிய விஷயங்கள் = ஸ்தூலபூதங்கள் ஐந்து

இச்சுலோகத்தில் தத்துவங்கள் சாங்கிய நூலின்படிச் சொல்லப்பட்டிருக்கின்றன.

௬. இச்சை; துவேஷம், சுகம், துக்கம், சங்காதம், பிரக்ஞை, திருதி, ஆகிய விகாரங்களோடு இந்த க்ஷேத்ரம் சங்கிரகமாய்ச் சொல்லப்பட்டது.

[வி] இச்சை, துவேஷம் = பிராணமய கோசத்தின் தர்மங்கள்

சுகம், துக்கம் = மனோமய கோசத்தின் தர்மங்கள்

சங்காதம் = சேர்க்கை, அன்னமயகோசம் ஸ்தூலபஞ்சபூதங்களின் சேர்க்கை

பிரக்ஞை = ஆனந்தமய கோசத்தின் தக்ஷிண பாகத்தில் உள்ள உணர்ச்சி

திருதி = விக்ஞானமய கோசத்தின் உத்தர பாகத்தில் உள்ள அகங்காரத்தின் சக்தி

எ. அமானித்வம், அதம்பித்வம், அஹிம்சா, சகித்தல், யதார்த்தம், ஆசாரியனை உபாசித்தல், சுத்தம், நிலையிற் பிரியாமை, ஆத்ம அடக்கம்.

[வி] அமானித்வம் = அ = இன்மை, மானி = அளவு. ஆத்மாவை எல்லைக் குட்படுத்தாமை. ஆத்மாவை எல்லைக் குட்படுத்துவதினால் ஞானத்திற்குக் குறைவு ஏற்படுகிறது

அதம்பித்வம் = தனது யோக்யதையை அல்லது தன் நிலைமையைப் பிரசுரம் செய்யாமை

அஹிம்சை = தனது தேகத்தை விரதாதிகளால் இம்சிக்காது காப்பாற்றல். ஏனெனில், இத்தேகம் ஞானத்திற்குச் சாதனம். இந்தத் தேகம் பிரம்மவனம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சூரியமண்டல மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தேகம் இருந்தால் மனிதன் தனக்கு வேண்டியவை யெல்லாம் அடையக்கூடும். இத்தேகம் சர்வ தர்ம சாதனம்

சகித்தல் = பிரம்ம விக்ஞானத்தையடைவேன் என்ற நிச்சயத்தால் சர்வத்தையுஞ் சகித்துக்கொண்டு பிரம்ம விக்ஞானம் அடையும் வரையில் பொறுமையோடிருத்தல்

யதார்த்தம் = பக்ஷபாதமின்மை. ஆத்ம நோக்கு உடையவனுக்கு இத் தன்மை அடையும்

ஆசாரியனை உபாசித்தல் = ஆசாரியனின் பக்கத்தில் இருத்தலும், இரகசிய ஞான அர்த்தங்களை வினவுதலும்.

சுத்தம் = ஞானத்தினால் பரிசோதித்துச் சரி என்று நிச்சயம் செய்யப்பட்ட விஷயத்தில் அன்பை வைத்தலும், உறுதியாய் நிற்றலும்.

நிலையில் பிரியாமை = புத்தி மகத்கூடத்தை விட்டு மனக்கூடத்திற்கு இறங்காதிருத்தல். புத்தி மனக்கூடத்திலிருத்தல் ஞானத்திற்குக் குறைவு.

ஆத்ம அடக்கம் = தன்னடக்கம் = தேகேந்திரிய அந்தக் கரணத்தின் அடக்கம்.

அ. இந்திரிய விஷயங்களில் வைராக்கியம் அப்படியே அகங்காரம் இன்மையும், பிறப்பு, இறப்பு, மூப்பு, வியாதி ஆகிய இவற்றின் துக்கத்தையும், தோஷத்தையும் காண்டல்.

[வி] வைராக்கியம் = விருப்பின்மை

அகங்காரம் இன்மை } = சகலத்திற்கும் பரமாத்மா கர்த்தா என்ற எண்ணம்.

௯. பற்றின்மை, புத்திர தார கிருகாதிகளில் அபிமானமின்மை, பிரியாப்ரியம் சம்பவித்தலில் என்றும் சமசித்தமும்.

[வி] பற்றின்மை. = விருப்பின்மை
அபிமானமின்மை } = தனதென்ற பாவமின்மை
பிரியாப்ரியம் = பிரியம் = அப்பிரியம்
சமசித்தத்வம் = பிரம்மம் என்ற எண்ணம்

௧௦. என்னிடத்தில் அநந்ய யோகத்தோடும் கூடிய பிறழாதபக்தியும், தனியிடத்தே வசித்தலும், ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மையும்.

[வி] அநந்ய யோகம் } = ஏகத்துவ தியானம். உபாசிய வஸ்துவில் மனமும் புத்தியும் ஒருமித்திருத்தல்.
தனியிடத்தே வசித்தல் } = ஏகாந்தவாசம். மனத்தின் ஏகாக்ர ஸ்திதி.
ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மை } = அஞ்ஞானமும், அஞ்ஞானவேதுக்களின் நீக்கமும்.

௧௧. ஆத்ம ஞானத்தில் என்றும் நிலைபெயராது நிற்றல், தத்துவ ஞானார்த்தத்தைக் காண்டல் (ஆகிய இவை)

ஞானமென்று சொல்லப்படுகிறது. இதனினும் எது அன்னியமோ (அது) அஞ்ஞானம்.

௧௨. அறியவேண்டிய பொருள் எதுவோ, எதை யறிந்து அமிர்த தத்துவத்தை அனுபவிக்கிறேனோ, அதை யுரைப்பேன். அநாதிமத் பரப்பிரம்மம் சத்து அன்று, அசத்து அன்று (என்று) சொல்லப்படுகிறது.

[வி] அம்ருதம் = பிரம்ம விக்ஞானம்
அநாதிமத்பரப்பிரம்மம் } = உத்தர மதத்திற்கு மேலான பிரம்மம்
ஆதிமத் = தக்ஷிணமதத்
அநாதிமத் = உத்தரமதத்
சத்து = உள்பொருள் (கடம், படம்)
அசத்து = இல் பொருள் (முயல் கொம்பு, மலடி மகன்)

௧௩. அது எங்கும் கைகளையும், கால்களையும், எங்கும் கண்களும், சிரசுகளும், முகங்களும், எங்கும் காதுகளும் (உடையது) உலகில் சர்வத்தையும் வியாபித்து நிலை பெற்றிருக்கிறது.

[வி] இந்திரியங்கள் இல்லாமல் பார்த்தல், கேட்டல், அறிதல் என்ற சர்வ ஞானத்தோடும் கூடியது.

௧௪. எல்லா இந்திரிய குணங்களிலும் பிரகாசமாயிருப்பது, எல்லா இந்திரியங்களும் இல்லாதது, சம்பந்தம்

இல்லாதது. ஆனால் சர்வத்திற்கும் ஆதாரம் குணமில்லாதது, ஆனால் குணங்களை அனுபவிப்பது.

[வி] சம்பந்தம் இல்லாதது = அசங்கன் சேர்க்கை யற்றது
ஆதாரம் = பிரம்மம், ஆதாரம். மற்றெல்லாப் பொருள்களும் ஆதேயம்

கரு. பூதங்களுக்கு உள்ளும் புறம்புமாய் (உள்ளது) அப்படியே சரமும் அசரமுமாய் (உள்ளது) சூட்சுமமாதலின் அறிய முடியாதது. தூரத்திலும் சமீபத்திலும் உள்ளதும் அது.

[வி] பூதங்கள் = தாவர, ஜங்கமங்கள்
சரம் = சங்கமம், அசைவுள்ள பொருள்
அசரம் = தாவரம், அசைவற்ற பொருள்
சூட்சுமம் = நுண்ணியது
தூரத்தில்உள்ளது = அஞ்ஞானிகளுக்குப் பிரம்மம் தூரத்திலுள்ளது
சமீபத்திலுள்ளது = ஞானிகளுக்கு சமீபத்திலுள்ளது
அறிய முடியாதது = மனத்திற்கும், புத்திக்கும் எட்டாதது

கசு. பூதங்களிடத்துப் பிரிவடையாதது. ஆனால், பிரிவடைந்ததுபோலும் இருப்பது. அந்த அறியவேண்டிய பொருள் பூதங்களுக்கு ஆதாரமாயும், சங்காரம் செய்வதாயும், சிருஷ்டிப்பதாயும், உள்ளது.

105

[வி] பிரிவடையாதது = உத்தாமகத்தில்
பிரிவடைந்ததுபோலும் இருப்பது = மனக் கூடத்திலும், இந்திரியக் கூடத்திலும்

கஎ. ஜோதிகட்கெல்லாம் அது ஜோதி, இருளுக்கு அப்பாற்பட்டது (என்று) சொல்லப்படுறது. ஞானமும், ஞேயமும ஞானத்தினு லடையப்படுவதும் எல்லோரின் இருதயத்தில் இருப்பதாயுமுள்ளது.

[வி] ஜோதிகட்கெல்லாம் அதுஜோதி = சூரியன், சந்திரன் அக்னி ஆகிய இம்மூன்று ஜோதிகளையும் பிரம்மம் பிரகாசிக்கப்பண்ணும் ஜோதி. புத்தி, மனம், இந்திரியம் ஆகிய மூன்று ஜோதிகளையும் பரமாத்மா பிரகாசம் செய்விக்கிற ஜோதியாயிருக்கிறார்.
இருள் = பிரகிருதி
ஞானம் = அறிவு
ஞேயம் = அறியப்படும் பொருள்
அறியப்படுவதும் = ஞேயம் நீங்கலாக யோகியினால் அறியப்படுகிற ஏனையபொருள்கள் எல்லாம்.

கஅ. இப்படி க்ஷேத்திரமும் அப்படியே ஞானமும், ஞேயமும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டன. என் பக்தன் இதனையறிந்து என் தன்மையை அடைகிறான்.

௧௯. பிரகிருதியும், புருஷனும் ஆகிய இரண்டும் அநாதி (என்று) அறி. அப்படியே விகாரங்களையும், குணங்களையும் பிரகிருதியிலிருந்து உற்பத்தியுடையவை (என்று) அறி.

[வி] பிரகிருதி = முக்குண ரூப அனாதி ஜடவஸ்து = அவ்யக்தம்
புருஷன் = பரமாத்மா அல்லது ஜீவன்
விகாரங்கள் = பிரகிருதியினின்றும் தோற்றிய பூதங்களும், தத்துவங்களும்

௨0. காரிய காரணங்களை உண்டுபண்ணுவதில் பிரகிருதி ஹேது (என்று) சொல்லப்படுகிறது. புருஷன் சுக துக்கங்களை அநுபவிப்பதில் ஹேது (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] காரியம் = தேகம்
காரணங்கள் = இந்திரியங்கள்

௨௧. பிரகிருதியை இடமாய்க் கொண்ட புருஷன் பிரகிருதியில் உண்டான குணங்களை அநுபவிக்கிறான். குணங்களில் பற்று இவனுக்கு சத்து, அசத்து, யோனிகளில் ஜன்மங்களுக்குக் காரணம்.

[வி] சத் யோனி – புண்ணிய யோனி
அசத் யோனி = பாபயோனி

௨௨. கூடநின்று பார்ப்பவன், ஆமோதிப்பவன், ஆதாரமாய் உள்ளவன், அநுபவிக்கிறவன், மகேசுவரன்,

பரமாத்மா என்றும் இத்தேகத்திலுள்ள பரமபுருஷன் சொல்லப்படுகிறான்.

[வி] ஆதாரமாயுள்ளவன் = சர்வத்தையும் தாங்குபவன். (பொருள்கள் எல்லாம் ஆதேயம், பரமாத்மா ஆதாரம்)

௨௩. எவன் இப்படிப் புருஷனையும், பிரகிருதியையும் குணங்களோடுகூட அறிகிறானோ, அவன் எப்படி இருந்தாலும் மீண்டும் பிறக்கிறானில்லை.

[வி] புருஷன் = பரமாத்மா அல்லது ஜீவாத்மா
பிரகிருதி = அவ்யக்தம்
பிறக்கிறானில்லை = மகத்கைவல்யம் பெறுகிறான் = ஆத்மஞானம் அடைகிறான்.

௨௪. சிலர் தியானத்தினால் மனத்தகத்தில் ஆத்மாவைப் புத்தியினால் காண்கிறார்கள். மற்றவர்கள் சாங்கிய யோகத்தினாலும், இன்னும் ஏனையோர்கள் கர்மயோகத்தினாலும் (காண்கிறார்கள்).

[வி] சாங்கிய யோகம் = தத்துவ ஆராய்ச்சி

௨௫. இன்னும் மற்றவர்கள், இப்படி அறியாதவர்களாய்ப் பிறரிடம் கேட்டு உபாசிக்கிறார்கள். அவர்களும் கேட்டதைப் பரகதியாய்க்கொண்டு, இறப்பைக் கடந்தே விடுகிறார்கள்.

[வி] பரகதி = மேலான மார்க்கம்
இறப்பு = அஞ்ஞானம்

௨௬. யாதொரு ஸ்தாவர, ஜங்கமப் பொருள் உண்டா கிறதோ அது க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞருடைய சேர்க்கையால் (என்று) அறி, பாதரில் சிறந்தோனே!

[வி] ஸ்தாவரம் = அசைவற்றது
சங்கமம = அசைவுள்ளது

௨௭. சர்வ பூதங்களில் சமமாய் வீற்றிருக்கின்ற பரமேசுவரனை, நாசம் அடைவனவற்றுள், நாசம் அடையாதவனை எவன் காண்கிறானோ, அவன் காண்கிறான்.

[வி] சமமாய்இருக்கிறஈசுவரன் = மகத்மனம், இந்திரியக்கூட்டங்களில் சமமாய் இருக்கிறவன்

௨௮. எங்கும் சமமாய் வீற்றிருக்கிற ஈசுவரனை சமம் (என்று) காண்கிற (அவன்) தன்னைத் தன்னால் இம்சிக்கிறானில்லை. அதனால் பரகதி அடைகிறான்.

[வி] இம்சிக்கிறானில்லை = வியஷ்டி சொருபமாய்த் தன்னைப் பார்க்கிறானில்லை
பரகதி = மோக்ஷம்

௨௯. பிரகிருதியினாலேயே கர்மங்கள் எவ்வகையிலும் செய்யப்படுகின்றன (என்றும்) அப்படியே ஆத்மா அகர்த்தா(என்றும்) எவன் காண்கிறானோ, அவன் காண்கிறான்.

௩0. எப்பொழுது பூதங்களின் வெவ்வேறான பாவத்தை ஒன்றிலிருப்பதாகவும், அதினின்றே பரவுவதாயும் காண்கிறானோ, அப்பொழுது பிரம்மமாகிறான்.

[வி] பூதங்கள் = ஜீவர்கள்
பாவம் = இருப்பு

௩௧. அனாதியாதலால், நிர்க்குணமாதலால், இந்த பரமாத்மா அவிநாசி, சரீரத்திலிருந்தாலும் கௌந்தேய! செய்கிறானில்லை, பந்தப்படுகிறானில்லை.

[வி] நிர்க்குணம் = சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களு மற்றது.

அவிநாசி = நாசமில்லாதது

௩௨. எப்படி எங்குமுள்ள ஆகாசம் சூட்சுமமாதலின் பந்தப்படுகிறதில்லையோ, அப்படித் தேகத்தில் எங்குமுள்ள ஆத்மா பந்தப்படுகிறதில்லை.

[வி] சூட்சுமம் = நுண்ணியது. மனத்திற்கும் புத்திக்கும் எட்டாதது

௩௩. எப்படி ஒரே சூரியன் இவ்வுலக முழுவதையும் பிரகாசம் செய்கிறானோ, அப்படி க்ஷேத்ரத்தை யுடையவன் க்ஷேத்ர முழுவதையும் பிரகாசம் செய்கிறான், பாரத!

௩௪. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களின் இந்தப் பேதத்தையும், பூதங்கள் பிரகிருதியினின்று விடுபடுவதையும் எவர்கள் அறிகிறார்களோ, அவர்கள் பரத்தை அடைகிறார்கள்.

[வி] பூதங்கள் = ஜீவர்கள்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன

சம்வாதத்திலே, க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாகயோகம் என்னும் பதின்மூன்ருவது அத்தியாயம்.

சங்கிரகம்:—க. க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞர்களைப் பற்றியது. உ. பரமாத்மாவையும் ஞானத்தையும் பற்றியது. ௩-௬. க்ஷேத்திரத்தைப் பற்றியது. ௭-கக. ஞான சாதன தர்மங்களைப் பற்றியது. க௨-க௭. ஞேயம் ஆகிய பிரம்மத்தைப் பற்றியது க௯-௨௨. பிரகிருதி புருஷர்களைப் பற்றியது. புருஷன் = பரமாத்மா அல்லது ஜீவாத்மா, ௨௩-௨௮. சாதனங்கள். ௨௭-௩௪. அநுபவ வாக்கியங்கள்.

அரும்பதங்கள்.

க்ஷேத்ரம்	= தேகம்
க்ஷேத்ரக்ஞன்	= தேகி
ஞானம்	= க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞர்களைப் பகுத்தறியும் விவேகம்.
ஞேயம்	= அறியவேண்டிய பொருள், பிரம்மம்.
பிரகிருதி	= முக்குணரூப பிரகிருதி = அவ்யக்தம்.
புருஷன்	= பரமாத்மா

பதின்மூன்ருவது அத்தியாயம்
முற்றிற்று.

பதினான்காவது அத்தியாயம்

குணத்ரய விபாக யோகம்

க. ஞானங்களுள் பரம உத்தம ஞானத்தை விரிவாய்க் கூறுவேன். அதையறிந்து சர்வ முனிவர்களும் மேலான சித்தியை அதனால் அடைந்தார்கள்.

[வி] சித்தி = ஞான சித்தி

உ. இந்த ஞானத்தை அடைந்து எனது தன்மையை அடைந்தார்கள். சிருட்டியிலும் பிறக்கிறார்களில்லை, பிரளயத்திலும் வருந்துகிறார்களில்லை.

[வி] என் தன்மை = பிரம்ம தர்மம்

௩. எனது யோனி மகத் பிரம்மம். அதில் கர்ப்பத்தை நான் வைக்கிறேன். அதனால் சர்வ பூதங்களின் ஜன்மம் உண்டாகிறது, பாரத!

[வி] மகத் பிரம்மம் = உத்தர மகத்கூடம், விக்ஞானமய கோசத்தின் உத்தரபாகம்

கர்ப்பத்தை = ஜீவாத்மாவை

௪. சர்வயோனிகளிலும் கௌந்தேய! எவ்வுருவங்கள் உண்டாகின்றனவோ, அவற்றிற்கு மகத் பிரம்மம் யோனி. நான் பீஜத்தைக் கொடுக்கும் பிதா.

[வி] யோனி = உற்பத்தி ஸ்தானம்
பீஜம் = ஜீவாத்மா

௫. சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் பிரகிருதியினின்றும் உண்டானவை. நாசமில்லாத் தேகியைத் தேகத்தில் பந்தப்படுத்துகிறது, மகாபாகு!

௬. அவற்றுள் சத்துவம் நிர்மலமானதால் பிரகாசமானது. நோயற்றது. சுகப்பற்றினுலும், ஞானப்பற்றினுலும் பந்தப்படுத்துகிறது, பாபமற்றோனே!

[வி] நிர்மலம் = மலரகிதம், சொச்சம்
பிரகாசமானது = ஆத்மாவைக் காண்பிக்கும் தன்மையுள்ளது
ரஜஸ் தமஸ் = ஆத்மாவை மறைக்குந் தன்மையுடையன

௭. ரஜஸ், காமவடிவம், இச்சைக்கும் பற்றுக்கும் உற்பத்தி ஸ்தானம் (என்று) அறி. அது, கௌந்தேய! கர்மப் பற்றினுல் தேகியைப் பந்தப்படுத்துகிறது.

௮. ஆனுல், தமஸ், அஞ்ஞானத்தினின்றும் உண்டானதாக அறி. சர்வ தேகிகளையும் மோகிக்கப் பண்ணுவது. அஜாக்கிரதை, சோம்பல், நித்திரை (ஆகிய இவற்ருல்) அது (தேகியை) பந்தப்படுத்துகிறது, பாரத!

௯. சத்துவம் சுகத்தில் பற்றச் செய்கிறது. ரஜஸ் காமத்தில், பாரத! ஆனுல், தமஸ் ஞானத்தை மூடி அஜாக்கிரதையில் பற்றச் செய்கிறது.

௧௦. ரஜஸையும், தமஸையும் சத்துவம் அடக்கி வியாபிக்கின்றது, பாரத! அப்படியே ரஜஸ் சத்துவத்தையும், தமஸையும்; அப்படியே தமஸ் சத்துவத்தையும் ரஜஸையும்.

௧௧. இத்தேகத்தில் சர்வதுவாரங்களினும் ஞானப் பிரகாசம் எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுது சத்துவம் அதிகரித்திருக்கிறதென்று அறியவேண்டும்.

[வி] துவாரங்கள் = இந்திரியத் துவாரங்கள்
ஞானப்பிரகாசம் = ஞானமாகிய பிரகாசம்

௧௨. லோபம், பிரவிர்த்தி, கர்மங்களின் ஆரம்பம், ஓய்வின்மை, ஆசை ஆகிய இவைகள் ரஜஸ் அதிகரித்த விடத்தில் உண்டாகின்றன, பரதரில் சிறந்தோனே!

[வி] லோபம் = பொருள் இச்சை = கார்ப்பண்ணிய தோஷம் = அற்ப விஷயங்களில் இச்சை
பிரவிர்த்தி = உலக விஷயங்களில் முயற்சி. பிரவிர்த்தி உள்ளவன் ஆத்மாவைக் காணமாட்டான்.

௧௩. அப்பிரகாசம், அப்பிரவிர்த்தி, அஜாக்கிரதையும் அப்படியே மோகம் ஆகிய இவைகள் தமஸ் அதிகரித்த இடத்தில் உண்டாகின்றன, குருநந்தன!

[வி] அப்பிரகாசம் = பிரகாசமின்மை

அப்பிரவிர்த்தி = பிரவிர்த்தியின்மை
அ = இன்மைப்பொருளைக் குறிக்கிறது

௧௪. ஆனால், எப்பொழுது சத்துவம் அதிகரித்த விடத்தில் தேகாபிமானி மரணமடைகிறானோ, அப்பொழுது ஞானபோதம் உடையவர்களின் மாசற்ற உலகங்களை யடைகிறான்.

[வி] போதம் = அறிவு
தேகாபிமானி = தேக + அபிமானி = தேகத்தில் அபிமானம் உடையவன்.

௧௫. ரஜஸில் மரணம் அடைந்து கர்மப்பற்றுள்ளவர்களிடம் ஜனிக்கிறான். அப்படியே தமஸில் மரணம் அடைந்து மூடயோநிகளில் ஜனிக்கிறான்.

[வி] மூடயோநிகள் = பசு பக்ஷியாதிகள்

௧௬. சத்கர்மத்திற்கு நிர்மலம் ஆகிய சாத்விகம் பலன் (என்று) சொல்லுகிறார்கள். ஆனால், ரஜஸுக்குத் துக்கம் பலன், தமஸுக்கு அஞ்ஞானம் பலன்.

௧௭. சத்துவத்திலிருந்து ஞானம் உண்டாகிறது. அப்படியே ரஜஸிலிருந்து லோபமும், தமஸிலிருந்து அஜாக்ரதையும், மோகமும் உண்டாகின்றன. அப்படியே அஞ்ஞானமும்.

௧௮. சத்துவத்தில் நிலைத்தவர்கள் மேலே செல்லுகிறார்கள். ராஜஸர்கள் மத்தியில் நிற்கிறார்கள். கீழ்ப்பட்ட

குணவிருத்தியில் நிலைபெற்ற தாமஸர்கள் கீழே செல்லுகிறார்கள்.

[வி] மேல் = மகத்கூடம்
மத்தி = மனக்கூடம்
கீழ் = இந்திரியக்கூடம்

௧௯. குணங்களுக்கு அந்நியமான கர்த்தாவை எப்பொழுது காண்கிறவன் காண்கிறதில்லையோ, குணங்களுக்கு மேலானதைக் காண்கிறானோ, அவன் என் தன்மையை அடைகிறான்.

[வி] இச்சுலோகம் சுத்த சத்துவகுணம் அடையப்பெற்றவனின் தன்மையைச் சொல்லுகிறது.

௨௦. தேகி, தேகத்தின் உற்பத்திக்கிடமாகிய இம்முக்குணங்களையும் கடந்து பிறப்பு, இறப்பு, மூப்பு, துன்பங்களிலிருந்து விடுபட்டு அமிர்தத்தை அநுபவிக்கிறான்.

[வி] அமிர்தம் = பிரம்ம விஞ்ஞானம்

அர்ஜுனன் சொன்னான்:—

௨௧. இம்மூன்று குணங்களையும் கடந்தவனின் இலக்ஷணம் என்ன? பிரபுவே! எவ்வித ஆசாரமுடையவன், எப்படி இம்மூன்று குணங்களையும் தாண்டிவிடுகிறான்.

[வி] எப்படித்தாண்டிவிடுகிறான் = எச்சாதனத்தைக்கொண்டுகடந்துவிடுகிறான்.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௨௨. பிரகாசமும், பிரவிர்த்தியும் அப்படியே மோகமும் சேர்ந்த விடத்து வெறுப்பதில்லை, பாண்டவ! நீங்கிய விடத்து நாடுவதில்லை.

[வி] பிரகாசம் = சத்துவ குணத்தின் காரியம்
பிரவிர்த்தி = ரஜோகுணத்தின் காரியம்
மோகம் = தமோகுணத்தின் காரியம்

௨௩. உதாசீனன் போலிருப்பவனாய், குணங்களால் எவன் அசைக்கப்படுகிறதில்லையோ, குணங்கள் அசைகிறதென்றே எவன் அந்நியமாய் நின்று அசைகிறதில்லையோ.

[வி] உதாசீனன் = விருப்பு, வெறுப்பு அற்றவன், ஒரு பக்ஷத்தையும் சாராதவன்
அந்நியமாய் நின்று = குணங்களுக்குப் புறம்பாய் நின்று

௨௪. துக்கத்திலும், சுகத்திலும் சமத்துவம் உள்ளவன், தன்னிடத்தில் நிலைபெற்றவன், மண்ணாங்கட்டி கல் தங்கத்தைச் சமமாய்க் கொண்டவன், பிரியத்திலும் அப்பிரியத்திலும் சமத்துவம் உடையவன், தீரன், நிந்தையிலும் ஸ்துதியிலும் சமமானவன்.

[வி] சமத்துவம் உடையவன் = பிரம்ம புத்தி உடையவன்
தன்னிடத்தில் நிலைபெற்றவன் = ஆத்மாவில் நிலைபெற்றவன்

மண்ணாங்கட்டி கல் தங்கத்தைச் சமமாய்க்கொண்டவன் = சர்வம் பிரம்மம் என்ற எண்ணம் உடையவன்
பிரியத்திலும் அப்பிரியத்திலும் சமத்துவம் உடையவன் = துவந்துவாதீதன் = அத்துவித திருஷ்டியுள்ளவன்
தீரன் = ஞானி

௨௫. மானத்திலும், அவமானத்திலும் சமத்துவம் உள்ளவன், மித்திரனிடத்திலும் சத்துருவினிடத்திலும் சமத்துவம் உள்ளவன், சர்வ யத்தனங்களையும் விட்டவன், குணாதீதன் (என்று) அவன் சொல்லப்படுகிறான்.

[வி] குணாதீதன் = குணங்களைக் கடந்தவன்

௨௬. என்னை எவன் பிரிவறியாத பக்தியோகத்தினால் சேவிக்கிறானோ, அவன் இக்குணங்களைக் கடந்து பிரம்மம் ஆவதற்குத் தகுதியுடையவனாகிறான்.

௨௭. ஏனெனில், பிரம்மத்திற்கும், அழிவில்லாத அமிர்தத்திற்கும், சாஸ்வத தர்மத்திற்கும், முடிவில்லாத சுகத்திற்கும் நான் இருப்பிடம்.

[வி] அமிர்தம் = பிரம்ம விக்ஞானம்
சாஸ்வதம் = நித்தியம்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, குணத்ரய விபாகயோகம் என்னும் பதினான்காவது அத்தியாயம்.

சங்கிரகம்:—சத்துவகுணத்தின் காரியம் = ஞானம், ஊர்த்துவலோகம், தேவஜன்மம். ரஜோகுணத்தின் காரியம் = காமம், கர்மம், மத்தியலோகம், மநுஷஜன்மம். தமோகுணத்தின் காரியம் = அஞ்ஞானம், அஜாக்கிரதை, சோம்பல், நித்திரை, கீழ்உலகங்கள், (கஅ.) வது சுலோகத்தில் சுத்தசத்துவ குணம் அடைந்தவனின் இலக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. (உஉ-உரு.) சுலோகங்களில் முக்குணங்களினின்றும் விடுபட்டவனின் இலக்ஷணஞ் சொல்லப்பட்டிருக்கிறது. (உசா) வது சுலோகத்தில் முக்குணங்களினின்றும் விடுபடுவதற்குப் பக்தியோகம் சாதனம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (உஎ.) வது சுலோகத்தில் பகவான் பிரம்மத்திற்கும் சர்வ தர்மங்களுக்கும் லிங்கமென்று சொல்லப்படுகிறார்.

அரும்பதங்கள்

தமோகுணம் = மூடவிருத்தி
ரஜோகுணம் = கோரவிருத்தி
மிசிரசத்துவம் = ரஜோகுணம், தமோகுணம் கலந்த சத்துவம்
சுத்த சத்துவம் = ரஜோகுணம், தமோகுணம் கலப்பின்றிய சத்துவம்
சமம் = பிரம்மதர்மம்.

பதினான்காவது அத்தியாயம்
முற்றிற்று.

112

பதினைந்தாவது அத்தியாயம்
புருஷோத்தம அத்தியாயம்

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

க. வேர் மேலிலும், கிளைகள் கீழிலும் ஆகிய அசுவத்தத்தை நாசமற்றதாகச் சொல்லுகிறார்கள். சந்தஸ்கள் எதனுடைய இலைகளோ, எவன் அதை அறிகிறானோ, அவன் வேதத்தை அறிந்தவன்.

[வி] இவ்வத்தியாயத்திற்கு யோகிகளின் அர்த்தம் முக்கியம். ஆதலால் யோகிகளின் அர்த்தம் மாத்திரம் எழுதப்படுகிறது.

வேர்மேலிலும் = உத்தரமகத் ஆதி, ஆதி = உற்பத்திஸ்தானம்
கிளைகள்கீழிலும் = இந்திரியக்கூடம்
சந்தஸ்கள் = முக்குணங்கள்
வேதம் = ஆத்மா. நான்கு வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுகிறது ஆத்மா ஆதலால், வேதத்திற்கு அர்த்தம் ஆத்மா என்று சொல்லப்படுகிறது.
அசுவத்தம் = ஸம்ஸார விருக்ஷம், பிரகிருதி விருக்ஷம்

உ. கீழும் மேலும் அதன் சாகைகள் பரவியிருக்கின்றன. குணங்களால் வளர்ந்திருக்கின்றன. விஷயங்கள் (அதன்) தளிர்கள், வேர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து கீழே மனுஷ்ய உலகில் கர்மபந்தத்தை யுண்டுபண்ணுகின்றன.

[வி] கீழும்மேலும் அதன்சாகைகள் பரவியிருக்கின்றன = க்ஷேத்ரக்ஞனுக்கு, மேலே மகத் கூடத்திலும், கீழே இந்திரியக் கூடத்திலும் திருஷ்டி உள்ளது

குணங்களால் வளர்ந்திருக்கின்றன = முக்குணங்கள் இருக்கும் வரை ஸம்ஸாரம் விட்டு நீங்காது, தேகமும் நீங்காது

விஷயங்கள் அதன்தளிர்கள் = தளிர்கள் மரத்தைக் காப்பாற்றுவதுபோல் இந்திரிய விஷயங்கள் ஸம்ஸாரத்தை நிலைத்து நிற்கச் செய்கின்றன

மனுஷ்யஉலகில் = தேகத்தில்

வேர்கள் = முக்குணங்கள்

கர்மபந்தத்தையுண்டு பண்ணுகின்றன = முக்குணங்கள் கர்ம பந்தத்தை யுண்டுபண்ணுகின்றன

ந. அதன்ரூபம் இங்கு அப்படிப் புலப்படுகிறதில்லை. அந்தமும், ஆதியும், உற்பத்தி ஸ்தானமும் ஆழ்ந்து வேரூன்றிய இந்த அசுவத்தத்தைப் பற்றின்மை என்னும் திட ஆயுதத்தினால் சேதித்து.

[வி] அதன்ரூபம் புலப்படுகிறதில்லை = ஸம்ஸாரம் இன்னதென்று எவராலும் அறியமுடியாதது. மாயை எப்படி அநிர்வசனீயமோ, அப்படியே அதன் காரியமாகிய ஸம்ஸாரமும் அநிர்வசனீயம்

அநிர்வசனீயம் = இன்னதென்றுசொல்லமுடியாதது

அசுவத்தம் = ஸம்ஸார விருக்ஷம்

பற்றின்மை = நிராசை

திடஆயுதம் = யோகப்பிரக்ஞை (ஆயுதம் = ஞானம்)

சேதித்து = வெட்டி

பிரம்ம விருக்ஷத்திற்கு அவ்யக்தம் வேர். மகத் அஹங்காரம், மகாபூதங்கள் அதினின்று கிரமமாய்த் தோன்றியவை. அடிமரம் மகத். கிளைகள் பிரியுமிடம் அகங்காரம். கிளைகள், சூக்ஷ்ம மகா பூதங்கள், இந்திரியங்கள், துவாரங்கள், விஷயங்கள், இலைகள், கர்மம், புஷ்பம், இன்பம், துன்பம், பழம் இப்படிப் புராணங்களில் ஸம்ஸாரவிருக்ஷம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் ஸம்ஸாரவிருக்ஷம். அப்படியே இந்தத்தேகமும்.

ச. அதன் பின் எதனுள் பிரவேசித்தவர்கள் மறுபடியும் திரும்புகிறார்களில்லையோ, அம்மார்க்கத்தைத் தேடவேண்டியது. எங்கு இருந்து அநாதி சக்தி வெளிப்பட்டதோ, அந்த ஆதிபுருஷனையே சரணம்அடைகிறேன்.

[வி] அநாதிசக்தி = யோகமாயை
ஆதி புருஷன் = பிரம்மம்

௫. மானமும், மோகமும் இல்லாதவர்கள் பற்றென்னும் தோஷத்தை ஜயித்தவர்கள். ஆத்மாவில் நிலைபெற்றவர்கள், காமங்களைத் தீரத்துறந்தவர்கள், சுகதுக்கமென்னும் நாமத்தையுடைய த்வந்த்வங்களால் விடுபட்டவர்களால் மயங்காதவர்களாய் அந்த நாசமிலாப் பதவியை அடைகிறார்கள்.

[வி] மானம்இல்லாதவர்கள் = ஆத்மாவை எல்லைக்குட்படுத்தாதவர்கள்
த்வந்த்வங்கள் = இவற்றிற்கு இருப்பிடம் இந்திரியக்கூட்டம், மனக்கூட்டம், தக்ஷிணமகத்.
நாசமிலாப்பதவியை = பரமாத்மாவை

௬. அதனைச் சூரியன் பிரகாசிக்கிறதில்லை, சந்திரனும் அன்று, அக்னியும் அன்று. எதை யடைந்து திரும்புகிறதில்லையோ அது எனது பரமஸ்தானம்.

[வி] சூரியன் = புத்தி
சந்திரன் = மனம்
அக்நி = இந்திரியம்

பரமாத்மா புத்தி, மனம், இந்திரியங்களால் அறிய முடியாதது.

பரமஸ்தானம் = அவ்யக்தக்கூடத்தின் தக்ஷிணபாகம்.

௭. எனதே ஸநாதன அம்சம் ஜீவர்களின் உலகில் ஜீவனாகியது. பிரகிருதியை இடமாய்க்கொண்ட இந்திரியங்களைக் கவர்கின்றது. (இவற்றுள்) மனம் ஆறாவது (இந்திரியம்)

[வி] ஜீவன் = புத்தி, மனம், இந்திரிய சம்பந்தமுடைய ஆத்மா
ஸநாதன = நித்திய

௮. சரீரத்தை அடையும் பொழுதும், அப்படியே சரீரத்தை விட்டு நீங்கும் பொழுதும், (அந்த) ஈசுவரன், வாயு வாசஸ்தானத்திலிருந்து கந்தங்களைக் கவர்ந்து செல்வதுபோல் இவற்றைக் கவர்ந்து செல்கிறான்.

[வி] ஈசுவரன் = ஜீவன் இங்கு ஈசுவரன் என்று சொல்லப் படுகிறான். ஏனெனில், இவன் இந்தத் தேகத்துக்கு ஈசுவரன்
இவற்றை = மனம், ஞானேந்திரியங்கள் ஐந்து வாசனையும்

௯. சுரோத்திரம், சக்ஷுஸ், ஸ்பரிச இந்திரியம், ரசன இந்திரியம், கிராண இந்திரியம், மனதையும் இவன் இடமாகக்கொண்டு விஷயங்களை அநுபவிக்கிறான்.

[வி] இவன் = ஜீவாத்மா

௧௦. போவதையும், இருப்பதையும் அல்லது அநுபவிப்பதையும், அல்லது குணங்களோடு கூடியிருப்பதையும்

மயங்கியவர்கள் காண்கிறார்களில்லை. ஞானக்கண்ணுடையோர்கள் காண்கிறார்கள்.

[வி] போவதையும் = ஜீவாத்மா தேகத்தை விட்டு நீங்கிச் செல்லுவதையும்.

இருப்பதையும் = ஜீவன் மனத்திலிருந்து உலக விவகாரங்களைச் செய்வதையும்.

அநுபவிப்பதையும் = ஜீவன் மகத் தத்துவத்திலிருந்து பரமாத்ம போகத்தை யநுபவிப்பதையும்.

குணங்களோடு கூடியிருப்பதையும் } = ஜீவன் இந்திரியங்களோடுகூடி இந்திரிய விஷயங்களை அநுபவிப்பதையும், கர்மத்தைச்செய்வதையும்

ஞானக்கண்ணுடையோர்கள் } = மகத் தத்துவ விவேகிகள், ஆத்மாவை அறிந்தவர்கள்

௧௧. ஆனால் பிரயத்தனம் செய்கிற யோகிகள் தங்களிடம் நிலைபெற்ற இவனைக் காண்கிறார்கள். பிரயத்தனஞ் செய்பவராயினும் மனம் திருந்தாத அறிவிலிகள் இவனைக் காண்கிறார்களில்லை.

[வி] தங்களிடம் நிலைபெற்ற } = புத்தியில் தங்கிய

மனம்திருந்தாதவர்கள் } = ரஜோகுண, தமோகுண சம்பந்தம் உடையவர்கள்

௧௨. எந்த தேஜஸ் ஆதித்தனை அடைந்திருந்து அகில ஜகத்தையும் பிரகாசம் செய்கிறதோ, எது சந்திரனிடத்திலும், எது அக்னியினிடத்திலும் (உள்ளதோ) அந்தத் தேஜஸ் எனதாக அறி.

[வி] தேஜஸ் = பிரகாசம்

ஆதித்தன் = புத்தி

சந்திரன் = மனம்

அக்கி = இந்திரியம்

ஜகத் = தேகம்

எனது = பரமாத்மாவினுடையது

௧௩. பூமியுட் பிரவேசித்துப் பூதங்களை நான் சக்தியினால் தாங்குகிறேன். ரசவடிவ சந்திரனாகி ஔஷதிகளையாவையும் வளர்க்கிறேன்.

[வி] பூமி = தேகம்

நான் = பரமாத்மா

பூதங்கள் = பிராணிகள்

சந்திரனாகி = மனமாகி

ஔஷதிகள் = வித்தைகள்

வளர்க்கிறேன் = விருத்திசெய்கிறேன்

௧௪. நான் வைஸ்வானரனாகிப் பிராணிகளின் தேகத்தை ஆச்ரயித்துப் பிராண அபானனோடு சேர்ந்து, நான்குவித அன்னங்களை ஜீரணிக்கச் செய்கிறேன்.

[வி] வைஸ்வானரன் = சர்வ உலகங்களையும் தகிக்கும் அக்கி

நான் = பரமாத்மா

பிராணன் = பிரவிருத்தி மார்க்கம்

அபானன் = நிவிருத்தி மார்க்கம்

நான்குவித அன்னங்கள் = நான்கு கூடங்களிலும் உள்ள ஆத்மா

ஜீரணிக்கிறேன் = பக்குவப்படுத்தி என்னோடு ஐக்கியஞ் செய்துகொள்கிறேன்

தேகம் = ஹ்ருதயம்

கரு. நான் எல்லோரின் ஹ்ருதயத்திலும் வீற்றிருக்கிறேன். என்னிடமிருந்து நினைவு, ஞானம் (அப்படியே) மறதியும் (உண்டாகின்றன). சர்வ வேதங்களாலும் அறியவேண்டியவன் நானே. வேதாந்தத்தைச் செய்தவனும், வேதத்தை அறிந்தவனும் நானே.

[வி] நான் = பரமாத்மா

நினைவு = யோகம்

மறதி = நிவிருத்தி

கசு. இவ்வுலகில் க்ஷரம் (என்றும்) அப்படியே அக்ஷரம் என்றும் இரண்டு புருஷர்கள். க்ஷரம் சர்வபூதங்கள். கூடஸ்தன் அக்ஷரம் (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] க்ஷரம் = பந்தப்பட்டவன்

அக்ஷரம் = பந்தத்திலிருந்து நீங்கியவன் = முக்தன்

கூடஸ்தன் = ஆத்மா

கஎ. எந்த அழிவிலா ஈசுவரன் திரிலோகத்தையும் பிரவேசித்துத் தாங்குகிறானோ, அந்த அந்நிய உத்தம புருஷன் பரமாத்மா என்று அழைக்கப்படுகிறான்.

[வி] திரிலோகம் = இந்திரியக் கூடம், மனக்கூடம், மகத்கூடம்

கஅ. ஆகவே, க்ஷரத்திலும் அதீதன் நான். அப்படியே அக்ஷரத்திலும் உத்தமன். அதனால் இந்த உலகத்திலும் வேதத்திலும் புருஷோத்தமன் (என்று) சொல்லப்படுகிறேன்.

[வி] க்ஷரம் = பந்தப்பட்ட ஆத்மா

அக்ஷரம் = முக்தாத்மா

உலகத்தில் = பிரவிருத்தி மார்க்கத்தில்

வேதத்தில் = நிவிருத்தி மார்க்கத்தில்

ககூ. எவன் இப்படி மயக்கமற்றவனாய் என்னைப் புருஷோத்தமன் (என்று) அறிகிறானோ, அவன் சர்வத்தையும் அறிந்தவன். சர்வபாவனையாலும் என்னைப் பஜிக்கிறான், பாரத!

[வி] சர்வத்தையும் = எல்லா வேதங்களையும்

சர்வபாவனையாலும் = இந்திரியக் கூடம், மனக் கூடம், மகத்கூடம் ஆகிய மூன்றாலும் = யோகபக்தியாலும்

உ0. இப்படி இந்த அதி இரகசிய சாஸ்திரம் என்னால் கூறப்பட்டது, பாபமற்றோனே! இதையறிந்து புத்திமானாகிறான், கிருதகிருத்யனாகிறான், பாரத!

[வி] பாபமற்றோனே = அஞ்ஞானம் நீங்கப்பெற்றோனே

புத்திமான் = மகத்தாவ விவேகி = ஆத்மாவை அறிந்தவன்

கிருதகிருத்யன் = செய்ய வேண்டிய கர்மங்கள் எல்லாம் செய்து முடித்தவன், ஜீவன் முக்தன்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, புருஷோத்தம அத்தியாயம் என்னும் பதினைந்தாவது அத்தியாயம்.

சங்கிரகம் :—இவ்வத்தியாயத்தில் பிரகிருதி, பரமாத்மா, ஜீவாத்மா ஆகிய வஸ்துத்ரயம் சொல்லப்பட்டிருக்கிறது. க-முதல் ச-வரை பிரகிருதியைப் பற்றியது. சா, கஉ—கஅ, பரமாத்மாவைப் பற்றியது. எ—கக ஜீவாத்மாவைப் பற்றியது. ரு. ஞானசாதனத்தைப் பற்றியது.

அரும்பதங்கள்

ஜீவாத்மா = மகத்கூடம், மனக்கூடம் இவைகளின் சம்பந்தமுடைய ஆத்மா

பரமாத்மா = அவ்யக்தக கூடத்தின் தக்ஷிணபாக சம்பந்தமுடைய ஆத்மா

பிரகிருதி = முக்குண ரூப பிரகிருதி

பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

பதினாறாவது அத்தியாயம்

தெய்வசம்பத்து அசுரசம்பத்து விபாக யோகம்

க. பயமின்மை, சுத்த சத்துவம்; ஞானத்திலும், யோகத்திலும் உறுதியாய் நிற்றல், தானம், தமம், யக்ஞம், சாஸ்திர அப்பியாசம், தவம், பக்ஷபாதமின்மை.

[வி] பயமின்மை = அஞ்ஞானம் இன்மை

சுத்த சத்துவம் = ரஜோகுணம், தமோகுணம் கலப்பின்றிய சத்துவம்

ஞானத்திலும் யோகத்திலும் உறுதியாய் நிற்றல் = சாஸ்திர ஞானத்திலும், அப்படியே தியானத்திலும் உறுதியாய் நிற்றல்

ஞானம் = மகத்கூடத்தின் தக்ஷிணபாகத்தின் கர்மம்

யோகம் = மகத்கூடத்தின் உத்தரபாகத்தினதும், அவ்யக்தக்கூடத்தின் தக்ஷிணபாகத்தினதும் கர்மம்

தானம் = ஆத்மாவைப் பரமாத்மாவில் அர்ப்பணஞ் செய்வது

தமம் = இந்திரியங்களின் அடக்கம்
யக்ஞம் = ஆத்ம விக்ஞானப் பிரயத்தனம்
சாஸ்திர அப்பியாசம் = ஆத்ம விசாரம்
தவம் = பாபதகன சக்தி
பக்ஷபாதமின்மை = இதற்கு ஆத்ம நோக்கங் காரணம்

உஉ. அஹிம்சை, சத்தியம், கோபமின்மை, தியாக, சாந்தி, பொறாமை இன்மை, பூதங்களிடத்துத் தயவு லோபமின்மை, மிருதுவான தன்மை, அற்பவிஷய அப்ரீதி, சபலமின்மை.

[வி] அஹிம்சை = தேகத்தை ஹிம்சியாது காப்பாற்றல். ஏனெனில், தேகம் பிரம்மவனம். தேகம் சர்வ தர்மசாதனம். தேகம் சூரிய மண்டலம்
சத்தியம் = ஆத்மாவே சத்தியம் என்று அதில் உறுதியாய் நிற்றல்
கோபம் இன்மை = கோபம் மோக்ஷ விரோதி
தியாகம் = பிரம்மார்ப்பணம்
சாந்தி = ஒழிவு
பொறாமை இன்மை = ராகத்துவேஷம் இன்மை
பூதங்களில் தயவு = ஜீவர்களின் நன்மையில் கருத்து
லோபமின்மை = அற்ப விஷயங்களில் நாட்டமின்மை

மிருதுவான தன்மை = மேன்மை
அற்ப விஷய அப்ரீதி = சிற்றறிவின் நீக்கம்
சபல மின்மை = சஞ்சல மின்மை, ஸ்திர புத்தி

ந. ஒளி, சகித்தல், தைரியம், சுத்தம், துரோகமின்மை, தன்னை மிக்கு மதியாமை, தெய்வசம்பத்தோடு பிறந்தவனுக்கு இருக்கின்றன, பாரத!

[வி] ஒளி = தேக காந்தி
சகித்தல் = வாத, பித்த, குளிர் உஷ்ணங்களைச் சகித்தல்
தைரியம் = தேக தைரியம்
சுத்தம் = சுத்ததேகம், சுத்த இடம்
துரோகம் இன்மை = வித்தியா தானம்
தன்னைமிக்கு மதியாமை = குலகோத்திர மபிமான மின்மை
தெய்வ சம்பத்து = சத்துவகுணம்
இச்சுலோகம் தேகத்தைப்பற்றியது.

ச. டம்பமும், செருக்கும், பெருமையும், கோபமும், அப்படியே குரூரமும், அஞ்ஞானமும், பார்த்த! அசுரசம்பத்தோடு பிறந்தவனுக்கு (இருக்கின்றன).

[வி] டம்பம் = தனக்கில்லாத குணங்களைத் தன்னுக்குள்ளதாக நடித்தல்

௫. தெய்வ சம்பத்து மோக்ஷத்திற்கும், அசுரசம்பத்து பந்தத்திற்கும், எண்ணப்பட்டிருக்கின்றன. துயரப்படாதே. தெய்வசம்பத்துடன் பிறந்திருக்கிறாய், பாண்டவ!

[வி] தெய்வசம்பத்து = சத்துவகுணம்
அசுரசம்பத்து = ரஜோகுணம், தமோகுணம்

௬. இவ்வுலகில் பூதசிருஷ்டிகள் தெய்வம் (என்றும்) அப்படியே ஆசுரம் (என்றும்) இருவகை தெய்வசிருஷ்டி விரிவாய்ச் சொல்லப்பட்டது, பார்த்த! அசுரத்தை என்னிடம் கேள்.

[வி] தெய்வசிருஷ்டி = தேவ ஜாதி
அசுரசிருஷ்டி = அசுர ஜாதி

புராணங்களில் தேவர்கள், அசுரர்கள் என ஜாதி இரண்டாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

௭. பிரவிருத்தியையும், நிவிருத்தியையும் அசுர ஜனங்கள் அறியார்கள், அவர்களிடத்துச் சுத்தமுமில்லை, ஒழுக்கமுமில்லை, சத்தியமு மில்லை.

[வி] பிரவிருத்தியையும்நிவிருத்தியையும்அசுர ஜனங்கள் அறியார்கள் = இராவணன் சீதையைக் களவாடிச் சென்றது பிரவிருத்திஞான மின்மை. விபீஷணன் வார்த்தையைக் கேட்டு விடாதது நிவிருத்தி தர்ம ஞானமின்மை
ஒழுக்கம் = முறைமை

சத்தியம் = உண்மைப் பொருளாகிய பிரம்மத்தைத் தனக்கிருப்பிடமாய்க் கொண்டு அதனிடத்தே வாழ்தல்

௮. அவர்கள் சகத்தை அசத்தென்றும், அஸ்திவாரமில்லாததென்றும், ஈசுவரனில்லாததென்றும், ஒன்று மற்றொன்றின் சம்பந்தத்தால் உண்டானதென்றும், வேறு என்னவென்றும், காமத்தை ஹேதுவாயுடையதென்றும் சொல்லுகிறார்கள்.

[வி] அசத்து = பொய்
அஸ்திவாரமில்லாதது = சகத் தர்மத்தில் நிலைபெற்றிருக்கவில்லை

௯. இந்நோக்கம் கொண்டு ஆத்ம அறிவை இழந்தவர்களாய், அற்ப புத்தியுடையவர்களாய், உக்கிர கர்மங்களையுடையவர்களாய், உலகிற்கு விரோதிகளாய் அழிவு செய்யத் தலைப்படுகிறார்கள்.

[வி] நோக்கம் = கருத்து, கொள்கை
அற்பபுத்தி உடையவர்கள் = மகத் அல்பம்
உக்கிரகர்மம் = பயங்கரமான கர்மம் = ஆத்மஞானமில்லாதவன் செய்கை
உலகிற்கு = தேகத்திற்கு
அழிவுசெய்ய = ஆத்ம ஞானம் இல்லாதவன் செய்கை

க0. திருப்தி செய்யமுடியாத காமங்களை ஆச்ரயித்து டம்பம், மானம், மதங்கொண்டவர்களாய், மோகத்தினால் தீய எண்ணங்களைக் கொண்டவர்களாய், அசுத்த விரதங்களைக் கொண்டவர்களாய்ப் பிரவிர்த்திக்கிறார்கள்.

[வி] ஆச்ரயித்து = பின்பற்றி
டம்பம் = தனக்கில்லாத குணங்கள் தனக்குள்ளதாக நடித்தல்
மானம் = பெருமை
மதம் = வெறி
தீயஎண்ணம் = பிரகிருதி சம்பந்தமான எண்ணம்
அசுத்த விரதங்கள் = காமபோகங்கள்

கக. அளவிடமுடியாத கவலையை மேற்கொண்டு மரணமே அதன் முடிவாகவும், காமபோகத்தைச் சிறந்ததாகவும் இவ்வளவு தான் என்று நிச்சயித்தவர்கள்.

[வி] பகவத் சிந்தனைக்காகப் பிரகிருதியின் சம்பந்தத்தை விடாதவன் தன்மை.

கஉ. ஆசையென்னும் நூறு கயிறுகளால், பந்தப்பட்டவர்கள், காமத்தையும் கோபத்தையும் மேலாகக் கொண்டவர்கள், காமபோகத்திற்காக அநியாயமாய்த் திரவியக் குவியல்களைத் தேட முயல்கிறார்கள்.

கஙு. இது இன்று என்னால் அடையப்பெற்றது. இம்மன விருப்பத்தை அடைவேன் (இது எனக்கு) உண்டு. இனி இந்தத்தனமும் என்னை அடையும்.

[வி] மனோராச்சியம் இச்சுலோகத்தின் கருத்து.

கச. இச்சத்துரு என்னால் கொல்லப்பட்டான். அப்படியே ஏனையோர்களையும் கொல்வேன். பிரபு நான். நான் போகி, நிறைவுள்ளவன். நான் பலவான், சுகி.

[வி] தற்புகழ்ச்சி இச்சுலோகத்தின் கருத்து.

கரு. நான் தனவந்தன், உயர்குலத்தோனா யிருக்கிறேன். வேறு எவன் எனக்கு நிகரானவனா யிருக்கிறான். யாகம் செய்வேன், கொடுப்பேன், ஆனந்தப்படுவேன். இப்படி அஞ்ஞானத்தினால் மோகமடைந்தவர்கள்.

[வி] தற்புகழ்ச்சியும், மனோராச்சியமும் இச்சுலோகத்தின் கருத்து.

கசு. அநேக எண்ணங்களால் மயங்கியவர்கள், மோகவலையினால் மூடப்பட்டவர்கள், காமபோகத்தில் ஈடுபட்ட (இவர்கள்) அசுசியான நரகத்தில் வீழ்கிறார்கள்.

கஎ. தற்புகழ்ச்சியுடையவர்கள், முரடர்கள், ஐசுவரியத்தின் பெருமையோடும், மதத்தோடும் கூடியவர்கள், நாம யக்ஞங்களை, அவர்கள் டம்பத்திற்காக விதி தவறி அநுஷ்டிக்கிறார்கள்.

கஅ. அகங்காரம், வலிமை, செருக்கு, காமம், குரோதம் (ஆகிய இவற்றில்) ஈடுபட்டவர்கள், தங்கள் தேகத்திலும், ஏனையோர் தேகத்திலும் உள்ள என்னைப் பகைப்பவர்கள், தூஷிக்கிறவர்கள்.

[வி] அகங்காரம் = துஷ்டபுத்தி
பலம் = தேகபலம்
செருக்கு = தக்ஷிணமகத்கூட மிருப்பிடம்
காமம் = மனக்கூட மிருப்பிடம்
என்னை = பரமாத்மாவை

கசு. வெறுப்பவர்கள், தீயவர்கள், அசுத்தர்கள், மனிதர்களில் கடைப்பட்டவர்கள் (ஆகிய) இவர்களை, நான் உலகங்களில் அசுரயோநிகளில், எப்பொழுதும் தள்ளுகிறேன்.

[வி] மனிதர்களில் கடைப்பட்டவர்கள் = ஆத்மா உண்டு என்ற எண்ணமில்லாதவர்கள்

உ0. அசுரயோனியை அடைந்து, மயங்கியவர்களாய் ஜன்மங்கள் தோறும் என்னை அடையாமலேயே கௌந்தேய! அதனினும் தாழ்ந்த கதியை அடைகிறார்கள்.
[வி] ஒரு ஜன்மத்திலும் சுகமில்லை.

உக. ஆத்மாவை நாசஞ்செய்கிற நரகத்தின் இவ்வாசல் மூன்றுவிதம். காமம், கோபம், அப்படியே லோபம். ஆதலால் இம்மூன்றையும் விடவேண்டும்.

[வி] ஆத்மாவை நாசஞ்செய்கிற = பிரகிருதி சம்பந்தமானது

உஉ. தமஸின் இந்த மூன்று வாசல்களால் விடுபட்ட மனிதன், கௌந்தேய! தனக்கு நன்மையத் தேடிக்கொள்கிறான், அதனால் மேலான கதியை யடைகிறான்.

[வி] தமஸின் = பிரகிருதியின்

உங. எவன் சாஸ்திரவிதியை விலக்கி, காம இச்சையைப் பின்பற்றுகிறானோ அவன் சித்தியை அடைகிறானில்லை, சுகத்தை (அடைகிறானில்லை), பரகதியை (அடைகிறானில்லை).

உச. ஆதலால், காரியத்தையும், அகாரியத்தையும் நிச்சயிப்பதில் சாஸ்திரம் உனக்குப்பிரமாணம். சாஸ்திரவிதியினால் கூறப்பட்ட கர்மத்தை யறிந்து செய்வாய்.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்மவித்தையிலே, யோக சாஸ்திரத்திலே, ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, தெய்வசம்பத்து அசுரசம்பத்து விபாக யோகம் என்னும் பதினாறாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—க-முதல் ங- தெய்வசம்பத்தைப் பற்றியது. தெய்வசம்பத்து மோக்ஷத்துக்குக் காரணம். அசுரசம்பத்து பந்தத்துக்குக் காரணம். அசுரசம்பத்து காமம், கோபம், லோபம் ஆகிய இம்மூன்றில் அடங்கும்.

அரும்பதங்கள்

தெய்வசம்பத்து = சத்துவகுணம்
அசுரசம்பத்து = ரஜோகுணம், தமோகுணம்

பதினாறாவது அத்தியாயம்
முற்றிற்று.

பதினேழாவது அத்தியாயம்

சிரத்தாத்ரய விபாக யோகம்

அர்ச்சுனன் சொன்னான்:—

க. எவர்கள் சாஸ்திரவிதியை விலக்கிச் சிரத்தையோடு கூடியவர்களாய் வழிபடுகிறார்களோ, அவர்களின் நிஷ்டை, கிருஷ்ணா! சத்துவமா, அல்லது ரஜஸா, அல்லது தமஸா?

[வி] சிரத்தை = புத்தியின் தர்மம், புத்திமனத்தைச் சேர்ந்த காலத்து ஏற்படுகிறது. ஆனால் மனதில் விளங்குகிறது.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

உ. தேகாபிமானிகளுக்குச் சுபாவத்தினால் உண்டான அந்தச் சிரத்தை மூவிதமாயிருக்கிறது. சாத்வீகம், ராஜஸம், அப்படியே தாமஸமும், அவற்றையும் கேள்.

[வி] சுபாவத்தினால் = இயற்கையாய். பிரகிருதிக்கேற்ப
சிரத்தை = பிரகிருதிக்கேற்ப அமைந்துள்ளது

ங. சுபாவத்தின்படி அவரவர்களின் சிரத்தை அமைந்துள்ளது, பாரத! இப்புருஷன் சிரத்தாமயம். எவன் எச்சிரத்தையுடையவனோ அவன் அவனே.

[வி] சுபாவம் = பிரகிருதி = தேகம்
சிரத்தாமயம் = சிரத்தா ரூபம்
எவன் எச்சிரத்தையுடையவனோ அவன் அவனே = அவரவர்களின் சிரத்தையின்படி அவரவர்களின் ஒழுக்கம் அமைந்துள்ளது

ச. சாத்வீகர்கள், தேவர்களை வழிபடுகிறார்கள். யக்ஷ ராக்ஷஸர்களை ராஜஸர்கள், பிரேதங்களையும் பூதகணங்களையும், அந்நியர்களான தாமஸ ஜனங்கள் வழிபடுகிறார்கள்.

ரு. சாஸ்திரத்தில் விதிக்கப்படாத கோர தவத்தை எந்த ஜனங்கள் அநுஷ்டிக்கிறார்களோ, (அவர்கள்) டம்பமும், அகங்காரமும் பொருந்தியவர்கள். காம ஆசைகளின் வலிமையோடு கூடியவர்கள்.

[வி] கோரம் = பயங்கரம்

சா. சரீரத்திலுள்ள பூதக்கூட்டத்தையும், அப்படியே சரீரத்தின் உள்ளேயுள்ள என்னையும் வருத்துகிற அறிவிலிகளான அவர்களை அசுர நிச்சயமுடையவர்கள் (என்று) அறி.

[வி] பூதக்கூட்டம் = தத்துவக் கூட்டம்
என்னை = பரமாத்மாவை

௭. பிரியமான ஆகாரமும் எல்லோருக்கும் மூன்று விதமாய் இருக்கிறது. யக்ஞமும், தவமும், அப்படியே தானமும் அவற்றின் இப்பேதத்தைக் கேள்.

[வி] பேதம் = பிரிவு

௮. ஆயுள், சத்துவம், பலம், ஆரோக்கியம், சுகம், பிரீதி (ஆகிய இவற்றை) வளர்ப்பதாய், ரஸமாய் நெய்யோடு கூடிய சாரமுள்ள மனோரம்மிய ஆகாரங்கள் சாத்வீகனுக்குப் பிரீதியுள்ளவை.

௯. கசப்பு, புளிப்பு, உப்பு, மிகச்சூடு, காரம், வறட்சி, எரிச்சல் (ஆகிய) உண்டிகள் ராஜஸனுக்குப் பிரியம். (இவை) துக்கம், சோகம், நோய் (ஆகிய) இவற்றைக் கொடுப்பவை.

[வி] சோகம் = மனோ சம்பந்தமான துக்கம்

௧0. ஒருஜாமம் சென்றதும், ரஸம்போனதும், தீ நாற்றமுடையதும், பழையதும், சேஷமும், அசுத்தமுமான போஜனமெதுவோ (அது) தாமஸனுக்குப் பிரியம்.

௧௧. பலனை விரும்பாதவர்களால் விதியில் காணப்பட்ட எந்த யக்ஞம் செய்யவேண்டும் என்றே, ஒரேமனதாய்ச் செய்யப்படுகிறதோ அது சாத்வீகம்.

[வி] விதியில்காணப்பட்ட } = வேதத்தில் விதிக்கப்பட்ட

௧௨. ஆனால் பயனைக்கருதியும், அப்படியே டம்பத்தின் பொருட்டும் எது செய்யப்படுகிறதோ, பரதரிற்சிறந்தோனே! அந்த யக்ஞம், ராஜஸம் (என்று) அறி.

௧௩. விதியில்லாததும், அன்னமிடப்படாததும், மந்திரமில்லாததும், தக்ஷிணையில்லாததும், சிரத்தை இல்லாததுமான யக்ஞம் தாமஸம் (என்று) சொல்லப்படுகிறது.

௧௪. தேவர்கள், இருபிறப்பாளர்கள், ஆசிரியர்கள், அறிவுடையோர்கள், வழிபாடு, சுத்தம், நேர்மை, பிரம்மசரியம், அஹிம்ஸையும் சரீரத்வம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] இருபிறப்பாளர்கள் } = உபநயனத்திற்குப் பின் மறு ஜன்மம் என்ற கொள்கையின்படி

௧௫. வெறுப்பை யுண்டுபண்ணாததும், சத்தியமும், பிரியமும், நன்மையுமான வாக்கியம் எதுவோ, அப்படியே வேதத்தைப் படித்தலை அப்யசித்தலும் வாக்குத் தவம் (என்று) சொல்லப்படுகிறது.

௧௬. மனத்தெளிவு, சாந்தம், மௌனம், தன்னடக்கம், பரிசுத்த அறிவு என்ற இவை மனத்தவம் (என்று) சொல்லப்படுகின்றன.

[வி] தன்னடக்கம் = பிரகிருதி சம்பந்த வியாபாரங்களை ஒடுக்கல்

௧௭. பயனை விரும்பாத சமத்துவமுடைய மனிதர்களால் மேலான சிரத்தையுடன் செய்யப்பட்ட அந்த மூன்றுவிதத் தவம் சாத்வீகம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] சமத்துவமுடைய = சமத்துவம் பிரம்மத்தின் தர்மம்

௧௮. மரியாதை, மதிப்பு, வணக்கத்தின் பொருட்டும், அப்படியே டம்பத்திற்காகவும் எத்தவஞ் செய்யப்படுகிறதோ, அது இங்கு ராஜஸம் (என்று) சொல்லப்படுகிறது, அசைவுள்ளது, நிலையற்றது.

௧௯. மூடக் கொள்கையினால் தன்னை வருத்திக் கொண்டு அல்லது பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்டும் எத்தவஞ் செய்யப்படுகிறதோ, அது தாமஸம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] மூடக்கொள்கை = மூடஞானம்

௨௦. கொடுக்கவேண்டியதென்று எந்தத் தானம் உபகாரம் செய்யாதவனுக்கு (புண்ணிய) தேசத்திலும் காலத்திலும் பாத்திரத்திலும் கொடுக்கப்படுகிறதோ, அந்தத்தானம் சாத்வீகம் (என்று) எண்ணப்படுகிறது.

[வி] புண்ணியதேசம் = காசி, ராமேசுவரம் முதலிய இடங்கள்

புண்ணியகாலம் = அர்த்தோதயம், மகோதயம் முதலியன

புண்ணியபாத்திரம் = சாதுக்கள், பிராம்மணர்கள்

புண்ணியதேசம் புண்ணியகாலம் புண்ணிய பாத்திரம் = அவ்யக்தக்கூடம் அல்லது பரமாத்மா

௨௧. ஆனால் எது பிரதி உபகாரத்தின் பொருட்டு அல்லது பலனை உத்தேசித்தும் அல்லது வருத்தத்தோடும் கொடுக்கப்படுகிறதோ, அந்தத் தானம் ராஜஸம் (என்று) நினைக்கப்படுகிறது.

௨௨. அதேசத்திலும், அகாலத்திலும் அபாத்திரர்களுக்கும் மதிப்பின்றியும் அவமதிப்போடும் எந்தத் தானம் கொடுக்கப்படுகிறதோ, அது தாமஸம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] அதேசத்திலும் அகாலத்திலும் அபாத்திரர்களுக்கும் = அவ்யக்தக்கூடமில்லாத மற்றைய ஸ்தானங்கள்

௨௩. ஓம் தத் ஸத் என்றது பிரம்மத்தின் மூவித நாமங்களாக நினைக்கப்படுகின்றன. அதனால் பிராம்மணர்களும், வேதங்களும், யக்ஞங்களும் முன்பு விதிக்கப்பட்டன.

[வி] ஓம் = யோகமந்திரம்

ஓம் = அவ்யக்தக் கூடத்திலுள்ள பிரம்மம்

தத் = மகத்கூடத்தின் உத்தரபாகத்திலுள்ள பிரம்மம்

ஸத் = மனம் இந்திரியக்கூடங்களிலுள்ள பிரம்மம்

௨௪. ஆதலால், ஓம் என்று உச்சரித்து வேதவிதியினால் சொல்லப்பட்ட யக்ஞ தான தவக்கிரியைகள் வேதத்தை அறிந்தவர்களால் எப்பொழுதும் ஆரம்பிக்கப்படுகின்றன.

உரு. தத் என்று பலனைக்கருதாது யக்ஞ தவக்கிரியைகளும், பலவித தானக்கிரியைகளும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களால் செய்யப்படுகின்றன.

உசு. உள்ளது என்ற அர்த்தத்திலும், நலமுடையது என்ற அர்த்தத்திலும் சத் என்ற இது சொல்லப்படுகிறது. அப்படியே சத் கர்மத்திற்கு சத் சப்தம், பார்த்த! சொல்லப்படுகிறது.

உஎ. யக்ஞத்திலும், தபசிலும், தானத்திலும் உறுதியாய் நிற்றல் சத் என்னும் சொல்லப்படுகிறது. அப்படியே அதற்கு உரியகர்மமும் சத் என்றே சொல்லப்படுகிறது.

உஅ. சிரத்தை இன்றி செய்யப்பட்ட ஹோமமும், கொடையும், செய்யப்பட்ட தவமும், செய்யப்பட்ட எதுவும் அசத் என்று சொல்லப்படுகிறது. பார்த்த! அது மறுமைக்கும் இல்லை, இம்மைக்கும் இல்லை.

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே, சிரத்தாத்ரய விபாகயோகம் என்னும் பதினேழாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—பிரகிருதிக்கேற்ப சிரத்தை அமைந்துள்ளது. சிரத்தைக்கேற்ப ஒழுக்கம் அமைந்துள்ளது. க-உஉ சுலோகங்களில் சிரத்தை, உண்டி, யக்ஞம், தானம், தவம் ஆகிய இவை முக்குணங்களுக்கு ஈடாக வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. தவமும், மானஸி

யம், காயிகம், வாசிகம் என மூவகைப்படும். இதுவும் முக்குணங்களுக்கு ஈடாக மூவகைப்படும். ஓம் தத் ஸத் என்றது பிரம்மத்தின் மூவித நாமங்கள். ஓம் என்று ஆரம்பித்து சத் என்று யக்ஞதான தவக்கருமங்கள் செய்யப்படுகின்றன. சத் என்ற பதம் 'உள்ளது' என்ற அர்த்தத்திலும் 'நல்லது' என்ற அர்த்தத்திலும் சுப காரியம், என்ற அர்த்தத்திலும் அவற்றில் உறுதியாய் நிற்றல் என்ற அர்த்தத்திலும் பாவிக்கப்படுகிறது.

அரும்பதங்கள்

ஓம்	= சுத்த பிரம்மம்
தத்	= மாயோபகித சேதனம்
சத்	= மாயாசகித சேதனம்

பதினேழாவது அத்தியாயம்
முற்றிற்று.

பதினெட்டாவது அத்தியாயம்

மோக்ஷ சந்நியாச யோகம்

பார்த்தன் சொன்னான்:—

௧. சந்நியாசத்தின் அர்த்தத்தையும், தியாகத்தின் (அர்த்தத்தையும்) தனித்தனியாய் அறிய இச்சிக்கிறேன், ஹ்ருஷீகேச! கேசியைக் கொன்றவனே!

[வி] சந்நியாசம் = கர்மம் பக்தி ஞான சாஸ்திர அப்பியாசம் செய்து அதனால் ரஜோ குணம், தமோ குணம், சாந்தம் அடையப்பெற்று, மிஸ்ரசத்துவம் அடையப்பெற்றும், கர்மம் பக்தி ஞானம் ஆகிய மூன்றும் அநுஷ்டிக்கவேண்டிய பந்தத்திலிருந்து விடுபடுதல். சந்நியாசம் அடைந்தவன், கர்மம் பக்தி ஞானத்தைவிட்டு யோகத்தை ஆரம்பிக்கத் தகுந்தவனாகிறான். கர்மம் பக்தி ஞானத்தை விட்டு யோகத்தைப்பிடித்தல் தியாகம்.

தியாகம் = தியஸ்-பிடிக்கிறது. கர்மம், பக்தி, ஞானத்தை விட்டு யோகத்தைப் பிடித்தல்

மஹாபாகோ = சர்வக்ஞன்

ஹ்ருஷீகேசன் = இந்திரியங்களுக்கு ஈசன்

கேசியைக் கொன்றவன் = பகவான் கேசி என்ற ராக்ஷஸனைக் கொன்றான். அதனால் பகவானுக்கு இந்தப் பெயர் (தத்வார்த்தம்) அஞ்ஞானத்தைக் கொன்றவன்.

ஸ்ரீ பகவான் சொன்னார்:—

௨. காமிய கர்மங்களை விடுதல் சந்நியாசம் (என்று) கவிகள் அறிகிறார்கள். சர்வகர்மங்களின் பலனைப் பிரம்மார்ப்பணஞ் செய்தல் தியாகம் (என்று) பிரம்மசொரூப அநுபவஞானிகள் சொல்லுகிறார்கள்.

[வி] காமிய கர்மம் = பிரகிருதி சம்பந்த கர்மங்கள் எல்லாம் காமிய கர்மங்கள்.

கவிகள் = பிரம்ம சொரூப விக்ஞானிகள்

௩. கர்மம் தோஷமாதலின் விடவேண்டுமென்று சில மேதாவிகள் சொல்லுகிறார்கள். யக்ஞ தான தவக்கர்மங்களை விடப்படாதென்று வேறு சிலர் (சொல்லுகிறார்கள்)

[வி] சாங்கிய நூலைச் செய்த கபிலர் கர்மம் தோஷமென்று எப்படி விடவேண்டியதோ, அப்படியே கர்மங்களையும் தோஷமுடையதென்றும் விடவேண்டுமென்றும்

சொல்லுகிறார். பூர்வ மீமாம்சையைச் செய்த ஜைமினி முனிவர் கர்மங்களை விடப்படாதென்று சொல்லுகிறார்.

௪. அந்தத் தியாகத்தைப் பற்றி எனது நிச்சயத்தைக் கேள், பரதரிற் சிறந்தோனே! ஏனெனில், புருஷரில் சிறந்தோனே! தியாகம் மூன்றுவிதம் சொல்லப்படுகிறது.

௫. யக்ஞ தான தவக் கருமங்களை விடப்படாது. அவற்றைச் செய்யவே வேண்டும். யக்ஞம், தானம் அப்படியே தவமும் மேதாவிகளுக்குப் பாபத்தைச் சுத்திசெய்பவை.

[வி] மேதாவிகள் = சந்நியாசிகள், யோகிகள்

௬. ஆனால், இந்தக் கர்மங்களைப் பற்றையும் பயனையும் விட்டுச் செய்யவேண்டுமென்பது எனது நிச்சய உத்தம மதம் பார்த்த!

[வி] பற்றையும் பயனையும் விட்டு = சந்நியாசிகளுக்கும், தியாகிகளுக்கும், யக்ஞ தான தவக்கர்மங்களின் பலனில் பற்றுமில்லை, பயனுமில்லை என்பது அர்த்தம்.

௭. ஆனால், விதிக்கப்பட்ட கர்மத்தின் சந்நியாசம் தக்கதன்று. மயக்கத்தினால் அதன் தியாகம் தாமசம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] தாமசம் = அஞ்ஞானம்

௮. துக்கமென்றே எந்தக் கர்மம் சரீர சிரமத்தால் விடப்படுமோ அவன் ராஜஸத் தியாகத்தைச் செய்து தியாகத்தின் பலனை அடையான்.

௯. செய்யவேண்டுமென்றே எந்த விதிக்கப்பட்ட கர்மம் பற்றையும், அப்படியே பயனையும் விட்டுச் செய்யப்படுகிறதோ அர்ச்சுனா! அந்தத் தியாகம் சாத்விகம் (என்று) கருதப்படுகிறது.

[வி] சந்நியாசிகளுக்கும், யோகிகளுக்கும் யக்ஞதான தவக்கர்மங்களைச் செய்யவேண்டுமென்ற நியமமில்லை. ஏனெனில், அவர்களுக்குக் கர்மத்தின் பலன் அற்பமாய்ப் போய்விட்டது. ஆனால் சத்துவகுணம் மேலிட்ட சந்நியாசிகளும், யோகிகளும் சத் கர்மங்களைச் செய்வார்கள். வீண் காலம் போக்கார்கள். இந்திரியங்களினால் சத் கர்மங்களைச் செய்வார்கள். மனத்தால் பக்தி செய்வார்கள். புத்தியினால் சாஸ்திர விசாரம் செய்வார்கள்.

௧௦. தியாகியாய், சத்துவம் வியாபிக்கப்பெற்றவனாய், மேதாவியாய், சம்சயம் அற்றவன் அசுப கர்மத்தை வெறுப்பதில்லை, சுப கர்மத்தை விரும்புகிறதில்லை.

[வி] தியாகி = யோகத்தை ஆரம்பித்தவன்
மேதாவி = மக தத்துவஞானி
சம்சய மற்றவன் = பிரம்ம ஞானமுடையவன்
சுபகர்மம் = சாத்வீக கர்மம்
அசுப கர்மம் = ரஜோகுண தமோகுண கர்மம்

௧௧. ஏனெனில், தேகாபிமானி கர்மங்களைச் சேஷமின்றி விடமுடியாது. ஆனால் எவன் கர்ம பலத்தியாகியோ, அவன் தியாகி என்று சொல்லப்படுகிறான்.

கஉ. இஷ்டம், அநிஷ்டம், கலந்ததெனவும் மூவித கர்மங்களின் பயன் தியாகிகள் அல்லாதவர்களுக்குப் பின்னுண்டாகின்றன. ஆனால், சந்நியாசிகளுக்கு ஒரு காலத்திலும் இல்லை.

[வி] இஷ்டம் = ஞானம்
அநிஷ்டம் = அஞ்ஞானம்
கலந்தது = ஞானமும், அஞ்ஞானமும்

[வி] இவ்வத்தியாயம் சந்நியாசிகளையும், யோகிகளையும் பற்றியது. அவர்களுக்கு யோகமே முக்கிய சாதனம். யோகத்தைவிட்டு நீங்கிய காலத்து வீண்காலம் போக்கப்படாதென்ற அபிப்ராயத்தை முன்னிட்டுச் சத் கர்மங்களையும் செய்வார்கள்.

கங. சர்வகர்மங்களும் நிறைவேறுவதற்காகச் சாங்கியத்தில் சொல்லப்பட்ட இவ்வைந்து காரணங்களையும் என்னிடமிருந்து அறிந்துகொள், உயர்தோழ!

[வி] சாங்கியம் = தத்வ ஆராய்ச்சி

கச. இடமும், அப்படியே கர்த்தாவும், பலவித கரணங்களும், பலவித வெவ்வேறு செய்கைகளும், அப்படியே தெய்வமும் இங்கு ஐந்தாவதாகும்.

[வி] இடம் = தேகம்
கர்த்தா = ஜீவன்
பலவித கரணங்கள் } = ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, மனம், புத்தி இரண்டு ஆகப் பன்னிரண்டு.

செய்கைகள் = கர்மங்கள்
தெய்வம் = இந்திரியங்களுக்கு அதிஷ்டான தேவதைகள்.

நேத்திரத்திற்கு ஆதித்தன், மனதிற்கு சந்திரன். இப்படியே மற்றும் இந்திரியங்களுக்கும் அதிதேவதைகளைக் கண்டுகொள்க.

கரு. மனம், வாக்கு, காயத்தால் நியாயம் அல்லது விபரீதமான எந்தக் கர்மத்தை மனிதன் ஆரம்பிக்கிறானோ அதற்கு இவ்வைந்தும் ஏதுக்களாம்.

[வி] நியாயம் = பிரவிர்த்தி கர்மம்
விபரீதம் = நிவிர்த்தி கர்மம்
பிரவிர்த்திகர்மம் = கர்மம், பக்தி, ஞானம்
நிவிர்த்திகர்மம் = யோகம்

கர்மத்திற்கு இவ்வைந்தும் காரணமாதலின் ஆத்மா கர்மமற்றது, கிரியையற்றது.

கசு. அங்கு இப்படி இருக்க, ஆனால் கேவலம் ஆத்மாவை எவன் புத்தி தெளிவடையாததினால் கர்த்தாவாகக் காண்கிறானோ அந்தப் புத்தியீனன் காண்கிறானில்லை.

[வி] காண்கிறானில்லை = உண்மையைக் காண்கிறானில்லை. ரஜ்ஜுவைச் சர்ப்பமாய்க் காண்கிறதுபோல் அகர்த்தாவாகிய ஆத்மாவைக் கர்த்தாவெனக் காண்கிறான்.

அங்கு	= மேற் சுலோகத்தில் சொல்லிய கர்மத்தின் காரணங்கள் தேகம், ஜீவாத்மா, அதிதெய்வம், கரணங்கள், பலவித செய்கைகள் ஆகிய இவை யென்று சொல்லி யிருக்க ஆத்மாவைக் கர்த்தாவென்று எண்ணுகிறவன் அறிகிறானில்லை
கேவலம்	= தனிப்பொருள்
புத்தியீனன்	= விபரீதபுத்தியை யுடையவன்

கஎ. எவனுக்கு அகங்கார பாவம் இல்லையோ, எவனுடைய புத்தி பந்தப்படவில்லையோ, அவன் இந்த ஜனங்களையும் கொன்றாலும் கொன்றவனல்லன், பந்தப்படுகிறானில்லை.

இன்னுமொருபாடம்:—எவனுக்கு அகங்காரபாவமில்லையோ, எவனுடைய புத்தி பந்தப்படவில்லையோ, அவன் இக்கருமங்களை விட்டாலும் விட்டவனல்லன், பந்தப்படுகிறானில்லை.

[வி] ஆத்மா கர்மமற்றது என்ற எண்ணமுடையவனுக்குக் கர்மமே யில்லை. அவன் சத்திய ஞான அனந்த ஆனந்த ரூபமாய் விளங்குகிறான் என்பது (கச-கரு-கசு) சுலோகங்களின் தாத்பரியம்.

கஅ. ஞானம், ஞேயம், ஞாதுரு என மூவிதம் கர்மத்தைத் தூண்டுபவை. கரணம், கர்மம், கர்த்தா என மூவிதம் கர்மத்தைச் செய்பவை.

[வி] ஞானம்	= அறிவு
ஞேயம்	= அறியவேண்டிய பொருள்
ஞாதுரு	= அறிபவன்

ககூ. குணங்களின் பேதத்தால் ஞானமும், கர்மமும் கர்த்தாவும் அப்படியே மூவிதம் குணசாங்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றையும் உள்ளபடிக் கேள்.

[வி] சாங்கியம்	= தத்வ ஆராய்ச்சி அல்லது கபிலரியற்றிய சாங்கிய நூல்.

உ0. சர்வபூதங்களிடத்தும் எதனால் அழிவுபடாத ஏகபாவத்தைக் காண்கிறானோ, பாகுபாடடைந்தவற்றுள் பாகுபாடடையாததைக் (காண்கிறானோ) அந்த ஞானம் ஸாத்வீகம் (என்று) அறி.

[வி] ஏகபாவம்	= பிரம்மபாவம்
பாகுபாடடைந்தவற்றுள்	= பிரிவடைந்த பொருள்களில்
பாகுபாடடையாததை	= பிரம்மத்தை
பாவம்	= பொருள்

இவ்வுணர்ச்சி மனமும் புத்தியும், உத்தரமகத்தின் உத்தரபாகத்திலிருந்து அவ்யக்தக்கூடத்தில் திருஷ்டி அமைந்திருக்குங் காலத்தில் ஏற்படுகிறது.

உக. ஆனால், பலவித நானா ஆத்மாக்களைத் தனித்தனியாகச் சர்வபூதங்களிடத்தும் எந்த ஞானம் அறிகிறதோ, அந்த ஞானம் ராஜஸம் (என்று) அறி.

[வி] இவ்வுணர்ச்சி புத்தியும், மனமும் மகத்கூடத்தின் உத்தரபாகத்தில் ஆத்ம சொரூபத்தைக் கண்ட காலத்து ஏற்படுகிறது. இது ஆத்ம தரிசனம் அல்லது மகதத்துவ விவேகம் என்று சொல்லப்படுகிறது.

உஉ. ஆனால், எது ஒரே பொருளே சர்வமுமாக பற்றுக்கொண்டதாயும், ஹேதுவின்றியதாயும், உண்மைப் பொருளின்றியதாயும்; அற்பமாயும் (உளதோ) அந்த (அறிவு) தாமஸம் என்று சொல்லப்படுகிறது.

[வி] தேகமே ஆத்மா அல்லது விக்ரகமே ஈசுவரன் என்ற அறிவு தாமஸம்.

உங. விதிக்கப்பட்ட காமம் எதுவோ, பலனை இச்சிக்காதவனால் பற்றின்றியும், விருப்பு, வெறுப்பின்றியும் செய்யப்பட்ட அது சாத்வீகம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] இவ்வுணர்ச்சி மனம் மகத்கூடத்திலிருக்கும் காலத்து நிகழ்கின்றது.

உச. ஆனால், காமத்தையடைய இச்சையுடையவனால் அல்லது அகங்காரமுடையவனால் எக்கர்மம் அதிகப்பிரயாசத்துடன் செய்யப்படுகிறதோ, அது ராஜஸம் (என்று) சொல்லப்படுகிறது.

[வி] இவ்வுணர்ச்சி புத்தி மனக்கூடத்தில் இறங்கிய காலத்தில் நிகழ்கின்றது.

உரு. விளைவதையும், கெடுதியையும், ஹிம்சையையும் சக்தியையும் நோக்காது மயக்கத்தினால் எக்கர்மம் ஆரம்பிக்கப்படுகிறதோ அது தாமஸம் (என்று) சொல்லப்படுகிறது.

உகூ. பற்றற்றவன், நான் என்று வாதிக்காதவன், திருதியோடும், உற்சாகத்தோடுங் கூடினவன், சித்தியிலும் அசித்தியிலும் விகாரம் இன்றிய கர்த்தா சாத்வீகன் (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] இவ்வுணர்ச்சி மனம் மகத்கூடத்திலிருக்குங் காலத்தில் உண்டாகிறது.

உஎ. ஆசையுடையவன், கர்மத்தின் பயனை இச்சிக்கிறவன், கடும்பற்றுடையவன், ஹிம்சிக்குந் தன்மையன், சுத்தமில்லாதவன், சந்தோஷத்தோடும் துக்கத்தோடும் கூடிய கர்த்தா ராஜஸன் (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] இவ்வுணர்ச்சி புத்தி மனக்கூடத்தில் இறங்கிய காலத்து உண்டாகிறது.

உஅ. சமத்துவமில்லாதவன், அசடன், முரடன், கள்ளன், தீச்செயலுடையவன், சோம்பலுடையவன், நடைபெறும் என்ற எண்ணமில்லாதவன், காலதாமஸம் செய்பவன் (ஆகிய) கர்த்தா தாமஸன் (என்று) சொல்லப்படுகிறான்.

[வி] சமத்துவமில்லாதவன் = ஒரு நிலைப்படாதவன், பிரம்மபுத்தியில்லாதவன்

அசடன் = தேகம் தான் என்ற புத்தியையுடையவன்

முரடன் = தான் எடுத்த காரியத்தை முடிக்க மாட்டான்

கள்ளன் = ஆத்மாவை ஹிம்ஸிக்கிறவன்

தீச்செயலுடையவன் = பிராயச்சித்த புத்தியைக் கொண்டாடுபவன். புண்ணியத்தினால் பாபம் போகும் என்ற புத்தியையுடையவன்

உகூ. புத்தியின் பேதமும், அப்படியே திருதியின் (பேதமும்) குணத்தினால் மூவிதம், கேள். சேஷமின்றி வெவ்வேறாகச் சொல்லப்பட்டிருக்கிறது, தநஞ்சய!

[வி] புத்தி மனத்தோடு சம்பந்தப்படும்பொழுது சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூவித உணர்ச்சிகள் உண்டாகின்றன. அப்படியே திருதி மனத்தோடு சம்பந்தப்படும்பொழுது சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூவித உணர்ச்சிகள் உண்டாகின்றன.

௩0. பிரவிருத்தியையும், நிவிருத்தியையும், காரியத்தையும், அகாரியத்தையும், பயத்தையும், அபயத்தையும், பந்தத்தையும், மோக்ஷத்தையும் எது அறிகிறதோ, அந்த புத்தி பார்த்த! சாத்விகம்.

[வி] பிரவிருத்தி = பிரகிருதியின் விகாசம்

நிவிருத்தி = ஆத்மாவின் விகாசம்

காரியம் = ஈசுவர அநுபவத்திற்கு வேண்டியது.

அகாரியம் = பிரகிருதி சம்பந்தமானது

பயம் = அஞ்ஞானம்

அபயம் = ஞானம்

பந்தம் = பிரகிருதி சம்பந்தம்

மோக்ஷம் = பிரகிருதியினின்றும் விடுபடுதல்

இவ்வுணர்ச்சி, மனம் மகத்கூடத்திலிருக்குங் காலத்தில் உண்டாகிறது.

௩க. எதனால் தர்மத்தை அதர்மம் என்றும், அப்படியே காரியத்தையும் அகாரியத்தையும் மாறுபாடாக அறிகிறதோ, அந்தப் புத்தி பார்த்த! ராஜஸம்.

[வி] தர்மம் = ஆத்மாவுக்கு உத்கிருஷ்டத்தைக் கொடுக்கிறது எதுவோ, அது தர்மம் (உத்கிருஷ்டம் = மேலான ஸ்திதி).

அதர்மம் = தர்மத்திற்கு மாறானது

காரியம் = விதிக்கப்பட்ட கர்மம்

அகாரியம் = விதிக்கப்படாத கர்மம்

இவ்வுணர்ச்சி புத்தி மனக்கூடத்தில் இறங்கிய காலத்தில் உண்டாகிறது.

௩௨. தமஸால் மூடப்பட்டு அதர்மத்தைத் தர்மம் என்றும், எல்லாப் பொருள்களையும் விபரீதமாய் எது எண்ணுகிறதோ, அந்தப் புத்தி பார்த்த! தாமஸம்.

[வி] தமஸ் = இருள் = அஞ்ஞானம்
விபரீதம் = திரிபு உணர்ச்சி. கயிற்றை ஸர்ப்பமென்றும், இப்பியை வெள்ளியென்று மெண்ணுவது.

௩௩. பிறழாத யோகத்தோடு கூடிய எத்திருதியினால் மனப்பிராண இந்திரியக் கிரியைகள் அடக்கப்படுகின்றனவோ, அந்தத் திருதி பார்த்த! சாத்விகம்.

[வி] திருதி = மனப்பிராண இந்திரிய சக்திகளை அவ்யக்தக்கூடத்திற்கு இழுத்துக் கொண்டு போகிற சக்தி

௩௪. ஆனால் பல இச்சையுடையவன், பற்றினால் எந்தத் திருதியினால் தர்ம அர்த்த காமங்களை விடுகிறதில்லையோ அர்ச்சுன! அந்தத் திருதி, பார்த்த! ராஜஸம்.

[வி] தர்மம் = அறம்
அர்த்தம் = பொருள்
காமம் = இன்பம்

இவ்வுணர்ச்சி திருதி தன்னிடத்தைவிட்டு மனக்கூடத்தில் இறங்கிய காலத்துண்டாகிறது.

௩௫. எதனால், நித்திரை, பயம், சோகம், ஏக்கம், அப்படியே மதத்தையும் துர்ப்புத்தி உடையவன் விடுகிறதில்லையோ, அந்தத் திருதி, பார்த்த! தாமஸம்.

[வி] நித்திரை = துஷ்ட மனத்தோடு கூடிய திருதி இதற்குக் காரணம். ஆனால் சத்வ மனத்தோடு உத்தரமகத்தில் கூடிய திருதி பிரம்ம சாட்சாத்காரத்துக்குக் காரணம்.
சோகம் = துக்கம். மனோ சம்பந்தமானது, அந்தரங்கமானது. இதற்குக் காரணம் ஆத்மாவின் அஞ்ஞானம்.
ஏக்கம் = பகிரங்க துக்கம்
பயம் = அஞ்ஞானம்
மதம் = தேக பலம்

௩௬. இப்பொழுது மூவிதசுகத்தையும் என்னிடம் கேள், பாதரிற் சிறந்தோனே! அப்பியாசத்தினால் எதில் சந்தோஷமடைகிறானோ, துக்கத்தின் முடிவையும் அடைகிறானோ.

[வி] அப்பியாசம் = பிரகிருதியை விடுதலும், பிரமத்தை ஸ்பரிசித்தலும்
துக்கத்தின்முடிவு = அஞ்ஞானத்தின் முடிவு

இது சாத்வீக சுகத்தைப் பற்றியது.

௩௭. எது ஆரம்பத்தில் விஷம்போன்றும், முடிவில் அமிர்தம்போன்று முளதோ, அச்சுகம் சாத்வீகம் (என்று) சொல்லப்படுகிறது. அது தனது புத்தித்தெளிவாலுண்டானது.

[வி] இதுவும் சாத்வீக சுகத்தைப் பற்றியது.
விஷம் = அஞ்ஞானம்
அமிர்தம் = ஞானம்

௩௮. விஷய இந்திரிய சம்பந்தத்தால் எது ஆரம்பத்தில் அமிர்தம் போன்றும், முடிவில் விஷம் போன்றுமுளதோ, அந்தச் சுகம் ராஜஸம் (என்று) எண்ணப்படுகிறது.

௩௯. எச்சுகம் ஆரம்பத்திலும், முடிவிலும் தன்னை மோகிக்கப் பண்ணுவதாய், நித்திரை, ஆலசியம், அஜாக்கிரதை (ஆகிய இவைகளினின்றும்) உண்டாகிறதோ, அது தாமஸம் (என்று) சொல்லப்படுகிறது.

௪௦. பிரகிருதியினின்று உண்டான இம்மூவித குணங்களால் விடுபட்ட எப்பொருள் இருக்குமோ, அது மண்ணில் அல்லது விண்ணில் தேவர்களிடத்தும் இல்லை.

௪௧. பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும், பரந்தப! சுவபாவத்திலிருந்துண்டான குணங்களால் கர்மங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

௪௨. சமம், தமம், தபம், சுத்தம், சகித்தல், அப்படியே நேர்மையும், ஞானம், விக்ஞானம், சிரத்தை, சுவபாவத்தினால் உண்டான பிராம்மண ஜாதியின் கர்மம்.

[வி] சமம் = மன அடக்கம்
தமம் = இந்திரிய அடக்கம்

தபம் = பாப தகனம்
சுத்தம் = அந்தரங்க, பகிரங்க சுத்தம்
நேர்மை = பக்ஷபாத மின்மை
ஞானம் = சாஸ்திர ஞானம்
விக்ஞானம் = அநுபவஞானம்
சிரத்தை = ஆஸ்திக்யம்
சுவபாவத்தால் = இயற்கையினால் = பிரகிருதியினால்

௪௩. வீரத்தன்மை, தேஜஸ், திறுதி, புத்தி நுட்பம், அப்படியே யுத்தத்தில் பின்வாங்காமையும், தானம், ஆளுந்தன்மையும், சுவபாவத்தினாலுண்டான க்ஷத்திரிய தர்மம்.

[வி] திறுதி = தீரம்
யுத்தத்தில் பின்வாங்காமை = தேவ அசுர யுத்தத்தில் பின்வாங்காமை

௪௪. உழுதல், பசுக்களைக் காத்தல், வியாபாரஞ் செய்தல், சுவபாவத்தினால் உண்டான வைசிய கர்மம், சேவகத்தன்மை, அப்படியே சூத்திரனுக்குச் சுவபாவத்தாலுண்டான கர்மம்.

[வி] உழுதல் = இந்திரியக்கூடம், மனக்கூடம், மகத்கூடத்தின் தக்ஷிண பாகம் ஆகிய இவற்றைச் சீர்திருத்தல்.
பசுவைக்காத்தல் = ஆத்மாவைக் காப்பாற்றல்

வியாபாரம் = விக்ர்ய பரிபாலனம்

சூத்திரன் = வழி தெரியாது ஈசுவரனை வழிபடுகிறவன், பிறருக்கு உதவி செய்தும் தானும் நல்வழியில் நடக்க யத்தனஞ் செய்பவன்

சரு. தன் தன் கர்மத்தில் ஈடுபட்ட மனிதன் சித்தியை அடைகிறான்: தன் கர்மத்தில் ஈடுபட்டவன் எப்படிச் சித்தியை அடைகிறானோ, அதனைக் கேள்.

[வி] தன் தன் கர்மம் = ஆத்ம கர்மம் (சங்கரர்) வர்ணாச்ரம தர்மம்

சசு. எவனிடமிருந்து பூதங்களினுற்பத்தி, எவனால் இதெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, தன் கர்மத்தால் அவனை யர்ச்சித்து, மனிதன் சித்தியை அடைகிறான்.

[வி] எவனிடமிருந்துபூதங்களினுற்பத்தி = அவ்யக்தக் கூடத்திலிருக்கும் பரமாத்மாவிலிருந்து பூதங்களின் தோற்றம்

இதெல்லாம் = மகத்கூடம், மனக்கூடம், இந்திரியக்கூடம்

சித்தி = ஞான சித்தி

சஎ. நன்றாய் அநுஷ்டிக்கப்பட்ட அந்நிய தர்மத்தினும், தன் கர்மம் குணமின்றியதாயினும் சிறந்தது. தன் சுவபாவத்தால் ஏற்பட்ட கர்மத்தைச் செய்கிறவன் பாபத்தை அடைகிறானில்லை.

[வி] அந்நிய தர்மம் = பிரகிருதி தர்மம்

தன் கர்மம் = ஆத்ம கர்மம்

தன்சுவபாவத்தால் = ஆத்மத்தன்மையால்

தன் கர்மம் = வர்ணாச்ரமத்தால் தனக்குரிய கர்மம் (இது சங்கர பாஷ்யம்).

சஅ. உடன் பிறந்த கர்மம் கௌந்தேய! தோஷமுடையதாயினும் விடப்படாது. ஏனெனில், அக்நி புகையினால் மூடப்பட்டிருப்பது போல் சர்வ கர்மங்களும் தோஷத்தினால் (மூடப்பட்டிருக்கின்றன).

[வி] உடன்பிறந்த கர்மம் தோஷமுடையதாயினும் விடப்படாது = உலகநோக்கின்படி இராமன் வாலியைக் கொன்றது தோஷமுடையது. ஆனால் பாரமார்த்திக திருஷ்டியின்படி அவசியம் செய்யவேண்டியதும் செய்யத்தக்கதும். அக்காரணம்பற்றி இராமன் வாலியைக் கொன்றான். இராமன் அவதாரஞ் செய்தது வாலியைக் கொல்வதற்கேயாம். இதே சமாதானம் பொருந்தும், ஏனைய சமாதானங்கள் பொருந்தா.

(சரு-வது முதல் சஅ-வது) சுலோகம் ஈறுகச் சொல்லப்பட்ட சுலோகங்களில் கர்மம் என்ற பதத்திற்கு ஊம் ஸயோகி, 'ஆத்மகர்மம்' என்றும், சங்கரர் 'வர்ணாச்ரமகர்மம்' என்றும் வியாக்கியானம் செய்திருக்கிறார்கள்.

௪௯. எங்கும் புத்தி பற்றாதவன், தன்னை ஜயித்தவன், ஆசை நீங்கப்பெற்றவன், சந்நியாசத்தால் நைஷ்கர்மியம் ஆகிய மேலான சித்தியை அடைகிறான்.

[வி] எங்கும்புத்தி பற்றாதவன் = புத்தி தன் நிலையில் இருக்கப்பெற்றவன். புத்தி உத்தர மகத்கூடத்திலிருக்கப்பெற்றவன்

தன்னைஜயித்தவன் = பிரகிருதியை ஜயித்தவன்

நைஷ்கர்மியம் = சந்நியாசத்தின் முடிவிற்கும் யோக ஆரம்பத்திற்கு முன்னும் உள்ள ஸ்திதி

௫0. சித்தியை அடைந்தவன் எப்படிப் பிரம்மத்தையடைகிறானோ, ஞானத்திற்கு மேலான நிஷ்டை எதுவோ அதை என்னிடமிருந்து சுருக்கமாகத் தெரிந்துகொள், கௌந்தேய!

[வி] சித்தியை அடைந்தவன் = நைஷ்கர்மிய சித்தியை அடைந்தவன்

ஞானத்திற்கு மேலான நிஷ்டை = கர்மம், பக்தி, ஞானம் முடிந்த இடத்துச் சந்நியாசம் சந்நியாசத்தின் பின் நைஷ்கர்மிய சித்தி. நைஷ்கர்மிய சித்தியின் பின் யோகப்பிரம்ம நிஷ்டையின் ஆரம்பம்.

௫௧. சுத்த புத்தியுடன் கூடினவனாகவும், திருதியினால் தன்னை அடக்கிக்கொண்டவனாகவும், சப்தாதி விஷ

யங்களை விட்டு நீங்கியவனாகவும், ராகத்துவேஷங்களை யுதறியவனாகவும்.

[வி] சுத்த புத்தியுடன் கூடியவனாகவும் = உத்தரமகத்திலிருக்கப் பெற்ற சுத்த புத்தியுடன் கூடியவனாகவும்

திருதியினால் தன்னை அடக்கிக்கொண்டவனாகவும் = திருதியினால் இந்திரியம், மனம், புத்தி ஆகிய இவற்றை யடக்கிக் கொண்டவனாகவும்

சப்தாதி விஷயங்களைவிட்டு நீங்கியவனாகவும் = பிரகிருதி சம்பந்தத்தை விட்டு நீங்கியவனாகவும்

ராகத்துவேஷங்களைஉதறியவனாகவும் = துவந்துவாதீதனாய் அத்துவித திருஷ்டி யடைந்தவனாகவும்

௫௨. தனித்திருந்து சிறிதாக உண்டு, மனம் வாக்குக் காயத்தை அடக்கி என்றும் தியானத்தையும், யோகத்தையும் மேலாகக்கொண்டு, வைராக்கியத்தைக் கடைப்பிடித்தவனாய்.

[வி] தனித் திருந்து = ஏகாந்த வாசம் செய்பவனாய், ஏகாக்கிர சித்தமுடையவனாய்

வைராக்கியம் = உலக விஷயங்களில் நிராசை

௫௩. அகங்காரம், தேகவன்மை, செருக்கு, காமம், கோபம், லோபவெண்ணம், (ஆகிய இவற்றை) உதறி மமகாரம் நீங்கிச் சாந்தமடைந்தவன் பிரம்மமாவதற்குத் தகுந்தவனாகிறான்!

[வி] மமகாரம் = எனதென்னும் முனைப்பு, அகங்காரம் = நான் என்னும் முனைப்பு.

௫௪. பிரம்மமாகி, மனம் தெளிந்தவன் வருந்துகிறானில்லை, விரும்புகிறானில்லை. சர்வபூதங்களிடத்தும் சமத்துவம் உடையவனாய், என்னிடம் பரபக்தியை அடைகிறான்.

[வி] பிரம்மமாகி = பிரம்மஸ்திதியை அடைந்து
பூதங்களிடத்து = பிராணிகளிடத்து
சமத்துவமுடையவனாய் = பிரம்ம தர்மத்தோடு கூடியவனாய்
சமத்துவம் = பிரம்ம தர்மம்
பக்தி = யோகபக்தி = பரமாத்மபக்தி

௫௫. பக்தியினால் நான் எத்தன்மையன் என்றும், யாராயிருக்கிறேனென்றும் உள்ளபடி அறிகிறான். அதனால் என்னை உள்ளபடி அறிந்து என்னை உடனே பிரவேசிக்கிறான்.

[வி] பக்தியினால் = யோக பக்தியினால் = பரமாத்ம பக்தியினால்
நான் = பரமாத்மா
என்னை = பரமாத்மாவை

௫௬. சர்வகர்மங்களையும் சந்ததமுஞ் செய்பவனாயும், என்னை ஆச்ரயமாய்க் கொண்டவன் எனது அனுக்கிரகத்தால் சாஸ்வத அழிவற்ற பதவியை அடைகிறான்.

[வி] என்னை = பரமாத்மாவை
ஆச்ரயமாய்க் கோண்டவன் = அடைக்கலமாய்க் கொண்டவன்
சாஸ்வத = நித்திய

௫௭. மனத்தால் சர்வ கர்மங்களையும் என்னிடம் அர்ப்பணஞ்செய்து, என்னை மேலாகக் கொண்டவனாய், புத்தியோகத்தை ஆச்ரயித்து என்னிடத்தில் சித்தத்தை வைத்தவனாய் என்றும் இரு.

[வி] என்னிடத்தில் = பரமாத்மாவினிடத்தில்
புத்தியோகம் = மகத் யோகம்
ஆச்ரயித்து = அடைக்கலம் புகுந்து

௫௮. என்னிடம் சித்தம் லயித்தவனாய்ச் சர்வ இடையூறுகளையும் எனது அநுக்கிரகத்தால் கடப்பாய். ஆனால் நீ அகங்காரத்தினால் கேட்காதிருப்பின் கெடுவாய்.

[வி] என்னிடம் = பரமாத்மாவிடம்
கெடுவாய் = மேற்போகாய். ஊர்த்துவ ஸ்திதி அடையாய்

௫௯. அகங்காரத்தை ஆச்ரயித்து யுத்தம் செய்யேனென்று எதை எண்ணுகிறாயோ உனது இந்த நிச்சயம் வீண். பிரகிருதி உன்னைப் பலாத்காரம் செய்யும்.

[வி] பிரகிருதி = சுவபாவம்
யுத்தம் = யோகத்தையும், யுத்தத்தையும் குறிக்கின்றன.

௬0. சுவபாவத்தினால் ஜனித்த உனது கர்மத்தால் பந்தப்பட்டவனாய், கௌந்தேய! மயக்கத்தினால் எதைச் செய்ய விரும்புகிறாயில்லையோ, அதைச் சுவாதீனமின்றியே செய்வாய்.

[வி] சுவபாவத்தினால் = பிரகிருதியினால். எந்தக் கர்மமாகிலும் பரமாத்ம திருஷ்டியின்படிச் செய்தால் பந்தப்படானென்பது கீதையின் கருத்து

௬௧. ஈசுவரன் ஸர்வ பூதங்களின் ஹ்ருதயத்தில் வீற்றிருக்கிறான், அர்ச்சுனா! இயந்திரத்தில் ஏற்றியவைபோல் சர்வ பூதங்களையும் மாயையால் ஆட்டிவைக்கிறான்.

[வி] பூதங்கள் = பிராணிகள்
ஈசுவரன் = மகத், மனோ, இந்திரியக்கூட்டங்களுக் கதிபதி
ஹ்ருதயம் = பரமாத்ம சொரூபத்தை எந்த இடம் வாங்குகிறதோ, அந்தஇடம் யோகிகளுக்குச் சிரசு, யோகபக்தனுக்கு மனம், கர்மடனுக்கு நாபி
மாயை = தெய்வப் பிரகிருதி

௬௨. சர்வ பாவனையாலும் அவனையே சரணம் அடை, பாரத! அவனது அநுக்கிரகத்தால் பரமசாந்த சாஸ்வத பதவியை அடைவாய்.

[வி] சர்வ பாவனையாலும் = மகத், மனம், இந்திரியக் கூட்டங்களால் 'திருவாசகம்' "கூறும் நாவே முதலாகக் கூறும் கரணங்கள் எல்லாம் நீ, தேறும் வகை நீ, திகைப்பு நீ, தீமை, நன்மை முழுதும் நீ, வேறோர் பரிசொன் றிங்கில்லை"

௬௩. இப்படி உனக்கு ஞானம் என்னால் சொல்லப்பட்டது. இரகசியங்களிலும் மேலான இரகசியம். இதைத் தீர்க்கமாய் யோசித்து எப்படி இச்சிக்கிறாயோ, அப்படிச் செய்.

[வி] தீர்க்கமாய் யோசித்து = அநுபவித்துப் பார்த்து
எப்படியிச்சிக்கிறாயோ = பரமார்த்த திருஷ்டியின்படி எப்படி இச்சிக்கிறாயோ

௬௪. மறுபடியும் எனது மேலான வாக்கைக்கேள். சர்வத்திலும் உத்தம இரகசியம். எனக்கு இஷ்டனாயிருக்கிறாய், திடமுள்ளவனா (யிருக்கிறாய்). அதனால் உனக்கு ஹிதத்தைக் கூறுவேன்.

[வி] ஹிதம் = நன்மை

௬௫. என்னில் மனதை வை. எனக்குப் பக்தனாயிரு. எனக்கு ஹோமஞ்செய். என்னை நமஸ்காரம் செய். என்

னையே அடைவாய். சத்தியத்தை உனக்கு உறுதியாய்ச் சொல்லுகிறேன். எனக்குப் பிரியனாய் இருக்கிறாய்.

[வி] என்னில்மனதைவை = யோக கர்மம்
எனக்குப்பக்தனாயிரு = யோக பக்தி
எனக்குஹோமஞ்செய் = யோக ஞானம்
என்னைநமஸ்காரஞ்செய் = யோக யோகம்
நமஸ்காரம் = நः = இல்லை மः = எனக்கு
என்னையே அடைவாய் = பரமாத்மாவாகிய என்னையே அடைவாய்

௬௬. சர்வ தர்மங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணாகதி அடை. நான் உன்னைச் சர்வ பாபங்களினின்றும் விடுவிப்பேன், துயரப்படாதே!

[வி] யோககர்மம், யோகபக்தி, யோகயோகம் ஆகிய சர்வ தர்மங்களையும் விட்டு என்னை அடைக்கலம் புகு. அப்பொழுது சர்வ பாபங்களினின்றும் விடுதலையடைந்து பரமாத்மாவாகிய என்னையே அடைவாய், இதில் சந்தேகமில்லை.

௬௭. ஒருகாலத்திலும் தவமில்லாதவனுக்கும், பக்தனல்லாதவனுக்கும், கேட்க விருப்பமில்லாதவனுக்கும், என்னைத் தூஷிக்கிறவனுக்கும், இது உன்னால் சொல்லப்படாது.

[வி] தவமில்லாதவன் = பிரகிருதி சுத்தம் அடையாதவன்
பக்தன் அல்லாதவன் = சிரத்தை யில்லாதவன்

௬௮. எவன் இந்தப் பரம இரகசியத்தை எனது பக்தர்களுக்குச் சொல்வானோ, என்னிடத்தில் பரபக்திசெய்து என்னையே அடைவான், சம்சயம் இல்லை.

[வி] பரமஇரகசியம் = யோக சாஸ்திரம்
பக்தர்களுக்கு = யோக பக்தர்களுக்கு
பரகதி = யோக பக்தி

௬௯. அவனைக்காட்டிலும் மனிதர்களில், எனக்குப் பிரியமானதைச் செய்பவன் ஒருவனுமில்லை. மேலும், அவனிலும் எனக்கு அதிகப் பிரியமுள்ள வேறு ஒருவன் புவியிலிருக்கமாட்டான்.

௭0. மேலும், எவன் இத்தர்மத்தோடு கூடிய எங்கள் இருவர்களின் சம்வாதத்தைப் படிப்பானோ, ஞான யக்ஞத்தினால் அவனால் நான் வழிப்பட்டவனாவேன் என்பது என் கருத்து.

[வி] சம்வாதம் = அங்கீகாரத்தோடு கேட்கப்பட்ட பெரியோர்களின் வாக்கியம்

௭௧. சிரத்தையுடையவனாயும், தூஷிக்காதவனாயும், எந்த மனிதன் கேட்பவனாயினும் செய்வானோ, அவனும் விடுபட்டவனாய்ப் புண்ணிய கர்மங்களைச் செய்தவர்களின் சுகலோகங்களை அடைவான்.

எஉ. இது உன்னால் ஏகாக்ர சித்தத்துடன் கேட்கப்பட்டதா? பார்த்த! உன்னுடைய அஞ்ஞான மோகம் நாசமடைந்ததா? தநஞ்சய!

அர்ச்சுனன் சொன்னான்:—

எ௩. மோகம் நாசமடைந்தது. தங்கள் அநுக்கிரகத்தால் நான் ஞாபகத்தை யடைந்தேன். அச்சுத! திடமுள்ளவனாயிருக்கிறேன். சந்தேகம் நீங்கியது. தங்கள் வாக்கின்படி நடப்பேன்.

[வி] அச்சுத = குறைவிலா ஞானமுடையவன்

சஞ்சயன் சொன்னான்:—

எச. இப்படி வாசுதேவனுக்கும், பார்த்தனாகிய மகாத்மாவுக்கும் (நடந்த) இந்த ரோமம் சிலிர்த்தலைச் செய்யும் அற்புத சம்வாதத்தை நான் கேட்டேன்.

[வி] சம்வாதம் = அங்கீகாரத்தோடு கேட்கப்பட்ட பெரியோர்களின் வாக்கியம்

எரு. வியாசரின் அநுக்கிரகத்தால் மேலான இந்த இரகசிய யோகத்தை யோகேஸ்வரனான கிருஷ்ணனினின்றும் அவரே சொல்ல நான் நேரே கேட்டிருக்கிறேன்.

[வி] யோகேஸ்வரன் = யோக ஆசிரியன்

எசா. ராஜனே! கேசவ அர்ச்சுனர்களின் இவ்வற்புத புண்ணிய சம்வாதத்தை நினைந்து நினைந்து மீண்டும் மீண்டும் சந்தோஷப்படுகிறேன்.

[வி] அற்புதசம்வாதம் = முன் கேட்கப்படாத சம்வாதம் அல்லது தன்னை மறக்கச்செய்யுந் தன்மையுடையது

எஎ. மேலும், ஹரியின் அவ்வற்புத ரூபத்தை நினைந்து நினைந்து எனக்கு அதிக ஆச்சரியம், ராஜனே! மீண்டும் மீண்டும் சந்தோஷப்படுகிறேன்.

[வி] ஆச்சரியம் = மெய் மறத்தல்

எஅ. எங்கே யோகேஸ்வரனாகிய கிருஷ்ணன், எங்கே வில்லேந்திய பார்த்தன், அங்கே செல்வமும் வெற்றியும், சுகமும் யுக்தியும் நிலைத்தன, எனது அபிப்பிராயம்.

[வி] யோகேஸ்வரன் = யோக ஆசிரியன்
வில் = பிரணவ மந்திரம் (முண்டகோபநிஷத்து)
செல்வம் = பிரம்ம விபூதி
வெற்றி = பிரகிருதியை ஜயித்தல்
சுகம் = பிரம்மானந்தம்
யுக்தி = மேலான அறிவு
பிரணவமந்திரம் = யோகிகளின் மந்திரம்

இப்படி ஸ்ரீமத் பகவத்கீதா உபநிஷத்திலே, பிரம்ம வித்தையிலே, யோகசாஸ்திரத்திலே, ஸ்ரீ கிருஷ்ணார்ச்சுன சம்வாதத்திலே மோக்ஷசந்யாச யோகம் என்னும் பதினெட்டாவது அத்தியாயம்.

சங்கிரகம்:—இவ்வத்தியாயம் சந்நியாசிகளையும் யோகிகளையும் பற்றியது. இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்ட சந்நியாசம் மோக்ஷ சந்நியாசயோகம். மோக்ஷசந்நியாசமென்றாலும் பிரம்ம சந்நியாசமென்றாலும் ஒரே பொருள். சந்நியாசி, கர்மம், பக்தி, ஞானத்திலிருந்து விடுபட்டவன். தியாகி கர்மம், பக்தி, ஞானத்தை விட்டு யோகத்தைப் பிடித்தவன். சந்நியாசிகளும் யோகிகளும் யக்ஞ தான, தவக் கர்மங்களைச் செய்ய வேண்டுமென்று நியமமில்லை. அவர்களுக்கு யோகமே முக்கிய சாதனம். ஆனால், யோகத்தை விட்டு நீங்கிய காலத்துச் சத்துவகுண சந்நியாசிகளும் தியாகிகளும் பற்றையும் பயனையும் விட்டு யக்ஞ தான தவக் கர்மங்களைச் செய்வார்கள். வீண்காலம் போக்கமாட்டார்கள். ஜீவன்முக்தன் கர்மாதீதன். அவன் கர்மமற்ற, கிரியையற்ற, சத்தியஞான அனந்த ஆனந்த பிரம்மமா யிருக்கிறான். ஜீவன் (1) தேகம் (2) ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து மனம் புத்தி ஆகிய பன்னிரண்டு காரணங்கள். (3) பலவித செய்கைகளும் (4) அதிதெய்வம் (5) ஆகிய இவ்வைந்தினாலும் கர்மங்கள் செய்யப்படுகின்றன. ஆகவே ஆத்மா கர்மமற்றது. கிரியையற்றது. எவனுக்கு இவ்வித அனுபவமுண்டோ அவன் கர்மங்களை விட்டாலும் தோஷத்தை அடையான். (1-முதல் 17). தியாகம், ஞானம், கர்மம், கர்த்தா, புத்தி, திருதி, சுகம்,

பதினெட்டாவது அத்தியாயம்

பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும் முக்குணத்துக் கீடாகப் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. (17-முதல் 44-இறுதியாக). தியாகத்தைப்பற்றி 7-8-9-சுலோகங்களில் சொல்லப்பட் டிருக்கின்றன. ஆத்ம கர்மம் உலக நோக்கின்படித் தோஷமுடையதாயினும் பிரம்ம திருஷ்டியின்படித் தோஷமில்லாததாயும் அவசியம் வேண்டியதாயும் இருக்குமிடத்தில் அவதார புருஷர்கள் அவற்றைச் செய்வார்கள். இதற்கு உதாரணம்—இராமன் வாலியைக் கொன்றது. பிரம்ம திருஷ்டியின்படி இராமன் வாலியைக் கொன்றான் என்ற ஒரே சமாதானம் பொருந்தும். மற்றும் ஏனைய சமாதானங்கள் பொருந்தா. (45-முதல் 48 இறுதியாக). சந்நியாசத்தினால் நைஷ்கர்மிய நிலை அடைந்தவனுக்கு யோகத்தைப்பற்றிச் சொல்லப்படுகிறது. (49-முதல் 62 இறுதியாக). நைஷ்கர்மியம்-கர்மத்தினின்றும் விடுதலை ஆகிய சந்நியாசத்திற்கும், யோக ஆரம்பத்திற்கும் மத்தியிலுள்ள ஸ்திதி. இங்கே சொல்லப்பட்ட யோகம் யோகப்பிரம்ம நிஷ்டை. யோகி பரமாத்மாவைத் தனது ஹ்ருதயத்தில் காண்கிறான். (61). அதன்மேல் எங்கும் காண்கிறான். நூலுக்கு அதிகாரியும் பயனும், சொல்லப்படுகிறது. (67 முதல் 71 இறுதியாக). யோக ஆசிரியனாகிய கிருஷ்ணனைப்பற்றியும் பார்த்தனாகிய யோகியைப் பற்றியும் ஸ்தோத்திரரூபமாய் அவர்களின் மகத்வம் சொல்லப்படுகிறது. (72-முதல் 78 இறுதியாக).

பகவத்கீதை

அரும் பதங்கள்

சந்நியாசம் = கர்மம், பக்தி, ஞானத்திலிருந்து விடுபட்டு யோகத்தை அநுஷ்டிக்கத் திறமை பெற்ற ஸ்திதி

தியாகம் = தியஸ் = பிடித்தல், கர்மம்; பக்தி ஞானத்தை விட்டு யோகத்தைப் பிடித்தல்

நைஷ் கர்மியம் = கர்மத்தினின்று விடுதலை. சந்நியாசத்திற்கும், யோகத்திற்கும் மத்தியிலுள்ள ஸ்திதி

பதினெட்டாவது அத்தியாயம்

முற்றிற்று.

67640